# இன்னல்களூடாக வலிமை

ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ்
ஆண்டறிக்கை 2021-2022




SriLankan Airlines

oneworld



# இன்னல்களூடாக வலிமை

ஒரு பயண இலக்கினை வந்தடைவதை பலர் முன்னேற்றமாகக் கருதும் வேளை, ஸ்ரீலங்கனிலுள்ள நாங்கள் செல்லும் வழியில் கற்றுக்கொண்ட பயணத்தையும் பாடங்களையும் முன்னேற்றத்திற்கு சமனாகப் பார்க்கின்றோம். கடந்த சில வருடங்களில் எமது பாதையானது “நீல வானங்கள்” குறைவாகக் காணப்பட்ட பாதையாயிருந்துள்ளது. எவ்வாறாயினும், மிகுந்த கொந்தளிப்பினூடாக நாம் சமாளித்துள்ளதுடன், கடினமான நேரங்களுக்காக மீளெழுச்சியினை கட்டியெழுப்பி எதிர்காலத்திற்காக நாம் எமது பொருத்தத்தினை கூர்மையாக்கியுள்ளோம்.

நாம் தற்போது பிரயாணங்கள் மறுபடியும் ஆரம்பமாகி பொருளாதாரங்கள் உறுதியடைந்து தெளிவான தொடுவானங்களை எதிர்பார்க்கின்றோம். புதிய “உகப்பாக்கலுடன்” ஆயத்தமாகி கடந்த வருடங்களது கற்றல்களுடன் நாம் ஒரு திடமான மற்றும் இலாபகரமான எதிர்காலத்துடன் இலங்கையின் பொருளாதாரம் மற்றும் பேரார்வங்களுக்கு சிறப்பாக துணையளிக்கும் விதமாக வளர்ச்சியடைவதற்கு எதிர்பார்த்துள்ளோம்.



# உள்ளடக்கம


**கண்ணோட்டம்**

| | |
|---|---|
| எமது தொலைநோக்கு மற்றும் பணிநோக்கு | 4 |
| நிதியியல் சிறப்பம்சங்கள் | 6 |

**முகாமைத்துவ அறிக்கைகள்**

| | |
|---|---|
| தலைவரது செய்தி | 8 |
| பிரதம நிறைவேற்று அதிகாரியின் செய்தி | 10 |
| பணிப்பாளர்கள் சபை | 14 |
| சிரேஷ்ட முகாமைத்துவக் குழு | 16 |
| நிறுவன இடர் முகாமைத்துவம் | 20 |
| கூட்டாண்மை ஆளுகை அறிக்கை | 21 |
| முகாமைத்துவ கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு | 24 |

**நிதி அறிக்கைகள்**

| | |
|---|---|
| பணிப்பாளர்கள் சபையின் ஆண்டறிக்கை | 44 |
| சபை கணக்காய்வுக் குழு அறிக்கை | 48 |
| பணிப்பாளர்களின் பொறுப்புக்களது கூற்று | 49 |
| சுயாதீன கணக்காய்வாளரது அறிக்கை | 50 |
| நிதி நிலைமைக் கூற்று | 54 |
| இலாபம் அல்லது நட்டக் கூற்று | 55 |
| விரிவான வருமானக் கூற்று | 56 |
| உரித்துவத்திலான மாற்றங்களின் கூற்று | 57 |
| காசுப் பாய்ச்சல் கூற்று | 58 |
| நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் | 59 |

**இணைப்புகள்**

| | |
|---|---|
| சொற்களஞ்சியம் | 108 |
| பத்து வருட மீளாய்வு | 110 |
| செல்வழி வரைபடம் | 112 |
| மைல்கற்கள் | 114 |
| கூட்டாண்மைத் தகவல்கள் | 116 |

| | |
|---|---|
| கூட்டத்திற்கான அறிவித்தல் | 117 |
| குறிப்புகள் | 118 |
| பதிலாள் படிவம் | 119 |


குறிப்பு:

இந்த தமிழ் ஆண்டறிக்கை, ஆங்கில ஆண்டறிக்கையின் மொழிபெயர்ப்பாகும். மொழிபெயர்ப்பில் குழப்பங்கள் காணப்படுமிடத்து, ஆங்கில அறிக்கையை பார்க்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.



# எமது தொலைநோக்கு

ஆசியாவிலேயே மிக உயர்ந்த வாடிக்கையாளர் மையமான விமான நிறுவனமாக வருதல்

# எமது பணிநோக்கு

எமது வாடிக்கையாளர்களை, ஓர் நம்பிக்கையுடைய மற்றும் ரம்மியமான பிரயாண அனுபவத்தினை அரவணைப்பு மற்றும் விருந்தோம்பலுடன், ஸ்ரீலங்கன் முறையில் மகிழ்விப்பதற்கு.

நாம் ஓர் தகுதிவாய்ந்த, முன்னியக்கம் மற்றும் விடாமுயற்சியுடனான நிதியியல் ரீதியில் சாத்தியமான நிறுவனமாக, எமது பங்காளிகளின் எதிர்பார்ப்புக்களை சந்திப்பதற்கு கடுமுயற்சி செய்கின்றோம்.




SriLankan
A330-300

# நிதியியல் சிறப்பம்சங்கள்

| | | குழுமம் 2022 | கம்பனி 2021 | கம்பனி 2022 | கம்பனி 2021 |
|---|---|---|---|---|---|
| நிதியியல் | | | | | |
| வருவாய் | ரூ.மில்லியன் | 134,301.36 | 50,928.92 | 132,936.23 | 50,693.85 |
| செயற்பாட்டுச் செலவினம் | ரூ.மில்லியன் | 133,222.10 | 76,111.28 | 132,397.86 | 74,511.39 |
| பரிமாற்றல் நட்டத்திற்கு முன்னரான செயற்பாட்டு இலாபம் /(நட்டம்) | ரூ.மில்லியன் | 1,692.66 | (8,120.21) | 1,237.33 | (3,188.89) |
| ஆண்டிற்கான தேறிய நட்டம் | ரூ.மில்லியன் | (163,583.08) | (49,704.51) | (166,369.68) | (45,231.46) |
| மொத்த சொத்துக்கள் | ரூ.மில்லியன் | 182,263.33 | 157,882.80 | 178,144.17 | 154,381.41 |
| பங்குதாரர்களது நிதியங்கள் | ரூ.மில்லியன் | (426,423.83) | (281,490.88) | (437,036.93) | (289,265.27) |
| போக்குவரத்து | | | | | |
| பயணிகள் கொள்திறன் | ASK மில்லியன் | | | 10,144.12 | 3,816.40 |
| எடுத்துச்செல்லப்பட்ட பயணிகள் | RPK மில்லியன் | | | 4,968.59 | 748.13 |
| பயணிகள் சுமைக் காரணி | % | | | 48.98 | 19.60 |
| ஒட்டுமொத்த கொள்திறன் | ATK மில்லியன் | | | 1,531.28 | 794.52 |
| எடுத்துச்செல்லப்பட்ட ஒட்டுமொத்த சுமை | RTK மில்லியன் | | | 847.33 | 312.26 |
| ஒட்டுமொத்த சுமைக் காரணி | % | | | 55.33 | 39.30 |
| பணியாட்கள் ஆக்கத்திறன் | | | | | |
| சராசரி பலம் | எண்ணிக்கை | 6,849 | 6,981 | 5,833 | 5,965 |
| பணியாள் ஒருவருக்கான வருவாய் | ரூ.மில்லியன் | 19.61 | 7.30 | 22.79 | 8.50 |
| விமானத் தொகுதி | | | | | |
| குறுகிய உடல் | எண்ணிக்கை | | | 12 | 12 |
| பரந்த உடல் | எண்ணிக்கை | | | 12 | 12 |
| வருட இறுதியில் சேவையிலுள்ள விமானங்கள் | எண்ணிக்கை | | | 24 | 24 |




# இன்னல்களூடாக வலிமை

# தலைவரது அறிக்கை

"குழுமமானது நிதியாண்டிற்கு நிதிச் செலவுகள் மற்றும் பரிமாற்றல் நட்டங்களுக்கு முந்திய செயற்பாட்டு இலாபமாக ரூபா 1.69 பில்லியனை (2019/20 - செயற்பாட்டு நட்டம் ரூபா 8.12 பில்லியன்) அறிக்கையிட்டது. இது அதிகரித்த பிரயாணத்திற்கான கேள்விக்கமைய எமது புதிய வணிக மூலோபாயத்தின் வெற்றிகரமான அமுலாக்கத்தின் காரணத்தினாலாகும்."

கோவிட்-19 தொற்றின் சிக்கலானது உலகம் பூராவும் உணரப்பட்டதுடன் இது பொருளாதாரங்களை சீர்குலைத்து மக்கள் தொகையில் கணிசமானோருக்கு ஒரு வருமான மூலமின்றி தொடர்ச்சியாக பலரது வாழ்வில் தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது. இதன் விளைவாக, நிதியாண்டில் ஸ்ரீலங்கன் எயார்லைன்சும் பாரிய சிக்கல்களுக்கு முகங்கொடுத்ததுடன், தொற்றினால் உந்தப்பட்ட சிக்கலின் தாக்கங்களை சமாளித்து (ஒருவேளை விமான நிறுவனத் துறையானது ஆரம்பத்திலிருந்து முகங்கொடுத்த மிகவும் சவால்மிக்க காலம் இதுவாக இருக்கலாம்) எதிர்காலத்திற்கு ஒரு திடமான அடித்தளத்துடன் வெளித்தோன்றியது.

முடக்கங்கள் மற்றும் எல்லைக் கட்டுப்பாடுகளது தளர்த்தலின் காரணமாக துறையானது இவ்வருடத்தினை மிகவும் நம்பிக்கையுடன் ஆரம்பித்தபோதும், பல புதிய தொற்றின் அலைகள் குறுகிய அறிவித்தலில் எல்லைகள் மீண்டும் மூடப்படுவதனை தூண்டியது. இது பல சந்தைகளில் ஒரு நிறுத்தம்-ஆரம்பம் மீட்பு போக்கிற்கு வழியிட்டதுடன் ஒரு செயற்பாட்டு நிலைப்பாட்டில் பாரிய சவால்களை உருவாக்கியது. எனவே, இக்காலத்தின்போது இந்த சிக்கல்மிக்க செயற்பாட்டு சூழல் மற்றும் நிதியியல் சிக்கல்களை சமநிலைப்படுத்தும் அதேவேளை பயணிகளது செயற்பாடுகளை மீள ஆரம்பித்தல் ஒரு சவால்மிக்க செயலாகக் காணப்பட்டது.

இந்தப் பின்னணியில், எமது வணிகச் செயற்பாடுகளில் ஒரு நிலைபேறான மீட்டலுக்கு அடித்தளமிடும் வேளை, நாம் மிகவும் சிறப்பாக சவால்களைச் சந்தித்து சுறுசுறுப்பாக காணப்படுவதில் உறுதியாய் இருந்தோம். கடந்த இரண்டு ஆண்டுகளாக, நாம் எமது செலவுத் தளத்தில் குறிப்பிடத்தக்க கட்டமைப்பு சார்ந்த மேம்பாடுகளை அடைந்ததுடன், இது விமான உரித்துவத்திலிருந்து வழங்குனர்கள் செலவுகள் மற்றும் பணியாட்களது சிறந்த வினைத்திறன் வரை பரந்து காணப்பட்டது. இதற்கு அப்பால், இலங்கையின் அறுசுவை அம்சங்களுடனான ஒரு புதிய விமானத்தினுள்ளான உணவுவகையின் அறிமுகம் மற்றும் மேம்பட்ட டிஜிட்டல் ஆற்றல்கள் உள்ளடங்கலான எமது சேவை வழங்கல்களை மேம்படுத்துவதற்கான புதிய சாத்தியங்களையும் ஆராய்ந்தோம்.

வருடத்தின் இரண்டாம் பாதியில் பயணிகளது கேள்வி ஆரம்பித்ததுடன், செயற்பாட்டு நம்பகத்தன்மையினை மீட்டமைக்கும் வேளை பன்னிரண்டு மாதக் காலத்தினுள் விமான நிறுவனத்தினை இலாபகரத்தன்மைக்கு திருப்பும் நோக்கத்தில் நாம் ஒரு புதிய வணிக மூலோபாயத்தினை ஆரம்பித்தோம். இந்த முன்னெடுப்பின் ஒரு பகுதியாக, நாம் எமது கொள்திறனை மிகவும் இலாபகரமான சந்தைகளுக்கு பயன்படுத்தவதில் முன்னிறுத்தம் செய்ததுடன், புதிய உயர் சாத்தியமான சந்தைகளுக்கும் சேவைகளை சேர்த்தோம். அதேவேளை, முக்கியமான உள்வரும் சுற்றுலா மூலச் சந்தைகளுக்கான தடையற்ற இணைப்புகளை பராமரிப்பதன் மூலம் இலங்கையின் பொருளாதாரத்திற்கான எமது கடமையினை நாம் தொடர்ந்தும் நிறைவேற்றினோம். இக்காலப்பகுதியில் ஆரம்பித்த புதிய பயணிகள் பயண இலக்குகள், ஜேர்மனியின் பிராங்வேர்ட், நேபாளில் காத்மந்து, பிரான்சில் பாரிஸ், தென்கொரியாவில் சியோல் மற்றும் அவுஸ்திரேலியாவில் சிட்னி என்பவற்றை உள்ளடக்கியிருந்தது. இந்த அனைத்து புதிய பயண இலக்குகளும் எமது பயணிகளிடம் செல்வாக்கினையும் கேள்வியினையும் உருவாக்கியதுடன் இலங்கையில் சுற்றுலாப் பயணிகளது வருகையினை அதிகரிப்பதற்கான பங்களிப்பினையும உள்ளடக்கியது.

இலங்கை ரூபாவின் குறிப்பிடத்தக்க பெறுமதியிறக்கமானது எமது இலாப வரம்பில் ஒரு எதிர்மறையான தாக்கத்தினை ஏற்படுத்தியது. மார்ச் 2022 இல் இடம்பெற்ற இலங்கை ரூபாவின் பெறுமதியிறக்கமானது ரூபாயினைப் பொறுத்தளவில் எமது தேறிய பொறுப்புக்களது மறுபரிசீலனைக்கு வழியிட்டதுடன் நிதியாண்டிற்கு ஒரு பரிமாற்றல் நட்டமாக ரூபா 142.61 பில்லியனை பதிவுசெய்தது. இதன் விளைவாக, குழுமமானது ஆண்டிற்கு ஒரு தேறிய நட்டமாக ரூபா 163.58 பில்லியனை (2019/20 - தேறிய நட்டம் ரூபா 49.70 பில்லியன்) அறிக்கையிட்டது. எவ்வாறாயினும் குழுமமானது இந்நிதியாண்டில் நிதிச் செலவுகள் மற்றும் பரிமாற்றல் நட்டங்களுக்கு முந்திய செயற்பாட்டு இலாபமாக ரூபா 1.69 பில்லியனை (2019/20 - செயற்பாட்டு நட்டம் ரூபா 8.12 பில்லியன்) அறிக்கையிட்டது. பயணிகள் கேள்வியிலான அதிகரிப்பிற்கேற்ப எமது புதிய வணிக மூலோபாயத்தின் வெற்றிகரமான அமுலாக்கத்துடன் குழுமமானது நிதியாண்டின் நான்காம் காலாண்டில் ஒரு இலாபத்தினை பதிவு செய்தது (இது அமெரிக்க டொலரில் அறிக்கையிடும்போதாகும், ஏனெனில் குழுமத்தின் வருவாயில் 75% இற்கும் அதிகமானவை வெளிநாட்டு நாணயங்களில் உருவாக்கப்படுவதனாலாகும்).

"...நாங்கள் உலகம் பூராவுமுள்ள மக்கள் மற்றும் குடும்பங்களுடன் மீளவும் இணைந்து எமது அழகான தீவிற்கு சுற்றுலாப் பயணிகளை கொண்டுவருவதனை எதிர்பார்த்துள்ளோம். இரண்டு வருடங்கள் மட்டுப்படுத்தப்பட்ட செயற்பாடுகளின் பின்னர் செயற்பாடுகளை மீளவும் கட்டியெழுப்புதல் அதன் சவால்களையும் கொண்டு வருகின்றது. எவ்வாறாயினும், இந்த சவால்களை சமாளித்து நிறுவனத்திற்கு ஒரு திடமான நிதியியல் திருப்புமுனையினை விநியோகிப்பதற்கு எமது குழுவானது சிறப்பாக காணப்படுகின்றது என்ற நம்பிக்கையினை நான் கொண்டுள்ளேன்."

கடந்த காலங்களில் பெரும்பாலும் திரவத்தன்மையினை பெறுதல் தொடர்பாக ஏற்பட்ட கம்பனியின் கடன் சுமையானது, மேம்படுத்தப்படும் நிதிச் செயற்திறனுக்கு வேறுவகையில் ஒரு பின்னடைவாக இருப்பதனை ஸ்ரீ.ல.எ. இனங்கண்டுள்ளது. எனவே, பாரிய பங்குதாரரான இலங்கை அரசாங்கத்துடன் இந்தக் கடன்களில் சிலவற்றை மீள்கட்டமைக்கும் சாத்தியங்களை கம்பனி ஆராய்ந்தது. இதனைத் தொடர்ந்து இலங்கை அரசாங்கமானது நாட்டின் கொள்கை முன்னெடுப்புகளுக்கமைய கம்பனியினை மீள்கட்டமைக்கும் அதன் நோக்கத்தினை அறிவித்தது.

நிதியாண்டு நிறைவடைந்ததன் பின்னர், இலங்கை அரசாங்கமானது ஒரு கடுமையான பொருளாதாரச் சிக்கலுடனான மற்றுமோர் கொந்தளிப்பான காலத்தினைக் கடந்து சென்றது. இது விமான நிறுவனமானது அதன் ஆரம்பத்திலிருந்து முகங்கொடுத்த பாரிய சவாலான கோவிட்-19 தொற்றிலிருந்து மீளுவதற்கு ஆரம்பிக்கும்போது ஒரு பாரிய சவாலை உருவாக்கியது. இந்த நிலைமையானது நாட்டினுள் பயணிகள் வருகைக்கான கேள்வியில் ஒரு வீழ்ச்சிக்கும் விமான எரிபொருளின் பற்றாக்குறை உள்ளடங்கலான வழங்குனர் சிக்கல்களுக்கும் இட்டுச்சென்றது. இந்த தடங்கல்கள் காணப்பட்டபோதிலும், தொற்றுக் காலத்தின்போது நாம் மேற்கொண்ட பரவலான மீள்கட்டமைப்பு நடவடிக்கைகளின் காரணமாக ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் ஒரு மெச்சத்தக்க செயற்திறனை பதிவுசெய்ய இயலுமையாயிருந்தது. மேலும் மீளாய்வாண்டின் இறுதிக் காலாண்டின்போது அடைந்த அதன் செயற்பாட்டு இலாபகரத்தன்மையினை தொடர்ந்தும் நீடிக்கக்கூடியதாயிருந்தது.

இந்தப் பயணத்தில், எமது பணியாட்களின் கடப்பாடு மற்றும் அர்ப்பணிப்பு பாராட்டுக்குரியதாகும். சந்தேகமின்றி, எமது வியக்கத்தக்க பணியாட்கள் குழுவின் அசையாத கடப்பாடு மற்றும் அர்ப்பணிப்பின்றி இந்த சாதனைகளில் எதனையும் அடைந்திருக்க இயலாது. இக்காலத்தில் எமது பணியாட்கள் அனைவரும் ஒரு குறிப்பிடத்தக்க சம்பளக் குறைப்பினை பொறுப்பேற்றதுடன், தொற்றினால் உருவாக்கப்பட்ட சவால்களுக்கு மத்தியிலும் அவர்களது எதிர்பார்ப்புகளுக்கு மேலாகவும் அப்பாலும் தொடர்ந்தும் சென்றார்கள். எமது குழுவினால் வழங்கப்பட்ட அளப்பரிய உறுதுணைக்காகவும், குழுமத்தினை மீட்புப் பாதையினை நோக்கி வழிநடத்தியது மாத்திரமன்றி எதிர்கால வளர்ச்சிக்கான அடித்தளத்தினை உருவாக்கியதற்காகவும் நான் பெருமையடைகின்றேன்.

மேலாக, நான் இலங்கை அரசாங்கத்திற்கும், மான்புமிகு ஜனாதிபதி அவர்களுக்கும், மதிப்பிற்குரிய துறைமுக, கப்பல் மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சர் அவர்களுக்கும், மதிப்பிற்குரிய முன்னாள் விமானப் போக்குவரத்து இராஜங்க அமைச்சர் அவர்களுக்கும், திறைசேரியின் செயலாளர், துறைமுக, கப்பல் மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சின் செயலாளர் மற்றும் இந்த நிறுவனங்களின் அதிகாரிகளுக்கும் எமது நிறுவனத்திற்கு அவர்கள் தொடர்ச்சியாக வழங்கிய உறுதுணைக்கு எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். நெருக்கடியான தருணத்தில் குழுமத்தினை வழிநடத்துவதில் எனது சக பணிப்பாளர்களுக்கு அவர்களது பாரபத்தியத்திற்கு எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன்.

மேலும், இலங்கை அரசாங்கம், மான்புமிகு ஜனாதிபதி அவர்கள், மதிப்பிற்குரிய துறைமுக, கப்பல் மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சர், விமானப் போக்குவரத்திற்கான மதிப்பிற்குரிய இராஜங்க அமைச்சர் மற்றும் உரிய நிறுவனங்களின் அதிகாரிகள் ஆகியோருக்கு நிறுவனத்திற்கு வழங்கிய தொடர்ச்சியான உறுதுணைக்கு நான் எனது நன்றியினை தெரிவிக்கின்றேன். ஒரு நெருக்கடியான தருணத்தில் குழுமத்தினை வழிநடத்துவதில் எனது சக பணிப்பாளர்களது பாரபத்தியத்திற்கு எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

உலகம் பூராவுமான எல்லைகள் மீளத்திறக்கப்பட்டதுடன், ஒரு விமான நிறுவனமாக நாங்கள் உலகம் பூராவுமுள்ள மக்கள் மற்றும் குடும்பங்களுடன் மீளவும் இணைந்து எமது அழகான தீவிற்கு சுற்றுலாப் பயணிகளை கொண்டுவருவதனை எதிர்பார்த்துள்ளோம். இரண்டு வருடங்கள் மட்டுப்படுத்தப்பட்ட செயற்பாடுகளின் பின்னர் செயற்பாடுகளை மீளவும் கட்டியெழுப்புதல் அதன் சவால்களையும் கொண்டு வருகின்றது. எவ்வாறாயினும், இந்த சவால்களை சமாளித்து நிறுவனத்திற்கு ஒரு திடமான நிதியியல் திருப்புமுனையினை விநியோகிப்பதற்கு எமது குழுவானது சிறப்பாக காணப்படுகின்றது என்ற நம்பிக்கையினை நான் கொண்டுள்ளேன். ஸ்ரீலங்கன், சரியான மூலோபாயத்துடன், அதன் திடமான அடித்தளத்தினை நம்பி எதிர்காலத்தினை நம்பிக்கையுடன் ஆரம்பிப்பதற்கு தற்போது தயாராயுள்ளது.

**அசோகா பத்திரகே**
*தலைவர்*

# பிரதம நிறைவேற்று அதிகாரியின் மீளாய்வு

"வணிகத்தின் பிரதான செயற்பாட்டு நாணயமான அமெரிக்க டொலர்களைப் பொறுத்தளவில் இவ்வருடத்தின் நான்காம் காலாண்டில் கம்பனி ஒரு மிகையினை பதிவுசெய்யவுள்ளது.

2021/2022 நிதியாண்டிற்கான ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் ஆண்டறிக்கை மற்றும் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களை உங்களுக்கு முன்னிலைப்படுத்துவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். மீளாய்வாண்டானது, பிரயாணக் கேள்வியிலான மீட்டல்களுக்கான அறிகுறிகளை காண்பித்ததற்கு மத்தியில், தொற்றின் ஆழத்தின் ஒரு பிரதிபலிப்பாகும். வருடத்தின் முதலாம் பாதியானது எமது மீளெழுச்சியினையும் வீழ்ச்சியினை சமாளிக்கும் துறையின் ஆற்றலினையும் பரிசீலித்தவேளை, இரண்டாம் பாதியானது பிரயாணக் கேள்வியிலான படிப்படியான முன்னேற்றத்திற்கான அறிகுறிகளை தெளிவாகக் காண்பித்தது.

### துறையின் கண்ணோட்டம்

ஒரு கடுமையான சவால்மிக்க வருடத்தினைத் தொடர்ந்து, கோவிட்-19 தொற்றின் காரணமாக துறையானது அதன் ஆரம்பத்திலிருந்து முகங்கொடுத்த அதன் பாரிய தடங்களுடன், உலகளாவிய விமான நிறுவனத் துறையானது 2021 இல் ஒரு ஒட்டுமொத்த சாத்தியமான மீட்டல் நோக்கி திரும்பியது. வருடத்தின் நான்காம் காலாண்டில் எல்லைக் கட்டுப்பாடுகளின் தளர்த்தலுடன், பல சந்தைகளில் கேள்விக்கான ஒரு படிப்படியான மீட்டல் காணப்பட்டதுடன் இது உலகளாவிய பயணிகள் வருவாயானது 2020 இலும் மேலாக 26% ஆல் வளர்ச்சியடைந்து 2021 இல் அமெரிக்க டொலர்கள் 239 பில்லியனை எட்டியது. எவ்வாறாயினும், இந்த வளர்ச்சியானது தொற்றிற்கு முன்னர் காணப்பட்ட வருவாய் மட்டங்களை பிரதிபலிக்காததுடன், பயணிகள் வருவாயானது கோவிட்டிற்கு முன்னர் காணப்பட்ட மட்டங்களிலும் பார்க்க 40% க்கும் குறைவாக காணப்பட்டது. அச்சமூட்டும் USD 42 பில்லியன் மதிப்பிடப்பட்ட ஒரு தேறிய நட்டத்தினை பதிவுசெய்ததற்கு மத்தியில், துறையின் மீட்டலானது USD 135 தேறிய நட்டத்தினை விஞ்சிய 2020 உடன் ஒப்பிடும்போது குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும், கேள்வி மற்றும் பொருளாதார நடவடிக்கைகளிலான மீட்புடன், உலகளாவிய எரிபொருட்களின் விலைகள் 2021 இன் நடுப்பகுதியிலிருந்து தொடர்ந்து உயர்வடைய ஆரம்பித்தது. உக்ரேன் நாட்டில் ஏற்பட்டுள்ள யுத்தமானது மசகெண்ணெயின் விலைகளில் குறிப்பிடத்தக்க தாக்கத்தினை ஏற்படுத்தியதுடன் மீளாய்வாண்டின் இறுதியில் விமான எரிபொருட்களின் விலைகள் கடுமையாக உயர்வடைந்தன. இதன் விளைவாக, சர்வதேச விமானப் பயண சம்மேளனம் (IATA) 2022 இல் விமான நிறுவனத் துறையின் வருவாயானது தொற்றின் முன்னரான மட்டங்களின் 90% இனை எட்டும் என எதிர்வுகூறியுள்ளது. இருந்தபோதிலும், பிராந்திய மீட்டலில் ஏற்றத் தாழ்வுகள் உருவாகும் நிலைமை இருந்தாலும் உலகளாவிய மட்டத்தில் விமானப் பிரயாணத்தில் ஒரு மீட்பு எதிர்பார்க்கப்படுகின்றது.

### ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் செயற்திறன்

2021/22 நிதியாண்டில் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் கோவிட்-19 தொற்றின் விளைவுகளை வெற்றிகொள்வதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தினை மேற்கொண்டது. உலகளாவிய பயணக் கட்டுப்பாடுகளின் மத்தியில் எமது வணிகம் மீளெழுச்சியுடன் காணப்படுவதனை உறுதிசெய்வதற்காக நாம் தொடர்ந்தும் உன்னிப்பாக செயலாற்றினோம். அத்துடன், தொற்றுக் காலத்தின்போது தேசிய கேள்வியினை சந்திப்பதற்காக, பொருளாதாரத்திற்கு உறுதுணையளிப்பதற்காக சரக்கு வானூர்திப் பயணங்கள் மற்றும் புதிய சுற்றுலாப் பாதைகளை சேர்த்து நாம் அயராது செயலாற்றினோம். இந்தச் சூழ்நிலையில், ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பிற்காக APEX டயமன்ட் விருதினை முதன் முதலாகப் பெற்ற விமான நிறுவனங்களில் நாமும் ஒருவர் என்பதுடன் இது தொற்றிற்கு எதிராக போராடுவதற்கான நடவடிக்கைகளை அமுலாக்கியதில் எமது வெற்றியினை குறிப்பிடுகின்றது. முன்னோக்கிச் செல்லும்போது நாம் இலங்கையின் விருந்தோம்பல் மற்றும் அரவணைப்பு கொள்கையினைச் சுற்றி ஒரு மறக்க இயலாத விருந்தினர் அனுபவத்தினை வழங்குவதற்கு எதிர்பார்க்கின்றோம்.

இவ்வாண்டில் நாம் பல தடைகளைத் தாண்டி பூச்சியத்திலிருந்து 60% வரையான எமது வழக்கமான

## “எமது தீர்மானம் மேற்கொள்வதின் மையமாக வாடிக்கையாளர் காணப்படுகின்றார் மற்றும் இதன் காரணமாக ஒரு மேம்படுத்தப்பட்ட வாடிக்கையாளர் அனுபவத்தினை வழங்குவதற்காக நாம் எமது சேவைகளை மேம்படுத்துவதற்கு தொடர்ச்சியாக முயற்சிக்கின்றோம்.”

பயணிகள் அட்டவணைக்குச் சென்றமை குறிப்பிடத்தக்கதாகும். ஒரு தேக்கநிலை காலத்தின் பின்னர் செயற்பாடுகளை மீள ஆரம்பிப்பது என்பது ஒரு வலிமையான பணியாகக் காணப்பட்டது. ஏனெனில் விமானம், பயிற்சி மற்றும் முறைமைப்படுத்தல் இணக்கப்பாடு என்பவற்றின் மீள்செயல்படுத்தல்களுக்கு குறிப்பிடத்தக்க முயற்சிகள் தேவையாயிருந்தன. இவ்வருடம் பூராவும் காணப்பட்ட எல்லை விதிகளிலான துரித மாற்றங்களினால் இந்நிலைமையானது மேலும் சிக்கலாக்கப்பட்டது. எவ்வாறாயினும், ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் எமது வியக்கத்தக்க பணியாட்களின் உறுதுணையினால் இயக்கப்பட்டு இந்த மீள் தொடக்கத்திற்கு சிறப்பாக செயலாற்றுவதில் வெற்றிகண்டது.

இக்காலப்பகுதிக்கான எமது நிதியியல் விளைவுகள், வருடத்தின் பெரும்பாலான பகுதியில் பிரயாணத்தினை ஒடுக்கிவைத்த தொற்றினால் வழிநடத்தப்பட்ட எல்லைக் கட்டுப்பாடுகளின் தாக்கத்தினை பிரதிபலித்தன. எவ்வாறாயினும், ஒரு சவால்மிக்க சூழ்நிலையினை ஒரு வெற்றிமிக்க செயற்பாட்டு விளைவாக மாற்றிய எமது குழுவின் கடப்பாடு மற்றும் மீளெழும்தன்மையினை எடுத்துக்காட்டியது. எமது கொள்திறனானது தொற்றிற்கு முன்னரான மட்டங்களில் அண்ணளவாக 56% ஆக காணப்பட்டபோதிலும், வருவாயினை உச்சப்படுத்தும் எமது இடைவிடா முயற்சிகள் கோவிட்டிற்கு முன்னரான வருவாயின் 74% இனை எட்டுவதற்கு அனுமதித்தது. இதுவும் தொற்றின்போது அடைந்த செலவுகளின் குறிப்பிடத்தக்க மறுசீரமைப்புகளும் வணிகத்தின் பிரதான செயற்பாட்டு நாணயமான அமெரிக்க டொலர்களைப் பொறுத்தளவில் இவ்வாண்டின் நான்காம் காலாண்டில் கம்பனி ஒரு மிகையினை பதிவுசெய்வதனை இயலுமையாக்கியது. இவ்வருடத்திற்கு பதிவுசெய்த செயற்பாட்டு நட்டம் ரூபா 3 பில்லியன் ஆகும். இது நாம் எதிர்கொண்ட பல சவால்களுக்கு மத்தியில் முன்னைய வருடங்களிலும் பார்க்க ஒரு குறிப்பிடத்தக்க முன்னேற்றமாகும். எவ்வாறாயினும், மார்ச் 2022 இல் ஏற்பட்ட இலங்கை ரூபாவின் கணிசமான பெறுமதியிறக்கமானது இவ்வருடத்தில் ரூபா 143 பில்லியன் பரிமாற்றல் நட்டத்தினை விளைவித்ததுடன், பரிமாற்றல் நட்டங்கள் மற்றும் நிதிச் செலவுகளின் பின்னர் குழுமத்தின் முழு வருடத்திற்குமான தேறிய நட்டம் ரூபா 164 பில்லியனாகக் காணப்பட்டது.

எவ்வாறாயினும், எமது சரக்கனுப்பல் சேவைகள் இவ்வருடத்தில் ஒரு அதிகரித்த கேள்வியினை அனுபவித்ததுடன் விமான நிறுவனத்தின் வரலாற்றிலேயே உருவாக்கிய உயர்ந்த சரக்கனுப்பல் வருவாயினை அடைந்தது. இவ்வருவாயானது ரூபா 44 பில்லியனாகக் காணப்பட்டதுடன் இது வருடத்திலிருந்து வருடம் 48% வளர்ச்சியினை பிரதிபலித்தது. தொற்றின் ஆரம்பத்திலிருந்து புத்தாக்கமான தீர்வுகளை வழங்குவதில் ஸ்ரீலங்கன் சரக்கனுப்பலின் அளப்பரிய பங்களிப்பானது இலங்கையின் ஏற்பாட்டியல் சமூகத்தினால் அங்கீகரிக்கப்பட்டது. இதற்காக இலங்கை ஏற்பாட்டியல் மற்றும் சரக்கு அனுப்புபவர்கள் சம்மேளனத்தினால் (SLFFA) நடாத்தப்பட்ட தேசிய ஏற்பாட்டியல் விருதுகள் தொடக்கவிழாவில் விமான நிறுவனப் பிரிவில் ‘தங்க விருது’ மற்றும் ‘அங்கீகார விருது’ என்பன நிறுவனத்திற்கு வழங்கப்பட்டன.

தேசிய வானூர்தியாக ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் சிக்கலான நேரத்தில் தேசத்திற்கு துணைபுரிவதில் அதன் பங்களிப்பினையிட்டு பெருமையடைகின்றது. தொற்றுக் காலம் பூராவும் மக்களை நாட்டிற்குள் கொண்டுவருவதற்காக நாம் ஒரு தொடரான தாயகத்திற்கு மீட்பிக்கும் விமானப் பயணங்களை செயலாற்றினோம். வர்த்தகப் பாய்ச்சல்களுக்கான முக்கியமான இணைப்புகளை வழங்குவதற்கு எமது வானூர்திகளை பயன்படுத்தி பரவலான சரக்கனுப்பல் பயணவழி வலையமைப்பினை செயற்படுத்தினோம். இவ்வருடத்தில் எல்லைகள் மீள்திறக்க ஆரம்பித்தவுடன், நாம் எமது முன்னிறுத்தலை விரைவாக சுற்றுலாத்துறைக்கு நகர்த்தி முக்கியமான உள்வருகை சுற்றுலாத்துறை சந்தைகளுக்கு பல பயணவழிகளை ஆரம்பித்தோம். அத்துடன் இலங்கையில் சுற்றுலாத்துறையினை வளர்ப்பதற்காக நாம் பிரசித்திபெற்ற பிரான்சின் சாகசச் சுவடு, ரெய்ட் அமசோன்ஸ் 2022 ஆகியவற்றை இலங்கையில் விருந்தோம்பியது உள்ளடங்கலாக ஒரு தொடரான விளம்பர நிகழ்வுகளை பொறுப்பேற்றோம்.

எமது தீர்மானம் மேற்கொள்வதின் மையமாக வாடிக்கையாளர் காணப்படுகின்றார் மற்றும் இதன் காரணமாக ஒரு மேம்படுத்தப்பட்ட வாடிக்கையாளர் அனுபவத்தினை வழங்குவதற்காக நாம் எமது சேவைகளை மேம்படுத்துவதற்கு தொடர்ச்சியாக முயற்சிக்கின்றோம். இதனுடனிணைந்து, எமது பயணிகளுக்கு ஒரு சிறப்பான தடையற்ற பயண அனுபவத்தினை இயலுமையாக்குவதற்காக நாம் எமது டிஜிட்டல் ஆற்றல்களை தோற்றுவித்தோம். இதற்கும் மேலாக, விமானத்தினுள் ஒரு தனித்துவமான அனுபவத்தினை வழங்குவதற்காக நாம் இவ்வருடத்தில் ‘இலங்கையின் அறுசுவைகள்’ என்ற கருப்பொருளின் கீழ் விமானத்தினுள்ளான

# *பிரதம நிறைவேற்று அதிகாரியின் மீளாய்வு (தொடர்ச்சி.)*

## “எதிர்வரும் வருடங்களில் நிலைபேறுள்ள மற்றும் சாத்தியமான வணிக வளர்ச்சியினை வழங்குவதற்கு நாம் தயாராயுள்ளோம் என திடமாக நம்புகின்றோம்.”

எமது உணவுவகைகளுக்கு ஒரு புதிய வகையான மெய்யான இலங்கை உணவுகளை ஆரம்பித்ததுடன், இது மிகவும் பிரபல்யமடைந்துள்ளது.

மேலதிக வருவாய் வழிகளை விருத்திசெய்யும் எமது வேட்கையில் நாம் எமது துணைநிறுவனத்தின் வணிகங்களது அடிச்சுவட்டினை பரவலாக்குவதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டோம். எமது உள்ளக பராமரிப்பு, பழுதுபார்த்தல் மற்றும் சீராக்கல் (MRO) அங்கம், ஸ்ரீலங்கன் என்ஜினியரிங் என்பன இவ்வருடத்தின்போது பல புதிய வாடிக்கையாளர் விமான நிறுவனங்கள் உள்ளடங்கலான அதன் மூன்றாந்தரப்பு பராமரிப்பு வாடிக்கையாளர் தளத்தினை குறிப்பிடத்தக்களவு பரவலாக்கியது. மேலும், எமது தரை கையாளுதல் வணிகமானது உயர்ந்த சேவை நியமங்கள் மற்றும் சரியான நேரத்திலான செயற்திறனை தொடர்ந்தும் பராமரித்தவேளை, மிகவும் சவால்மிக்க சூழ்நிலைகளின் கீழ் பரவலான சர்வதேச விமான நிறுவனங்களுக்கு சேவையாற்றக் கூடியதாயிருந்தது. எமது பயிற்றுவித்தல் அங்கமான ஸ்ரீலங்கன் ஏவியேஷன் காலேஜ் அதன் பயிற்றுவித்தல் திட்டங்களின் தேக்கத்தினை மேம்படுத்தியதுடன் விமானப் பயணத்தில் விசேடத்துவத்துடன் ஒரு பட்டம் வழங்கும் நிருவகமாக வருவது நோக்கிச் செயற்படுகின்றது.

இவ்வருடத்தில் காணப்பட்ட மற்றுமோர் மைற்கல்லாக செயற்பாட்டுத் தரத்தினை மேம்படுத்தும் எமது முயற்சிகளது அங்கீகாரம் மற்றும் வணிகநாமத்தினை ஊக்கப்படுத்துவதற்காக பெற்ற பல்வேறு விருதுகள் காணப்படுகின்றது. உலகப் பிரயான விருதுகளில் ‘இந்து சமுத்திரம் 2021’ இற்கான உலகின் முன்னணி விமான நிறுவனமாகவும், APEX பயணிகள் தெரிவு விருதுகளிலிருந்து சிறந்த வானறைச் சேவை - மத்திய/தெற்காசியா விருதும் எமது சந்தைப்படுத்தல் முயற்சிகளுக்காக பசுபிக் ஆசியா பிரயாணச் சம்மேளனத்திலிருந்து தங்க விருதும் வழங்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது.

உலகினைப் பாதிக்கும் ஒரு பாரிய சிக்கலாக காலநிலை மாற்றம் காணப்படுகின்றது என நாம் அறிந்துள்ளதுடன், பொறுப்புமிக்க ஒரு வானூர்தியாக நாம் எமது பறப்பதனை மிகவும் நிலைபேறுள்ளதாக்குவதற்காக வழிகளை கண்டுபிடிப்பதில் தொடர்ச்சியாக கடப்பாடுடையதாய் உள்ளோம். இது தொடர்பில், நாம் எமது காபன் நீக்குதல் இலக்குகளை மேம்படுத்துவதற்காக ஒரு தொடரான ‘கோள் தோழமையான ஸ்ரீலங்கன்’ முன்னெடுப்புகளை அமுலாக்கினோம் மற்றும் ICAO CORSIA திட்டத்திற்கும் கடப்பாடுடையதாய் உள்ளோம். இந்த இலக்குகள் நோக்கிய எமது முயற்சிகளை அங்கீகரித்து சமீபத்தில் நிறைவடைந்த ஷெய்க் மொஹமட் பின் ரஷீட் அல் மக்டோம் குளோபல் ஏவியேஷன் விருதுகளில் ‘மத்தக்க’ எனப் பெயரிடப்பட்ட அதன் புத்தாக்கமான அடையாள மேல்சுழற்சித் திட்டத்திற்காக 118 சமர்ப்பிப்புகளை வெற்றிகண்டு ‘சிறந்த விமானப்பயண நிலைபேறுள்ள விருது’ எமக்கு வழங்கப்பட்டது. இத்திட்டமானது விமான நிறுவனத்தின் குப்பை பொருட்களை பலவகையான வாழ்க்கைமுறை உற்பத்திகளாக மீள்பயன்படுத்துவதன் மூலம் நிலநிரப்பல் கழிவு மற்றும் சூழலியல் அடிச்சுவட்டிற்கான விமான நிறுவனத்தின் பங்களிப்பினை குறைப்பதில் முன்னிறுத்தம் செய்கின்றது.

2022/23 நிதியாண்டின் முதலாம் பாதியில் சவால்மிக்க உள்ளூர் பொருளாதார நிலைமை, உயர் வட்டி வீதங்கள் மற்றும் விமான எரிபொருள் வழங்கலின் பற்றாக்குறை என்பவற்றால் விமான நிறுவனமானது பாரிய சவால்களுக்கு முகங்கொடுத்தது. ஆனால் ஒரு குறைவான செலவுத் தளம் மற்றும் வர்த்தக மற்றும் செயற்பாட்டு தோற்றங்களின் விரைவூக்கத் திறன் என்பவற்றுடன் இக்காலத்திற்கு நாம் ஒரு சாத்தியமான செயற்பாட்டுடன் எமது நிதிச் செயற்திறனை மேம்படுத்துவதில் வெற்றிகண்டோம்.

நிறைவாக, நான் தலைவர், பணிப்பாளர்கள் சபை, வணிகப் பங்காளிகள், இலங்கை அரசாங்கம் மற்றும் எமது வாடிக்கையாளர்களுக்கு அவர்களது உறுதியான உறுதுணைக்காக எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். நான் முகாமைத்துவக் குழுவுக்கும் எமது பணியாட்களுக்கும் அவர்களது தொடர்ச்சியான மீளெழுச்சி மற்றும் கடப்பாட்டிற்காக எனது நன்றியினைத் தெரிவிக்கின்றேன். ஒரு தீவக தேசமாக, நாட்டின் பொருளாதாரச் செழிப்பிற்கு ஒரு முக்கியமான கூறாக விமான இணைப்புமை காணப்படுவதனால் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் ஆகிய நாம் தேசிய வானூர்தியாக எமது கடப்பாட்டினை நிறைவேற்றுவதற்கு உறுதியாய் இருப்பதுடன் நாட்டின் பொருளாதார மீட்பு இலக்குகளுக்கும் தொடர்ச்சியாக துணைபுரிகின்றோம். எதிர்வரும் வருடங்களில் நிலைபேறுள்ள மற்றும் சாத்தியமான வணிக வளர்ச்சியினை வழங்குவதற்கு நாம் தயாராயுள்ளோம் என திடமாக நம்புகின்றோம்.

**ரிச்சர்ட் நட்டால்**
*பிரதம நிறைவேற்று அதிகாரி*



# பணிப்பாளர்கள் சபை

## திரு. அசோகா பத்திரகே

திரு. அசோகா பத்திரகே அவர்கள் வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் பணிப்பாளர் சபைக்கு 2019 டிசம்பர் 16 ஆந் திகதி நியமிக்கப்பட்டு அதன் பின்னர் வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் கேட்டரிங் இன் பணிப்பாளர் சபைக்கும் நியமிக்கப்பட்டார். இவர் சொவ்ட்லொஜிக் ஹோல்டிங்ஸ் பிஎல்சி, ஆசிரி ஹொஸ்பிட்டல் ஹோல்டிங்ஸ் பிஎல்சி, ஆசிரி சர்ஜிக்கல் ஹொஸ்பிட்டல் பிஎல்சி மற்றும் ஒடெல் பிஎல்சி ஆகிய நிறுவனங்களின் தலைவர் /முகாமைத்துவப் பணிப்பாளர் ஆவார். இவர் சொவ்ட்லொஜிக் கெப்பிட்டல் பிஎல்சி மற்றும் சொவ்ட்லொஜிக் லைவ் இன்சூரன்ஸ் பிஎல்சி மற்றும் குழுமத்திலுள்ள ஏனைய கம்பனிகளுக்கும் தலைவராக சேவையாற்றுகின்றார். இவர் என்.டி.பி. கெப்பிட்டல் ஹோல்டிங்ஸ் லிமிட்டட்டின் தலைவருமாவார்.

இவர் இலங்கையின் கூட்டாண்மை உலகத்தின் தொலைநோக்குத் தலைவராவதுடன் இலங்கையின் முன்னணி பன்கூட்டாண்மையான சொவ்ட்லொஜிக் குழுமத்தின் ஸ்தாபக அங்கத்தவராவார். இவர் 50 கம்பனிகளை நடைமுறை நோக்கோடு முகாமைப்படுத்துவதுடன் 10,000 க்கும் அதிகமான பணியாட்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்கியுள்ளார். திரு. பத்திரகே அவர்கள் நான்கு செங்குத்துத் துறைகளான, சில்லறை மற்றும் தொலைத்தொடர்பு, சுகாதாரச் சேவைகள், நிதியியல் சேவைகள் மற்றும் தகவல் தொழில்நுட்பம் மற்றும் ஓய்வு மற்றும் வாகனம் ஆகியவற்றின் முன்னணி சந்தை பிரசன்னத்தைக் கொண்டு குழுமத்திற்கு மூலோபாய வழிகாட்டலை வழங்குகின்றார்.

## திரு. மலிக் ஜே. பர்னாந்து

திரு. மலிக் ஜே. பர்னாந்து அவர்கள் வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் பணிப்பாளர் சபைக்கு 2020 ஜனவரி 08 ஆம் திகதி நியமிக்கப்பட்டு அதன் பின்னர் வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் கேட்டரிங் இன் பணிப்பாளர் சபைக்கும் நியமிக்கப்பட்டார். இவர் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் மற்றும் அதன் துணைநிறுவனத்தின் கணக்காய்வுக் குழு, மனித வளங்கள் குழு மற்றும் நிறுவன இடர் முகாமைத்துவக் குழு ஆகியவற்றின் அங்கத்தவராவார்.

திரு. பர்னாந்து அவர்கள் டில்மா டீ இன் பணிப்பாளர் மற்றும் ரெஸ்பிளென்டென்ட் சிலோன் இன் முகாமைத்துவ பணிப்பாளரும் ஆவார். இது முதலாவது உள்ளூர் ஆடம்பர உல்லாசப்போக்கிட வணிக நாமமாகும். இது நாடுபூராவுமான குறிப்பிடத்தக்க சுற்றுலா தளங்களை விருத்திசெய்து அத்துடன் நம்பத்தக்க பல அனுபவங்களையும் வழங்குகின்றது. எம்.ஜே.எவ். ஸ்தாபனம் மற்றும் டில்மா பாதுகாப்பினூடாக உள்ளூர் சமூகத்திற்கும் சூழலுக்கும் பங்களிப்பு செய்கின்றது. ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்களின் பின்னர், திரு. பர்னாந்து அவர்கள் இலங்கை உல்லாசத்துறை கூட்டமைப்பிற்கு தலைமைதாங்கி ‘ஸ்ரீலங்காவை விரும்புங்கள்’ பதாகையின் கீழ் ஒற்றைக் குரலுடன் தனியார்துறை உல்லாசத் துறையினை ஒன்றுதிரட்டினார்.

திரு. பர்னாந்து அவர்கள் அமெரிக்காவின் பெப்சன் கல்லூரியில் வணிக முகாமைத்துவத்தில் இளமானி விஞ்ஞானப் பட்டத்தினைப் பெற்றுள்ளார்.

## கலாநிதி. ஸ்ரீதிர் சரிபுட்ட ஹன்சா விஜயசூரிய

கலாநிதி. ஹன்சா விஜேசூரிய அவர்கள் வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் பணிப்பாளர் சபைக்கு 2020 ஜனவரி 23 ஆம் திகதி நியமிக்கப்பட்டார். இவர் மனித வளங்கள் மற்றும் வேதனக் குழுவின் தலைவராகவும் கணக்காய்வுக் குழு மற்றும் நிறுவன இடர் முகாமைத்துவக் குழு ஆகியவற்றின் அங்கத்தவராகவும் சேவையாற்றுகின்றார்.

இவர் தற்போது அக்ஷியாட்டா குழுமத்தின் தொலைத்தொடர்பு வணிகத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியாவதுடன் மலேஷியா, இந்தோனேஷியா, பங்களாதேஷ், நேபாளம், இலங்கை மற்றும் கம்போடியா போன்ற பிராந்தியங்களின் சந்தைகளிற்கான குழுமத்தின் தொலைதொடர்பு செயற்பாட்டிற்கு தலைமை தாங்குகின்றார். அக்ஷியாட்டா என்பது ஆசியாவின் இரண்டாவது பெரிய தொலைத்தொடர்பு குழுமமாகும்.

கலாநிதி விஜேசூரிய அவர்கள் டயலொக் அக்ஷியாட்டா பிஎல்சி இன் பணிப்பாளர் சபையில் சேவையாற்றுவதுடன் அக்ஷியாட்டா குழுமத்தின் ஏனைய பல பிராந்திய துணைக்கம்பனிகளிலும் சபை அங்கத்தவராவார். 2016 ஆம் ஆண்டு வரை கலாநிதி. விஜேசூரிய அவர்கள் டயலொக் அக்ஷியாட்டா பிஎல்சி குழுமத்தின் (டயலொக்) குழும பிரதம நிறைவேற்று அதிகாரியாக கடமையாற்றியுள்ளார். இவர் ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் பிஎல்சி இன் பணிப்பாளர் சபையின் ஓர் சுயாதீன பணிப்பாளராக சேவையாற்றுகின்றார்.

2016 ஆம் ஆண்டில், கலாநிதி. விஜேசூரிய அவர்கள் ‘ஆசிய மொபைல் துறைக்கான முதன்மையான பங்களிப்பு’ விருதினை முதல் முறையாக பெற்றதையிட்டு GSM சங்கத்தினால் கௌரவிக்கப்பட்டார். கலாநிதி. விஜேசூரிய அவர்கள் GSM ஆசிய பசிபிக்கின் முன்னாள் தலைவருமாவார். இது GSM சங்கத்தின் பிராந்திய நலனையுடைய குழுவாகும். கலாநிதி. விஜேசூரிய அவர்கள் 2008 இல் இலங்கையின் முன்னணி வணிக சஞ்சிகையான LMD இனால் ‘வருடத்திற்கான இலங்கையர்’ என்று பெயரிடப்பட்டார். கலாநிதி. விஜேசூரிய அவர்கள் இலங்கையின் முன்னணி வணிகச் சம்மேளனமான இலங்கை வர்த்தகச் சம்மேளனத்தின் உடனடியான கடந்தகால தலைவராவார்.

## திரு. ஜோசப் ஜயந்த் மைக்கல் பெரேரா

திரு. ஜே.எம். ஜயந்த் பெரேரா அவர்கள் ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் பணிப்பாளர் சபைக்கு 27 மார்ச் 2021 முதல் நியமிக்கப்பட்டதுடன் அதன் பின்னர் 21 மே 2021 இல் வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் கேட்டரிங்கின் பணிப்பாளர் சபைக்கும் நியமிக்கப்பட்டார். இவர் நிறுவன இடர் முகாமைத்துவக் குழுவின் தலைவர் மற்றும் கம்பனி மற்றும் அதன் துணை நிறுவனத்தினது கணக்காய்வுக் குழுவின் அங்கத்தவருமாவார்.

இவர் நிதியியல் துறையில் 40 வருடங்களுக்கும் மேலான அனுபவத்தைக் கொண்டுள்ளதுடன் இவற்றில் பெரும்பாலானவை சிரேஷ்ட முகாமைத்துவ மற்றும் சபை மட்டங்களிலாகும். இவர் பட்டய வங்கியாளர்கள் நிருவகத்தின் (இலண்டன்) சக அங்கத்தவர் மற்றும் இலண்டன், நியு யோர்க், சன் பிரான்சிஸ்கோ, ஹொங்கொங் மற்றும் சிங்கப்பூர் போன்ற சர்வதேச நிதியியல் மத்திய நிலையங்களில் பரவலான பயிற்சியினைப் பெற்றுள்ளார்.

இவர் மெக்லரன்ஸ் குழுமக் கம்பனிகள் மற்றும் இன்டர் ஓசியன் எனர்ஜி (பிரைவேட்) லிமிட்டட் ஆகியவற்றின் சுயாதீன நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளராகவும் பிரீமியர் பிசிசியன்ஸ் மெடிகல் குருப் (பிரைவேட்) லிமிட்டட்டின் பணிப்பளாராகவும் சேவையாற்றுகின்றார். இவர் சிங்கர் வைனான்ஸ் பிஎல்சி இன் சிரேஷ்ட பணிப்பாளர் பதவியினை வகிப்பதுடன் இடர் முகாமைத்துவக் குழுவின் தலைவராகவும் கணக்காய்வுக் குழுவின் அங்கத்தவராகவும் கடமையாற்றுகின்றார். இவர் ஓய்வுத் துறையில் மிகவும் பிரசித்தி பெற்ற நிறுவனமான குவெஸ்ட் டெஸ்ட்டினேஷன்ஸ் இன் பணிப்பாளரும் ஆவார். இந்நிறுவனம் ஐரோப்பா மற்றும் அமெரிக்காவில் பல கடல் உலா கம்பனிகள் மற்றும் சுற்றுலாத்துறை அங்கங்களை பிரதிநிதித்துவம் செய்கின்றது.

திரு. பெரேரா அவர்கள் ஒரு நீண்ட மற்றும் சிறப்புமிக்க தொழில் வாழ்க்கையினை ஹட்டன் நஷனல் பேங்க் பிஎல்சி (HNB) இல் கழித்ததுடன் இவர் திறைசேரி செயற்பாடுகள் உள்ளடங்கலாக சர்வதேச, வணிக அபிவிருத்தி மற்றும் கூட்டாண்மை கடன் ஆகியவற்றுக்கான சிரேஷ்ட பிரதி பொது முகாமையாளராக சேவையாற்றியுள்ளார். இவர் எச்என்பி எசுயரன்ஸ் பிஎல்சி இன் ஸ்தாபக பணிப்பாளரும் ஆவார். இவர் எச்என்பி மற்றும் டிஎவ்சிசி வங்கியினால் கூட்டாக உரித்துடைய எக்யுட்டி செக்கியுரிட்டீஸ் மற்றும் எக்யுட்டி பார்ட்னர்ஸ் உள்ளடங்கலாக எக்யுட்டி ஸ்டொக் புரொக்கர்ஸ் (பிரைவேட் ) லிமிட்டட்டின முகாமைப் பணிப்பாளராகவும் சேவையாற்றியுள்ளார். இந்தப் பதவிகளில் இவர் வணிக வளர்ச்சிக்காக அளப்பரிய பங்களிப்பினை வழங்கியுள்ளார்.
இவர் லங்கா வென்சர்ஸ் (பிரைவேட்) லிமிட்டட் மற்றும் எல்விஎல் எனர்ஜி இன் பணிப்பாளராகவும் சேவையாற்றியுள்ளார். எச்என்பி இல் இவரது சேவைக்காலத்தின்போது, இலங்கையின் கடன் தகவல் மையத்தின் சபை அங்கத்தவராக இருந்தபோது இலங்கை மத்திய வங்கியுடன் ஒருங்கிணைந்து சீர்திருத்தங்களை கொண்டுவரக் கூடியதாயிருந்தது.

# சிரேஷ்ட முகாமைத்துவக் குழு

## திரு. ரிச்சர்ட் நட்டால்
*பிரதம நிறைவேற்று அதிகாரி*

திரு. ரிச்சர்ட் நட்டால் அவர்கள் 2021 ஆம் ஆண்டு நவம்பர் மாத தொடக்கத்தில் விமான நிறுவனத்தில் பிரதம வணிக அதிகாரியாக சேர்ந்ததுடன் 2022 ஜனவரி 01 முதல் பதில் பிரதம நிறைவேற்று அதிகாரியாக ஆனார். பின்னர் இவர் 29 ஏப்ரல் 2022 முதல் பிரதம நிறைவேற்று அதிகாரியாக நியமிக்கப்பட்டார்.

இவர் விமானப் போக்குவரத்து துறையில் 30 ஆண்டுகள் அனுபவத்தைக் கொண்டுள்ளதுடன் பல்வேறு விமான நிறுவனங்களில் பலதரப்பட்ட சிரேஷ்ட பதவிகளை வகித்ததுடன் இவை உலகெங்கிலும் பல்வேறு செயற்பாட்டு மாதிரிகளை உள்ளடக்கியதாகும். அவற்றுள் அடங்குவன,

- சவூதி ஏயார்லைன்சில் பல்வேறு பதவிகள். ஆரம்பத்தில் வணிக உருமாற்ற பிரதித் தலைவராக (பி.த.) நியமிக்கப்பட்டு பின்னர் பி.த. விற்பனைக்கு முன்னேற்றமடைந்து உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தலுக்கான மேலதிக பொறுப்புக்களை ஏற்றார். இவர் USD 6 பில்லியன் வருடாந்த வருவாயினையுடைய ஒரு விமான நிறுவனத்திற்கான வர்த்தக மூலோபாயத்தில் உரித்துவத்தினை பகிர்ந்து கொண்டதுடன் உலகளாவிய ரீதியில் 2,700 பணியாட்களை வழிநடத்தினார். பிராந்திய சராசரிகளுக்கும் மேலான சர்வதேச பயணிகள் வளர்ச்சியாக 30% இனை 3 வருடங்களில் விநியோகித்தார், விநியோகச் செலவில் 25% குறைப்பினை அடைந்தார், மற்றும் துறையில் சிறப்பான புள்ளிக்கு ஏற்றாற்போல் விமான நிறுவனத்தின் தேறிய ஊக்குநர் புள்ளியினை உயர்த்துவதற்கான சேவை முன்னெடுப்பில் முன்னணி பங்கினை வகித்தார்.
- ரோயல் ஜோர்தானியன் விமான நிறுவனத்தில் பிரதம வர்த்தக மற்றும் மூலோபாய அதிகாரியாக ஒரு திருப்புமுனை மூலோபாயத்தினை வழங்குவதற்காக வணிகத் தலைவர்கள் மற்றும் சர்வதேசரீதியாக பிரசித்திபெற்ற ஆலோசகர்கள் குழுவினை வழிநடத்தியதுடன், 70 முன்னெடுப்புகளை இனங்கண்டு மற்றும் செயற்திறனை பின்தொடர்ந்து அளவிடுவதற்காக ஒரு வரம்புறுகையினை உருவாக்கினார். விமான நிறுவனத்தினை இலாபகரத்தன்மைக்கு திருப்பி தேறிய இலாபத்தில் USD 80 மில்லியன் மேம்பாட்டினையும் 12% இலாப வரம்பு வளர்ச்சியினையும் ஏற்படுத்தினார்.
- ஸ்கைடீம் மேற்பார்வை சபையில் சவூதி ஏயார்லைன்சினை பிரதிநிதித்துவப்படுத்தியதுடன், பின்னர் இவர் ஒரு புதிய ஆளுகை மாதிரியின் கீழ் நிறைவேற்று சபையில் இணைந்தார்.
- இவரது ஏனைய பதவிகள், பஹ்ரேன் ஏயாரின் பி.நி.அ., கென்யா ஏயார்வேசில் வர்த்தகப் பணிப்பாளர், பிலிப்பைன்ஸ் எயார்லைன்சில் சிரேஷ்ட வர்த்தக ஆலோசகர், போலர் ஏயார் கார்கோவுக்கு அமெரிக்காக்களுக்கு பி.த. விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மற்றும் கெத்தே பசிபிக் எயார்லைன்சில் பரவலான முகாமைத்துவ பதவிகளையும் வகித்தார்.

திரு. நட்டால் அவர்கள் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்திலிருந்து கணிதப் பட்டத்தினையும் இலண்டன் வணிகக் கல்லூரியிலிருந்து ஒரு ஸ்லோன் முதுமானி பட்டத்தையும் வைத்துள்ளார்.

## திரு. யசந்த திசாநாயக்க
*பிரதம நிதியியல் அதிகாரி*

திரு. யசந்த திசாநாயக்க அவர்கள் 2004 இல் கம்பனியில் இணைந்தார். இவர் தற்போது பிரதம நிதியியல் அதிகாரி பதவியினை வகிக்கின்றார். கம்பனியின் நிதியியல் மற்றும் வணிகக் கொள்முதல், ஏற்பாட்டியல்கள் மற்றும் சொத்துக்களது செயற்பாடுகள் இவருக்கு அறிக்கையிடுகின்றன.

இவர் முதலாவது சர்வதேச முறிகள் வழங்கல் மற்றும் இஸ்லாமிய நிதியளித்தல் உள்ளடங்கலான கம்பனியின் பல முன்னோடி நிதியியல் கொடுக்கல் வாங்கல்களுக்கு தலைமைதாங்கினார். இவ்விரண்டு நிதியளிப்புகளும் இரண்டு ஆசிய பிராந்திய விருதுகளால் அங்கீகரிக்கப்பட்டன.

இவர் புதிய ஏ330-300 விமானங்களுக்கான முன்-விநியோக நிதியளித்தலை (மு.வி.நி.) உருவாக்குவதற்கு காரணகர்த்தாவாயிருந்ததுடன், இக்கொடுக்கல் வாங்கலானது 2014 இல் ஏயார் வைனான்ஸ் சஞ்சிகையினால் 'வருடத்திற்கான மு.வி.நி. நிதியளித்தல் வாணிபமாக' அங்கீகரிக்கப்பட்டது. கம்பனியில் இணைவதற்கு முன்னர் திரு. திசாநாயக்கா அவர்கள் முதலீட்டு வங்கியியல் மற்றும் தொலைத்தொடர்புத் துறைகளில் சிரேஷ்ட பதவிகளை வகித்துள்ளார். இவர் தொழில்ரீதியாக ஒரு கணக்காளர் ஆவார் (ஐக்கிய இராச்சியத்தின் பட்டய முகாமைத்துவ கணக்காளர்கள் நிருவகத்தின் சமூக அங்கத்தவர்) மற்றும் கார்டிவ்விலுள்ள வேல்ஸ் பல்கலைக்கழகத்தில் வணிக நிர்வாகத்தில் முதுமானி பட்டத்தையும் பெற்றுள்ளார்.

## திருமதி டெல்ரீன் திருக்குமார்
*கம்பனிச் செயலாளர்/கூட்டாண்மைச் செயலகச் சேவைகளின் குழுமத் தலைமை*

திருமதி. டெல்ரீன் திருக்குமார் அவர்கள் 2013 இல் கம்பனியில் சேர்ந்தார். இவர் குழுமக் கம்பனியின் செயலாளர் மற்றும் கூட்டாண்மை செயலகச் சேவைகளின் தலைமையும் ஆவார். இப்பிரிவானது வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ், வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் கேட்டரிங் மற்றும் எயார்லங்கா (பிரைவேட்) லிமிட்டட் ஆகியவற்றிற்கு கூட்டாண்மை செயலகச் சேவைகளை வழங்குகின்றது. இவர் சபையினால் நியமிக்கப்பட்ட உப குழுக்களான, கம்பனியின் மற்றும் அதன் துணை நிறுவனத்தின் கணக்காய்வுக் குழு, மனித வளங்கள் மற்றும் வேதனக் குழு மற்றும் நிறுவன இடர் குழு ஆகியவற்றிற்கு செயலாளராக கடமையாற்றுகின்றார். இவர் 20 வருடங்களுக்கும் மேலான தகமையின் பின்னரான அனுபவத்தினைக் கொண்டுள்ளார். இவர் இலங்கையில் பொது பட்டியலிடப்பட்ட பன்முகப்படுத்தப்பட்ட பன்கூட்டுக் கம்பனிகளில் மிகவும் சிரேஷ்ட மற்றும் பொறுப்பான பதவிகளை வைத்துள்ளார். இவர் ஐக்கிய இராச்சியத்தின் பட்டய செயலாளர்கள் மற்றும் நிர்வாகத்தர்கள் நிருவகத்தின் இணை அங்கத்தவராவார். இவர் அவுஸ்திரேலியாவிலிருந்து வணிக நிர்வாகத்தில் முதுமானி பட்டத்தையும் பெற்றுள்ளார். இவர் இலங்கை பணிப்பாளர்கள் நிருவகத்தின் (இ.ப.நி.) அங்கத்தவரும் மற்றும் இ.ப.நி. இனை பிரதிநிதித்துவம் செய்யும் சபை செயலாளர்கள் மன்றத்தின் செயற்பாட்டுக் குழுவின் ஒரு செயலிலுள்ள அங்கத்தவரும் ஆவார்.

## திரு. சாமர பெரேரா
*தகவல் தொழில்நுட்பத்தின் குழுத் தலைமை*

திரு. சாமர பெரேரா அவர்கள் விமான நிறுவனத் துறையில் அனுபவம் நிறைந்த தொழில்வல்லுநராவார். இவருக்கு விமானப் பயணவியல் தொழில்நுட்பம் மற்றும் வணிக செயல்முறை தன்னியக்கமயமாக்கலில் பரவலான அறிவு மற்றும் அனுபவம் உள்ளதுடன், மூலோபாய தலைமைத்துவத்தினை ஸ்ரீலங்கன் குழுமத்தினது தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் உருமாற்றல் என்பவற்றுக்கு வழங்குகின்றார்.

திரு. சாமர பெரேரா அவர்கள் 1999 இல் விமான நிறுவனத்துறையில் நுழைந்து தேசிய வானூர்தியில் இரண்டு தசாப்தங்களுக்கும் அதிகமான அனுபவத்தினை கொண்டுள்ளார். இவர் பல்வேறு வகையான முகாமைத்துவம் மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவ பதவிகளில் விமான நிறுவனத்தில் சேவையாற்றியுள்ளதுடன் 2012 இல் தகவல் தொழில்நுட்பத்தின் தலைமையாக நியமிக்கப்பட்டார். இதன் பின்னர் 2021 இல் ஸ்ரீலங்கன் குழுமத்தின் தகவல் தொழில்நுட்பத்தினை மேற்பார்வை செய்யும் பொறுப்பும் வழங்கப்பட்டது.

இவர் ஸ்ரீலங்கன் குழுமத்தினது வான்வழிப் பயண தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சூழல் முறைகளுக்குப் பொறுப்பாயுள்ளார். இது உலகளாவிய முக்கியமான விமானப் பயண அமைப்புமுறைகளின் செயற்பாடுகளிலிருந்து வணிக தகவல் தொழில்நுட்ப தீர்வுகள் வரையான விமான நிறுவனக் குழுமத்தின் டிஜிட்டல் உருமாற்றல் மூலோபாயத்தினை இயக்குகின்றது. திரு. பெரேரா அவர்கள் பல தொழில்நுட்ப புத்தாக்கங்களது ஆரம்ப அமுலாக்கல்களுக்கு தலைமை தாங்கியுள்ளார். இவை விமானப் போக்குவரத்தில் தொழில்நுட்பப் பயன்பாட்டினை மேம்படுத்தவும் விமானப் போக்குவரத்து செயன்முறைகளில் பன்முகமான தொடு புள்ளிகளிடையே பயணிகளை மையப்படுத்திய இ-வணிகத் தீர்வுகள் மற்றும் சேவைகளை நிறுவுவதற்கும் ஆகும். இவரது தலைமைத்துவத்தின் கீழான முக்கிய முன்னெடுப்புகளில் பின்வருவன சிலவாகும், விரைவான பிரயாண தொழில்நுட்ப

இசைவாக்கத்திற்கான IATA வணிகத் திட்டத்தின் (StB) எளிமைப்படுத்தல், வணிகச் செயற்பாடுகளை இயலுமையாக்குவதற்கு தரவினால் இயக்கப்படும் விமானப் பயண மேடைகளின் அமுலாக்கம், விமானப் போக்குவரத்து நியமங்களை சந்திப்பதற்காக விமானப் போக்குவரத்து உப அமைப்புமுறைகளுடனான இணக்கப்பாடு என்பவையாகும். விமான நிறுவனக் குழுமத்திற்கான தகவல் தொழில்நுட்ப ஆளுகை நியமங்களை அடைவதற்கும் இவர் வழிநடத்தினார். ஸ்ரீலங்கன் தொழில் நுட்பமானது தகவல் பாதுகாப்பு முகாமைத்துவத்திற்கு ISO/IEC 27001:2013, மென்பொருள் தர முகாமைத்துவத்திற்கு ISO 9001:2015 மற்றும் தகவல் தொழில்நுட்ப சேவை முகாமைத்துவத்திற்கு ISO/IEC 20000:2018 சான்றிதழ்களைப் பெற்றுள்ளது. திரு. பெரேரா அவர்கள் விலையுயர்ந்த மரபுரீதியான விமான நிறுவன அமைப்புமுறைகளை மலிவான கிரயமுடைய புத்தாக்கமான செயலிகளின் தொகுப்புக்கு உருமாற்றி மாற்றீடு செய்து தேசிய வானூர்தியின் ஒட்டுமொத்த தொழில்நுட்ப செலவினத்தை சிர்ப்படுத்துவதற்கு தலைமைத்துவத்தினை வழங்கினார். மேலும், இவரது வழிகாட்டலின் கீழ் ஸ்ரீலங்கனினால் விருத்திசெய்ய்யப்பட்ட செயலிகள் மற்றும் தீர்வுகள் தேசிய மற்றும் சர்வதேச பாராட்டுக்களைப் பெற்றுள்ளதுடன் விமான நிறுவன சமூகத்திற்கு சந்தைப்படுத்தக்கூடிய உற்பத்திகள் மற்றும் தீர்வுகளை உருவாக்கியுள்ளன.

திரு. பெரேரா அவர்கள் ஐக்கிய இராச்சியத்தின் லெஸ்டர் பல்கலைக்கழகத்திலிருந்து தகவல் தொழில்நுட்பத்தில் விசேடத்துவத்துடன் வணிக நிர்வாகத்தில் முதுமானி பட்டத்தினை வைத்துள்ளார். இவர் தொழில்ரீதியாக ஒரு பொறியியலாளர் என்பதுடன் இலங்கையின் மொரட்டுவ பல்கலைக்கழகத்திலிருந்து இலத்திரணியல் மற்றும் தொலைத்தொடர்பு பொறியியலில் இளமாணி விஞ்ஞான பட்டதாரியாவார். இவர் பல தகவல் தொழில்நுட்ப விசேடத்துவங்கள் மற்றும் சர்வதேச அளவில் சான்றளிக்கப்பட்ட அங்கங்களிலிருந்து தொழில்சார் தகமைகளையும் சான்றிதழ்களையும் கொண்டுள்ளார்.

## திருமதி. புத்திக மானகே
*மனித வளங்களின் குழுத் தலைமை மற்றும் வானறைச் சேவைகளின் தலைமை*

திரு. திமுத்து தென்னக்கோன் அவர்கள் தற்போது விமான நிறுவனத்தின் உலகளவிலாய பயணிகள் விற்பனைகள், வலையமைப்பு ரீதியான விற்பனைகள் வழி முகாமைத்துவம் மற்றும் விற்பனைச் செயற்பாடுகளை நடத்திச்செல்கின்றார். ஏப்ரல் 2017 இல் தற்போதைய பதவிக்கு நியமிக்கப்பட்ட இவர் விமான நிறுவனத்தின் விற்பனைகள், நிதியியல் முகாமைத்துவம், வருவாய் முகாமைத்துவம் மற்றும் வர்த்தகத் திட்டமிடல் ஆகியவற்றில் 25 வருடங்களுக்கும் அதிகமான அனுபவத்தினைக் கொண்டுள்ளார்.

திரு. தென்னக்கோன் அவர்கள் ஸ்ரீலங்கன் குடும்பத்தில் 1992 இல் இணைந்து நிதியியல் வருவாய் திட்டமிடல், வலையமைப்பு திட்டமிடல், வழித்திட்ட முகாமைத்துவம் மற்றும் விலையிடல் திணைக்களம் போன்ற பிரிவுகளில் அவரது ஆரம்ப வருடங்களில் சேவையாற்றியுள்ளார். இவரது வெளிநாட்டு நியமனங்கள் துபாய், கனடாவின் விற்பனை முகாமையாளர், மும்பாயைத் தளமாகக் கொண்ட மஹாராஸ்திரா மற்றும் குஜராத் ஆகியவற்றின் முகாமையாளர் மற்றும் சீனாவில் பீஜிங்கைத் தளமாகக் கொண்ட ஆசிய பசிபிக் மற்றும் அவுஸ்திரேலேசியா ஆகியவற்றின் பிராந்திய முகாமையாளர் என்பனவாகும்.

மேலும், இவர் ஓமான் எயார் நிறுவனத்தில் வட இந்தியாவிற்கான நாட்டின் முகாமையாளராக ஓமான் எயார் நிறுவனத்தின வட இந்திய செயற்பாடுகளை மேற்பார்வை செய்யும் பொறுப்பிலும் சேவையாற்றியுள்ளார்.

உலகளாவிய விற்பனைகள் மற்றும் விநியோகத்திற்கான தலைமை நியமனத்திற்கு முன்னர், திரு. தென்னக்கோன் அவர்கள் வர்த்தகச் செயற்பாடுகளுக்கான பொது முகாமையாளராக பின்வருவனவற்றை வழிநடத்தினார். பிராந்திய விற்பனைகள், விற்பனை அபிவிருத்தி, உற்பத்தி அபிவிருத்தி, வாடிக்கையாளர் அலுவல்கள், துறைசார் அலுவல்கள், ஸ்ரீலங்கன் ஹொலிடேஸ், இ-வர்த்தகம், உலகளாவிய அழைப்பு மையம், வழங்குவழி முகாமைத்துவம் மற்றும் வாடிக்கையாளர் விசுவாசத் திணைக்களங்கள் போன்றவற்றில் சர்வதேச விமானநிறுவன வர்த்தக இயக்காற்றல்களில் அவரது அறிவினையும் நிபுணத்துவத்தினையும் வெளிக்காட்டியுள்ளார். இந்த காலத்தின்போது இவர் மத்திய கிழக்கு பிராந்தியத்திற்கு பொறுப்பான பிராந்திய முகாமையாளர் பொறுப்பினையும் கொண்டிருந்தார்.

திரு. தென்னக்கோன் அவர்கள் கடுமையான துறைசார் போட்டி மற்றும் சமகால சவால்களை வெற்றிகொண்ட புரட்சிகரமான விற்பனை வளர்ச்சிக்கு மிகவும் அறியப்பட்ட ஒருவராவார். புத்தாக்கமான மற்றும் வினைத்திறனான வர்த்தக நடைமுறைகளை பரிந்துரைக்கும் திரு. தென்னக்கோன் அவர்கள் விமான நிறுவனத்தின் வர்த்தகக் குறிக்கோள்களை அடைவதற்கு மூலோபாய திட்டமிடல் மற்றும் செயன்முறை மேம்பாட்டிற்கான அவரது கண்ணோட்டத்திற்கு மிகவும் அறியப்பட்ட ஒருவராவார்.  அவரது குழுவினை உயிர்ப்பூட்டுதல் மற்றும் வலுவளித்தல் ஊடாக நிறுவனத்தின் வளர்ச்சியினை கற்பனை செய்யும் ஒரு அர்ப்பணிப்புள்ள தலைவர் ஆவார்.

இவர் கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்ட பீடத்தின் பட்டதாரி மற்றும் பக்கிங்கம்சையர் புதிய பல்கலைக்கழகத்திலிருந்து சர்வதேச வணிக நிர்வாகத்தில் முதுமானி பட்டத்தையும் வைத்துள்ள திரு. தென்னக்கோன் அவர்கள் இலங்கை விமான நிறுவனங்களது பிரதிநிதிகளது சபையின் தலைவராகவும் சேவையாற்றுகின்றார்.

## திரு. திமுத்து தென்னக்கோன்
*உலகளாவிய விற்பனைகள் மற்றும் விநியோகத்தின் தலைமை*

திரு. திமுத்து தென்னக்கோன் அவர்கள் தற்போது விமான நிறுவனத்தின் உலகளாவிய பயணிகள் விற்பனைகள், வலையமைப்பு ரீதியான விற்பனை வழி முகாமைத்துவம் மற்றும் விற்பனைச் செயற்பாடுகளுக்கு தலைமையாக சேவையாற்றுகின்றார். ஏப்ரல் 2017 இல் இப்பதவிக்கு நியமிக்கப்பட்ட இவர் விமான நிறுவன விற்பனைகள், நிதியியல் முகாமைத்துவம், வருவாய் முகாமைத்துவம் மற்றும் வர்த்தகத் திட்டமிடல் ஆகியவற்றில் 25 வருடங்களுக்கும் அதிகமான அனுபவத்தினைக் கொண்டுள்ளார்.

திரு. தென்னக்கோன் அவர்கள் ஸ்ரீலங்கன் குடும்பத்தில் 1992 இல் இணைந்து அவரது தொழிலின் ஆரம்ப காலங்களில் நிதியியல் வருவாய் திட்டமிடல், வலையமைப்பு திட்டமிடல் மற்றும் விலையிடல் பிரிவுகளில் சேவையாற்றியுள்ளார். இவரது வெளிநாட்டு பணியானது டுபாய், மற்றும் கனடாவில் விற்பனை முகாமையாளர், இந்தியாவில் தேச முகாமையாளர் மற்றும் ஆசிய பசிபிக் மற்றும் மத்திய கிழக்கு பிராந்தியங்களுக்கு பிராந்திய முகாமையாளர் போன்றவற்றை உள்ளடக்குகின்றது.

மேலும், ஓமான் எயார்ஸ் நிறுவனத்திற்கு வட இந்திய தேச முகாமையாளராகவும் பணியாற்றியுள்ளார்.

உலகளாவிய விற்பனை மற்றும் விநியோகத்திற்கான தலைமையாக அவரது நியமனத்திற்கு முன்னர் திரு. தென்னக்கோன் அவர்கள் பின்வரும் பதவிகளை வகித்தார். வர்த்தகச் செயற்பாடுகளுக்கான பொது முகாமையாளராக இவர் பிராந்திய விற்பனைகள், விற்பனை அபிவிருத்தி, கருவிகளது அபிவிருத்தி, வாடிக்கையாளர் அலுவல்கள், துறைசார் அலுவல்கள், ஸ்ரீலங்கன் ஹொலிடேஸ், இ-வர்த்தகம், உலக தகவல் அழைப்பு மையம், செல்வழி முகாமைத்துவம் மற்றும் வாடிக்கையாளர் விசுவாசப் பிரிவுகள் ஆகியவற்றிற்கு தலைமை தாங்கி சர்வதேச விமான நிறுவன வர்த்தக இயக்காற்றல் என்பவற்றில் அவரது அறிவு மற்றும் அனுபவத்தினை எடுத்துக்காட்டினார். இந்த காலத்தின்போது இவர் மத்திய கிழக்கு பிராந்தியத்திற்கு பொறுப்பான பிராந்திய முகாமையாளர் பொறுப்பினையும் கொண்டிருந்தார்.

திரு. தென்னக்கோன் அவர்கள் கடுமையான துறைசார் போட்டி மற்றும் சமகால சவால்களை வெற்றிகொள்வதற்கான அவரது புரட்சிகரமான விற்பனை வளர்ச்சி மூலோபாயங்களுக்காக மிகவும் அங்கீகரிக்கப்பட்ட ஒருவர் ஆவார். புத்தாக்கமான மற்றும் வினைத்திறனான வர்த்தக நடைமுறைகளது நியாயவாதியான திரு. தென்னக்கோன் அவர்கள் விமான நிறுவனத்தின் வர்த்தக குறிக்கோள்களை அடைவதற்கு அவரது மூலோபாய திட்டமிடல் மற்றும் செயன்முறை மேம்பாட்டு கண்ணோட்டத்திற்கு நன்கு தெரிந்துகொள்ளப்பட்டவர் ஆவார். இவர்

# சிரேஷ்ட முகாமைத்துவக் குழு (தொடர்ச்சி.)

அவரது குழுவினை ஊக்கமளித்தல் மற்றும் வலுவளித்தலூடாக நிறுவன வளர்ச்சியினை கற்பனை செய்யும் ஒரு அர்ப்பணிப்பான தலைவராவார்.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்ட பீடத்தில் பட்டம் பெற்ற திரு. தென்னக்கோன் அவர்கள் விமான நிறுவனங்களது பிரதிநிதிகளின் இலங்கை சபையின் தலைவராகவும் சேவையாற்றுகின்றார்.

## கெப்டன் பெட்ரிக் பர்னாந்து
*வானூர்தி செயற்பாடுகளின் தலைமை (வானறை பணியாட்கள்)*

இவர் 1992 இல், முன்னர் எயார் லங்கா என அறிந்துகொள்ளப்பட்ட ஸ்ரீலங்கன் நிறுவனத்தில், L1011 விமானத்தின் ஒரு பயிற்சி விமானியாக இணைந்தார். இவர் L1011, A320, 330 மற்றும் A340 விமானத்தினை இயக்கியுள்ளார். இவர் ஒரு கெப்டனாக 20 வருடங்களுக்கும் மேலாகவும் ஒரு பயிற்றுவிப்பாளராக 15 வருடங்களுக்கும் மேலாகவும் சேவையாற்றியுள்ளார். இவர் 2011 இல் முகாமைத்துவத்தில் இணைந்து பயிற்றுவித்தல் மற்றும் நியமங்களது பிரதி பிரதம விமானியாக இருந்து பின்னர் பயிற்றுவித்தல் மற்றும் நியமங்களது பிரதம விமானியாகவும் சேவையாற்றுகின்றார்.

தற்போது இவர் A320/330 விமானத்தின் கட்டளைத்தளபதி, சிமுலேட்டர் மற்றும் பயணவழி பயிற்றுவிப்பாளர் மற்றும் CAASL இற்கான நியமிக்கப்பட்ட பரிசோதனை விமானியும் ஆவார்.

## திரு. சமிந்த பெரேரா
*தலைமை சந்தைப்படுத்தல்*

திரு. சமிந்த பெரேரா அவர்கள் ஜுன் 2015 இலிருந்து ஸ்ரீலங்கன் நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் மற்றும் மூலோபாயத் தொடர்பாடல் சாலை வரைபடத்தினை வழிநடத்துகின்றார். இவர் மூலோபாய சந்தைப்படுத்தல் மற்றும் உலகளாவிய விற்பனையில் விசேடத்துவத்துடன் விமானப் போக்குவரத்துத் துறையில் இரண்டு தசாப்தங்களுக்கும் மேலான அனுபவத்தினைக் கொண்டுள்ளார். 2020 இலிருந்து இவர் விமான நிறுவனத்தின் கூட்டாண்மை சமூக பொறுப்பு அங்கமான, ஸ்ரீலங்கன் கெயார்ஸ் இனை மேற்பார்வை செய்கின்றார்.

திரு. பெரேரா அவர்கள் எமிரேட்ஸ் யுகத்தின்போது ஸ்ரீலங்கனில் முகாமைத்துவ பயிற்சியாளராக இணைந்து விமான நிறுவனத்தின் பின்வரும் முக்கிய பதவிகளை வகித்தார். கூட்டாண்மை தொடர்பாடல்களின் பதிலாள் தலைமை, வர்த்தக முகாமையாளர் - பிரான்ஸ், இலங்கை மற்றும் மாலைதீவிற்கான பிராந்திய முகாமையாளர் மற்றும் உலகளாவிய விற்பனைகளது பொது முகாமையாளர்.

இவரது நிபுணத்துவமானது புதிதாக நிறுவப்பட்ட சந்தைகள்/பயண இலக்குகளில் வணிக நாமத்தினை நிறுவுதல், புத்தாக்கமான மற்றும் வாடிக்கையாளர் மையப்படுத்திய முற்றான தொடர்பாடல்களை சந்தைப்படுத்தல் ஆகியவற்றுக்கும் பரந்துள்ளது. சர்வதேச மன்றங்களில் அங்கீகரிக்கப்பட்ட உலகளவில் பாராட்டைப்பெற்ற பல சந்தைப்படுத்தல் தொடர்பாடல் முயற்சிகளில் விமான நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் குழுவினை வழிநடத்தியுள்ளார்.

இவர் மும்பாய் பல்கலைக்கழகத்திலிருந்து நிதியியல் கணக்கீடு மற்றும் கணக்காய்வில் வர்த்தகப் பட்டத்தினையும் சர்வதேச விமானப் போக்குவரத்து சம்மேளனத்திலிருந்து (IATA) விமானநிறுவன கற்கைகளில் (விமான நிறுவன சந்தைப்படுத்தல், விமான நிறுவன நிதி, கணக்கீடு, நிலைய முகாமைத்துவம்) ஒரு டிப்ளோமா பட்டத்தையும் வைத்துள்ளார்.

## திரு. அர்ஜுன கப்புகீகியன
*தலைமை பொறியியல்*

திரு. அர்ஜுன கப்புகீகியன அவர்கள் ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் பொறியியல் பிரிவில் ஒரு தொழில் பயிலுநராக 1984 இல், அப்போது எயார்லங்கா என அறியப்பட்டது, இணைந்தார். மே 2018 இல் இவர் விமானப் பராமரிப்பிற்கான சிரேஷ்ட முகாமையாளராக நியமிக்கப்பட்டு தற்போது கம்பனியின் விமானப் பொறியியல் பிரிவினை மேற்பார்வை செய்கின்றார்.

இவர் எயார்பஸ் A320/330/340 விமானத்திற்கான சான்றளிக்கும் உரிமைகளைக் கொண்ட ஒரு உரிமமளிக்கப்பட்ட விமானப் பராமரிப்பு பொறியிலாளர் ஆவார். இவர் பொறியியல் மற்றும் பராமரிப்பு பிரிவில் பல முகாமைத்துவ பதவிகளை வகித்தார். இவர் 1988 முதல் 1991 வரை ஒரு பன்முக கலாச்சார சூழலில் கல்வ் எயார்கிராவ்ட் பராமரிப்புக் கம்பனியில் பணியாற்றினார்.

திரு. கப்புகீகியன இலங்கையின் சிவில் விமானப்போக்குவரத்து அதிகாரசபையிலிருந்து ஒரு விமானப் பராமரிப்பு உரிமத்தினையும் ஐக்கிய இராச்சியத்தின் கம்ரியா பல்கலைக்கழகத்திலிருந்து வணிக நிர்வாகத்தில் முதுமானி பட்டத்தையும் பெற்றுள்ளார்.

## திரு. பிரிமால் டி சில்வா
*பொது முகாமையாளர், ஸ்ரீலங்கன் வான்வழிப் பயணக் கல்லூரி*

திரு. பிரிமால் டி சில்வா அவர்கள் 1988 இல் வானறை பணியாள் அங்கத்தவராக கம்பனியில் இணைந்து விமானப் பயணத்துறையில் 34 வருடங்கள் அனுபவத்தினைக் கொண்டுள்ளார். வானறைப் பாதுகாப்பு முகாமைத்துவம், செயற்பாடுகள் மற்றும் பயிற்றுவித்தல் உள்ளடங்கலான விமானத்தினுள்ளான சேவைகளின் முகாமைப்படுத்தலினூடாக முன்னேற்றமடைந்த இவர் 2014 இல் ஸ்ரீலங்கன் வான்வழிப் பயணக் கல்லூரிக்கு தலைமை தாங்குவதற்கு தெரிவுசெய்யப்பட்டதுடன், தற்போது இவர் பொது முகாமையாளர் பதவிக்கான பொறுப்புக்களை வகிக்கின்றார். அவரது தற்போதைய பதவியில், விமானப் பராமரிப்பு மற்றும் பொறியியல் பயிற்றுவித்தல் ஒழுங்கமைப்புடன் தொடர்புடைய பொறுப்புக்கூறல் முகாமையாளர் (பகுதி 147) பொறுப்புக்களையும் வகிக்கின்றார்.

இவர் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பட்டப்படிப்பின் பின்னரான முகாமைத்துவ நிருவகத்திலிருந்து வணிக நிர்வாகத்தில் நிறைவேற்று முதுமானி பட்டத்தினையும் கொழும்பு பல்கலைக்கழகத்தின் பட்டப்படிப்பு கற்கைகள் பீடத்திலிருந்து தொழிலாளர் தொடர்புகள் மற்றும் மனித வளங்கள் முகாமைத்துவத்தில் முதுமானி பட்டத்தையும் வைத்துள்ளார். இவர் இலங்கை பயிற்றுவித்தல் மற்றும் அபிவிருத்தி நிருவகத்திலிருந்து பயிற்றுவித்தல் மற்றும் அபிவிருத்தியில் தேசிய டிப்ளோமாவினையும் பெற்றுள்ளார்.

## லெப்டினன்ட் கேர்ணல் பந்துல வேரகம
*பொது முகாமையாளர் குழுமப் பாதுகாப்பு*

லெப்டினன்ட் கேர்னல் பந்துல வேரகம அவர்கள் இலங்கை தரைப்படையின் கறைபடாத 23 வருடங்கள் சேவையுடன் 2012 இல் கம்பனியில் இணைந்தார். முப்படைச் சேவைகள் சூழலிலான கட்டளை மற்றும் பயிற்சிகளின் விரிவான அனுபவத்திற்கு அப்பால் இவர் ஐக்கிய நாடுகள் திணைக்களத்தினது அமைதி காத்தல் செயற்பாடுகளிலிலும் சேவையாற்றியுள்ளார். மனித வளங்கள், விமானத்தினுள் மற்றும் பாதுகாப்பு பிரிவுகள் என்பவற்றில் தொழில்புரிந்ததன் பின்னர் பெப்ரவரி 2016 இல் விமான நிலையம் மற்றும் தரைச் சேவைகள் பிரிவினை வழிநடத்துவதற்காக நியமிக்கப்பட்டார்.

இவர் களணிய பல்கலைக்கழகத்தில் பாதுகாப்பு கற்கையில் ஒரு முதுமானி பட்டத்தினையும் பாக்கிஸ்தானின் க்குவேட்டா பல்கலைக்கழகத்திலிருந்து விஞ்ஞான முதுமானி பட்டத்தினையும் பெற்றுள்ளார்.

## திரு. ஷமிந்த பெரேரா
*பொது முகாமையாளர் - வானூர்திச் சரக்கு*

திரு. ஷமிந்த பெரேரா அவர்கள் ஜனவரி 2022 இல் ஸ்ரீலங்கன் எயார்லைன்சில் வானூர்திச் சரக்கிற்கு பொது முகாமையாளராக இணைந்தார். இவர் வான்வழிப் போக்குவரத்துத் துறையில் வர்த்தக வானூர்திச் சரக்கு மற்றும் தரை கையாளுதல் செயற்பாடுகளில் 30 வருடங்களுக்கும் அதிகமான அனுபவத்தினைக் கொண்டுள்ளார். திரு. பெரேரா அவர்கள் ஸ்ரீலங்கன் எயார்லைன்சில் தரை கையாளுதல் துறையில் அவரது தொழிலை ஆரம்பித்ததுடன் வானூர்திச் சரக்கின் வர்த்தக கண்ணோட்டத்தினைக் கையாளுவதில் அவரது தொழில் நாட்டமானது லுவ்தான்சாவுக்கு அவர் நகர்வதற்கு வழிசமைத்தது. அடுத்ததாக அவர் வானூர்திச் சரக்கு விற்பனைகள் மற்றும் வாடிக்கையாளர் சேவைகள் முகாமையாளராக வர்த்தக மற்றும் தரை

கையாளுதல் செயற்பாடுகளை மேற்கொள்ளும் ஒரு குழுவினை முகாமைப்படுத்துவதற்காக சைனா எயார்லைன்சிற்கு முன்னேறினார். இதன் பின்னர் அடுத்த நகர்வு எமிரேட்சுக்கு காணப்பட்டதுடன் இங்கு இவர் 16 வருடங்கள் சேவையாற்றி பதவி விலகும்போது இலங்கைக்கான வானூர்தி சரக்கிற்கான முகாமையாளராக சேவையாற்றினார்.

திரு. பெரேரா அவர்கள் ஐக்கிய இராச்சியத்தின் இலண்டன் மெட்ரோபொலிட்டன் பல்கலைக்கழகத்திலிருந்து டிஜிட்டல் யுகத்தில் வான்வழிப் போக்குவரத்து முகாமைத்துவத்தில் முதுமானி விஞ்ஞானப் பட்டத்தையும், மலேஷியாவின் ஏசியா ஈ பல்கலைக்கழகத்திலிருந்து சந்தைப்படுத்தலில் முதுமானி விஞ்ஞானப் பட்டத்தையும் ஐக்கிய இராச்சியத்தின் போக்குவரத்திற்கான பட்டய நிருவகத்திலிருந்து போக்குவரத்தில் ஒரு டிப்ளோமா பட்டத்தினையும் பெற்றுள்ளார். இவர் ஏற்பாட்டியல் மற்றும் போக்குவரத்து பட்டய நிருவகத்தின் பட்டய அங்கத்தவரும் ஆவார்.

## திரு. சன்ஜீவ ஜயதிலக்க

*சிரேஷ்ட முகாமையாளர் விமான நிலைய மற்றும் தரைச் சேவைகள்*

ரவி சன்ஜீவ ஜயதிலக்க அவர்கள் டிசம்பர் 2020 இல் விமான நிலைய மற்றும் தரைச் சேவைகள் பிரிவிற்கு தலைமை வகிப்பதற்காக நியமிக்கப்பட்டதுடன் இவர் ஸ்ரீலங்கன் எயார்லைன்சுடன் கடந்த 16 வருடங்களாக பணியிலுள்ளார். ஸ்ரீலங்கனில் இவர் முகாமையாளர் மனிதவள அபிவிருத்தியாக ஆரம்பித்து பின்னர் கருவிகள் அபிவிருத்தித் திணைக்களத்தினை முகாமைப்படுத்துவதற்காக நகர்ந்தார். இவர் உலகளாவிய விற்பனைப் பிரிவில் ஆரம்பத்தில் இலங்கைக்கான தேச முகாமையாளராக சேவையாற்றி பின்னர் அவுஸ்திரேலியாவிற்கான தேச முகாமையாளராக சேவையாற்றினார்.

ஸ்ரீலங்கனில் இணைவதற்கு முன்னர், இவர் ஆடைகள் உற்பத்தித் துறையில் MAS சிலிம்லைன், லெசர்லைன் மற்றும் இன்டிமேட்ஸ் பிரிவுகளில் முகாமையாளர் மனித வளங்கள் மற்றும் நிர்வாகம் மற்றும் முகாமையாளர் மனிதவள அபிவிருத்தி ஆகியவற்றில் பணியாற்றியதுடன் பகுதியளவிலான அரசாங்க அதிகாரசபையிலும் சேவையாற்றியுள்ளார்.

இவர் சதர்ன் குயின்ஸ்லேன் பல்கலைக்கழகத்திலிருந்து மனித வளங்களில் ஒரு முதுமானி பட்டத்தையும் அமெரிக்காவின் வாஷிங்டன் காலேஜிலிருந்து வணிக நிர்வாகத்தில் இளமானி பட்டத்தையும் பெற்றுள்ளார்.

## திரு. ஷானக்க சபரமாது

*சிரேஷ்ட முகாமையாளர் வருவாய் முகாமைத்துவம்*

திரு. சபரமாது அவர்கள் 2000 இல் விமான நிறுவனத்தில் ஒரு முகாமைத்துவ பயிலுநராக இணைந்து வர்த்தகப் பிரிவில் அவரது சேவைக்காலம் முழுவதும் பல்வேறு ஒருங்கிணைந்த பங்கினை வகித்துள்ளார். இவர் 15 வருடங்கள் முகாமைத்துவ தரம் உள்ளடங்கலாக 20 வருடங்களுக்கும் அதிகமான துறைசார் அனுபவத்தினைக் கொண்டுள்ளார்.

திரு. சபரமாது அவர்கள் 2001 இல் வருவாய் திட்டமிடல் திணைக்களத்தில் இணைந்து வருவாய் திட்டமிடல் முகாமையாளராக ஒரு குழுவினை வழிநடத்தினார். இதன்பின்னர் இவர் 2010 இல் வருவாய் திட்டமிடல் மற்றும் வலையமைப்பு திட்டமிடல் குழுக்கள் இரண்டையும் மேற்பார்வை செய்யும் முகாமையாளர் திட்டமிடல் பங்கினை பொறுப்பேற்றார். இவர் ஐரோப்பிய பிராந்தியத்திற்கான வருவாய் முகாமைத்துவ பிரிவின் வர்த்தக முகாமையாளராக நியமிக்கப்பட்டு பின்னர் ஐரோப்பிய மற்றும் தூர கிழக்கு பிராந்தியங்களுக்கான கையிருப்பு மற்றும் விலையிடல் ஆகியவற்றை மேற்பார்வை செய்யும் வருவாய் முகாமைத்துவத்திற்கான சிரேஷ்ட முகாமையாளராக நியமிக்கப்பட்டார். இவர் தற்போது வருவாய் முகாமைத்துவம், வலையமைப்பு திட்டமிடல் மற்றும் ஆய்வு ஆகியவற்றின் வர்த்தகச் செயற்பாடுகளை வழிநடத்துவதுடன் விமான நிறுவனத்தின் சர்வதேச உறவுகளையும் வழிநடத்துகின்றார்.

இவர் கொழும்பு பல்கலைக்கழகத்திலிருந்து வர்த்தகத்தில் விசேடத்துவம் கொண்ட ஒரு இளமானி பட்டத்தையும் விமான நிறுவன கற்கையில் IATA டிப்ளோமாவினையும் (மொன்ரியல்) கொண்டுள்ளார். இவர் முகாமைத்துவ கணக்காளர்களுக்கான பட்டய நிருவகத்தின் (ஐக்கிய இராச்சியம்) இறுதி சித்தி எய்தவருமாவார்.

## திருமதி துஷாரி பெரேரா

*சிரேஷ்ட முகாமையாளர் குழும சட்ட அலுவல்கள்*

திருமதி. துஷாரி பெரேரா அவர்கள் ஸ்ரீலங்கன் குழுமத்தில் குழும சட்ட அலுவல்களுக்கான சிரேஷ்ட முகாமையாளர் பதவியினை வகிக்கின்றார். இவர் வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் மனித வளங்கள் பிரிவில் இவரது தொழிலினை ஆரம்பித்து மனித வள முகாமைத்துவத்தின் பல்வேறு கூறுகளில் ஈடுபட்டிருந்தார். கைத்தொழில் மற்றும் தொழிலாளர் உறவுகள் மற்றும் பணியாட்கள் தொடர்பான விடயங்களில் வழக்காடல்கள் ஆகியவற்றில் அனுபவத்தினைப் பெற்றுள்ளார். 2013 இல் குழுமத்தின் சட்ட அலுவல்கள் பிரிவில் இணைந்ததிலிருந்து இவர் அனைத்து மட்டங்களிலுமான குழுமத்திற்கான வர்த்தக மற்றும் வான்வழிப் போக்குவரத்து ஒப்பந்தங்கள், கூட்டாண்மை மற்றும் முறைமைப்படுத்தல் விடயங்கள், பிணக்கு தீர்த்தல், பன்முக நியாயாதிக்க வெளிநாட்டு மற்றும் உள்ளூர் வழக்காடல்கள், அறிவுசார் சொத்து, கைத்தொழில் மற்றும் தொழிலாளர் உறவுகள் மற்றும் குழுமத்தின் நொத்தாரிசு பணிகள் ஆகியவற்றை கையாண்டுள்ளார்.

திருமதி. பெரேரா அவர்கள் தொழில்ரீதியாக ஒரு வழக்கறிஞர் ஆவார். இவர் ஆங்கில மற்றும் சிங்கள மொழிகளில் நொத்தாரிசு உரிமைத்தினைப் பெற்றுள்ளார். இவரது சட்டக் கல்விக்கும் மேலாக ஆளணி முகாமைத்துவ நிருவகத்தில் மனித வளங்கள் முகாமைத்துவத்தில் தேசிய டிப்ளோமாவினையும் பட்டப்படிப்பின் பின்னரான முகாமைத்துவ நிருவகத்தினால் நடாத்தப்பட்ட முகாமைத்துவ அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தையும் வெற்றிகரமாக நிறைவுசெய்தார்.

## கெப்டன் சுதத் மடபாத்த

*சிரேஷ்ட முகாமையாளர் குழுமப் பாதுகாப்பு*

கெப்டன் சுதத் மடபாத்த அவர்கள் 27 வருடங்களுக்கும் அதிகமான விமான நிறுவன அனுபவத்தினைக் கொண்டுள்ளார். 1995 இல் தரை கையாளுதலுக்கு ஒதுக்கப்பட்ட ஒரு சுமை கட்டுப்பாட்டாளராக ஆரம்பித்து 1998 இல் விமானச் செயற்பாட்டு திணைக்களத்திற்கு ஒரு உரிமமளிக்கப்பட்ட விமான அனுப்புபவராக முன்னேற்றமடைந்தார். 2001 இல் ஒரு பயிற்சி விமானியாக தெரிவுசெய்யப்பட்டதன் பின்னர் ஏயார்பஸ் A330 இல் ஒரு நேரடியான உள்நுழைவு முதலாம் அதிகாரியாக நியமிக்கப்பட்டார்.

இவர் 2006 இல் எத்தியாட் எயார்வேஸ்சில் ஒரு கெப்டனாக இணைந்து A320, A330, மற்றும் A 340 விமானங்களையும் A 380 எயார்பஸ் விமானத்தையும் இயக்கியுள்ளார். ளில் முதலாவது அதிகாரியாக செயற்பட்டுள்ளார்.

இவர் எதியாட்டின் பாதுகாப்பு மற்றும் தரத் திணைக்களத்திற்கு முன்னணி கணக்காய்வாளராகவும் நியமிக்கப்பட்டதுடன், பெரும்பாலான செயற்பாட்டு துறைகளிடையே ஒரு தர உறுதிப்பாட்டு கணக்காய்வாளராக உள்வாரி மற்றும் வெளிவாரி கணக்காய்வுகளை செயலாற்றியுள்ளார். இவர் ஒரு கெப்டனாக 2019 இல் ஸ்ரீலங்கனுக்கு திரும்பியதுடன், 2020 IOSA சான்றளிப்பு கணக்காய்விற்கு தயாராவதற்காக ஆலோசகர் IOSA கணக்காய்வாளராக பணிக்கமர்த்தப்பட்டார். இதன் பின்னர் இவர் 2021 இல் சிரேஷ்ட முகாமையாளர் குழுமப் பாதுகாப்பு ஆக பதவியுயர்த்தப்படுவதற்கு முன்னர் விமானப் பாதுகாப்பு முகாமையாளராக நியமிக்கப்பட்டார்.

தற்போது இவர் கூட்டாண்மை பாதுகாப்பிற்கு மேலாக செயற்பாட்டு தரத்தினை மேற்பார்வை செய்கின்றார். கெப்டன் மடபாத்த அவர்கள் EASA, IATA, எயார்பஸ் மற்றும் போஹிங் ஆகியவற்றிலிருந்து பாதுகாப்பு முகாமைத்துவ அமைப்புமுறை மற்றம் தர முகாமைத்துவ அமைப்புமுறையில் விரிவான பயிற்சியினையும் விமான உள்வாரி பயிற்சியினையும் பெற்றுள்ளார். இவர் பிராந்திய வான்வழிப் போக்குவரத்து பாதுகாப்பு திட்டத்திற்கான எட் ஹொக் செயற்பாட்டு குழுமத்தில் சேவையாற்றுவதுடன், வன்வேல்ட் பாதுகாப்பு சிறந்த நடைமுறை குழுவின் அங்கத்தவரும் ஆவார் மற்றம் தேசிய வான்வழிப் போக்குவரத்துப் பாதுகாப்பு திட்டத்தின் அபிவிருத்தியில் விமான நிறுவனத்தினை பிரதிநிதித்துவம் செய்கின்றார்.

# நிறுவன இடர் முகாமைத்துவம்

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் அதன் நாளாந்த செயற்பாடுகள் மற்றும் கூட்டாண்மை குறிக்கோள்களை அடைவதற்கு துணைபுரிவதற்காக இடர் முகாமைத்துவத்தின் முக்கியத்துவத்தினை அங்கீகரிக்கின்றது.

இடர் முகாமைத்துவ நியமங்கள் மற்றும் துறைசார் தேவைப்பாடுகளின் அடிப்படையில் கம்பனியானது ஒரு இடர் முகாமைத்துவ வரம்புறுகையினை கடைப்பிடித்துள்ளது. நி.இ.மு. வரம்புறுகையானது இடரது இனங்காணுதல், மதிப்பிடுதல் மற்றும் முகாமைத்துவம் ஆகியவற்றிலான வழிகாட்டிகளுடன் பணிப்பாளர்கள் சபையினால் ஒரு நிலையான விதத்தில் ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் அனைத்து பிரிவுகளிலும் கடைப்பிடிப்பதற்கு அங்கீகரிக்கப்பட்டது.

## இடர் ஆளுகை

பணிப்பாளர்கள் சபையானது ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் இடர் மேற்பார்வைக்கும் கம்பனியின் இடர் முகாமைத்துவ வரம்புறுகைக்கும் பொறுப்பாளியாயுள்ளது.

கணக்காய்வுக் குழுவானது வணிக இடர்களின் இனங்காணுதல், மதிப்பிடுதல் மற்றும் முகாமைத்துவத்திற்கு முகாமைத்துவ மட்டத்தில் நிறுவப்பட்ட செயன்முறைகளை மீளாய்வு செய்வதன் மூலம் சபைக்கு அதன் மேற்பார்வை பொறுப்பில் துணைபுரிகின்றது.

பிரதம நிறைவேற்று அதிகாரி இடர் முகாமைத்துவத்தில் மூலோபாய வழிகாட்டலை வழங்குவதுடன் நிறுவனத்தினுள்ளான தீர்மானம் மேற்கொள்வதில், இடர்களது தெளிவான கவனம் மற்றும் இடர் முகாமைத்துவக் கொள்கைகளின் பிரயோகம் என்பவற்றை உறுதிசெய்கின்றார்.

சிரேஷ்ட முகாமைத்துவக் குழுவானது இடர் தோற்றுருவங்களை மீளாய்வு செய்து இடர்களை வினைத்திறனாக முகாமைப்படுத்துவதற்கான மூலோபாயங்களை உருவாக்குகின்றது. திணைக்களங்கள்/பிரிவுகளின் முகாமையாளர்கள் அவர்களது பொறுப்புப் பிரிவில் இடர்களை இனங்காண்பதற்கும் அவற்றை முகாமைப்படுத்துவதற்கான செயல் திட்டங்களை உருவாக்குவதற்கும் பொறுப்பாளியாவார்கள்.

ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் நி.இ.மு. அமுலாக்கமானது குழும உறுதிப்பாடு மற்றும் ஆலோசனைச் சேவைகளினால் வசதியளிக்கப்படுகின்றது.

இனங்காணப்பட்ட இடர்கள் நிகழத்தக்க சாத்தியம் மற்றும் இடரின் தாக்கம் என்பவற்றின் அடிப்படையில் பகுப்பாய்வு செய்யப்பட்டு இடர் புள்ளியின் அடிப்படையில் கணிசமானது, உயர்வானது, மத்திமமானது அல்லது குறைவானது என தரப்படுத்தப்படுகின்றன. இடர் புள்ளியானது நிகழத்தக்க சாத்திய தரத்தினை தாக்கத் தரத்தினால் பெருக்கி கணிப்பிடப்படுகின்றது.

இடர் தரப்படுத்தல்கள் மற்றும் இடர் புள்ளிகளின் அடிப்படையில் செயல் திட்டங்கள் உருவாக்கப்படுகின்றன. முக்கியமான இடர் செய்கைமுறை செயற்பாடுகள் பி.நி.அ./உரிய சிரேஷ்ட முகாமைத்துவ குழு அங்கத்தவரினால் மீளாய்வு செய்யப்படுகின்றன.

அனைத்து இடர் தோற்றுருவங்களும் ஒரு மத்திய தரவுத்தளத்தில் பராமரிக்கப்படுவதுடன் இடர் உடைமையாளர்கள் இடர்கள் இற்றைப்படுத்தப்பட்டு நடைமுறை செயற்பாட்டு சூழலினை பிரதிபலிப்பதனை உறுதிசெய்வதற்காக நி.இ.மு. அமைப்புமுறையினை நேரடியாக இற்றைப்படுத்திக்கொள்ளலாம்.




## இடர் முகாமைத்துவ செயன்முறை

ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் இடர் முகாமைத்துவச் செயன்முறையானது, இடர் இனங்காணுதல், இடர் பகுப்பாய்வு, இடர் செய்கைமுறை மற்றும் இடர் அறிக்கையிடல் மற்றும் கண்காணித்தல் ஆகியவற்றை உள்ளடக்குகின்றன.




## இடர் நிலத்தோற்றம்

ஒரு இயக்காற்றலான வணிகச் சூழலில் செயற்படும் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் உள்வாரி மற்றும் வெளிவாரி காரணிகளிலிருந்து எழுகின்ற பல்வேறு இடர்களுக்கு வெளிப்பாடுடையதாயுள்ளது. கம்பனியானது பொருத்தமான உள்வாரி மற்றும் வெளிவாரி காரணிகளை எதிர்நோக்கி செயற்பாட்டு மற்றும் கூட்டாண்மை குறிக்கோள்களை அடைவதில் ஏதேனும் தடையினை ஏற்படுத்தக்கூடிய சாத்தியமான இடர்களை இனங்காண்கின்றது.

ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் இடர் நிலத்தோற்றமானது உலகளாவிய தொற்று மற்றும் உலகளாவிய விமானச்சேவைத் துறையின் பாரியபொருளாதார காரணிகள், குறைந்த செலவையுடைய வானூர்திகள் செயற்பாடுகளுக்காக வளர்ச்சியடையும் கேள்வி மற்றும் நீண்டு நிலைத்துள்ள முழு செலவின ஊர்திகளினால் பாதிக்கப்பட்டது.

மேலும், ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ், இலங்கையின் சுற்றுலாத் துறையில் எதிர்மறையான தாக்கத்திற்கு இட்டுச்சென்ற பிரயாண ஆலோசனைகள் மற்றும் நாட்டின பொருளாதார நிலைமையினால் நிதியளிப்பிற்கான அணுக்கத்தின் கட்டுப்பாடு என்பவற்றால் பாதிக்கப்பட்டது.

# கூட்டாண்மை ஆளுகை அறிக்கை

ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் சபை மற்றும் முகாமைத்துவமானது கம்பனியின் செயற்திறனது நீடிப்புத்திறனுக்கு திடமான கூட்டாண்மை ஆளுகை அவசியம் என நம்புகின்றது. அத்துடன் பணிப்பாளர்கள் சபையானது அடிப்படையில் பாரபத்திய பங்களிப்பினை நிறைவேற்றுபவர்களாக அரச உடைமை நிறுவனங்களின் ஒரு அவசியமான தேவைப்பாடாக சிறந்த ஆளுகை நடைமுறைகளை கடைப்பிடித்தல் காணப்படுகின்றது.

நியாயத்தன்மை, பொறுப்பு, வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் ஆகியவற்றில் ஒரு ஆரோக்கியமான சமநிலையினை மேம்படுத்தி பராமரிப்பதற்காக கூட்டாண்மை ஆளுகைக் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளது நியமங்களை தொடர்ச்சியாக மேம்படுத்துவதற்கு கம்பனியானது கடப்பாடுடையதாயுள்ளது.

பணிப்பாளர்கள் சபையினால் அமுலாக்கப்பட்ட அதன் கூட்டாண்மை ஆளுகையின் ஒரு பகுதியாக பின்வரும் சட்டம், கோவை மற்றும் மனமுவந்த நடைமுறைகள் வரம்புறுகைகளை பின்பற்றுவதில் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் இணங்கியொழுகியுள்ளது

- 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம்
- கம்பனியின் அமைப்பு அகவிதிகள்
- 16 நவம்பர் 2021 திகதியிடப்பட்ட அரச நிறுவனங்கள் சுற்றறிக்கை இலக்கம் 01/2021 இன் கீழ் வழங்கப்பட்ட அரச உடைமை நிறுவனங்களுக்கான கூட்டாண்மை ஆளுகையிலான வழிகாட்டிகள் மற்றும் செயற்பாட்டு கையேடு.
- உள்ளகக் கம்பனி விதிகள் மற்றும் செயன்முறைகள் மற்றும் துறை குறிப்பிட்ட விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள்.

## பணிப்பாளர்கள் சபை

### *சபையின் தொகுப்பு*

கம்பனியின் அமைப்பு அகவிதிகளின் ஏற்பாடுகளின் பிரகாரம், இலங்கை அரசாங்கமானது திறைசேரிக்கான செயலாளரூடாக பணிப்பாளர்கள் சபையினை நியமிக்கின்றது. இது கம்பனியின் 50 சதவீதமான பங்குகளை அரசாங்கம் வைத்திருக்கும் வரை செயற்படும். அரசாங்கமானது அரச உடைமை நிறுவனங்களை வெற்றிகரமான முயற்சிகளாக மேற்கொள்ளும் ஆற்றலுடனான தகைமைமிக்க, மற்றும் திறமைமிக்க ஆளணியினரை சபை உள்ளடக்குவதனை உறுதிசெய்வதற்காக ஒரு தெரிவுக் குழவினூடாக சபைக்கு பணிப்பாளர்களை நியமிக்கின்றது. நிறுவனங்களின் பொது உரித்துடைமையானது அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதனால், பணிப்பாளர்கள் சபையானது அரசாங்கத்திற்கு நேரடியாகப் பொறுப்புக்கூறல் வேண்டும்.

### *சபையின் பங்கு*

கம்பனியின் குறிக்கோள்களை அடைவதில் துணைபுரிவதற்கு சபையானது மூலோபாய வழிகாட்டலை வழங்குகின்றது. அத்துடன் மூலோபாயத் திட்டமானது தேசிய கொள்கைகள் மற்றும் முன்னுரிமைகளுடன் ஒத்திருப்பதனை உறுதிசெய்கின்றது.

சபையானது முகாமைத்துவத்திற்கிடையே பொறுப்புக்களில் ஒரு தெளிவான வேறுபடுத்தலை மேற்கொள்வதுடன் இது சமநிலை மற்றும் அதிகார அமைப்பிற்கு வசதியளிக்கின்றது.

சபையின் அடிப்படை பொறுப்புக்கள்;

- மூலோபாய பணிப்புரைகளை பயனுறுதியுடன் அமுலாக்குவதனை வசதியளிப்பதற்காக விசேடமாக செயற்பாட்டு தீர்மானங்களை மேற்கொள்வதில் முகாமைத்துவத்திற்கு போதுமான அதிகார ஒப்படைப்பினை உறுதிசெய்தல்.
- தீர்மானம் மேற்கொள்ளல் மற்றும் பொறுப்புக்கூறலுக்கு வசதியளிக்கும் ஒரு திடமான மற்றும் நம்பகத்தன்மையான முகாமைத்துவ தகவல் அமைப்பு முறையினை கம்பனி வைத்திருப்பதனை உறுதிசெய்தல்.
- கணக்கீட்டு மற்றும் நிதியியல் அறிக்கையிடல் அமைப்புமுறைகள், இடர் முகாமைத்துவம் மற்றும் செயற்பாட்டு கட்டுப்பாடு போன்ற கட்டுப்பாட்டு அமைப்பு முறைகளின் துல்லியத்தினை உறுதிசெய்தல் மற்றும் சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் பொருத்தமான நியமங்களுடனான இணக்கப்பாட்டினை நிலைநிறுத்துதல்.
- செயற்பாடு, நிர்வாக மற்றும் நிதியியல் செயன்முறைகள் உள்ளடங்கலான முக்கிய செயலாக்கம் மற்றும் செயன்முறைகள் முறையாக ஆவணப்படுத்தப்பட்டு காலாகாலம் இற்றைப்படுத்தப்படுவதனை உறுதிசெய்தல்.
- கம்பனியின் இணையத்தளத்தினூடாக ஏதேனும் நியதிச்சட்ட மற்றும் செயற்பாட்டு தேவைப்பாடுகளை சமரசம் செய்யாது அதன் பங்காளிகளுக்கு ஆகக்கூடிய நிதியியல் மற்றும் நிதியல்லா தகவல்கள் வெளிப்படுத்தப்படுவதனை உறுதிசெய்தல்.

பணிப்பாளர்கள் அவர்களது கடமைகளை செயலாற்றுவதற்காக நேரகாலத்துடனான மற்றும் துல்லியமான தகவல்களை வழங்குவதற்காக பின்வரும் செயன்முறைகள் காணப்படுகின்றன.

- அனைத்து பணிப்பாளர்களும் துல்லியமான, பொருத்தமான, நேரத்திற்கேற்ற, தெளிவான மற்றும் சமநிலையான தகவல்களை பெற்றுக்கொள்ளுதல்
- குழுக்கள், பணிப்பாளர்கள் சபை மற்றும் ஏனைய முக்கிய முகாமைத்துவத்திற்கிடையே தகவல்கள் பாய்ச்சப்படுவதற்காக கம்பனியின் செயலாளர் தொடர்புகொள்ளல் புள்ளியாகச் செயற்படுகின்றார்.
- பி.நி.அ. உடன் உரிய பிரிவுகளின் தலைமைகள் அவர்களது சமர்ப்பிப்புகளை சபைக்கு முன்னிலைப்படுத்தி சபையினால் வேண்டப்படும் அவசியமான தெளிவாக்கல்களை வழங்குகின்றார்கள்.
- மேலாக, கம்பனியின் நிலைபேறுள்ள முன்னெடுப்புகளுக்கு அமைவாக அனைத்து சபைப் பத்திரங்களும் இலத்திரணியல் வடிவத்தில் கிடைக்கப்பெறுகின்றன.

சபையின் செயற்பாடுகள் வலுவான தகவல் தொழில்நுட்பத்தினால் துணையளிக்கப்படுவதுடன், இது சபையின் அங்கத்தவர்கள் அவர்களது சபை பத்திரங்களை ஒரு பாதுகாப்பான இணைப்பினூடாக அணுகுவதனையும் தொலைவிலிருந்து கூட்டங்களில் பங்குபற்றுவதனையும் இயலுமையாக்குகின்றது.

## சபையின் உபகுழுக்களுக்கு ஒப்படைத்தல்

சிறந்த ஆளுகை மற்றும் சிறந்த நடைமுறைகளை நிறைவேற்றுவதற்காக விமான நிறுவனமானது சபை உபகுழுக்களை நிறுவியுள்ளது. இந்த குழுக்கள் ஒப்படைக்கப்பட்ட குழுக்களுக்கு நிபுணத்துவம் மற்றும் அனுபவத்தினை கொண்டு வரக்கூடிய பணிப்பாளர்களை உள்ளடக்குகின்றது. கடமைகள் உத்தியோகபூர்வ வரையறை நியதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. சபை உபகுழுக்களுக்கான செயலாளர் கம்பனியின் செயலாளர் ஆவார்.

வரையறை நியதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள அவர்களது அதிகாரம் மற்றும் பொறுப்புக்கூறலினுள் வருகின்ற விடயங்களை கருத்திலெடுப்பதற்காகவும் கலந்துரையாடுவதற்காகவும் குழுக்கள் வழக்கமாக கூடுகின்றன.

# கூட்டாண்மை ஆளுகை அறிக்கை *(தொடர்ச்சி.)*

### பணிப்பாளர்களுக்கான இழப்பெதிர்காப்பு

கம்பனியின் அமைப்பு அகவிதிகளின் பிரகாரம், கம்பனியின் பணிப்பாளர்கள் என்ற அவர்களது தகுதியில் அவர்களது கடமைகளை செயலாற்றுவதன் விளைவாக ஆட்படும் பொறுப்புக்கள் தொடர்பாக சட்டத்தில் அனுமதிக்கப்பட்டுள்ள அளவிற்கு கம்பனியிலிருந்து பணிப்பாளர்களுக்கு இழப்பெதிர்காப்பு வழங்கப்படுகின்றது. பணிப்பாளர் மோசடியாக அல்லது நேர்மையற்று செயற்பட்டிருக்கின்றார் என்று உறுதிப்படுத்தப்பட்ட அளவிற்கு இழப்பெதிர்காப்பு எவ்வித காப்பினையும் வழங்காது. கம்பனியானது வருடம் முழுவதும் பணிப்பாளர்கள் மற்றும் அதிகாரிகளது பொறுப்பு காப்புறுதியினை பராமரித்துள்ளது.

### தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரியின் பங்கு

தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரியின் வேறுபட்ட பொறுப்புக்களை பொறுத்தளவில் மூலோபாய மற்றும் செயற்பாட்டு விடயங்களிலான வேறுபாடானது தெளிவாக நிறுவப்பட்டுள்ளது. பணிப்பாளர்கள் சபையின் தலைவர் ஒரு நிறைவேற்று அதிகாரமற்ற நியமனம் மற்றும் அவர் மூலோபாய விடயங்களில் முன்னிறுத்தம் செய்வதுடன், வணிகம் மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவக் குழுவினை மேற்பார்வை செய்கின்றார். அவர் சபையின் செயன்முறைகள் பின்பற்றப்படுவதனையும் கூட்டங்களில் அனைத்து சபை அங்கத்தவர்களும் பயனுறுதியுடன் பங்குபற்றுவதனை உறுதிசெய்கின்றார்.

பி.நி.அ. வணிகத்தின் நாளாந்த முகாமைப்படுத்தலுக்கும், சிரேஷ்ட முகாமைத்துவக் குழுவுக்கு தலைமைத்துவம் வழங்குவதற்கும் குழுமத்தின் மூலோபாய மற்றும் செயற்பாட்டு திட்டங்களை நிறைவேற்றுவதற்கும் பொறுப்பாளியாவார். கம்பனியின் செயற்திறன், செயற்பாட்டு விடயங்கள் மற்றும் மனித வளங்கள் தொடர்பான ஏதேனும் சிக்கல்களை தலைவர் பி.நி.அ. இனை சந்தித்து வழக்கமாக கலந்துரையாடுகின்றார்.

### உள்ளகக் கட்டுப்பாடு மற்றும் நிறுவன இடர் முகாமைத்துவம்

நடைமுறையிலுள்ள உள்ளகக் கட்டுப்பாட்டு வரம்புறுகையானது, நிறுவன இடர் முகாமைத்துவ வரம்புறுகை, நிதியியில் கட்டுப்பாடு, உள்ளகக் கணக்காய்வு மற்றும் துணையளிக்கும் கொள்கைகள் என்பவற்றால் நிறுவப்பட்டுள்ளது. கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாட்டு வரம்புறுகையின் நோக்கமானது செயற்பாடுகள் வினைத்திறனானவை மற்றும் அவை மூலோபாய இலக்குகளுடன் சிறப்பாக ஒருநிலைப்படுத்தப்பட்டுள்ளன என்பதை உறுதிசெய்வதற்காகும். உள்ளகக் கட்டுப்பாட்டு வரம்புறுகையானது சரியான, நம்பகமான, பூரணமான மற்றும் நேரத்திற்கேற்ற நிதி அறிக்கையிடல் மற்றும் முகாமைத்துவ தகவல்களை உறுதிசெய்வதனை நோக்காகக் கொண்டதாகும். இந்த வரம்புறுகையானது நெறிமுறையான விழுமியங்கள், சிறந்த கூட்டாண்மை ஆளுகை மற்றும் இடர் முகாமைத்துவ நடைமுறைகளை ஒப்பளிக்கின்றது.

### சட்டரீதியான இணக்கப்பாடு

பணிப்பாளர்கள் சபையானது அரசாங்கம் மற்றும் ஏனைய முறைமைப்படுத்தல் அங்கங்களுக்கு செலுத்தவேண்டிய அனைத்து சட்டரீதியான கொடுப்பனவுகள், விமான நிறுவனத்தின் பணியாட்கள் தொடர்பான கொடுப்பனவுகள் உரிய நேரத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன என அவர்களது அறிவு மற்றும் நம்பிக்கைக்கு எட்டியவரைக்கும் திருப்தியடைகின்றார்கள்.



# முகாமைத்துவ கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு



**குழுமமானது 2021/22 நிதியாண்டிற்கு தேறிய நட்டமாக ரூபா 163.58 பில்லியனை பதிவுசெய்ததுடன், இதில் 87% ஆனது பரிமாற்றல் நட்டங்களை உள்ளடக்கியதாகும் (2020/21 - பரிமாற்றல் காரணமாக ஏற்பட்ட நட்டம் 40% ஆகும்).**

இலங்கை அரசாங்கமானது 07 ஏப்ரல் 2021 இல் USD 90.45 மில்லியனுக்கு சமமான இரண்டாம் கட்டமான மூலதன உட்பாய்ச்சலை வழங்கியதுடன் (முதலாம் கட்டமானது ரூபா 27.73 பில்லியன் அல்லது USD 150 மில்லியன் ஆகும், இது கடந்த வருடத்தில் மேற்கொள்ளப்பட்டது) இது மீளாய்வாண்டில் விமான நிறுவனத்தின் சுமையினை ஓரளவு தளர்த்தியது.



**2021 இலிருந்து உலகம் பூராவும் காணப்பட்ட எல்லைக் கட்டுப்பாட்டு தளர்த்தலுடன் வான் பயணத்திற்கான கேள்வி அதிகரித்துக் காணப்பட்டது. அதேசமயம் விமான நிறுவனமானது விமான எரிபொருள் விலை அதிகரிப்பு, நாட்டில் விமான எரிபொருளுக்கான தட்டுப்பாடு, அதிகரித்த வட்டி வீதங்கள், இலங்கை ரூபாவின் பெறுமதியிறக்கம், பணவீக்கம் மற்றும் நாட்டின் பொருளாதாரத்திலான அதிகரித்த கவலைகளுடன் பூகோள அரசியல் இடர்கள் போன்ற சவால்களுக்கு தொடர்ந்து முகங்கொடுத்தது.**

## நிதியியல் மீளாய்வு

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் அதன் வலையமைப்பினை தொடர்ந்தும் திடமாக கட்டியெழுப்பியதுடன் இது நாட்டில் சர்வதேச பிரயாணத்துறையின் மீட்டலுக்கு வழிகாட்டியதுடன் தெற்காசிய துறைக் கண்டத்தில் ஒரு முன்னணி மரபுசார் வானூர்தி நிலையினை பராமரித்தது. மீளாய்வுக் காலத்தின்போது விமானநிறுவனமானது விவேகமான முகாமைத்துவ முன்னெடுப்புகளூடாக கோவிட்-19 தாக்கத்தினைக் குறைக்கக்கூடியதாய் இருந்ததுடன் இவை மீளெழுச்சி மற்றும் செயற்திறனை மேம்படுத்தியும் செலவுக் குறைப்பினை உறுதிப்படுத்தியும் தொற்றின் பின்னரான மிகவும் இயக்காற்றல் வாய்ந்த காலத்திற்கு வழிசமைத்தது.

வான் போக்குவரத்துத் துறையானது 2022 இன் ஆரம்பத்திலிருந்து தொற்றின் பின்னரான கட்டத்தில் உலகளாவிய எல்லைக் கட்டுப்பாடுகளின் தளர்த்தலினைத் தொடர்ந்து கேள்வியில் ஒரு திடமான மீட்சியினைக் கண்டது. இந்த கேள்வி மீட்சியினால் வசதியளிக்கப்பட்டு கடந்த இரண்டு வருடக் காலப்பகுதியில் அடைந்த மூலோபாய செலவின வினைத்திறன்களுடன் ஸ்ரீலஎ USD இல் ஜனவரி - மார்ச் 2022 காலாண்டில் ஒரு தேறிய இலாபத்தினைப் பதிவு செய்தது.

இலங்கையின் தேசிய வானூர்தியாக ஸ்ரீலஎ சவால்களைச் சந்திக்கக்கூடிய அதன் ஆற்றலை காண்பித்தது மாத்திரமன்றி ஒரு நிலைபேறுள்ள வணிகச் சூழலை உருவாக்குவதற்கான விரைவூக்கத்தினையும் காண்பித்துள்ளது. கடந்த இரண்டு வருடங்களாக ஸ்ரீலஎ சரக்கு வர்த்தகத்தில் கோவிட்-19 தொற்றின் விளைவாக உருவாக்கப்பட்ட புதிய வாய்ப்புக்களை பயன்படுத்தியதன் மூலம் ஒரு குறிப்பிடத்தக்க உருமாற்றத்தினைக் கண்டதுடன் இக்காலப்பகுதியில் குறிப்பிட்ட பங்களிப்பினை மேற்கொண்டது.

2021 இலிருந்து உலகம் பூராவும் காணப்பட்ட எல்லைக் கட்டுப்பாட்டு தளர்த்தலுடன் வான் பயணத்திற்கான கேள்வி அதிகரித்துக் காணப்பட்டது. அதேசமயம் விமான நிறுவனமானது விமான எரிபொருள் விலை அதிகரிப்பு, நாட்டில் விமான எரிபொருளுக்கான தட்டுப்பாடு, அதிகரித்த வட்டி வீதங்கள், இலங்கை ரூபாவின் பெறுமதியிறக்கம், பணவீக்கம் மற்றும் நாட்டின் பொருளாதாரத்திலான அதிகரித்த கவலைகளுடன் பூகோள அரசியல் இடர்கள் போன்ற சவால்களுக்கு தொடர்ந்து முகங்கொடுத்தது.

அதன் பின்னர், மீளாய்வாண்டில், குழுமமானது 2021/22 நிதியாண்டில் ஒரு தேறிய நட்டமாக ரூபா 163.58 மில்லியனை பதிவுசெய்தது. இதில் 87% பரிமாற்றல் நட்டங்களை உள்ளடக்கியதாகும் (2020/21 - நட்டத்தின் 40% பரிமாற்றலின் காரணத்தினாலாகும்.)

குழுமத்தின் அதிகரித்த நட்டத்திற்கு பங்களித்த பிரதான உருப்படிகள் பின்வருமாறு.

| | 2020/21 | 2021/22 | % அதிகரிப்பு |
|---|---|---|---|
| நிதிச் செலவினம் | 22.53 | 22.90 | 2% |
| மொத்த பரிமாற்றல் நட்டம் | 19.67 | 142.61 | 625% |

# முகாமைத்துவ கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு (தொடர்ச்சி.)

## நாணயமாற்று வீத அசைவின் தாக்கம்

நாணயமாற்று வீத அசைவு - டுமுசு/ருளுனு




**அசைவு:** 2021/22 நிதியாண்டின்போது இலங்கை ரூபாயானது அமெரிக்க டொலருக்கு எதிராக தொடர்ச்சியாக பெறுமதியிழந்ததுடன், மார்ச் 2022 இல் ஒரு கணிசமான பெறுமதியிழப்பு காணப்பட்டது. வருடத்தின் இறுதி மாதத்தில் காணப்பட்ட இலங்கை ரூபாவின் பெறுமதியிழப்பு 47% ஆகும் இது முன்னைய ஆண்டில் 6% ஆக காணப்பட்டது. மேலும், இலங்கை ரூபாயானது ஏனைய வருமானம் உழைக்கும் பிரதான நாணயங்களுக்கு எதிராகவும் பெறுமதியிழந்தது.

**தாக்கம்:** கம்பனியின் செயற்பாட்டுச் செலவினங்களின் கணிசமான பகுதி அந்நிய நாணயத்தில் (பிரதானமாக அமெரிக்க டொலரில்) ஆட்படுவதுடன் அதிகளவான கடன்களும் அமெரிக்க டொலரில் குறிப்பிடப்பட்டுள்ளன. சாதகமற்ற நாணயமாற்று வீதங்களின் அசைவானது விமான நிறுவனத்தின் இலாபத்தில் மோசமான பாதிப்பினை ஏற்படுத்தின. இது பிரதானமான தேறிய வெளிநாட்டு நாணய பொறுப்புக்களின் மீள்பெறுமதியிடலின் விளைவாக ஏற்பட்டதுடன் மொத்த பரிமாற்றல் நட்டமாக (செயற்பாடு மற்றும் நிதியளித்தல்) 2021/22 நிதியாண்டிற்கு ரூபா 142.61 பில்லியனாகப் பதிவுசெய்யப்பட்டது (2020/21 - ரூபா 19.67 பில்லியன்).

## விமான எரிபொருள் விலை அசைவின் தாக்கம்

விமான எரிபொருள்




**அசைவு:** 2021 இன் போது விமான எரிபொருளின் விலையானது திடமாக அதிகரித்து 2022 இன் ஆரம்பத்தில் புதிய உச்சத்தினை தொட்டது. உலகளாவிய எரிபொருளின் விலைகள் பிரதானமாக ரஷ்யா மற்றும் யுக்ரேன் இடையேயான குழப்பநிலை காரணமாக ஏற்பட்டதாகும். ஏப்ரல் 2021 இல் விமான எரிபொருள் கலன் ஒன்றின் விலை USD 1.79 ஆகக் காணப்பட்டு 2021/22 நிதியாண்டின் இறுதியில் கலனொன்றுக்கு USD 2.97 ஆக அதிகரித்து. இந்தப் பின்னணியில் சர்வதேச விமானப் போக்குவரத்து சங்கமானது (ச.வி.போ.ச.) 2022 இல் விமான நிறுவனங்களின் இலாபகரத்தன்மையில் எரிபொருட்களின் விலைகள் ஒரு வல்லமைமிக்க சவாலாகக் காணப்படும் என எதிர்வுகூறியுள்ளது.

**தாக்கம்:** வருடத்தின் இறுதியில் உயர்வடையும் விமான எரிபொருள்களின் விலைகள் விமான நிறுவனத்தின் இலாபத்தில் பிரதிபலிப்பினை ஏற்படுத்தியதுடன் இதன் காரணமாக ரூபா 17,565 மில்லியன் நட்டம் பதிவுசெய்யப்பட்டது.

## குழுமத்தின் உழைப்புகள்

இதன் பிரகாரம் குழுமமானது வருடத்திலிருந்து வருடம் ஒரு கணிசமான அதிகரிப்பினைப் பிரதிபலிக்கும் வருவாயாக ரூபா 134,301 மில்லியனை பதிவுசெய்தது. இது கடந்த வருடத்திலிருந்து 164% அதிகரிப்பாகும்.

வருவாய் போக்குகள் ரூபா மில்.




வருவாய் தொகுப்பு



வருவாயிலான மாற்றம் ரூபா மில்லியனில்




ஏற்றிச்சென்ற பயணிகள் '000




ஏற்றிச்சென்ற சரக்கு தொன்களில்




2021 உடன் ஒப்பிடும்போது ஏற்றிச்சென்ற மொத்த பயணிகளின் எண்ணிக்கை 779% ஆல் அதிகரித்ததுடன் இது பல நாடுகளின் பிரயாணக் கட்டுப்பாட்டு தளர்த்தலின் விளைவாக ஏற்பட்டது. எனவே, மீளாய்வாண்டில் விமான நிறுவனத்தின் சந்தைக் கொள்திறன் முன்னைய ஆண்டிலிருந்து 166% ஆல் அதிகரித்ததுடன் ஒட்டுமொத்த பயணிகள் வானறைக் காரணியானது 20% இலிருந்து 49% அதிகரித்தது.

மீளாய்வாண்டில் சரக்கு வருவாயின் சதவீதம் குறைவடைந்த போதிலும் ஏற்றிச்சென்ற சரக்கு தொன்கள் 73% அதிகரிப்பினை பிரதிபலித்து. இது அட்டவணையின் மீள் தொடக்கத்துடன் அதிகரித்த கொள்ளளவின் காரணத்தினாலாகும். மொத்த தாங்குசுமைக்கு சரக்கிலிருந்தான பங்களிப்பு முன்னைய ஆண்டின் 78% உடன் ஒப்பிடும்போது 47% ஆக காணப்பட்டது.

## செலவினம்

2022 இல் குழுவின் செலவினங்கள் ரூபா 298,736 மில்லியனாகக் காணப்பட்டதுடன் இது அதிகரித்த செயற்பாடுகளின் காரணமாக 2021 இன் குழுமத்தின் மொத்த செலவினமான ரூபா 118,316 மில்லியனில் 153% அதிகரிப்பாகும். குழுமத்தின் செலவினங்களின் பிரிவுகள் பின்வருமாறு.

| | 2022 | | 2021 | | மாற்றம் | |
|---|---|---|---|---|---|---|
| | பெறுமதி (ரூபா மில்லி.) | பங்களிப்பு % | பெறுமதி (ரூபா மில்லி.) | பங்களிப்பு % | பெறுமதி (ரூபா மில்லி.) | % |
| விமான எரிபொருள் செலவினம் | 42,759 | 14% | 10,569 | 9% | 32,190 | 305% |
| விமானப் பராமரிப்பு மற்றும் பிரித்து சீராக்கல் செலவினம் | 23,088 | 8% | 13,695 | 12% | 9,393 | 69% |
| பணியாட்கள் செலவினம் | 17,416 | 6% | 17,112 | 14% | 304 | 2% |
| விமானநிலையம், செல்வழி மற்றும் பயணிகள் செலவினம் | 17,753 | 6% | 7,308 | 6% | 10,445 | 143% |
| விற்பனை, சந்தைப்படுத்தல் மற்றும் விளம்பரச் செலவினம் | 7,250 | 2% | 2,065 | 2% | 5,185 | 251% |
| விமானப் பணியாட்கள் செலவினம் | 3,231 | 1% | 1,680 | 1% | 1,551 | 92% |
| பெறுமானத்தேய்வு / பெறுமானக்குறைப்பு | 14,656 | 5% | 16,745 | 14% | (2,089) | (12%) |
| ஏனைய செயற்பாட்டுச் செலவினம் | 7,070 | 2% | 6,936 | 6% | 134 | 2% |
| பரிமாற்றல் நட்டம் | 34,730 | 12% | 6,339 | 5% | 28,391 | 448% |
| **செயற்பாட்டுச் செலவினம்** | **167,953** | **56%** | **82,449** | **70%** | **85,504** | **103%** |
| நிதிச் செலவினம் | 22,904 | 8% | 22,529 | 19% | 173 | 1% |
| வட்டி தாங்கும் பொறுப்புக்களிலான பரிமாற்றல் நட்டம் | 107,881 | 36% | 13,334 | 11% | 89,994 | 675% |
| **நிதிச் செலவினம்** | **130,785** | **44%** | **35,864** | **30%** | **90,167** | **251%** |
| **மொத்த செலவினம்** | **298,736** | **100%** | **118,314** | **100%** | **180,223** | **152%** |

# முகாமைத்துவ கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு (தொடர்ச்சி.)

குழுமத்தின் மொத்த செலவினங்களில் விமான எரிபொருள் கிரயமானது முன்னைய நிதியாண்டின் 9% உடன் ஒப்பிடும்போது 14% ஆக காணப்பட்டது. உலகளாவிய எரிபொருள் விலைகளின் காரணமாக மொத்த எரிபொருள் கிரயமானது அதிகரித்ததுடன் அதிகரித்த செயற்பாடுகளின் காணரமாக மொத்த பருமனளவும் அதிகரித்தது. சராசரி எரிபொருள் விலைகள் மீளாய்வாண்டில் கலனொன்றுக்கு USD 2.25 ஆக அதிகரித்ததுடன் முன்னைய ஆண்டில் இது USD 1.31 ஆக இருந்தது. எரிபொருள் செலவின அதிகரிப்பின் பகுப்பாய்வானது பின்வருமாறு.

| 2020/21 உடன் ஒப்பிடும்போது எரிபொருளின் அதிகரிப்பு | ரூபா மில். | பங்களிப்பு |
|---|---|---|
| எரிபொருள் விலையிலான அதிகரிப்பு | (17,565) | 55% |
| பருமனளவிலான அதிகரிப்பு | (11,872) | 37% |
| அமெரிக்க டொலருக்க எதிரான இலங்கை ரூபாவின் பெறுமதியிழப்பு | (2,753) | 9% |

வான்பயண எண்ணிக்கைகள் மற்றும் பயணிகள் எண்ணிக்கையிலான அதிகரிப்பிற்கமைய விமான நிலைய செல்வழி மற்றும் பயணிகள் செலவினங்கள் 143% ஆல் அதிகரித்ததுடன் விற்பனை, சந்தைப்படுத்தல் மற்றும் விளம்பரச் செலவினங்கள் 251% ஆல் அதிகரித்தது. விமானப் பணியாள் செலவினங்கள், விமானப் பராமரிப்பு மற்றும் பிரித்து சீராக்கல் செலவுகள் போன்ற ஏனைய செலவினங்கள் அதிகரித்த செயற்பாடுகளுக்கமைய அதிகரித்தன.

கோவிட்-19 மட்டங்களுக்கு முன்னர் ஒப்பிடும்போது குறைவடைந்த விமானப் போக்குவரத்து வருவாயின் விளைவான நட்டத்தைக் குறைப்பதற்காக ஸ்ரீலஎ குத்தகை விடுபவர்களுடனான விரிவான பேரம்பேசலூடாக குத்தகை ஒப்பந்தங்களை மீள் கட்டமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டது. எனவெ, 2021/22 இல் இதன் விளைவான சேமிப்பானது ரூபா 5,841 மில்லியன் (USD 28.4) ஆகக் காணப்பட்டதுடன் உரிய குத்தகை ஒப்பந்தங்களில் மொத்த எஞ்சிய காலப்பகுதிக்கு விமானக் குத்தகைக்கு விடுபவர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற குத்தகை வாடகைக் குறைப்பானது USD 160 மில்லியன் ஆகும்.

மேலாக, த.தொ., கருவிகளது அபிவிருத்தி, ஆதனங்கள் மற்றும் ஏற்பாட்டியல், வான் பயணச் செயற்பாடுகள் மற்றும் வருவாய் முகாமைத்துவ பிரிவுகள் தொடர்பான் மூன்றாம் தரப்பினருடனான ஒப்பந்தங்களை மீள் பேரம் பேசலின் விளைவாக 2021/22 நிதியாண்டில் ரூபா 2,715 மில்லியன் (USD 13.2) சேமிக்கப்பட்டது.

பணியாட்களின் சம்பளங்கள்/படிகளின் குறைப்புடன் ஒப்பந்த பணியாட்களை கொடுப்பனவற்ற லீவில் அனுப்புதல் மற்றும் வெளிநாட்டு பணியாட்களின் சேவைகளை இடைநிறுத்தல் போன்ற முன்னெடுப்புகள் முன்னைய ஆண்டின் மட்டங்களுக்குச் சமமாக மீளாய்வாண்டில் பணியாட்களது கிரயத்தினை பராமரிக்கக் கூடியதாயிருந்தது.

### காசு நிலைமை

நிதியாண்டு முழுவதும் குழுமமானது சாத்தியமான காசு நிலைமையினை பராமரித்ததுடன் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப்பாய்ச்சல்கள் எதிர்மறையான ரூபா 30,779 மில்லியனிலிருந்து 2021/22 இல் ஒரு உறுதியான ரூபா 14,542 மில்லியனாகக் காணப்பட்டது.

காசு நிலைமையானது விமான குத்தகைக் கம்பனிகளுடனான பேரம்பேச்சுக்களினால் உறுதுணையளிக்கப்பட்டதுடன் USD 23.4 பெறுமதியான குத்தகை மற்றும் பராமரிப்பு ஒதுக்கக் கொடுப்பனவுகளை ஒத்திவைப்பதற்கான இணக்கம் காணப்பட்டது.

விமான நிறுவனத்தின் காசுப் பாய்ச்சல் மூலோபாயத்தின் கீழான மேலதிக சாத்தியப்பாடுகளை ஆராயும்போது ஸ்ரீலஎ அரச வங்கிகளிடமிருந்து பெறப்பட்ட வட்டியினைக் காலம் தாழ்த்திச் செலுத்தும் வசதியானது USD 5.26 மில்லியன் மற்றும் ரூபா 460 மில்லியன் என்பதுடன் மீள்செலுத்தல் காலமானது ஆறு மாதங்கள் முதல் பன்னிரண்டு மாதங்களை வரை நீடிக்கப்பட்டது.

இலங்கை அரசாங்கமானது 07 ஏப்ரல் 2021 இல் USD 90.45 மில்லியனுக்கு சமமான இரண்டாம் கட்டமான மூலதன உட்பாய்ச்சலை வழங்கியதுடன் (முதலாம் கட்டமானது ரூபா 27.73 பில்லியன் அல்லது USD 150 மில்லியன் ஆகும், இது கடந்த வருடத்தில் மேற்கொள்ளப்பட்டது) இது மீளாய்வாண்டில் விமான நிறுவனத்தின் சுமையினை ஓரளவு தளர்த்தியது.

## செயற்பாட்டு மீளாய்வு

### ஸ்ரீலஎ இன் செயற்திறன் மற்றும் சந்தை சாத்தியப்பாடு

செயலாற்றும் பிராந்தியங்களில் காணப்பட்ட தொடர்ச்சியற்ற பயணக் கட்டுப்பாட்டு தளர்த்தலுடன் கிடைக்கக்கூடிய விமானக் கொள்ளளவின் வினைத்திறனான பயன்பாடு தொடர்பாக புதிய சவால்களை நிதியாண்டு 2021/22 முன்னிலைப்படுத்தியது. வான் பயணத்திலான நம்பகத்தன்மையின் விளைவாக பயணிகளது கேள்வி மீள் ஆரம்பித்தலுடன் உயர்ந்த விளைவுடைய சந்தைகளிலான உச்சப்பயன்பாட்டினை உறுதிப்படுத்தும் அதேவேளை அபிவிருத்தியடையும் சந்தைகளின் வாய்ப்பில் உச்சப்பயனடைவதற்காக ஒரு மூலோபாய அணுகுமுறைக்கான உயர்ந்த அவசியத்தினை உருவாக்கியது. எனவே, 2021/22 இன் இறுதியில் ஸ்ரீலஎ இன் மொத்த பயணிகள் சுமையானது நிதியாண்டு 2020/21 இல் காணப்பட்ட 167,000 உடன் ஒப்பிடும்போது 2021/22 இல் 1.46 மில்லியனாகக் காணப்பட்டது. 2019/20 நிதியாண்டில் 5.5 மில்லியன் பயணிகள் காணப்பட்டார்கள். இதற்கமைய, தொற்றின் பின்னரான கேள்வியுடன் ஒப்பிடும்போது வழங்கப்பட்ட பயணிகள் கொள்ளளவானது 55% ஆக மாத்திரமே காணப்பட்டது.

இவ்வாண்டின்போது. ஸ்ரீலஎ வலையமைப்பு பூராவும் சர்வதேச எல்லைகளின் திறத்தலுடன் பயணத்திற்கான அதிகரித்த கேள்வியினை கருத்திற்கொண்டு சந்தையிலுள்ள இடைவெளிகளை இனங்காண்பதற்காக விரிவான கற்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இது அத்தகைய சந்தைகளுக்கு மேலதிக விமானக் கொள்ளளவினை பயன்படுத்துவதற்காகவும் உயர் விளைவிலான கேள்வியில் பயனடைவதற்காகவும் இனங்காணல் மற்றும் திட்டமிடுதல் நோக்கத்திற்காக மேற்கொள்ளப்பட்டதுடன், இதன்மூலம் வருவாய் சாத்தியப்பாட்டினை உச்சப்படுத்துவதற்குமாகும். இந்தக் கற்கைகளை பயன்படுத்தி, ஸ்ரீலஎ பங்களாதேஷ் மற்றும் இந்திய துணைக் கண்டத்திலிருந்து சவூதி அரேபியாவுக்கான பிரயாணத்திற்கு கணிசமானளவு கேள்வினை இனங்காணக் கூடியதாயிருந்தது. முன்னோக்கி பயணிப்பதற்கு ஒரு பயணப்பெயர்வு முடக்கம் தேவையான பயணிகளுக்கு ஒரு பொருத்தமான தெரிவினை உருவாக்குவதில் இலங்கை மற்றும் மாலைதீவுகள் பசுமை நாடுகளாக பெயரிடப்பட்டுள்ளமையினை பயன்படுத்த இயலுமையாயிருந்தது. இதற்கும் மேலாக, ஒரு திருத்தியமைக்கப்பட்ட செயற்பாட்டு அட்டவணையுடன் ஆரம்பிக்கப்பட்ட பாரம்பரிய வான் பயணச் செற்பாடுகள் உள்ளடங்கலாக தொடர்புடைய செயற்பாடுகளுக்கு கொள்ளளவானது தெரிவுசெய்து பயன்படுத்தப்பட்டது. சரக்கு கேள்வி மற்றும் பயணிகள் கேள்வியிலான ஏதேனும் அதிகரித்த கேள்வியினை சந்திப்பதற்காக விமானம் கிடைக்கக்கூடியதன்மை மற்றும் சாத்தியமான வருவாய் என்பவற்றின் அடிப்படையில் நிலைநாட்டப்பட்ட சரக்கு வழிகள் பராமரிக்கப்பட்டன. வான் பயணங்களின் செயற்பாடுகள் முக்கியமாக செலவினை ஈடுசெய்வதில் தங்கியிருப்பதுடன் தேவையாயின், ஸ்ரீலஎ

இன் முழுமையான வருவாய் சாத்தியத்தின் அடிப்படையில் விமானங்களை ஒதுக்கும் தீர்மானம் மேற்கொள்கின்றது.

இவ்வருடத்தின்போது, ஸ்ரீலஎ நாடுகளுக்கிடையேயான வான் குமிழ் உடன்படிக்கைக்கு அமைய இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையேயான வான் பயணங்களை ஸ்ரீலஎ செயலாற்றியது. இது இலங்கையிலிருந்து / இலங்கைக்கு செயலாற்றும் ஒரே சர்வதேச விமான நிறுவனமாக மிகவும் அவசியமான இணைப்பினை வழங்குகின்றது. த.ப.ஒ. (தடுப்பூசியேற்றப்பட்ட பயண ஒழுங்கை) திட்டத்தில் பங்குபற்றிய முதலாவது விமான நிறுவனங்களில் ஸ்ரீலஎ உம் ஒன்றாகும் என்பதுடன் வலையமைப்பில் சிங்கப்பூருக்கும் ஏனைய கிடைக்கக்கூடிய இடங்களுக்கும் இடையே தடுப்பூசி பெற்றுக்கொண்ட பயணிகளுக்கான இணைப்பினை சிங்கப்பூரிலிருந்து / சிங்கப்பூருக்கு வான் பயணங்களை செயலாற்றியது.

இந்த சூழ்நிலைமைகளின் கீழ், விமான நிறுவனமானது ஒரு பயணிகள் வருவாயாக 2021/22 நிதியாண்டிற்கு USD 356.4 மில்லியனை (ரூபா 78 பில்லியன) அறிக்கையிட்டவேளை மொத்த வான் போக்குவரத்து வருவாயானது USD 589.1 மில்லியனாக (ரூபா 123.6 பில்லியன்) காணப்பட்டதுடன் இது 2020/21 இலிருந்து 143% ஒட்டுமொத்த அதிகரிப்பாகும் ஆனால் 2019/20 இலிருந்து 36% வீழ்சியாகும்.

கோவிட் தொற்றின் பின்னரான பயணிகளுக்கான கேள்வியின் மீட்சிக்கான சந்தை எதிர்பார்ப்பு தொடர்ச்சியாக சாத்தியமாக காணப்படுகின்றது. எவ்வாறாயினும், நம்பகத்தன்மையான சந்தை எதிர்வுகூறல்கள் காணப்படாததனால், ஸ்ரீலஎ கள யதார்த்தங்களை தொடர்ந்தும் நெருக்கமாக கண்காணிப்பதுடன், சர்வதேச வான் போக்குவரத்து சங்கம் (ச.வா. போ.ச.) மற்றும் சர்வதேச சிவில் வான் போக்குவரத்து ஒழுங்கமைப்பு (ச.சி. வா.ஒ.) போன்ற வர்த்தக அங்கங்களினால் மேற்கொள்ப்பட்ட சுயாதீன நுண்ணறிவினால் வழிநடத்தப்பட்டு 2022/23 வருடத்தில் சாத்தியமான வருவாய் வளர்ச்சிப் போக்கினை தொடர்ந்தும் அனுபவிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## வன்வேல்ட் எலாயன்ஸ்

ஸ்ரீலஎ 2014 இலிருந்து வன்வேல்ட் எலாயன்சின் ஒரு அங்கத்தவராகும் என்பதுடன் பயணிகளுக்கு உலகம் பூராவும் 1,100 க்கும் அதிகமான வன்வேல்ட் பயண இலக்குகளுக்கான வாய்ப்பினை வழங்குகின்றது. இந்திய துணைக்கண்டத்திலிருந்து எலயான்சினுள் சேர்த்துக்கொள்ளப்பட்ட முதலாவது விமான நிறுவனம் ஸ்ரீலஎ என்பதுடன் விமான நிறுவன வணிகத்தில் பின்வரும் பாரிய மற்றும் உயர்மதிப்புடைய வணிக நாமங்களுடன் அங்கத்துவத்தினை பகிர்கின்றது - அலாஸ்கா எயார்லைன்ஸ், அமெரிக்கன் எயார்லைன்ஸ், பிரிட்டிஷ் எயர்வேஸ், கெத்தே பசிபிக், வின்எயார், ஐபீரியன் எயார்லைன்ஸ், ஜப்பான் எயார்லைன்ஸ், மலேஷியன் எயார்லைன்ஸ், குவான்டாஸ், கட்டார் எயார்வேஸ், றோயல் எயார் மெறொக் மற்றும் றோயல் ஜோர்டானியன் என்பவையாகும். 2022 ஆம் வருடத்தில், ஓமான் எயார்வேஸ் வன்வேல்ட் எலாயன்சினுள் சேர்த்துக்கொள்ளப்பட்டதுடன் 2023 அளவில் எலாயன்சின் ஒரு பங்குதாரர் அல்லாத அங்கத்தவராக வரும்.

எலாயன்சின் ஒரு அங்கத்தவராக ஸ்ரீலஎ அதன் வலையமைப்பினை வளர்க்க இயலுமையாயிருந்ததுடன் அதிகமான உலகளாவிய மேடைக்கு ஒரு பிராந்திய வானூர்தியாக அதன் வணிக நாமத்தைப் பயன்படுத்திக்கொண்டது. அதேவேளை அதன் விசுவாச திட்டத்தினை கட்டியெழுப்பிய போதும் அறிவு மாற்றல்களின் ஒரு பகுதியாகவும் இருந்தது. வன்வேல்ட் அடிக்கடி பறப்பவர் அங்கத்தவர்களுக்கு பின்வரும் நன்மைகள் வழங்கப்படுகின்றன. வணிக வகுப்பிற்கு பதிவுசெய்வதற்கான அணுக்கம், காத்திருப்பில் முன்னுரிமையான காத்திருப்புப் பட்டியல், முன்னுரிமையான விமானமேறுதல், மேலதிக பயணப்பொதி தொகுதிப் படி மற்றும் உலகம் பூராவும் காணப்படும் 550 இற்கும் மேற்பட்ட ஓய்விடங்களுக்கான அணுக்கம் என்பன சிலவாகும். எலாயன்சினூடாக வழங்கப்படும் நலன்களுள் மிகவும் முக்கியமானவையாக அனைத்து எலாயன்ஸ் அங்கத்துவ வானூர்திகளிலும் அடிக்கடி பறப்பவர் மைல்களை உழைக்கவும் பயன்படுத்தவும் கூடிய ஆற்றல் ஸ்ரீலஎ இன் வாடிக்கையாளர்களுக்கு கிடைக்கின்றது.

## உலகளாவிய விற்பனை மற்றும் விநியோகம்

### *கண்ணோட்டம்*

உலகளாவிய தொற்றின் காரணமாக ஸ்ரீலஎ அதன் 43 வருடகால வரலாற்றில் சந்தித்த மிகவும் மோசமான பொருளாதார வீழ்ச்சியில் பிழைத்து வந்துள்ளதுடன் புதிய யுகமான வான் பயணத்திற்கு அதன் உறுதியான பொருந்துகையினை தொடர்வதனை முகாமைப்படுத்தியது. கம்பனியானது கொள்ளளவு மட்டுப்படுத்தப்பட்ட துறையினுள் காணப்படும் ஏதேனும் வாய்ப்பினை பயன்படுத்துவதற்காக பன்முக விற்பனை மூலோபாயங்களை விருத்திசெய்வதில் முன்னிறுத்தம் செய்வதனை பராமரித்தது. இங்கு விமானநிறுவனமானது ஒரு திருப்திகரமான சேவை வழங்கலுடன் அதன் இறுதி வாடிக்கையாளர்களுக்கும் மற்றும் அதன் பங்குதாரர்களுக்கும் சேவையாற்றக்கூடியதாயுள்ளது.

நவம்பர் 2021 இல் ஒமிக்ரோன் வைரஸின் வெளித்தோன்றலுடன் வான் பயணவியல் துறையானது அதன் அனைத்து பங்காளிகளுக்கும் மிகவும் கடினமான துறையாக மாறியது. மேலும், ஆகக் குறைந்தது ஒரு டோசுடனான உலகளாவிய தடுப்பூசியேற்றல் வீதமானது அண்ணளவாக 60% ஆக காணப்பட்டதுடன் முக்கியமாக இந்தியாவின் முழுவதும் தடுப்பூசியேற்றப்பட்ட சதவீதம் 31% ஆக காணப்பட்டது. இது இந்தியா ஒரு முக்கிய வளச் சந்தையாயிருந்தபோதிலும், இந்தியாவில் பயணிகள் செயற்பாட்டில் தொற்றுக்கு முன்னர் காணப்பட்ட உத்வேகத்தை மீள் கைப்பற்றும் விமான நிறுவனத்தின் ஆரம்ப திட்டங்களுக்கு தொடர்ச்சியான தடை காணப்பட்டது. எவ்வாறாயினும், விமான நிறுவனமானது தொடர்ச்சியாக அதன் இந்திய பயணிகளுக்கு சேவையாற்றியதுடன் இது இரண்டு நாடுகளுக்கும் இடையேயான ஒரு குமிழ் உடன்படிக்கையின் கீழ் இவ்விரு நாடுகளுக்கும் இடையேயான பயணத்தினை இயலுமையாக்கும். விமான நிறுவனத்தின் மற்றுமோர் வளச் சந்தையான சீனாவில், தொடர்ச்சியாக அதன் பயணிகளுக்கான வான் பயண மற்றும் வெளிவாரிப் பயணக் கட்டுப்பாடுகள் காரணமாக நடப்பு நிதியாண்டில் ஆசிய பசிபிக் பிராந்திய போக்குவரத்து வளர்ச்சியினை தொற்றின் முன்னரான மட்டத்திற்கு கொண்டு செல்லும் திட்டத்தில் ஒரு பாதகமான தாக்கத்தினை ஏற்படுத்தியது. எவ்வாறாயினும், விமான நிறுவனமானது அதன் புதிய சந்தை விரிவாக்கலிலிருந்து நலனடையக் கூடியதாயிருந்த வேளை மேற்குறிப்பிட்ட பின்னடைவுகளைக் குறைப்பதற்காக தடைப்பட்டிருந்த கேள்வியுடனான நடைமுறை சந்தைகளில் முன்னிறுத்தம் செய்தது.

### *சந்தை விரிவாக்கம்*

சரக்கு வணிகக் கோளத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள சந்தை வாய்ப்புக்களுக்கமைய அதன் பயணவழி வலையமைப்பினை பலப்படுத்துவதற்காக விமான நிறுவனமானது அதன் வரலாற்றில் முதற்தடவையாக நைரோபிக்கு இரு கிழமைக்கு ஒருமுறை அடிப்படையில் வான் பயணச் செயற்பாடுகளை ஆரம்பித்தது. மேலும், இந்த நிதியாண்டில், சில சந்தைகளில் விருத்தியான பயணிகள் போக்குவரத்து போக்குகளுடன், ஆரம்பத்தில் சரக்கு மையச் செயற்பாடுகளான சிட்னி, விராங்வேட், இன்ச்சியொன் மற்றும் நைரோபி ஆகிய நாடுகளுக்கு பயணிகள் சேவை விரிவாக்கப்பட்டது. விமான நிறுவனமானது ஐரோப்பிய மற்றும் ஆசிய பிராந்தியங்களில் பயணிகள் அசைவுக்கான தெளிவாக முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள கேள்விக்கான புதிய சந்தை வாய்ப்புக்களை விரைவாகத் தழுவிக்கொண்டது. எனவே, பாரிஸ், மொஸ்கோ மற்றும் காத்மண்டு ஆகிய இடங்களுக்கு வான் பயணங்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் ஸ்ரீலஎ இலங்கைக்கு நேரடி இணைப்பை வழங்கக்கூடியதாயிருந்தது.

இலங்கைக்கு உள்வாரி சுற்றுலாவினை விருத்தி செய்தல் நாட்டின் தேசிய வானூர்தியாக விமான நிறுவனத்தின் ஒரு முக்கிய முன்னிறுத்தமாக தொடர்ந்தது.

# முகாமைத்துவ கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு (தொடர்ச்சி.)

எவ்வாறாயினும், இந்த குறிக்கோளினை அடைவதில் உலகளாவிய வான்பயணத் துறையானது பல சவால்களை ஏற்படுத்தியது. இது பிரதானமாக புதிய கோவிட்-19 மாற்றுருவம் மற்றும் முக்கிய வளச் சந்தைகளிலிருந்தான தொடர்ச்சியான பயணக் கட்டுப்பாடுகளின் காரணத்தினாலாகும். எனவே, நிதியாண்டிற்கு விமான நிறுவனமானது அதன் முன்னிறுத்தத்தினை மீள் மூலோபாயமாக்கியதுடன், இது நண்பர்களை மற்றும் உறவினர்களை விஜயம் செய்வதற்காக மற்றும் மாணவர் பயணப் பிரிவிற்கும் ஒரு முன்னுரிமையான வானூர்தியாக ஒரு சாதாகமான நிலையினை உருவாக்கும். இவர்களுக்கு ஒரு மேம்படுத்தப்பட்ட பாதுகாப்பு பயண அனுபவத்தினை வழங்குவதன் மூலம் மற்றும் தொற்றின்பொது இடங்களை இணைப்பதன் மூலம் இலங்கைக்கான நேரடி இணைப்பு வழங்கப்பட்டது. இது அவுஸ்திரேலியா, ஐக்கிய இராச்சியம், ஏனைய ஐரோப்பிய இடங்கள் மற்றும் மத்திய கிழக்கு உள்ளடங்கலான அனைத்து முக்கிய சந்தைகளையும் உள்ளடக்குவதுடன், வணிகத் தொடர்ச்சி மற்றும் பங்குதாரர் எதிர்பார்ப்புக்களை சந்திப்பதற்குமாகும்.

இலங்கைக்கு மற்றும் ஆசிய பிராந்தியத்திற்கான உள்வருகை பயணத்தினை மேம்படுத்துவதற்கான அதன் கடப்பாட்டினை நிலை நிறுத்துவதற்காக விமான நிறுவனமானது பின்வரும் செயற்பாடுகள் மூலம் ஐரோப்பிய கண்டத்திற்கான அதன் வான் பயணச் செயற்பாடுகளை பராமரித்தது. இந்த இடங்கள் பாரிஸ்-பிரான்ஸ், விராங்வேட்-ஜேர்மனி மற்றும் மொஸ்கோ-ரஷ்யா ஆகியவற்றுடன் அதன் பெறுமதிமிக்க பயணிகளுக்கு சேவையாற்றுவதற்காக அதன் நீண்டகால ஐரோப்பிய பயண இலக்குகளான இலண்டன்-ஐக்கிய இராச்சியத்தினையும் உள்ளடக்கியது.

### வருவாய் உருவாக்கம்

நேரத்திற்கேற்ற விற்பனை மூலோபாயங்களது அமுலாக்கத்துடன் விமான நிறுவனமானது முன்னைய ஆண்டின் USD 83 மில்லியனுடன் ஒப்பிடும்போது பயணிகள் வருவாயாக USD 356 மில்லியனை அடைந்தது. இது அதன் முழு வரலாற்றில் மோசமான வருடங்களில் மீளெழுச்சியூடாக மீட்சி அடையும் ஆற்றலினை காண்பிக்கின்றது. நிதியாண்டின் 04ஆம் காலாண்டில் விமான நிறுவனம் மெச்சத்தக்க விற்னை செயற்திறனை அடைந்தமை குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இது தொற்றிற்கு முன்னரான மட்டங்களின் 75% இற்கும் அதிகமான மீட்சியாகும் என்பதுடன் 2022 இற்கான ச.வா.போ.ச. இன் எதிர்வுகூறலான தொற்றிற்கு முன்னரான மட்டங்களின் 40% மீட்சி வீதமாகும்.

### கருவி மற்றும் சேவை வழங்கல்கள்




கம்பனியில் விமானநிறுவன பயணிகள் வருவாயின் முக்கியமானது துறையின் எதிர்வுகூறப்பட்ட மட்டங்களுக்கும் அதிகமான மட்டத்தை எட்டியதுடன், உலகளாவிய விற்பனை குழாமானது அதன் முன்னிறுத்தத்தை அதன் பெறுமதிமிக்க வாடிக்கையாளர்களுக்கு உயர்ந்த மட்டத்திலான சேவையினை வழங்குவதற்காக இ-வர்த்தகம், துணை மற்றும் ஏனைய சேவைகளை தொடர்ந்தது. விமான நிறுவனமானது அதன் இணையத்தளத்தினை புதுப்பித்து ஒரு புதுப்பிக்கப்பட்ட கண்ணோட்டத்திற்கு வசதியளித்ததுடன் இணையத்தளத்திற்கு விஜயம் செய்யும் அதன் வாடிக்கையாளர்களுடனான ஈடுபாட்டினை மேம்படுத்துவதற்கான எளிமையான வான்பயணத் தெரிவுகளை வழங்குகின்றது. பதிவுசெய்யும் சுழற்சியினுள் பிரயாணக் காப்புறுதி போன்ற குறுக்கு விற்பனைத் தெரிவுகளை அறிமுகப்படுத்தியதுடன் அதன் விசுவாசமான வாடிக்கையாளர்களுக்கு சௌகரியம் மற்றும் உயர்ந்த தரத்திலான பதிவுசெய்தல் அனுபவத்தினையும் வழங்கும்.

அதன் வாடிக்கையாளர்களுக்கான சேவைகள் வழங்கலினை மேலும் மேம்படுத்துவதற்காக, விமான நிறுவனமானது அதன் முதல் “உடனடி UPGRAD” தெரிவினை ஆரம்பித்ததுடன் இது சிக்கனப் பயணிகள் வணிக வகுப்பிற்கு தடையற்ற தரமுயர்த்தக்கூடிய வசதியினை இணையத்தளத்தில் பதிவுசெய்தல் சுற்றின் எந்த நேரத்திலும் வழங்குகின்றது. இவ்வசதியானது ஏனைய விமான நிறுவனங்களின் டிக்கட் வைத்திருப்பவர்கள் ஸ்ரீலங்கனுடன் பயணிக்கும்போது பன்முக வானூர்திகளுடன் பயணிகளின் பயணத் தெரிவினை எளிதாக்குகின்றது. விமான நிறுவனமானது அதன் ஏனைய துணைச் சேவைகளை அதன் பாதுகாப்பு ஒழுங்குவிதிகளுக்கமைய, பறக்கும்போது மேலதிக சௌகரியத்தினை உறுதிப்படுத்துகின்றது.



ஸ்ரீலஎ அதன் பயணத்தில் வாடிக்கையாளர்களுக்கு சிறந்த சேவையினை வழங்குவதற்காக, இணையவழி டிக்கட் மற்றும் சேவைக் கொள்வனவுகளை பிரசித்திபெற்ற உள்ளூர் வங்கிகளுடன் கூட்டுசேர்ந்து பன்முக கொடுப்பனவு தெரிவுகளுடன் மேலதிக கொடுப்பனவு நுழைவாயில்களை அறிமுகப்படுத்தியது. இது டைனர்ஸ் கிளப் மற்றும் டிஸ்கவரி காட்களை பயன்படுத்தும் பெறுமதி மிக்க வாடிக்கையாளர்களை அனுமதிக்கின்றது. மேலும், "பின்னர் செலுத்துங்கள்" தெரிவும் வாடிக்கையாளர் திருப்தியினை நீடிப்பதற்கும் விமான நிறுவனத்திற்கு சவால் மிக்க நேரத்திலும் தரமான வாடிக்கையாளர் சேவையினை உறுதிப்படுத்துவதற்காகவும் தொடர்ந்தது.

மேற்குறிப்பிட்ட வசதிகளை பெறும்போது பன்முக நாணய விலையிடலின் காரணமாக நாணய மாற்றல்களினால் சிரமப்படாதிருப்பதற்காக விமான நிறுவனத்தின் வாடிக்கையாளர்களுக்கு உயர்ந்த பயனளார் அனுபவத்தினை வழங்குகின்றது. இதற்கும் மேலாக, விமான நிறுவனமானது பாதுகாப்பினை மேம்படுத்துவதற்காக அதன் இணையத்தளத்திலிருந்து அதன் பெறுமதிமிக்க வாடிக்கையாளர்களுக்கு இணையவழி விமான டிக்கட்டுக்களது கொள்வனவிற்கு மற்றும் ஏனைய பெறுமதி சேர்க்கப்பட்ட சேவைகளை வழங்குவதனை தொடர்ந்தது.

விமான நிறுவனத்தின் விசுவாசத் திட்டமான "FlySmiLes" ஆனது அதன் பெறுமதிமிக்க பயணிகளுக்கும் விமான நிறுவனத்திற்குமான பிணைப்பினை பலப்படுத்தவதில் தொடர்ந்தும் ஒரு முக்கிய பகுதியாகக் காணப்பட்டது. இவ்வாண்டில் எமது விசுவாசமிக்க அங்கத்தவர்களுக்கு ஒரு மேம்பட்ட அடிக்கடி பறப்பவர் அனுபவத்தினை வழங்கும் எமது முயற்சிகளில் நாம் இடைவிடாது காணப்பட்டோம். FlySmiLes திட்டமானது உலகளாவிய ரீதியில் அரை மில்லியனுக்கும் மேலான பயணிகளுக்கு சேவையாற்றுவதுடன், அதன் அங்கத்தவர்களுக்கும் பல்வேறு திரட்டல் மற்றும் மீட்டல் வழங்கல்களை வழங்குகின்றது. எமது பிளட்டினம் மற்றும் தங்க அங்கத்தவர்களுக்கு உலகம் முழுவதும் 900 பயண இலக்குகளை இணைக்கும் 600 இடங்களில் ஓய்விட வசதிகளை வழங்குகின்றது. இத்திட்டமானது வருடம் பூராவும் அதன் வாடிக்கையாளர்களுக்கு போனஸ் மைல்கள் மற்றும் காசு ப்ளஸ் மைல்களை வழங்கியதுடன் இது தொற்றின் விளைவுகளைத் தணிப்பதற்காக மைல்கள் முதிர்வு மற்றும் அடுக்கு நீடிப்புகள் வழங்கப்பட்டு தொற்றின் பின்னரான கட்டத்தில் வாடிக்கையாளர்கள் பயணிப்பதற்கு அனுமதியளிக்கின்றது. FlySmiLes அதன் முதலாவது மாணவர் க்ளப்பினை அறிமுகப்படுத்தியதுடன், இது மாணவர்களுக்கு கழிவுகள், மிகை பயணப்பொதி மீட்டல்கள் மற்றும் போனஸ் மைல்கள் போன்ற வெகுமதிகளை வழங்குவதுடன் மாணவர் சமூகத்திற்கு மேம்பட்ட வாடிக்கையாளர் அனுபவத்தினை உறுதிப்படுத்துகின்றது.

உலகளாவிய தொடர்பு மையம் (உ.தொ.மை) இந்த சவால்மிக்க நேரத்தில் அதன் சேவை வழங்கலில் மிகவும் அவசியமான பெறுமதியினை சேர்ப்பதனை தொடர்ந்ததுடன், குறைவான மனிதவள மணித்தியாலங்களுடன் கூட விமான நிறுவனத்தின் பெறுமதிமிக்க வாடிக்கையாளர்களுக்கு முழுநேர சேவைகளை வழங்குகின்றது. தற்போது இம்மையமானது ஆங்கிலம், சிங்களம், தமிழ் மற்றும் மன்டரின் உள்ளடங்கலான பன்முக மொழிகளில் சேவைகளை வழங்குவதுடன் தேவையேற்படும்போது ஏனைய மொழிகளுக்கும் வசதியளிக்கக்கூடிய ஆற்றலினைக் கொண்டுள்ளது. விமான நிறுவனத்தின் வாடிக்கையாளர்கள் பிரான்ஸ், ஜேர்மனி, சிங்கப்பூர், ஐக்கிய இராச்சியம், ஹொங்கொங், இந்தியா, ஜப்பான், குவைத், மலேஷியா, பாக்கிஸ்தான், தாய்லாந்து மற்றும் சீனா போன்ற நாடுகளிலிருந்து அவர்களது உள்ளூர் எண்களுடாக தொடர்பு நிலையத்தினை எட்டக்கூடிய வசதியினைக் கொண்டுள்ளது.

இவ்வாண்டின்போது பயணக் கட்டுப்பாடுகளின் தளர்த்தலுடன் பயணத்திற்கான கேள்வியில் துறையானது ஒரு தெளிவான அதிகரிப்பினை கண்டது. கோவிட்-19 மாற்றுருவங்கள் சர்வதேச பயணிகள் போக்குவரத்தினது மீட்பில் சவால்களை ஏற்படுத்தியுள்ளமை மறுக்கவியலாததாகும். அடக்கி வைக்கப்பட்ட தெளிவான மட்டத்திலான கேள்விகள் மற்றும் உலகளாவிய பொருளாதாரத்தில் எதிர்பார்க்கும் பொதுவான மீட்டல் ஆகியன விரைவான மீட்பினை வழிநடத்தும். ச.வா.போ.ச. எதிர்வுகூறல்களின் பிரகாரம், பயணிகள் போக்குவரத்தானது தொடர்ந்து வளர்ச்சியடைந்து 2023 அளவில் தொற்றிற்கு முன்னரான மட்டங்களை எட்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

சமீப காலத்தில் கேள்வியிலான மீட்பு தொடர்பாக உலகளாவிய துறைசார் வல்லுநர்களின் நம்பிக்கையுடைய எதிர்வுகூறல்களினால் வழிநடத்தப்பட்டு விமான நிறுவனத்தின் உலகளாவிய விற்பனை குழாமானது அதன் வாடிக்கையாளர்களுக்கு தொடர்ச்சியாக ஒரு தரமான சேவையினை வழங்கும் அதேசமயம், அதன் பங்குதாரர்கள், பெறுமதியுடைய பிரஜைகள் மற்றும் நாட்டிற்கு பெறுமதி சேர்ப்பதற்கு மிகவும் தேவையான அதன் வருமான வழிகள் மற்றும் வருவாயினை உருவாக்குவதனை விரிவாக்கியது.

### சந்தைப்படுத்தல் தொடர்பாடல்

ஸ்ரீலஎ ஒரு தொடரான முன்னேற்றகரமான மூலோபாய தொடர்பு மற்றும் தொற்றின் பின்னரான பயணத்திற்கு ஏற்புத்திறனுடைய சந்தைகளிடையே வணிகநாம தக்கவைத்தல் முயற்சிகளை பொறுப்பேற்றது. இதற்கப்பால், ஸ்ரீலஎ விமான நிறுவன வணிகநாமத்தினை நிலைநாட்டுவதிலும் மீளாய்வுக் காலத்தின்போது அதன் உலகளாவிய வலையமைப்பில் சேர்க்கப்பட்ட புதிய பயணஇலக்குகள் மற்றும் இலங்கையில் முன்னிறுத்தம் செய்தது.

#### *ரெய்ட் அமசோன்ஸ் 2022*

விமான நிறுவனமும் இலங்கையும் ஒரு பயண இலக்காக உலகப் பிரசித்திபெற்ற பிரான்சின் சாகச வழிகளான, ரெய்ட் அமசோன்ஸ் 2022 இற்கு விருந்தோம்பியது. இது ஒரு வருடாந்த விளையாட்டு நிகழ்வு என்பதுடன் இதில் 500 க்கும் அதிகமான பிரான்சின பெண் வீராங்கனைகள் ஸ்ரீலஎ ஊடாக பறந்து இதில் பங்குபற்றினார்கள். இந்தக் கூட்டுமுயற்சியானது பாரிசில் இடம்பெற்ற விமான நிறுவனத்தின் கூட்டாண்மை ஆரம்ப நிகழ்வில் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டதுடன் இந்நிகழ்வானது கொழும்பில் இடம்பெற்ற சர்வதேச மகளிர் தினம் 2022 இலும் அறிவிக்கப்பட்டது. பாரிசிலிருந்து இலங்கைக்கு வீராங்கனைகளை கொண்டுவந்த விமானமானது நாட்டின் சாகசங்களுக்கு ஒரு குறிப்பொருளாக ஒரு விசேட அடையாள சின்னத்தை கொண்டிருந்தது. இது தொற்றின் பின்னர் ஒரு நிகழ்வுக்காக நாட்டினுள் வருகைதந்த வெளிநாட்டு பங்குபற்றுநர்களின் எண்ணிக்கையினைப் பொறுத்தளவில் ஒரு தனியான பாரிய நிகழ்வாகும்.

#### *#நமஸ்தே இலங்கையிலிருந்து*

நாட்டின் சுற்றுலாத்துறை மீட்பு முயற்சிகளுக்கு துணைபுரிவதற்காக ஸ்ரீலஎ சூநமஸ்தே இலங்கையிலிருந்து பதிவர்கள் பாரிய குடும்ப சுற்றுலாவினை இயக்கியதுடன், இதில் பாரிய சந்தையான இந்தியாவிலிருந்து மிகஉயர் தரத்திலான 50 உட்பொருள் உருவாக்குபவர்கள் மற்றும் பதிவர்கள் கலந்துகொண்டார்கள். உட்பொருள் உருவாக்குபவர்கள் நாட்டினை இரண்டு நிர்வகிக்கப்பட்ட பயணத்திட்டங்களை ஆராய்ந்ததுடன் ஸ்ரீலஎ இன் இன்ஜினியரிங் விமானக் கொட்டகை, வான்பயணச் சமையலறை, வான்போக்குவரத்து கல்லூரி மற்றும் பாவனையாக்கி மத்திய நிலையம் என்பவற்றுக்கு விஜயம் செய்து விமான

# முகாமைத்துவ கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு (தொடர்ச்சி.)

நிறுவனத்தின் உலகளவில் பிரசித்திபெற்ற சேவையினைப் பற்றிய நேரடியான அனுபவத்தினையும் பெற்றார்கள்.

### #ஸ்ரீலங்கன் வாக்குறுதிகள்

பாரிஸ் மற்றும் மொஸ்கோவில் ஸ்ரீலங்கன் வணிகநாமத்தினை திடமாக நிலைநாட்டும் எண்ணத்துடன், 6 வருடங்கள் இடைவெளியின் பின்னர், ஸ்ரீலஎ இனை இணைக்கும் இரண்டு சந்தைகள், விமான நிறுவனமானது நாட்டினை முக்கியமாக காட்சிப்படுத்தும் இரண்டு கவனமாக உருவாக்கப்பட்ட பிரச்சாரங்களை மேற்கொண்டது. இரண்டு பயணஇலக்கு தொடக்கங்கள் உரிய சந்தைகளில் இரண்டு வர்த்தகக் கண்காட்சிகள், விமான நிலைய செயற்பாடுகள் மற்றும் இரண்டு உத்தியோகபூர்வ தொடக்க நிகழ்வுகளை உள்ளடக்கின. விமான நிறுவனமானது அதன் நான்காவது ப.ஆ.பி.ச. (பசிபிக் ஆசிய பிரயாணச் சங்கம்) தங்க விருதினை அதன் #ஸ்ரீலங்கன் வாக்குறுதிகள்' பிரச்சாரத்திற்கு வென்றது. இது உலகம் பூராவுமுள்ள பிரயாண மற்றும் சுற்றுலா நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட 113 விண்ணப்பங்களிடையே ‘சந்தைப்படுத்தல் - வானூர்தி’ பிரிவில் பெறப்பட்டதுடன் இது 18 துறைசார் வல்லுநர்களினால் தீர்மானிக்கப்பட்டது.

#ஸ்ரீலங்கன் வாக்குறுதிகள், உலகம் பூராவும் வான் பயணம் உள்ளடங்கலான அனைத்து நடவடிக்கைகளும் ஒரு நிச்சயமற்ற இயங்காநிலையான கோவிட்-19 தொற்றின் முதலாம் அலையின்போது விமான நிறுவனத்தினால் வழநடத்தப்பட்ட வணிகநாம தக்கவைத்தல் பிரச்சாரம் ஆகும். எனவே, அதன் மதிப்பிற்குரிய வாடிக்கையாளர்களுக்கு ஒரு மெய்யான வாய்ப்பு அற்றுக் காணப்படும்வேளை, இது வாடிக்கையாளர்கள் மற்றும் உறுதுணையாளர்களுக்கு விமான நிறுவன வணிகநாமத்துடன் தீவிரமாக ஈடுபடுவதற்கான ஒரு வாய்ப்பினை வழங்கியது. இப்பிரச்சாரமானது நேர்மறையினை பரப்புதல், எதிர்கால பயணத்திற்கான ஊக்கம் மற்றும் எதிர்பார்ப்பினை தக்கவைக்கும்வேளை வீட்டில் இருப்பதன் முக்கியத்துவத்தினை பரிந்துரைத்தல் என்பவற்றை நோக்காகக் கொண்டிருந்ததுடன், உள்ளார்ந்த செய்தியான பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வில் அழுத்தத்துடனாகும். இப்பிரச்சாரமானது சமூக ஊடக சமூகத்தினரிடையே நல்ல வரவேற்பினை பெற்றதுடன் 2 மில்லியனுக்கும் அதிகமான பதிப்புகளையும் கண்டது.

ஸ்ரீலஎ தெற்காசிய பிராந்தியத்தில் அதன் இணைப்பினை உறுதிப்படுத்தும்வேளை உலக பயண விருதுகள் விழாவில் “இந்து சமுத்திரத்திற்கான ஆசியாவின் முன்னணி விமான நிறுவனம் 2021” மற்றும் “இந்து சமுத்திரத்திற்கான உலகின் முன்னணி விமான நிறுவனம் 2021” விருதுகளைப் பெற்றுக்கொண்டது.

### ஸ்ரீலங்கன் சரக்கு

2021 ஆம் ஆண்டானது வான் சரக்கிற்கு முக்கியமான ஒரு ஆண்டாக ச.வா. போ.ச. இனால் பதிவுசெய்யப்பட்டதுடன், வருடத்திலிருந்து வருடம் உலகளாவிய வான் பருமனளவுகள் 18.7% ஆல் வளர்ச்சியடைந்ததுடன், 1990 இலிருந்து அடைந்த அதியுயர்ந்த வருடாந்த செயற்திறனாகும். 2018 இல் நிலவிய கோவிட்-19 இற்கு முன்னரான மட்டங்களிலும் பார்க்க சரக்கு தொன் கிலோமீற்றர்கள் (ச.தொ.கி.) 8.5% ஆல் உயர்ந்து காணப்பட்டது. இவ்வதிகரிப்பு ச.தொ.கி. 2020 ஆம் ஆண்டில் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது 9.9% வீழ்ச்சியிலிருந்தான ஒரு மீட்சி என்பதுடன் இது 1990 இலிருந்து அனுபவித்த பாரிய வீழ்ச்சியாகும். நிதியாண்டின் இறுதியில் தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணம் (த.பா.உ.) உள்ளடங்கலான பொருட்களது உலக வர்த்தகத்திற்கான திடமான கேள்வி, மற்றும் கையிருப்பினை மீள் இருப்பு செய்யும் சுழற்சியானது இக்காலப்பகுதியில் ச.தொ.கி. இல் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தினைக் கண்டது. சரக்கு தொன் கிலோமீற்றர்களில் அளவிடப்படும் கிடைக்கக்கூடிய சரக்கு கொள்ளளவானது இக்காலப்பகுதியில் 10.9% ஆல் வீழ்ச்சியடைந்து நிதியாண்டின் இறுதிப்பாகத்தில் பயணிகள் போக்குவரத்தில் காணப்பட்டு அதிகரிப்புடன் மெதுவாக அதன் உத்வேகத்தினை அடைந்தது. கேள்வி தொடர்பான கொள்ளளவின் பற்றாக்குறையானது அதேகாலப்பகுதியில் விதிவிலக்கான உயர் சுமைக் காரணிகள் மற்றும் கட்டணங்களை விளைவித்தது.

வான் சரக்கிற்கான இலாபகரமான சூழலானது இவ்வாண்டில் ஸ்ரீலஎ இனால் மேற்கொள்ளப்பட்ட விமானச் செயற்பாடுகள் வரலாற்றில் அதியுயர்ந்த சரக்கு வருமானத்தினை உருவாக்கியது. பயணிகள் கேள்வியினால் உறுதணையளிக்கப்பட்டு வலையமைப்பின் செயற்பாடுகளது விரிவாக்கத்துடன் இவ்வருவாய USD 215 மில்லியனாகக் காணப்பட்டதுடன் இது 48% வருடாந்த வளர்ச்சியாகும். ஸ்ரீலங்கன் சரக்கு சாசனத் திட்டமானது சரக்கிற்கான கேள்வியினை பயன்படுத்துவதற்காக 2020 ஆம் ஆண்டில் முன்னெடுக்கப்பட்டது. இங்கு கிடைக்கக்கூடிய விமான நேரம் மற்றும் சரக்கு கொள்ளளவு, 46 சாசனங்கள் மற்றும் 13 இடம் முடக்கல் உடன்படிக்கைகளின் செயற்பாட்டினூடாக நிதியாண்டில் USD 4 மில்லியன் வருவாய் உருவாக்கப்பட்டது. இவை பெரும்பாலும் சீனா மற்றும் இந்திய உபகண்டப் பிராந்தியங்களிலிருந்து செயற்பட்டன. ஸ்ரீலங்கன் சரக்கானது தொற்றின் ஆரம்பத்திலிருந்து இலங்கையின் ஏற்பாட்டியல் சமூகத்திற்கு வழங்கிய புத்தாக்கமான தீர்வுகளை அங்கீகரித்து விமான நிறுவனப் பிரிவில் ‘தங்கம்’ மற்றும் இலங்கையின் ஏற்பாட்டியல் மற்றும் சரக்கனுப்புவர்கள் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட தேசிய ஏற்பாட்டியல் விருதுகளில் ‘அங்கீகார விருதும்’ வழங்கப்பட்டது.

ஸ்ரீலஎ சரக்கினது விற்பனையானது உருவாக்கிய மொத்த வருவாயில் 33% இற்கு கணக்கீடு செய்யப்பட்டதுடன், இது USD 69 மில்லியனாகவும் 49% வருடாந்த வளர்ச்சியாகவும் காணப்பட்டது. மாலைதீவுகள் மற்றும் மத்திய கிழக்கு பிராந்தியங்களுக்கு அங்கு உருவாகிய கேள்வியின் நிமித்தம் சரக்கினால் ஏற்பட்ட கொள்ளளவின் இயக்காற்றலான பயன்பாட்டினால் வசதியளிக்கப்பட்டது. தூர கிழக்கு பிராந்தியமானது USD 84 மில்லியன் வருவாயினை உருவாக்கியதுடன் இதில் 69% ஆனது சிங்கப்பூர், ஹொங்கொங், ஜப்பான் மற்றும் குவாங்சூ சந்தைகளினால் உருவாக்கப்பட்டதாகும். சிங்கப்பூர் நிலையமானது நிதியாண்டில் USD 23 மில்லியன் வருவாயினை உருவாக்கியதுடன் மீண்டும் ஒருமுறை சங்கி விமானநிறுவன விருதுகளில் தொற்றுக்காலத்தின்போது தடையற்ற வான் இணைப்பினைப் பராமரித்ததற்காக ‘மீளெழுச்சி விருது’ வழங்கப்பட்டது. ஐரோப்பிய பிராந்தியமானது USD 16 மில்லியன் வருவாயினை உருவாக்கியதுடன் இது முன்னைய ஆண்டிலிருந்து 67% வளர்ச்சியினை பிரதிபலிக்கின்றது. இலண்டன் மற்றும் பிராங்வேட் ஆகிய இடங்களிலிருந்து அவுஸ்திரேலியாவிற்கு மேம்பட்ட சரக்கு கொள்ளளவினை கிடைக்கச்செய்து உயர்விளைவான பயணத்திற்கு வசதியளித்தமையினாலாகும். மத்திய கிழக்கு பிராந்தியமானது USD 11 மில்லியன் வருவாயினை பதிவுசெய்ததுடன் இது நைரோபி மற்றும் டுபாய் நகரங்களுக்கு அறிமுகப்படுத்திய சரக்குச் செயற்பாடுகளினால் ஏற்பட்டதுடன் இப்பிராந்தியத்தில் உருவாக்கிய மொத்த வருவாயில் கணிசமான பங்களிப்பினை வழங்கியுள்ளது.

சரக்கு தரை கையாளுதல் செயற்பாடுகள் USD 19.1 மில்லியன் வருவாயினை அடைந்ததுடன் 203,239 மெட்ரிக் தொன் சரக்கு செயல்வீதம் கையாளப்பட்டது. இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது முறையே 77% மற்றும் 32% அதிகரிப்பாகும் என்பதுடன் இதற்கான பிரதான காரணம் ஸ்ரீலஎ இன் வான் பயணத்திலான அதிகரிப்பாகும். கையாளப்பட்ட மொத்த வான் பயணங்களின் எண்ணிக்கை 13,104 ஆகும் என்பதுடன் இது ஸ்ரீலங்கன் சரக்கு தரை கையாளுதல் செயற்பாடுகளினால் கையாண்ட வான் பயணங்களில் 157% அதிகரிப்பினை பதிவுசெய்தது. இப்பிரிவானது ஒரு சரக்கு தரை கையாளுதல் நம்பகத்தன்மை வீதமாக 99.95% இனை பராமரித்தது. புதிய சரக்கு

இறக்குமதி முனையத்தின் கட்டுமானமானது நடந்தவண்ணமுள்ளதுடன் இது 2023 இன் இரண்டாம் காலாண்டில் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. சரக்கு தரை கையாளுதல் செயற்பாடுகளுக்கான அதிநவின முனையத்தின் உள்ளடக்கத்தினூடாக அனுமதிக்கப்படும் மேம்பட்ட கொள்ளளவானது வெப்பநிலை கட்டுப்படுத்தப்பட்ட கையாளுதல் பகுதியுடன் ஒரு பழுதடைதல் மத்திய நிலையத்திற்கு வசதியளிக்கும். அத்துடன் பிராந்திய சரக்கு மையங்களுக்கு இணையாக இலங்கையில் தரை கையாளுதல் செயற்பாடுகளை மேம்படுத்தக்கூடிய பொது சரக்கிற்கான ஒரு கூரியர் மத்தியநிலையம் மற்றும் தனிப்பயன் முனையமும் அமைக்கப்படும். தொற்று தொடர்பான கட்டுப்பாடுகளின் விளைவாக முகங்கொடுத்த குறிப்பிடத்தக்க சவால்கள் மற்றும் நடைபெற்றுக்கொண்டிருக்கும் தற்போதைய விமானநிலைய கட்டுமானம் ஆகியவற்றுக்கு மத்தியில் நாட்டிலிருந்தும் மற்றும் நாட்டிற்குள்ளும் வான் சரக்கனுப்பல் ஏற்பாட்டியல் செயன்முறைகளுக்கு வசதியளிக்கும் ஒரு உன்னத மட்டமான சேவையினை வழங்கக்கூடியதாயிருந்தது. 2021 ஆம் ஆண்டில் சேவை மட்டமானது முக்கிய வாடிக்கையாளர் விமான நிறுவனங்களினால் மேலும் அங்கீகாரத்தினைப் பெற்றது.

ஸ்ரீலஎ விமான நிறுவனத்தின் வரலாற்றில் குறிப்பிடத்தக்க மைல்கற்களை அடைவதற்காக இலாபகரமான வான் சரக்கு உலகளாவிய சந்தையில் காணப்பட்ட வாய்ப்புக்களை வினைத்திறனுடன் பயன்படுத்திக்கொள்ள இயலுமையாயிருந்தது. வான் சரக்கின் வெற்றியானது பெரும்பாலும் கொள்ளளவு, விற்பனைகள் மற்றும் வருவாய் முகாமைத்துவ உபாயங்களைப் பொறுத்தளவில் இயக்காற்றல் மிக்க மூலோபாயங்களது பயன்பாட்டினால் அடையப்பெற்றதாகும். இவை செயற்பாட்டு வலையமைப்பில் ஸ்ரீலங்கன் சரக்கு வணிகநாமம் ஒரு முக்கிய ஏற்பாட்டியல் வழங்குநர் என்பதை நிலைநாட்ட இயலுமையாயிருந்ததுடன் வர்த்தகத்தில் பல பிரசித்திபெற்ற நிறுவனங்களிடமிருந்தும் அதன் முயற்சிகளுக்கான அங்கீகாரத்தினை பெற்றுக்கொண்டது. பயணிகள் அசைவுகள் வழமைக்கு திரும்பியமை மற்றும் கொள்ளளவின் முறைமைப்படுத்தலானது விளைவில் ஒரு வீழ்ச்சியினை ஏற்படுத்தும் மற்றும் போட்டி மட்டத்தில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பினை ஏற்படுத்தும், எதிர்காலத்தில் தனிப்பயனுடைய சரக்கு செயற்பாடுகளை பராமரிப்பதில் இடைஞ்சல்களை உருவாக்கலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. எவ்வாறாயினும், பயணிகள் மற்றும் சரக்கு வர்த்தக குழுக்களின் மூலோபாய ஒத்துழைப்புகள் எதிர்வரும் வருடத்தில் காணப்படும் சவால்களை தொடர்ந்தும் வெற்றியடையச் செய்யும

## வான்பயணச் செயற்பாடுகள்

### *எரிபொருள் கண்காணிப்பு*

உலகளாவிய பொருளாதார ஏற்றம் வளர்ச்சிக்கான வாய்ப்புக்களை தீவிரப்படுத்தியுள்ளவேளை விமான எரிபொருள் விலைகள் 2021/22 நிதியாண்டு பூராவும் தொடர்ந்தும் அதிகரித்தது. நிதியாண்டின் இறுதியில் எழுந்த ரஸ்ய - யுக்ரேன் மோதல்களும் பெப்ரவரி 2022 இலிருந்து விமான எரிபொருள் விலைகளில் ஒரு அதிகரிப்பினை விளைவித்தது. மேலாக விமான நிறுவனமானது 2021/22 முதலாம் அரைப்பகுதியில் குறிப்பிடத்தக்க குறைவான போக்குவரத்து சுமையினை சந்தித்தது. இது கோவிட்-19 தொற்றின் காரணமாக அரசாங்கங்களினால் தொடர்ச்சியாக அமுல்படுத்தப்பட்ட பயணக் கட்டுப்பாடுகளின் விளைவினாலாகும்.

எவ்வாறாயினும், முதலாம் அரையாண்டுடன் ஒப்பிடும்போது 2021/22 நிதியாண்டின் இரண்டாம் அரைப்பகுதியானது தாங்குசுமையில் கணிசமான மேம்படுத்தலைக் காண்பித்ததுடன் இதன் விளைவாக வ.தொ.கி. (வருவாய் தொன் கிலோமீற்றர் ) ஒன்றிற்கான எரிபொருள் பாவனையினைப் பொறுத்தளவில் விமான நிறுவனத்தின் எரிபொருள் வினைத்திறன் 27% ஆல் மேம்பட்டது. மேலும் 2021/22 இல் அடைந்த 1.3% எரிபொருள் பாவனைச் சேமிப்பினால் (திட்டமிட்ட எரிபொருள் பாவனை எதிர் மெய்யான எரிபொருள் பாவனை) எரிபொருள் கண்காணிப்பு செயன்முறையின் வினைத்திறன் வெளிப்படுத்தப்படுவதுடன் இது 10,625 மெட்ரிக் தொன் $CO_2$ உமிழ்வுகளைக் குறைத்தும் உள்ளது.

### *விமான நிறுவனச் செயற்பாடுகள் கட்டுப்பாட்டு மையம் (வி.செ.க.மை.)*

வி.செ.க.மை. கோவிட்-19 தொற்றின்போது தொடர்ந்தும் ஒரு முக்கிய பங்கினை வகித்ததுடன், அனைத்து பங்காளிகளுடனும் ஒரு உன்னிப்பான ஒத்துழைப்பு செயல்முறையினூடாக அட்டவணை நம்பகத்தன்மையினை முகாமைப்படுத்தியது. உள்ளூரிலும் மற்றும் உலகளாவிய ரீதியிலும் அமுல்படுத்தப்பட்ட பல்வேறு கட்டுப்பாடுகளுக்கு மத்தியில் அனைத்து ஒழுங்குவிதிகளுடனும் இணங்கி விரைவான மாற்றங்களுடன் பல மூலோபாயங்கள் கடைப்பிடிக்கப்பட்டன. இவை வாடிக்கையாளர்களுக்கு ஆகக்குறைவான சிரமங்களுடனும் மிகவும் சிக்கனமான விதத்திலும் செயற்பாடுகளை முகாமைப்படுத்துவதற்காகும். மீளாய்வுக் காலத்தின்போது, வான்பயண/வானறை பணியாட்கள் மற்றும் தரை கையாளுதல் பணியாட்களில் காணப்பட்ட கோவிட்-19 தொற்றின் அதிகரிப்பினால் மனிதவளத்தில் ஏற்பட்ட பற்றாக்குறை போன்ற சவால்களுக்கு வி.செ.க.மை. முகங்கொடுத்தது. அத்துடன் பிரதான தளம் உள்ளடங்கலான அனேகமான நிலையங்களில் ஒவ்வொரு வான்பயணத்தின் முன்னும் பின்னும் விமானத்தின் தொற்றுநீக்கம் மற்றும் கடினமான சுகாதார வழிகாட்டிகளுடன் முடக்கல் விதிகளுக்கு கட்டுப்படுதல் என்பனவும் சவால்களாகக் காணப்பட்டன. கோவிட்-19 கட்டுப்பாடுகளுக்கு மேலாக, ஆவ்கானிஷ்தான், ரஸ்யா, யுக்ரேன் நாடுகளில் காணப்பட்ட புவி அரசியல் சிக்கல்களும் மீளாய்வுக் காலத்தின்போது செயற்பாடுகளை முகாமைப்படுத்துவதில் சவால்களை உருவாக்கின.

ஏனைய அனைத்து உள்வாரி மற்றும் வெளிவாரி செயற்பாட்டு பங்காளிகளுடன் ஒன்றிணைந்து செயற்படுவதில், வி.செ.க.மை. நிறுவனத்தின் சிறந்த நலனைக் கருதத்திற்கொண்டு முன்திட்டமிடப்பட்ட மற்றும் நிறைவேற்றப்பட்ட 24x7 கண்காணிப்பின் கீழ் அந்த சவால்களை வெற்றிகண்டது. முறைமைப்படுத்துபவர்களிடமிருந்து அவசியமான அங்கீகாரத்தினைப் பெற்று அவுஸ்திரேலியாவுக்கான விசேட சரக்கு வான் பயணத்தின் வெற்றிகரமான திட்டமிடல் மற்றும் நிறைவேற்றலானது மீளாய்வுக் காலத்தின்போது முக்கிய சாதனைகளாகும்.

### *வான்பயணச் செயற்பாடுகள் பயிற்சி*

தொற்றுக் காலத்தின்போது வான்பயணச் செயற்பாடுகள் பயிற்சிக் குழு மற்றும் வான்பயண பயிற்றுநர் அங்கம் என்பன அனைத்து வான்பயணப் பணியாட்களும் அவர்களது அனைத்து முறைமைப்படுத்தல் பயிற்சியில் தகமையடைந்திருப்பதனை உறுதிசெய்வதில் முக்கிய பங்கு வகித்தது. இரண்டு உள்ளக பாவனையாக்கிகள் பணியாட்கள் தகமையுடையதாயும் நடப்பாயும் காணப்படுவதனை இயலுமையாக்கியதுடன் இது வர்த்தக தோற்றங்களைச் சந்திப்பதற்கான உயர்ந்த ஆக்கத்திறனை உறுதிசெய்கின்றது. இது வான்பயணப் பணியாட்களைப் பொறுத்தளவில் தொற்றின் முன்னரான செயற்பாட்டு வினைத்திறனுக்கு திரும்புவதற்கு கம்பனிக்கு உறுதுணையளித்தது.

## விமானத்தினுள்ளான சேவைகள்

விமானத்தின் தொலைநோக்கினை அடைவதில் பிரதான பங்களிப்பவர்களில் ஒன்றான விமானத்தினுள்ளான சேவைகள் எமது பயணிகளை மகிழ்விப்பதற்காக விமானத்தினுள் வழங்கப்படும் சேவைகளில் முக்கிய பங்கு வகித்தது.

'ஸ்ரீலங்கன்மயமாக்கல்' பிரச்சாரமானது ஒவ்வொரு பிராந்தியத்திலும் காணப்படும் தனித்துவமான இலங்கையின் உணவுவகைகளை அறிமுகப்படுத்துவதனூடாக ஆரம்பிக்கப்பட்டது. இது அனைத்து நீண்டதூர வான்பயணத்தின்போதும் வணிக வகுப்பு பயணிகளுக்கு உள்ளூர் பழச்சாறுகளது அறிமுகத்தினை

# முகாமைத்துவ கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு (தொடர்ச்சி.)

உள்ளடக்குகின்றது. தொற்றின்போது பயன்படுத்தப்பட்ட ஒற்றைப் பயன்பாட்டு உபகரணங்களிலிருந்து சேவை உபகரணங்கள் தொற்றின் பின்னரான கட்டத்தில் சிறந்த சேவையினை உறுதிப்படுத்துவதற்காக வழமையான உபகரணங்களது பாவனைக்கு திரும்பியது.

நேரடியான பயிற்றுவித்தல் கட்டுப்பாடுகளின் காரணமாக இணையவழி புத்தாக்க பயிற்சிகள் ஆரம்பிக்கப்பட்டன. மேலும், தொற்றின் விளைவாக சுகாதார அக்கறைகளின் காரணமாக இலங்கை சிவில் வான்போக்குவரத்து அதிகாரசபை (இ.சி.வா.அ.) அங்கீகரிக்கப்பட்ட செயன்முறைகள் விமானத்தினுள்ளான சேவைகளது விநியோகத்தில் ஒருங்கிணைக்கப்பட்டன. இதற்கப்பால், கோவிட்-19 உணவுச் சேவைக்கு மாற்றீடாக ஒரு மேம்பட்ட உணவுச் சேவையானது மீள ஆரம்பிக்கப்பட்டதுடன் இது இ.சி. வா.அ. இன் அவசியமான அங்கீகாரத்துடன் அமுலாக்கப்பட்டது. கோவிட்-19 தொற்றின் சமூகப் பரவலானது குறைவான தாக்கத்தினைக் கருத்திற்கொண்டு விமானப் பணியாட்கள் மற்றும் பயணிகளுக்கான தனிப்பிட்ட பாதுகாப்பு உபகரண கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டன.

### தீர்வையற்ற சேவைகள்

முற்றாக நிறுத்தப்பட்டிருந்த விமானத்தினுள்ளான தீர்வையற்ற விற்பனைகள் மீளாய்வாண்டில் 2021 இன் இறுதிக் காலாண்டில் மீள ஆரம்பிக்கப்பட்டதுடன், இது மிகவும் தேவையான பண விற்பனைகளை கொண்டுவந்தது. முன்னெப்போதுமிராத வழங்கல் சங்கிலி சிக்கல்களுக்கு மத்தியில் விமானத்தினுள்ளான விற்பனைகள தொடர்ந்து படிப்படியாக வளர்ச்சியடைந்தது. நடைமுறையிலுள்ள விற்பனை போக்குகளை கருத்திற்கொண்டு பல புதிய நெடுக்கமான உறுப்படிகளைக் கொண்ட ஒரு புதிய செரன்டிப் புதையல் கையேட்டினை ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

## வணிக அலகுகள் மீளாய்வு

### ஸ்ரீலங்கன் விமான நிலைய மற்றும் தரைச் சேவைகள்

#### கண்ணோட்டம்

பண்டாரநாயக்கா சர்வதேச விமானநிலையம் (ப.ச.வி.) மற்றும் மத்தல ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம் (ம.ரா.ச.வி.) என்பவற்றில் தனியான தரைக் கையாளுபவராக ஸ்ரீலங்கன் விமான நிலைய மற்றும் தரைச் சேவைகள் தரமான சேவை விநியோகத்தினை உறுதிப்படுத்தி அனைத்து தரைச் சேவைகளையும் அனைத்து சர்வதேச விமான நிறுவனங்களுக்கு வழங்குகின்றது.

விமான நிலைய மற்றும் தரைச் சேவைகளில் அனைத்து செயற்பாடுகளுக்கும் மிகவும் சவால்மிக்க வருடங்களில் ஒன்றான 2021/22 நிதியாண்டு மீட்டலுக்கான அறிகுறிகளை வெளிப்படுத்தியது. உலகம் பூராவும் தொற்று தொடர்பான கட்டுப்பாடுகளது தளர்த்தலுடன் தரைச் செயற்பாடுகளது மீட்டல் 2021/22 இல் உயர்வடைந்ததுடன் இது விசேடமாக நிதியாண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் ஏற்பட்டது. வருடம் பூராவும் சந்தித்த பல சவால்களுக்கு மத்தியில், விமானநிலைய மற்றும் தரைச் சேவைகள் பாதுகாப்பு, துல்லியம் மற்றும் சேவைத் தனிச்சிறப்பு போன்ற அதன் முக்கிய விழுமியங்களை நிலைநிறுத்தி ஒரு தரமான சேவை விநயோகத்தினை உறுதிசெய்தது.

#### செயற்திறன்

செயற்பாட்டுச் சூழலிலான மேம்பாடுகளைக் கருத்திற்கொண்டு இரண்டாம் அரைப்பகுதியானது வணிகத்தில் ஒரு அதிகரிப்பினைக் கண்டதுடன், இது கையாளப்பட்ட வான் பயணங்களில் 40% மீட்டல் சதவீதத்திற்கு இட்டுச்சென்றதுடன் கோவிட்-19 தொற்றிற்கு முன்னர் கையாண்ட பயணிகளை ஒப்பிடும்போது 25% மீட்டல் வீதத்தினை மாத்திரமே அடைந்தது.

**ப.ச.வி. இல் கையாண்ட வான் பயணங்களின் எண்ணிக்கை**




**FY 2021/12 இல் கையாண்ட பயணிகள், மில்.**




அதன்பின்னர், இப்பிரிவானது ஒரு வருவாயாக USD 28 மில்லியனை பங்களிப்பு செய்தது. மேலும், ஸ்ரீலஎ ப.ச.வி. மற்றும் ம.ரா.ச.வி. ஆகியவற்றில் எயார்பிரான்ஸ், கலிவ்எயார், பிலிப்பைன் எயார் ஏசியா மற்றும் ஐலன்ட் ஏவியேஷன் சேவைகள் உடன் ஒப்பந்தங்களைக் கைச்சாத்திட்டு புதிய வணிகங்களை வரவேற்றது. மீளாய்வாண்டின்போது, ஸ்ரீலஎ பணியாட்கள் பற்றாக்குறை, மேலதிக ஆவணச் சரிபார்த்தல்கள் மற்றும் செயன்முறைகளுக்கு மத்தியில் சரியான நேரத்திலான 98.81% செயற்திறனை பராமரிக்க இயலுமையாயிருந்தது. சரிவுப்பாதையில் செட்டைக்கு கீழான குழுவானது 200 க்கும் அதிகமான மோட்டார் இயக்கிகள் மற்றும் 550 மோட்டார் அல்லாத தரை கையாளுதல் உபகரணங்களை பயன்படுத்தி கையாளுதல் நம்பகத்தன்மையான 99.74% இனை பராமரித்தது. மொத்தமாக 203,000 மெட்ரிக் தொன் சரக்கு கையாளப்பட்டதுடன் இது முன்னைய நிதியாண்டுடன் ஒப்பிடும்போது 50% அதிகரிப்பினை குறிப்பிட்டது. தவறாகக் கையாண்ட பயணப்பொதி வீதமானது 1000 பயணிகளுக்கு 0.72 ஆக காணப்பட்டது.

#### விமானநிலைய செயற்பாடுகள்

ஜனவரி 2022 இல் 23 தரிப்பிட பயன்கலங்களைக் கொண்ட ப.ச.வி. இல் ஒரு புதிய பயன்கலத்தின் ஆரம்பத்துடன் தொலைதூர செயற்பாடுகளின் எண்ணிக்கை அதிகரித்ததுடன் தரை உறுதுணை உபகரணப் பயன்பாடு மற்றும் தரை நேரமானது நீடிக்கப்பட்டது. மேலும், டிசம்பர் 2020 இல் புதிய பயணிகள் முனையத்தின் கட்டுமானத்தின் ஆரம்பத்துடன் நடைமுறையிலுள்ள சேவைப் பாதைகள் மூடப்பட்டதுடன் இது செங்குத்தான வளைவுகளுடனான ஒடுங்கிய மாற்றீட்டு பாதைகளின் அறிமுகத்திற்கு வழிவகுத்தது. இந்த மாற்றமானது ஜுன் 2021 இல் தரை கையாளுதல் செயற்பாடுகளில் கடுமையான இடையூறுகளை ஏற்படுத்தின. இதற்கப்பால் முனையத்திற்கும் புதிய பயன்கலத்திற்கும் இடையேயான நீண்ட தூரமானது பொதிகள் மற்றும் பொதிகள் மாற்றல் விநியோக நேரங்களை சவால்மிக்கதாக்கியது. எனவே, செயற்பாட்டு மாற்றங்களுக்கு அமைவாக 'புதிய வரையறையான செயற்பாட்டு செயன்முறைகள்' ஒன்றினை விருத்தி செய்வதற்கான முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

பாதுகாப்பு வழிமுறைகள் மற்றும் ஏனைய அவசியமான நடவடிக்கைகள் அமுல்படுத்தப்பட்டதுடன் இது தொற்றுக் காலத்தின்போது பயணிகளின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தியது. இந்த நடைமுறைகள் சமூக இடைவெளியினை பேணுதல், சுகாதார மற்றும் பாதுகாப்பு வழிகாட்டிகளைக் காட்சிப்படுத்துதல், அவசியமான அனைத்து ஆவணங்களையும் தயார்படுத்துதல் என்பவற்றை உள்ளடக்குகின்றது. இதற்கும் மேலாக, நேரடியான

தொடர்பினை குறைப்பதற்காக பயணிகள் இணையத்தளத்தினை பயன்படுத்துவதற்கு ஊக்கமளிக்கப்பட்டார்கள். அனைத்து விமானநிலைய பணியாட்களும் அவர்களது மற்றும் வாடிக்கையாளர்களது பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்காக கம்பனியின் மருத்துவ மத்தியநிலையத்தில் அனைத்து கோவிட்-19 தடுப்பூசி மருந்தளவுகளை பெற்றுக்கொள்வதற்கு ஊக்கமளிக்கப்படுகின்றார்கள். செயற்பாட்டு பணியாட்களுக்கு அவசியமான தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கப்பட்டதுடன் இவை செயற்பாடுகளின்போது அனைத்து நேரங்களிலும் முறையாக அணியப்பட்டிருத்தல் வேண்டும்.

தொற்றிலிருந்து துறையானது வெளிவரும்போது மற்றும் பயணக் கட்டுப்பாடுகளின் தளர்த்தலினைத் தொடர்ந்து பயணத்திற்கான கேள்வி திரும்பியதுடன், விமானநிலையம் மற்றும் தரைச் செயற்பாடுகளில் முன்னெப்போதுமில்லாத பணியாள் பற்றாக்குறை அனுபவிக்கப்பட்டது. இந்த பற்றாக்குறைகள் பிரதானமாக தொற்றின் காரணத்திலான வான்பயணத்துறையிலான பணிநீக்கங்களினால் ஏற்பட்டதுடன் இவை புதிய பயணக் கேள்விக்கு செயற்பாட்டு இடையூறுகள் மற்றும் தடைகளை உருவாக்கின. அத்தகைய சூழ்நிலைமையில் மீள் பணிக்கமர்த்தலும் துறையில் சவால்களை ஏற்படுத்தியது.

***மேம்பாட்டு வழிமுறைகள்***

சவால்மிக்க சூழல்களுக்கு மத்தியில், விமானநிலைய மற்றும் தரைச் சேவைகள் மனித வளங்கள் மற்றும் உபகரணங்களில், விமானநிலைய வரவேற்பாளர் சேவை முகவர்கள், சக்கரநாற்காலி கையாளுபவர்கள் மற்றும் பயணப்பொதி கையாளுகை மற்றும் விமான நிலைய துப்புரவாக்கல் சேவைகளுக்கான மூன்றாம் தரப்பு ஆகியவற்றில் தொடர்ந்தும் முதலீடு செய்கின்றது. துப்புரவாக்கல் மற்றும் துணை உபகரணங்களில் மூலதன முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும், ஒரு செயற்திறனான தரை உறுதுணை உபகரணத் தொகுதியினை பராமரிப்பதற்காக மிகவும் முக்கிய உபகரணங்கள் இனங்காணப்பட்டு அவற்றுக்காக ஒரு கொள்முதல் செயன்முறை முன்னெடுக்கப்பட்டது.

ஸ்ரீலஎ வாடிக்கையாளர் விமானநிறுவன புறப்பாட்டு கட்டுப்பாட்டு அமைப்புமுறைகள் பயிற்றுவித்தலுக்கு துணைபுரிவதற்காக அதன் சொந்த உள்ளக பயிற்றுவிப்பாளர்கள் குழுவினை தொடர்ந்து விருத்திசெய்தும் வளர்த்தும் வருகின்றது. எனவே, ஸ்ரீலஎ இந்த சவால்மிக்க காலப்பகுதியில் கோவிட்-19 நெறிமுறைகளை கடைப்பிடித்து அனைத்து முறைமைப்படுத்தல் மற்றும் கட்டாய பயிற்சிகளை நிறைவேற்றியதன் மூலம் செயற்பாட்டு பணியாட்களின் செயற்திறனுக்கு தொடர்ச்சியாக உறுதுணையளித்து பெறுமதி சேர்க்கின்றது. இதற்கப்பால், முறையாகக் கையாளப்படாத பயணப்பொதிகளை வினைத்திறனுடன் கையாளுவதற்காக புதிய செயன்முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டதுடன் இவை செயன்முறையின் வினைத்திறனை மேம்படுத்தியது.

மேலும், பயணிகளுக்கு ஓய்வெடுக்கும் சூழலினை வழங்குவதற்காக செரன்டிவா ஓய்விடம் நவீன மற்றும் சிறந்த தளபாடங்களுடன் புதுப்பிக்கப்பட்டது. ஓய்விடமானது 50 பயணிகளுக்கான ஒரு முழுச்சேவை பல்வகை உணவுவகைகள், சிறந்த பானம் மற்றும் மதுவகச் சேவைகளுக்கான கொள்ளளவினை உள்ளடக்குவதுடன் இது முன்னர் வழங்கப்பட்ட வசதிகளையும் உள்ளடக்கும்.

***சாதனைகள்***

விமான நிலைய மற்றும் தரைச் சேவைகள் ச.வா.போ.ச. இன் தரைச் செயற்பாடுகள் கையேட்டிற்கமைய அவசியமான அனைத்து முறைமைப்படுத்தல் நியமங்களுடன் இணங்கியுள்ளது. விமானநிலைய மற்றும் தரைச் சேவைகள் ச.வா. போ.ச. தரைச் சேவைகளுக்கான பாதுகாப்பு கணக்காய்வு மற்றும் ச.வா. போ.ச. செயற்பாட்டு கணக்காய்வு ஆகியவற்றின் கீழ் சான்றளிக்கப்பட்டுள்ளன. இணக்கப்பாட்டுடன், குழுவானது அடுத்த நிதியாண்டில் இந்த சர்வதேச அங்கங்களினால் மேற்கொள்ளப்படும் அடுத்த கட்ட கணக்காய்வுகளுக்கு தயாராயுள்ளது.

***எதிர்காலம்***

விமான நிலைய மற்றும் தரைச் சேவைகள் தொடர்ந்தும் மனித வளங்கள், பயிற்சி மற்றும் உபகரணங்களில் சேவை மட்டங்களை மேலும் மேம்படுத்துவதற்காக முதலீடு செய்யும்வேளை கணிசமான அழுத்தத்துடன் சேவைத் தனிச்சிறப்பினை உறுதிசெய்வதற்காக அதன் கடப்பாட்டினையும் தொடர்கின்றது.

## ஸ்ரீலங்கன் இன்ஜினியரிங் (ஸ்ரீலஇ-SLE)

***கண்ணோட்டம்***

தொற்றிலிருந்தான மீட்பு மற்றும் உலகம் பூராவுமான பயணக் கட்டுப்பாடுகளின் தளர்த்தல் ஆகியவற்றுடன் ஸ்ரீலஇ புதிய வணிக வாய்ப்புக்களை ஆராய்வதற்கு ஆரம்பித்துள்ளது. இவை புதிய வாடிக்கையாளர் விமான நிறுவனங்களான, பாகிஸ்தானின் செரீன் எயார் மற்றும் எயார்புளூ, ஓமானின் சலாம் எயார், சீசெல்சின் எயார் சீசெல்ஸ் மற்றும் இலங்கையின் விட்ஸ் எயர் ஆகியவற்றை உள்ளடக்கிய மூன்றாந் தரப்பு பராமரிப்பினை விரிவாக்குதலை ஆரம்பித்துள்ளது. எதிர்வரும் வருடங்களில் மேற்குறிப்பிட்ட விமான நிறுவனங்களுடன் நீண்டகால பராமரிப்பு பங்குடைமைகளை கைப்பற்றுவதில் வெற்றிகண்டது. இக்காலப்பகுதியில் ஸ்ரீலஇ இன் ஒரு முக்கிய மைல்கல்லாக செரீன் எயார்ஸ் உடன் மூன்று வருடங்களுக்கு கைச்சாத்திட்ட பிரத்தியேகமான தளப் பராமரிப்பு உடன்படிக்கை காணப்படுகின்றது.

ஐரோப்பிய யூனியன் வான்பயணப் பாதுகாப்பு முகவர்/இலங்கையின் சிவில் விமானப்போக்குவரத்து அதிகாரசபை மற்றும் ஏனைய சர்வதேச விமானப்போக்குவரத்து முறைமைப்படுத்தல் அதிகாரசபைகளினால் நடாத்தப்பட்ட சமீபத்தைய கணக்காய்வுகளில் ஸ்ரீலஇ திறன்பட செயலாற்றியுள்ளதுடன் இதன் மூலம் இவ்வசதியில் பல பராமரிப்பு அங்கீகாரங்களை பெற்று விமானங்களை பராமரிப்பிற்காக பெற்றுக்கொள்வதனை இயலுமையாக்கும்.

தொற்றினால் வழிநடத்தப்பட்ட பயணக் கேள்வியிலான வீழ்ச்சியின் காரணமாக விமானநிறுவனமாக பல விமானங்களை நிறுத்திவைக்கவேண்டியதாயிற்று. ஸ்ரீலஇ பல A320 குடும்ப விமானங்களை அவற்றின் நீண்டகால நிறுத்திவைத்தல் ஏற்பாட்டின்போது குறைவான தேவைப்பாடுகள் சந்திக்கப்படுவதனை உறுதிசெய்யும்பொருட்டு உற்பத்தியாளர் வழிகாட்டிக்கமைய கிரமமான பராமரிப்பினை வழங்குவதில் முக்கிய பங்கு வகித்தது.

2021 இன் குளிர்கால அட்டவணையானது முன்னெப்போதுமில்லா சவால்மிக்க நேரத்தில் எவ்வித இடையூறுமின்றி ஸ்ரீலஇ இனால் முகாமைப்படுத்தப்பட்டது. கோவிட்-19 இலிருந்தான மீளெழுச்சியுடன் அகன்ற அமைப்புடைய விமானங்கள் மற்றும் தொடர்புடைய என்ஜின் பிரித்து சீராக்கல் திட்டங்களுக்கான சடுதியான விமானநிறுவனங்களின் கேள்வியானது செயற்பாட்டு அட்டவணையில் சிக்கல்களை சேர்த்தது. இருந்தபோதிலும், ஸ்ரீலஇ பராமரிப்பின் கீழ் காணப்படும் விமானங்களிலிருந்தான என்ஜின்களை பயன்படுத்துவதன் மூலம் ஒரு நம்பிக்கையுடைய அணுகுமுறையுடன் அட்டவணையினை முகாமைப்படுத்தியது. இது எமது பராமரித்தல் பணியாட்களினால் முகங்கொடுத்த சிரமங்களுக்கு மத்தியில் வெற்றிக்கான பாதைக்கு வழிசமைத்தது.

ஸ்ரீலஇ அனைத்து சிக்கன வகுப்பு A330 விமானமொன்றினை 18BC/251EY கேட்டவுடன் ஒலி/ஒளி உடன் ஒரு புதிய சமையலறை வசதியுடன் உருமாற்றுவதற்கான ஒரு முக்கியமான பொறுப்பினை ஏற்றது. புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட EASA இணக்கப்பாட்டு விளம்பர அச்சிடுதல் மற்றும் இருக்கை உறை உற்பத்தி

# முகாமைத்துவ கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு (தொடர்ச்சி.)

உறுதுணை வசதிகளுடன் பராமரிப்பு, பழுதுபார்த்தல் மற்றும் பிரித்து சீராக்கல் மட்டத்தில் விமான நிறுவனமானது மேலும் செலவுச் சிக்கனம் மற்றும் மேம்பட்ட ஆற்றல் நோக்கி முன்னேறுகின்றது. மற்றுமோர் வெற்றிகரமான சாதனையாக அகலமான அமைப்புடைய மூன்று பழைய விமானங்களது வர்ணம் பூசுதல் காணப்பட்டது.

ஸ்ரீலஇ இன் பராமரிப்புக் குழுவானது இலங்கையில் சேவையாற்றும் வாடிக்கையாளர் விமான நிறுவனங்களுடன் புதிய பராமரிப்பு உறுதுணை உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டுள்ளது. மாலைதீவிலிருந்தான யூரோ விங்ஸ் உடன்படிக்கையானது தளத்திற்கப்பாலான ஏனைய வினமா நிறுவனங்களுக்கான எமது பராமரிப்பு விரிவாக்கலாகக் கருதப்படுகின்றது.

## ஸ்ரீலங்கன் ஏவியேஷன் காலேஜ் (ஸ்ரீ.ல.ஏ.கா.)

***கண்ணோட்டம்***

சர்வதேச தரத்திலான விமானப் போக்குவரத்துப் பயிற்சியில் 34 வருடங்களுக்கும் அதிகமான அனுபவத்துடன், ஸ்ரீலஏ இன் பயிற்றுவித்தல் அங்கமான ஸ்ரீலங்கன் ஏவியேஷன் காலேஜ் நாட்டிற்கு மற்றும் பிராந்தியத்திற்கு பரந்த பயிற்சி தெரிவுகளை வழங்குகின்றது. காலேஜ் ஆனது யூரோப்பியன் ஏவியேஷன் சேவ்ட்டி ஏஜன்சி (யூ.ஏ.சே.ஏ.), சர்வதேச வான் போக்குவரத்து சங்கம் (ச.வா. போ.ச.) தரப்படுத்தலுக்கான சர்வதேச ஒழுங்கமைப்பு (த.ச.ஒ.), இலங்கையின் சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை, பாக்கிஸ்தானின் சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை மற்றும் மாலைதீவின் சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை போன்ற நிறுவனங்களினால் சான்றளிக்கப்பட்டுள்ளது. அது றோயல் ஏரோநோட்டிகல் சொசையிட்டி மற்றும் யூரோப்பியன் ஏவியேஷன் மெயின்டனன்ஸ் டிரேனிங் கமிட்டி ஆகியவற்றினதும் அங்கத்தவராகும். காலேஜானது உலகப் பிரசித்திபெற்ற பயிற்றுவித்தல் மற்றும் கல்வி நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து மாணவர்கள் மற்றும் தொழில்புரியும் தொழில்வல்லுநர்களுக்கும் முற்றான விமானப்போக்குவரத்து மற்றும் கூட்டாண்மை பயிற்சிகளை வழங்குகின்றது.

***பங்குடைமைகள்***

ஸ்ரீலஏகா போயிங் வான்பயண அனுப்புவர் சான்றிதழை வழங்குவதற்காக போயிங் உடன் ஒரு பங்குடைமையினை விருத்திசெய்தது. இதற்கும் மேலாக, ஸ்ரீலஏகா வான்போக்குவரத்து பராமரிப்பில் முதுமானி மற்றும் விமானப் போக்குவரத்து பட்டப்படிப்பின் பின்னராக தகமைகளாக பட்டதாரி சான்றிதழை வழங்குவதற்காக எம்ப்ரி-ரிடல் ஏரோநோட்டிக்கல் பல்கலைகழகத்துடன் ஒரு பங்குடைமையில் செயலாற்றிக்கொண்டுள்ளது. இந்தச் சாதனைகள் இலங்கையினை தெற்காசியாவில் ஒரு பயிற்றுவித்தல் மையமாக்கியுள்ளதுடன் ஸ்ரீலஏகா இனை வான்போக்குவரத்து பயிற்றுவித்தல் வாய்ப்புக்களில் ஒரு முன்னோடியாக நிலைநாட்டியுள்ளது.

***எதிர்வரும் சேர்க்கைகள்***

ஸ்ரீலஏகா பூரணப்படுத்தல் கல்லூரி/ கூட்டாண்மை ப்ளஸ், வைன் மற்றும் சீஸ் மதிப்பீடு, உணர்வுசார் நுண்ணறிவுப் பயிற்சித் திட்டம், வான்பயண செயற்பாடுகள் அதிகாரி/வான்பயண அனுப்புபவர் திட்டம், ச.வா.போ.ச. சரக்கு அறிமுகத் தகமை, ச.வா.போ.ச. இன் வானறை பணியாட்கள் தகமைகள் மற்றும் இலங்கை மாணவர்களுக்கான விமானப் பராமரிப்பிலான EASA பகுதி 66 அடிப்படை பாடநெறி போன்ற பல புதிய பயிற்றுவித்தல் திட்டங்களை வெற்றிகரமாக ஆரம்பித்ததுடன் இவற்றுக்கான சேர்க்கைகள் தற்போது நடந்தவண்ணமுள்ளன.

***பட்டம் வழங்கும் அரசு சாராத உயர் கல்வி நிருவகத் தரம்***

ஸ்ரீலஏகா சர்வதேச ரீதியாக சான்றளிக்கப்பட்ட வான்போக்குவரத்து பல்கலைக்கழகத்தில் கற்பதற்கான தனித்துவமான வாய்ப்பினை பிராந்தியத்திலுள்ள மாணவர்களுக்கு வழங்குவதற்காக பட்டம் வழங்கும் அரசு சாராத உயர் கல்வி நிருவகத் தரத்தினை அடைவதில் தற்போது செயலாற்றிக்கொண்டுள்ளது.

***அங்கீகரிக்கப்பட்ட பயிற்றுவித்தல் ஒழுங்கமைப்பு தரம்***

ஸ்ரீலஏகா அதன் விமானப்போக்குவரத்து பயிற்றுவித்தல் அங்கமான சர்வதேச விமானப்போக்குவரத்து அகடமிக்கு அங்கீகரிக்கப்பட்ட பயிற்றுவித்தல் ஒழுங்கமைப்பு தரத்தினை எதிர்பார்த்தவண்ணமுள்ளது. ஸ்ரீலஏகா இலங்கையில் ஒரு அங்கீகரிக்கப்பட்ட பயிற்றுவித்தல் ஒழுங்கமைப்பினால் சான்றளிக்கப்பட்ட விமானப்போக்குவரத்து தொழில்சார் கல்வியினை வழங்கும் முதலாவது நிறுவனமாவதுடன், இது மாணவர்களுக்கு உலகளாவிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு கல்வித் தகமையினை பெறுவதற்கு அனுமதிக்கின்றது.

***இணையவழி ஊடான பயிற்றுவிப்பாளரை பயிற்றுவித்தல் திட்டத்திற்கான சிவில் வான் போக்குவரத்து அதிகாரசபையின் அங்கீகாரம்***

ஸ்ரீலஏகா ஆனது சி.வா.போ.அ. இடமிருந்து அதன் இணையவழி ஊடான பயிற்றுவிப்பாளரை பயிற்றுவித்தல் திட்டத்திற்கான அங்கீகாரத்தினை பெற்றுள்ளது. வகுப்பறை பயிற்றுவிப்பாளரை பயிற்றுவித்தல் திட்டத்திற்கு ஏற்கனவே அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டமானது பயிற்றுவித்தல் தொடர்பாக அனைத்து தோற்றங்களிலும் அவர்களது திறன்களை மேம்படுத்துவதற்காக பயிற்றுவிப்பாளர்களுக்கு உதவும் முகமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இது வகுப்பறையிலாக இருக்கலாம் அல்லது இணையவழியாக இருக்கலாம்.

***ஸ்ரீலஏகா திட்டங்களுக்கான தேசிய தொழிற்கல்வி தகமை தரம்***

ஸ்ரீலஏகா அதன் பல திட்டங்களுக்கு தேசிய தொழிற்கல்வி தகமை தரத்தினை பெற்றுக்கொள்ளும் செயல்முறையில் ஈடுபட்டுள்ளது. இவை விமானப் பராமரிப்பு, வான்பயண அனுப்புபவர், ச.வா.போ.ச. பிரயாண மற்றும் சுற்றுலா அறக்கட்டளை, மற்றும் ஏனையவற்றுக்கிடையில் ஆலோசனை டிப்ளோமாக்கள் போன்ற அடிப்படை பாடநெறிகளுக்காகும் என்பதுடன் இவை மாணவர்களுக்கு ஒரு தொழிற்கல்வி தகமைக்கான வாய்ப்புடன் மற்றும் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பு திட்டங்களுக்கான குறுக்கு நுழைவாயிலையும் வழங்கும்.

## ஸ்ரீலங்கன் கேட்டரிங் லிமிட்டட்

***கண்ணோட்டம்***

ஸ்ரீலங்கன் கேட்டரிங் லிமிட்டட் (ஸ்ரீலகே) ஸ்ரீலஏ இன் முழுவதும் உரித்தான துணைநிறுவனமாவதுடன் இலங்கையில் காணப்படும் ஒரே விமான நிறவனங்களுக்கு உணவுவழங்கல் கம்பனியாகும். அதன் பிரதான செயற்பாடுகளான விமானத்தினுள்ளான உணவுவழங்கல் செயற்பாடுகளுக்கு அப்பால் ப.ச.வி. மற்றும் ம.ரா.ச.வி. இலுள்ள செரன்டிப், எமிரேட்ஸ், அரலிய மற்றும் லோட்டஸ் ஓய்விடங்கள் உள்ளடங்கலான அனைத்து விமான நிறுவனங்களது ஓய்விடங்கள் மற்றும் விமானநிலைய உணவகங்களையும் செயற்படுத்துகின்றது. அதன் துணை வணிக நடவடிக்கைகளில் ஒரு பகுதியாக ஸ்ரீலகே செரீன்டிவா ட்ரான்சிட் ஹோட்டல், ஏரோகிளீன் இன்டஸ்ரியல் லோன்டரி மற்றும் உள்ளூர் மற்றும் ஏற்றுமதி சந்தைகளுக்காக உற்பத்தி செய்யப்படும் உடனடியாக உண்ணக்கூடிய குளிரூட்டப்பட்ட உணவு வகையான குயிசீன் கெஸ்ட்ரோநோம் இனையும் செயற்படுத்துகின்றது.

***செயற்திறன்***

ஸ்ரீலகே இன் செயற்திறனானது நிதியாண்டின் முதலாம் அரைப்பகுதியில் கோவிட்-19 தொற்றினால் கணிசமானளவு பாதிப்படைந்தது. எவ்வாறாயினும், 2021 இன் குளிர்காலப் பருவத்தில் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது செயற்திறனானது படிப்படியாக முன்னெற்றமடைந்தது.

புரள்வானது முன்னைய நிதியாண்டுடன் ஒப்பிடும்போது 464% ஆல் வளர்ச்சியடைந்து ரூபா 3,902 மில்லியனை அடைந்தது. மேலும், துணைநிறுவனமானது ஒரு செயற்பாட்டு இலாபமாக ரூபா 474 மில்லியனை பதிவு செய்ததுடன் (2020/21 - செயற்பாட்டு நட்டம் ரூபா 1,365 மில்லியன் ) பயணிகளது வருகையிலான அதிகரிப்பு மற்றும் தொற்றின் பின்னர் சில விமான நிறுவனங்களினால் செயற்பாடுகள் ஆரம்பித்தமையினால் துணைநிறுவனத்தின் முக்கிய செயற்திறன் குறிகாட்டிகள் கணிசமானளவு அதிகரித்தன.

மீளாய்வாண்டின்போது, ஸ்ரீலகே நடைமுறையிலுள்ள வணிக அலகுகளூடாக வருவாய் மேம்படுத்தல் வழிமுறைகளை தீவிரமாக ஆராய்ந்தது. ஸ்ரீலகே குயிசின் கேஸ்ட்ரநோம் எனப்படும் உடனடியாக உண்ணக்கூடிய உணவுப் பிரிவினை உள்ளூர் மற்றும் ஏற்றுமதி சந்தைகளுக்கு விரிவாக்கியது. இதற்கு அது அதன் பரந்த உற்பத்தி மற்றும் செயற்பாட்டு ஆற்றல்களைப் பயன்படுத்திக்கொண்டது. ஸ்ரீலகே ஏற்கனவே அவுஸ்திரேலியா, அமெரிக்கா மற்றும் கனடா ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதுடன் தற்போது துபாய், ஐக்கிய இராச்சியம் மற்றும் ஐரோப்பிய யூனியன் ஆகியவற்றுக்கு இந்த உற்பத்திகளை ஏற்றுமதி செய்வதற்காக தற்போது கலந்துரையாடல்களை நிறைவேற்றியவண்ணமுள்ளன. மேலும், இந்தப் பொருட்களது உள்ளூர் விநியோகத்தினை மேம்படுத்துவதற்கு மற்றும் ஜப்பான் மற்றும் வளைகுடா நாடுகளுக்கான ஏற்றுமதி சந்தைகளை மேலும் விரிவாக்குவதற்காக திட்டங்கள் நடந்தவண்ணமுள்ளன.

மேலும், செயற்பாட்டு செலவினத்தை குறைப்பதற்காக தொடர்ச்சியான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட வேளை செலவுச் சிக்கனத்தை அடைவதற்காக வளங்களது உச்சப்பயன்பாட்டிற்கு அழுத்தம் மேற்கொள்ளப்பட்டது. இதன் விளைவாக, துணைநிறுவனமானது அதன் தொழிற்சேனையினை மேலும் சரியான அளவுக்கு வைத்திருக்க இயலுமையாயிருந்தது. இதற்கும் மேலாக, குறைவடைந்துள்ள செயற்பாட்டு மட்டங்களுக்கமைய ஏனைய நேரடி செயற்பாட்டு செலவினங்களை குறைப்பதில் அதிகரித்த அழுத்தம் பிரயோகிக்கப்பட்டது. தொற்றின்போது செலவினங்களை சமாளிப்பதற்காக ஒப்பந்தங்கள் மற்றும் உடன்படிக்கைகளை மீள் பேரம் பேசுவதற்கான வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் விளைவாக, எமது முக்கிய சேவை வழங்குநரான, விமான நிலைய மற்றும் வான்பயணச் சேவைகள் (ஸ்ரீலங்கா) லிமிட்டட் வாடகையில் சலுகைகளை வழங்கியதுடன் இது துணைநிறுவனத்தின் திரவத்தன்மையினை மேம்படுத்துவதற்கு பங்களித்தது. ஸ்ரீலகே பாரிய மூலதனச் செலவுத் திட்டங்களை ஒத்திப்போட்டவேளை, துணைநிறுவனத்தின் வருவாய் உருவாக்கல் நடவடிக்கைகள் மற்றும் செலவு முகாமைத்துவ முன்னெடுப்புகளை மேம்படுத்துவதற்கு தேவையான முக்கியமான மற்றும் அவசர மூலதனத் தேவைப்பாடுகளுக்கு மாத்திரம் கவனம் செலுத்தப்பட்டது.

### *வருவாய்*

முன்னைய நிதியாண்டுடன் ஒப்பிடும்போது மீளாய்வாண்டின்போது துணைநிறுவனத்தின் வருவாய் தொகுப்பில் ஒரு பாரிய நகர்வு காணப்பட்டது. இது வான்பயணச் சமையலறை மற்றும் உணவகப் பிரிவுகளில் காணப்பட்ட செயற்திறனின் காரணத்தினாலாகும்.

**வருவாய**




முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது இவ்வதிகரிப்பிற்கான பிரதான பங்களிப்பாளராக விமானத்தினுள்ளான உணவுவழங்கல் வருவாயின் அதிகரிப்பு 541% (ரூபா 2,556 மில்லியன் ) மற்றும் ப.ச.வி. உணவகத்தின் வருவாயின் அதிகரிப்பு 455% (ரூபா 396 மில்லியன் ) காணப்படடது.

இவ்வருடத்தில் வான்பயண சமையலறையில் உற்பத்தி செய்யப்பட்ட உணவுப்பொட்டலங்களின் எண்ணிக்கை 784% ஆல் அதிகரித்து வருடத்திற்கு 2.2 மில்லியன் உணவுப்பொட்டலங்களாகக் காணப்பட்டது. இது முன்னைய நிதியாண்டில் 0.25 மில்லியன் உணவுப்பொட்டலங்களாக அறிக்கையிடப்பட்டது. விமானத்தினுள்ளான உணவுவழங்கலில் பிரதான வாடிக்கையாளராக ஸ்ரீலஎ மொத்த விமானத்தினுள்ளான உணவுவழங்கல் புரள்வில் 67% இனை பிரதிபலித்ததுடன், இவ்வருடத்தில் உற்பத்தி செய்யப்பட்ட மொத்த உணவுப் பொட்டலங்களில் 73% இனை பிரதிபலித்தது.

ப.ச.வி. இலுள்ள விமான நிலைய உணவகத்திலிருந்தான (பொது மற்றும் இடங்கடப்பு) பங்களிப்பானது கம்பனியின் மொத்த வருவாயில் 12% ஆக காணப்பட்டதுடன் வருவாயானது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது 455% ஆல் அதிகரித்து ரூபா 483 மில்லியனை அடைந்தது (2021/21 - ரூபா 86 மில்லியன் ). மேலும் ஏனைய துணை வணிக நடவடிக்கைகளிலிருந்தான புரள்வானது 195% ஆல் அதிகரித்தது.

### *செலவினம்*

இவ்வாண்டின்போது, குறைவான வணிகப் பருமனளவுக்கேற்ப செயற்பாட்டுச் செலவினங்களை கட்டுப்படுத்துவதற்காக அவசியமான வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. வருவாய் அதிகரிப்பிற்கமைய விற்பனைக்கான செலவினம் 213% ஆல் அதிகரித்தது. மொத்த நிர்வாகச் செலவுகள் முன்னைய ஆண்டின் ரூபா 1,735 மில்லியனிலிருந்து 39% ஆல் அதிகரித்து ரூபா 2,413 மில்லியனாகக் காணப்பட்டது. மேலும், நடவடிக்கை மட்டங்களுடன் நேரடியாக பிணைக்கப்பட்டுள்ள ஏனைய செயற்பாட்டுச் செலவுகள் இவ்வருடத்தில் 33% அதிகரிப்பினை பதிவுசெய்தது.

### *இலாபகரத்தன்மை*

இவ்வாண்டின்போது துணை நிறுவனத்தில் செயற்பாட்டு இலாபங்கள் படிப்படியாக ரூபா 474 மில்லியனுக்கு உயர்வடைந்தது. இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது 135% அதிகரிப்பாகும் (கடந்த வருடம் செயற்பாட்டு நட்டம் ரூபா 1,365 மில்லியன் ). கடந்த நிதியாண்டுடன் ஒப்பிடும்போது வரிக்கு முந்திய தேறிய இலாபமானது 436% ஆல் அதிகரித்து ரூபா 3,231 மில்லியனாகக் காணப்பட்டது. இது பிரதானமாக இவ்வருடத்தில் அறிக்கையிட்ட பரிமாற்றல் இலாபத்தினாலாகும் (ரூபா 2,823 மில்லியன் ) என்பதுடன் நிதியாண்டில் கடைசி அரைப்பகுதியில் அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாவின் பெறுமதியிழப்பின் காரணத்தினாலாகும்.

**செயற்பாட்டு இலாபப் போக்கு**



# முகாமைத்துவ கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு (தொடர்ச்சி.)

**தேறிய இலாபப் போக்கு**




### வருமான வரி

ஸ்ரீலகே இன் வருமான வரிச் செலவினமானது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது 909% ஆல் அதிகரித்தது. இது முதலீட்டு சபை உடன்படிக்கையின் பிரகாரம் முற்றான வரி விலக்களிப்பு 30 மே 2021 இல் நிறைவடைந்ததன் காரணத்தினாலாகும். துணை நிறுவனமானது 31 மே 2021 முதல் சலுகை வரி வீதமான 15% மற்றுமோர் 8 வருடங்களுக்கு வரி செலுத்துவதற்கு பொறுப்பாளியாகும்.

## துணைச் சேவைகள்

### ஸ்ரீலங்கன் த.தொ.

2021/22 நிதியாண்டின்போது ஸ்ரீலங்கன் த.தொ. அமைப்புமுறைகள் விமான நிறுவன வணிகத்திற்கு பயணிகளை மையப்படுத்திய தொழில்நுட்பங்களின் அறிமுகத்தினூடாகப் பங்களித்தது. இது பல இ-வணிகச் சேவைகளை அடுத்த சந்ததி தொழில்நுட்பங்கள் மற்றும் புத்தாங்களுடன் புதுப்பிக்கப்பட்டு ஆரம்பிக்கப்பட்டதனாலாகும்.

ஸ்ரீலங்கன் த.தொ அமைப்பு முறைகள் விமான நிறுவனத்தின் த.தொ. மற்றும் டிஜிட்டல் மூலோபாயத்தினை ஆளுகை செய்வதுடன், வான் போக்குவரத்துத் துறையில் அதிநவீன தொழில்நுட்பங்களை கடைப்பிடிப்பதன் மூலம் மேம்பட்ட பயணிகள் அனுபவத்துடன் அதிக டிஜிட்டல் வணிகம் மற்றும் ஸ்மார்ட் செயற்பாடுகளை இயக்குவதற்காக விமான நிறுவனத்தின் வணிகத் திட்டம் மற்றும் குறிக்கோள்களுடன் இணைக்கப்பட்டன. இதன் பிரகாரம், ஸ்ரீலங்கன் த.தொ. அமைப்பு முறைகள் மீளாய்வாண்டில் வணிகச் செயற்பாடுகளுக்கும் பயணிகள் பக்கத்திலும் புதிய புத்தாக்கங்கள் மற்றும் சேவை சிறப்பம்சங்களை அறிமுகப்படுத்தியது.

### கூட்டாண்மை இணையத்தளத்திலான பார்த்தல் மற்றும் உணர்தல்

ஸ்ரீலங்கன் த.தொ. அமைப்பு முறைகள் அதன் இணையத்தளத்திற்கு விஜயம் செய்பவர்களுக்கு ஒரு புதிய மற்றும் மேம்பட்ட பயனாளர் அனுபவத்தினை வழங்குவதற்காக அதன் கூட்டாண்மை இணையத்தளத்திற்கு அடிக்கடி இணைய மேம்பாடுகள் மற்றும் பயனாளர் இடைமுகப்புகளில் மாற்றங்கள் ஆகியவற்றை நடாத்துகின்றது. மிகவும் சமீபத்தைய மேம்பாடாக பன்மொழி உறுதுணையின் அறிமுகம் காணப்படுவதுடன் இது உலகப் பூராவும் எட்டுவதனை இயலுமையாக்குகின்றது. இணையத்தளமானது தற்போது அதிநவீன பயனாளர் தோழமையான மொபைல் ஏற்புத்தன்மையுடனான தோற்றங்களைக் கொண்ட எளிமையான முகப்புப் பக்கம், இது மொபைல் தொழில்நுட்பத்தினூடாக வாடிக்கையாளர் அணுக்கத்தினை மேம்படுத்தும்.

சமீபத்தில் மேம்படுத்தப்பட்ட மடிக்கத்தக்க பதிவுசெய்தல் இடுக்கையானது ஒரு சில கிளிக்களுடன் ஒரு ஒதுக்கீட்டினை செய்வதற்கான அனைத்தும் ஒன்றிலான அணுக்கத்தினை வழங்குகின்றது. அதேசமயம் புதிய துணை ரிப்பன் ஆனது பயணிகளுக்கு கிடைக்கக்கூடிய அனைத்து துணை உறுப்படிகளையும் காண்பிக்கின்றது. இதற்கப்பால், புதிய தேடுதல் தெரிவானது புதிய டீல்கள் பிரிவின் கீழ் ஒரு சில நொடிகளில் இணையத்தளத்தில் அவர்களுக்கு தேவையானதை வழங்குகின்றது. இது எங்கிருந்தும் பெற்றுக்கொள்ளக்கூடிய சமீபத்தைய கொடைமுனைவுகள் மற்றும் ஊக்குவிப்புகளை உள்ளடக்குகின்றது.

இது அதிகரித்த வாடிக்கையாளர் திருப்தியினைக் காண்பித்துள்ளதுடன் தரவுப் பாதுகாப்பு மற்றும் வான்பயண ஒழுங்குவிதிகளிலான நியமங்களுடனான இணக்கப்பாட்டினை சந்திக்கும்போதாகும்.




### இணையத்தள பதிவுசெய்தல் என்ஜினுக்கான Alipay, PoLi, WeChat கொடுப்பனவு தெரிவுகள்

ஸ்ரீலங்கன் த.தொ. அமைப்புமுறைகள் இணையத்தள பதிவுசெய்தல் என்ஜினுக்காக Alipay, POLi and WeChat கொடுப்பனவு பணப்பை ஆகியவற்றுக்கு வசதியளிப்பதுடன் இது சீனப் பிராந்தியத்தில் அமடியஸ் கொடுப்பனவு மேடையின் கட்டம் ஐஐ அமுலாக்கலின் ஒரு பகுதியான முன்னணி மாற்றீட்டு கொடுப்பனவு முறையாகும். இந்த புதிய கொடுப்பனவுத் தெரிவுகள் சீனா, ஹொங்கொங், அவுஸ்திரேலியா, நியுசீலாந்து, இலண்டன், ஜப்பான், சிங்கப்பூர், அமெரிக்கா, மாலைதீவுகள் போன்ற நாடுகளிலிருந்து பயண உருவாக்கத்தினை இயலமையாக்கியுள்ளவேளை அதே கொடுப்பனவு தெரிவானது ஸ்ரீலங்கன் மொபைள் இணையத்தளத்திற்கும் வழங்கப்பட்டுள்ளது. சமீபத்தில் ஸ்ரீலங்கன் த.தொ. இலங்கையின் வங்கியியல் ஜாம்பவான்களான இலங்கை வங்கி மற்றும் ஹட்டன் நெஷனல் வங்கி என்பவற்றால் வலுவளிக்கப்படும் வீசா மற்றும் மாஸ்டர் காட் கொடுப்பனவு நுழைவாயில் முறைமையினை தரமுயர்த்தியது. இது மேம்படுத்தப்பட்ட மோசடி முகாமைத்துவ ஆற்றலுடன் 42 உலகளாவிய நாணயங்களிலிருந்து அவர்களுக்கு தெரிவான நாணயத்தில் செலுத்துவதற்கான வசதியினை வழங்குகின்றது. இது வாடிக்கையாளர்கள் ஸ்ரீலஎ இன் கூட்டாண்மை இணையத்தளத்திலிருந்து பாரம்பரிய வழிமுறைகளுக்கு மேலாக இணையவழி பதிவுசெய்தல்கள் மற்றும் பெறுமதி சேர்க்கப்பட்ட சேவைகளை தெரிவுசெய்வதற்கு ஊக்கமளிக்கும். இது தளத்திற்கு மட்டுமான டீல்கள், குறைவான பயணக்கட்டண உத்தரவாதம், பூச்சிய சேவைக் கட்டணங்கள் போன்ற தனித்துவமான நலன்களை வழங்குவதுடன் எவ்வித மேலதிக செலவுமின்றி புறப்படுவதற்கு 24 மணித்தியாலங்களுக்கு முன்னர் முதலாவது திகதி மாற்றல் மற்றும் டிக்கட்டை ரத்து செய்வதற்கான ஆற்றலையும் வழங்குகின்றது. ஸ்ரீலஎ இன் கூட்டாண்மை இணையத்தளமானது தற்போது பரவலான கடன் அட்டைகளையும் ஏற்றுக்கொள்கின்றது.

### இணையவழி பதிவுசெய்தல் என்ஜினுடன் பிரயாண காப்புறுதித் தீர்வினை ஒருங்கிணைத்தல்

ஸ்ரீலங்கன் த.தொ. அமைப்புமுறைகள் IBE உடன் ஒரு பிரயாணக் காப்புறுதித் தீர்வு ஒருங்கிணைக்கப்பட்டது. இது பயணிகள் அவர்களது காப்புறுதித் தேவைகளைச் சந்திப்பதற்காக பிரயாணக் காப்புறுதிக் கொள்கைகளை கொள்வனவு செய்ய இயலுமையான வேளை விமான நிறுவனத்திற்கு மேலதிக துணை வருவாய் ஈட்டலை வழங்குகின்றது. இந்தக்

கருவியானது காப்புறுதி கொள்கையுடைய பயணிகளுக்கு மருத்துவ காப்புறுதிக் காப்பீடு, பொதிகள் இழப்புக்கான காப்பீடு மற்றும் விமானப் பயண தாமதங்கள் மற்றும் நாடுகடத்தல் போன்ற காப்பீடுகளுக்கு வசதியளிக்கின்றது.

***டொயிஷ் பஹ்ரான் - ஜேர்மன் ரெயில்வே உடனான Rail-Fly செயல்படுத்தல்***




ஸ்ரீலங்கன் த.தொ. அமைப்புமுறைகள் சமீபத்தில் Rail-fly தெரிவின் கீழ் ஜேர்மன் ரெயில்வே - டொயிஷ் பஹ்ரான் இனை செயல்படுத்தியது. இது பயணிகள் ஸ்ரீலஎ இன் கூட்டாண்மை இணையத்தளத்தினூடாக முன்பதிவு செய்யும்போது ஒரு தனி முன்பதிவூடாக ஜேர்மனியில் எந்த இடத்திலிருந்தும் இன்னுமோர் இடத்திற்கு செல்வதற்கோ வருவதற்கோ அவர்களது முழுப் பிரயாணத்தையும் பதிவுசெய்யக்கூடிய சௌகரியத்தினைக் கொண்டுள்ளார்கள்.

இத்துடன், பயணிகள் விராங்வேட் விமான நிலையத்திற்கும் ஜேர்மனியிலுள்ள பாரிய நகரங்களான பேர்லின், ஹம்பர்க், முயினிச், ஸடட்காட் மற்றும் டஸல்டோர்வ் போன்ற 5,600 க்கும் அதிகமான டொயிஷ் பஹ்ரான் நிலையங்களுடனும், சுவிட்லாந்தில் பாசல், அவுஸ்திரியாவில் செல்ஸ்பர்க் ஆகியவற்றுடன் இணையும் தெரிவினைப் பெறுகின்றார்கள். ஒரு விரிவான வலைமைப்பிற்கும் மேலாக பயணிகள் ஆகக்குறைந்த இடம்கடந்து செல்லல் நேரங்கள் மற்றும் நெகிழ்வுத்தன்மையினை அனுபவிக்கலாம்.

***இணையவழி பதிவுசெய்தல் மற்றும் கவுண்டர் பதிவுசெய்தலூடாக துணைச் சேவைகளை செயலாற்றுதல்***

ஸ்ரீலங்கன் த.தொ. அமைப்புமுறைகள் இணையவழி பதிவுசெய்தலூடாக பயணிகள் துணைச் சேவைகளை கொள்வனவு செய்வதற்கான ஒரு தெரிவினை அறிமுகப்படுத்தியதுடன் பதிவுசெய்வதற்கு முன்னர் மேலதிக சுமைப் பொதியினையும் பெற்றுக்கொள்ளலாம். இந்த சேவையானது அமடியஸ் கொடுப்பனவு மேடையின் செயலாற்றலின் ஒரு பகுதியாக இயலுமையாக்கப்பட்டதுடன் இது பயணிகள் தங்களது தனிப்பட்ட தெரிவுகளுக்கேற்ப துணைச் சேவைகளை தெரிவுசெய்வதற்கும் கொள்வனவு செய்வதற்கும் சிரமமற்ற மொபைல் தோழமையான வசதிக்கு வழிவகுக்கின்றது.

***செயற்பாட்டு வினைத்திறன்களுக்காக தொழில்நுட்ப பணியாட்களது பயண அறிக்கையினை டிஜிட்டல் மயமாக்கல்***

விமானத்தினுள்ளான தொழில்நுட்ப பணியாட்களின் பயண அறிக்கையிடும் செயன்முறையினை விமான நிறுவனத்தின் டிஜிட்டல் மூலோபாயத்திற்கு அமைய டிஜிட்டல் மயமாக்கிய வேளை, இது செயற்பாடுகளில் ஆக்கத்திறன் மற்றும் வினைத்திறனை அடைவதற்காகவும் மேம்பட்ட பயனாளர் மற்றும் பயணிகள் அனுபவத்திற்காகவும் நெறிப்படுத்தப்பட்டது. இதற்கும் மேலாக, விமானத்தினுள்ள விமானிகள் ஒருங்கிணைக்கப்பட்ட அமைப்பு முறைகளூடாக நிகழ்நேர துல்லியமான தகவல்களை பெற்றுக்கொள்ளும் வசதியுமளிக்கப்பட்டது. 'AEROOPS' எனப்படும் உள்ளகத்தே விருத்திசெய்யப்பட்ட தீர்வினூடாக ஸ்ரீலங்கன் த.தொ. அமைப்புமுறைகள், இவற்றை வெளியிலிருந்து வாங்கியிருப்பின், மென்பொருள் நிறுவனங்களுக்கு வழங்கியிருக்கக்கூடிய USD 200 மில்லியனை சேமித்துள்ளது.

AeroOps "கூட்டாண்மை த.தொ. விருதுகளில்" டிஜிட்டல் தனிச்சிறப்புப் விருதுகளில் வெள்ளி விருதினை பெற்றது. இது இலங்கை தகவல் தொழில்நுட்ப துறைச் சம்மேளனத்தினால் ஒழுங்குசெய்யப்பட்டதுடன், தேசிய சிறந்த மென்பொருள் தர விருதுகளில் தகுதி/வெண்கல விருதினையும் பெற்றது.






# முகாமைத்துவ கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு (தொடர்ச்சி.)

***பயணாளிகளுக்கு புதிய டிஜிட்டல் தீர்வுகளுடன் வலுவளித்தல்***

தொலைவிலிருந்து பணிபுரியும் வசதிக்கு நகர்ந்ததுடன், ஸ்ரீலங்கன் த.தொ. கணிசமான செலவுச் சிக்கனத்துடன் செயற்பாட்டு வினைத்திறன்கள் மற்றும் இணக்கப்பாட்டு தேவைப்பாடுகளுக்கு விரைவான தீர்வுகளை வழங்கியது. இந்தத் தீர்வுகள் தொழில்நுட்ப பணியாட்களுக்கு பின்வருவனவற்றை வழங்குகின்றது. மொபைல் இல் தரையிறக்கம் மற்றும் மேலெழுதல் சமீபத்தைய தகவல்கள், பின்னூட்ட கைப்பற்றுதல் மற்றும் பகுப்பாய்வு மற்றும் கைமுறை செயல்முறையினை மாற்றீடு செய்த இலத்திரணியல் ஆவண முகாமைப்படுத்தல் என்பவையாகும்.

***தகவலினால் வழிநடத்தப்படும் விமான நிறுவனம்***

ஸ்ரீலஎ இன் முகாமைத்துவ தகவல் மேடையான ‘Airline Insight’ சமீபத்தில் ஸ்ரீலஎ இன் கூட்டாண்மை வட்ஸ்அப் வழியுடன் ஒருங்கிணைக்கப்பட்டு வட்ஸ்அப் செயலியூடாக மூலோபாய மட்டத்திலான தீர்மானம் மேற்கொள்பவர்களுக்கு தன்னியக்கமாக நாளாந்த விமானநிறுவன செயற்திறனை பரப்புகின்றது. இந்த சாதனையானது முக்கிய தீர்மானம் மேற்கொள்பவர்கள் நிகழ்நேர தகவல்களை அணுகி வணிக மையமான தீர்மானங்களை மேற்கொள்வதற்கு வலுவளிக்கின்றது.

அடுத்த நிதியாண்டில், ‘Airline Insight’ இன் முன்னிறுத்தமானது முழுவதும் தகவல்களினால் இயக்கப்படும் பயணிகள் மையமான விமான நிறுவனமாக ஸ்ரீலஎ இனை மாற்றும் ஆற்றல்களுடன் தனிப்பட்ட பயணிகள் அனுபவத்தினூடாக பயணிகள் மையப்படுத்தலை மேம்படுத்துவதாகும்.

***குழுமத் தகவல் பாதுகாப்பு, இணக்கப்பாட்டு மற்றும் ஆளுகை***

ஸ்ரீலங்கன் த.தொ அமைப்புமுறைகள் ஸ்ரீலஎ மற்றும் ஸ்ரீல கேட்டரிங் ஆகியவற்றுக்கு வழங்கியுள்ள அமைப்புமுறைகள் மற்றும் சேவைகளை உள்ளடக்கிய பின்வரும் தேவைப்பாடுகளுடன் தொடர்ந்தும் இணங்கியொழுகியுள்ளது. தகவல் பாதுகாப்பு முகாமைத்துவம் ISO/ IEC 27001:2013, த.தொ. சேவை முகாமைத்துவம் ISO/IEC 20000:2018 மற்றும் மென்பொருள் அபிவிருத்திக்கான தர முகாமைத்துவ அமைப்புமுறை ISO 9001:2015 ஆகியவையாகும். மேலும், குழுவானது 2022 இன் 9 ஆம் இலக்க இலங்கையின் தனிப்பட்ட தரவுப் பாதுகாப்பு சட்டத்தின் (PDPA) தேவைப்பாடுகளையும் ஐரோப்பிய யூனியன் பொதுவான தரவுப் பாதுகாப்பு ஒழுங்குவிதியுடன் இணைந்த அதன் பரிந்துரைகளையும் சந்திப்பதற்காக தொடர்ச்சியாக செயற்பாடுகளை மேம்படுத்தியது. அத்துடன் விமானநிறுவனமானது அதன் சைபர் பாதுகாப்பு கட்டுப்பாடுகளை பின்வருவனவற்றிற்காக நவீன தொழில்நுட்பத்துடன் இயந்திர பயிலல் மற்றும் செயற்கை நுண்ணறிவுடன் விரிவாக்கியது. இது பாதிக்கக்கூடியமை முகாமைத்துவம், நடத்தை பகுப்பாய்வு, மேம்பட்ட அச்சுறுத்தல் பாதுகாப்பு, தரவுப் பாதுகாப்பு மற்றும் இறுதிநிலை பாதுகாப்பு என்பன பூச்சிய நம்பிக்கை வரம்புறுகை கொள்கைகளில் முன்னிறுத்தம் செய்யப்படுகின்றன.

***மனித வள முகாமைத்துவம்***

***கண்ணோட்டம்***

ஸ்ரீலங்கன் மவ, திரவத்தன்மை சிக்கல்களுடன செயற்பாடுகள் மட்டுப்படுத்தப்பட்ட கட்டத்தில் விமான நிறுவனத்திற்கு துணைபுரிந்தது. மவ பிரிவானது வணிக முன்னுரிமைகள் சந்திக்கப்படுவதனை உறுதிப்படுத்தவதற்காக புதுமையான முன்னெடுப்புகளை அறிமுகப்படுத்தவதில் மற்றும் கொள்கைகள்/செயன்முறைகள் நிறுவுவதில் முக்கிய பங்கு வகித்தது.

விமான நிறுவனம் மற்றும் அதன் பணியாட்களை பாதுகாப்பதற்காக பணியாட்கள் செலவுக் குறைத்தல் முன்னெடுப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டன, இது மட்டுப்படுத்தப்பட்ட செயற்பாட்டுக் காலத்தின்போது பணியாட்கள் சேனையினை சரியான அளவுக்கு வைத்திருத்தல் மற்றும் உச்சப்பயன்பாட்டிற்கு வழிவகுத்தது. இதற்கப்பால், 2020 இல் ஏற்கனவே அமுல்படுத்தப்பட்ட செலவுச் சிக்கன வழிமுறைகள் 2021 இலும் தொடர்ந்ததுடன், பணியாட்கள் அவர்களது பன்முகத் திறன்களை தொழில் சுழற்சியில் பயன்படுத்துவதற்கு ஊக்கமளிக்கப்படுகின்றார்கள். அனைத்து சாத்தியமான விரிவான வழிமுறைகளும் செயற்பாடுகள் மீட்டுயிர்ப்பு பெறும்வரை ஆளணிச் செலவினத்தை கட்டுப்படுத்தும்வரை அமுல்படுத்தப்பட்டது.

***மூலோபாய முன்னிறுத்தம்***

மீளாய்வாண்டின்போது ஸ்ரீலங்கன் மவ மூலோபாய முக்கியத்துவம் மிக்க பிரிவுகளில் முன்னிறுத்தம் செய்யப்பட்டதுடன், இவை பணியாட்கள் சேனையின் எண்ணிக்கையினை உச்சப்பயனடைதல் மற்றும் செயற்பாடுகள் மட்டத்தினை அதிகரிப்பதற்கான வளமிடுதல் மற்றும் மக்கள் தொடர்பான செலவுச் சிக்கன முன்னெடுப்புகள் என்பவற்றை உள்ளடக்கும். பணியாட்களை வேலைக்குச் சேர்த்தல் வணிக மற்றும் செயற்பாடுகளில் முக்கியமான பதவிகளுக்கு மாத்திரம் மேற்கொள்ளப்பட்டதுடன், ஆக்கத்திறனை உச்சப்படுத்துவதற்காக பணிப்பெருக்கம் மற்றும் பணிச் சுழற்சி என்பவற்றின் மூலம் பணியாட்கள் வெவ்வேறு பணிகளில் பயன்படுத்தப்பட்டார்கள். அனைத்து பணியாட்களின் தொழில் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்காக வேதனம் மற்றும் ஏனைய நலன்களில் கணிசமானளவு செலவுச் சிக்கனத்தை பெற்றுக்கொள்ளக் கூடியதாயிருந்தது. எல்லைகளின் திறத்தலுடன் மற்றும் விமானப் பிரயாணங்களின் மீள்தொடக்கம் நோக்கிய வெளித்தோன்றல்களுடன் 2021 இன் இறுதிக் காலாண்டில் விமான நிறுவனத்தின் செயற்பாடுகள் அதிகரித்தன. இதன் விளைவாக முன்னர் அமுல்படுத்தப்பட்ட குறைப்புகளிலிருந்து பணியாட்கள் ஊதியத்திற்கு சில தளர்வுகள் வழங்கப்பட்டன.

உயர்வடையும் வாழ்க்கைச் செலவினை கருத்திற்கொண்டு தொற்றுக் காலம் பூராவும் பல சிரமங்களுக்கு மத்தியில் பணிக்கு வந்த குறைந்த வருமானப் பிரிவினர்களது கடப்பாட்டினை மதித்து அவர்களது சில கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டன. மேலும், சேமிப்புக்களின் ஒரு பகுதியானது அனைத்து தரத்திலான பணியாட்களுக்கு பல நிவாரணங்களை வழங்குவதற்காக பயன்படுத்தப்பட்டது. இது அவசியமான பணியுயர்வு தொடர்பான கொடுப்பனவுகளையும் உள்ளடக்குகின்றது.

மேலாக, ஒரு சம்பள ஆய்வானது வேதன மட்டத்தில் ஏதேனும் முரண்பாடுகளை இனங்காண்பதற்காக முன்னெடுக்கப்பட்டதுடன் இது அவர்களை வினைத்திறனாக்குவதற்கும் மற்றும் சம்பள மட்டங்களை திருத்தியமைப்பதற்கான அவசியத்தினை மதிப்பிடுவதற்குமாகும். உலகளாவிய தொற்றின் உச்சநிலையின்போதும் கூட வணிகத் தொடர்ச்சியினை உறுதிசெய்வதற்காக ஆக்கத்திறனை கட்டியெழுப்புதல் மற்றும் திறனை வளர்த்தல், நிறுவனத்தின் செயற்திறன் நியமங்களை சந்திப்பதற்கு அவசியமான திறன்களை எமது பணியாட்கள் கொண்டிருப்பதனை உறுதிப்படுத்துவதற்காக பயிற்றுவித்தல் மற்றும் அபிவிருத்தி முன்னெடுப்புகளையும் உள்ளடக்குகின்றது.

***தொழில்சார் உறவுகளை நிலைநிறுத்துதல்***

ஸ்ரீலங்கன் மவ இன் ஒரு முக்கிய பகுதியாக பணியாட்களுடனான ஈடுபாட்டினை மேம்படுத்துவதற்காக தொழில்சார் உறவுகளுக்கு வசதியளிக்கப்படுகின்றது. இங்கு தொழில்சார் நல்லிணக்கத்தினை உறுதிப்படுத்துவதற்காக அனைத்து தொழிற் சங்கங்களுடன் தொடர்ச்சியான ஈடுபாடு மேற்கொள்ளப்பட்டது. பணவீக்கத்தில் மோசமான உயர்வினை ஏற்படுத்திய நாட்டின மோசமான பொருளாதாரச் சூழ்நிலையானது நிறுவனத்தினுள்ளான தொழில்சார் உறவுகளில் மேலதிக அழுத்தத்தினை ஏற்படுத்தியுள்ளது. இது அனைத்து தொழிற் சங்கங்களும் நிறுவனம் நோக்கி திரும்பியுள்ளதுடன் அவர்களது உரிய பணியாட்கள் பிரிவுகளிலிருந்து நிவாரணத்தினை எதிர்பார்க்கின்றது. எனவே, தொழிற்சங்கங்கள், தனிப்பட்ட பணியாட்கள் மற்றும் குழுக்களுடனான ஈடுபாடுகளது மட்டத்தினை கணிசமானளவு அதிகரிக்கவேண்டியதாயிற்று.

***ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு***

எமது பணியாட்களின் ஆரோக்கியம், பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வினை

பேணுதல் மற்றும் அவர்களுடனான ஈடுபாடு நிறுவனத்தின் ஒரு முக்கியமான முன்னுரிமையாகும். இது தொடர்பில், ஸ்ரீலங்கன் மவ அதன் மருத்துவ சேவைகள் அலகு மற்றும் பணியாட்கள் நலன் அலகு என்பவற்றூடாக கோவிட் தொற்றின் பின்னரான காலத்தில் ஒரு முக்கிய பங்கினை வகித்தது. ஸ்ரீலங்கன் மவ மருத்துவ சேவைகள் (ஸ்ரீலமவமசே) பணியாட்களின் ஆரோக்கியம், பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வு தொடர்பாக கடுமையாக இருந்ததுடன் உள்ளூர் மற்றும் சர்வதேச ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு ஒழுங்குவிதிகளுக்கமைவாக பணியாட்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் பங்காளிகளை பாதகாப்பதற்காக அனைத்து அவசியமான நடவடிக்கைகளை மேற்கொண்டது.

ஸ்ரீலமவமசே அனைத்து பணியாட்களையும் உள்ளடக்கியதான கோவிட் தடுப்பு தடுப்பூசித் திட்டத்தினை வெற்றிகரமாக நிறைவேற்றியது. ஸ்ரீலமவமசே பணியாட்கள் குழுக்கள் மற்றும் தொடர்புடையோர்களது மிகச்சிறந்த பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்காக, ஒரு நாளாந்த அடிப்படையில் கம்பனி பூராவும் தற்போக்கான ஊசி மற்றும் சுயுவு பரிசீலனைகளை மேற்கொண்டது. மேலும், சுத்திகரிப்பு நடைமுறைகள் விமான நிறுவன வளாகத்தினுள் பொருத்தமானவாறு கடைப்பிடிக்கப்பட்டதுடன் கோவிட்-19 தொற்றுக்குள்ளான பணியாட்களுக்கும் அவர்களது குடும்பத்தாருக்கும் முறையான பின்தொடர்வுகள் மற்றும் பரிசோதனைகளுடன் இடைநிலை கவனிப்பு மத்தியநிலைய வசதிகளை தொடர்ந்து வழங்கியது. கோவிட் தடுப்பு செயலணியானது நிறுவனம் முழுவதும் விழிப்புப்பணி மற்றும் தடுப்புச் செயற்பாட்டினை மதிப்பிடுவதற்காகவும் மற்றும் உள்ளூர் மற்றும் சர்வதேச வழிகாட்டிகளுக்கு அமைவாக நேரந்தாழ்த்தாது வினைத்திறனுடன் தொடர்புடைய சிக்கல்களை விளித்துரைப்பதற்காக பணியாட்களின் நலனுக்காக தொடர்ச்சியாக பணிபுரிந்தது.

ஸ்ரீலங்கன் மவ இன் பணியாள் தொடர்பாடல் மற்றும் ஈடுபாட்டு அலகானது அனைத்து படிநிலைகள் பூராவும் ஆரோக்கியமான தொடர்பாடலுக்கு நிரந்தரமாக கடப்பாடுடையதாயுள்ளது. இதன் மூலம் பணியாளர்களிடையே சமூக மனவுறுதி மற்றும் கூட்டுப்பணிக்கான மனநிலை ஆகியவற்றை தக்கவைக்கக்கூடியதாயிருந்தது. அனைத்து பணியாட்களும் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு ஒழுங்குவிதிகள் மற்றும் தொடர்புடைய முக்கியமான தகவல்கள் குறித்து முறையான இற்றைப்படுத்தலுடன் நன்கு அறிவிக்கப்படுகின்றார்கள்.

### சமூக ஈடுபாடு

#### *கண்ணோட்டம்*

பிராந்தியத்தில் வான் போக்குவரத்து நீடிப்புத்திறனுக்கான ஒரு முன்னோடியாக ஸ்ரீலஎ எப்போதும் ஒரு சுற்றுச்சூழல் உணர்வுடைய விமான நிறுவனமாக இருந்துள்ளது. ஸ்ரீலஎ அதன் செயற்பாடுகளை ஒரு 'கோளத் தோழமையான ஸ்ரீலங்கன்' மனப்போக்கினை மனதில் ஆழப்பதியவைப்பது நோக்கி கடப்பாடுடையதாக உள்ளது. அதேவேளை, நெட்சீரோ 2050 உலக முன்னெடுப்பு நோக்கிய அதன் முயற்சிகளை தூண்டுகின்றது. தேசிய வானூர்தியாக ஸ்ரீலஎ எந்நேரமும் காலநிலை மாற்றத்தினை சமாளிப்பதற்காக புத்தாக்கமான மற்றும் நவீன தீர்வுகள் நோக்கி பார்க்கின்றது.

#### *மதக்க*

ஒரு உள்ளூர் வடிவமைப்பாளரான ஹவுஸ் ஒவ் லொனாலீஸ் இன் ஒத்துழைப்புடன் டிசம்பர் 2021 இல் ஸ்ரீலஎ இனால் 'மதக்க' எனப்படும் ஒரு புத்தாக்கத் தீர்வு ஆரம்பிக்கப்பட்டது. 'மதக்க' நிராகரிக்கப்பட்ட சீருடைகள் மற்றும் இருக்கை உறைகள், திரைச்சீலைகள் மற்றும் ஏனைய பலவகையான நிராகரிக்கப்பட்வற்றை போன்ற விமானத்தின் உட்பாகங்களை உள்ளடக்கிய முற்றிலும் கழிவுப் பொருட்களின் பாகங்களிலிருந்து உருவாக்கப்பட்ட பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட வாழ்க்கைமுறை உற்பத்திகளை காட்சிப்படுத்துகின்றது. பிரயாணப் பைகள், பணப்பைகள், புத்தகங்கள், சாவித் தொங்கிகள், ஆபரணங்கள் மற்றும் பல்வேறு வடிவமைக்கப்பட்ட பொருட்கள் எதிர்வரும் நாட்களில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளன. நிலைபேறுள்ள இலக்குகளைப் பொறுத்தளவில் 'மதக்க' திட்டமானது 17 நிலைபேறுள்ள அபிவிருத்தி இலக்குகளில் வறுமையினை குறைத்தல், பொறுப்பான நுகர்வு மற்றும் உற்பத்தி, காலநிலைச் செயற்பாடு, நிலத்திலான வாழ்க்கை மற்றும் பங்குடைமை உள்ளடங்கலான 5 இலக்குகளை பூர்த்திசெய்துள்ளது.

#### *மீள்பாவனைத் திட்டத்தின் கீழ் சக்கர நாற்காலிகளை நன்கொடையளித்தல்*

ஸ்ரீலஎ இன் சூழல் அலகானது அதன் தலைசிறந்த மீள்பாவனைத் திட்டத்தின் கீழ் சரன பௌத்த அறக்கட்டளை இல்லத்தின் குடியிருப்பாளர்களுக்கு மீள்பயன்படுத்தக்கூடிய சக்கர நாற்காலிகளை தானம்செய்து மற்றுமோர் உப திட்டத்தினை வெற்றிகரமாக நிறைவேற்றியது. கொடையளிக்கப்பட்ட சக்கர நாற்காலிகள் ஸ்ரீலஎ இன் சரிவுத்தள சேவைகள் பிரிவிலிருந்தான தன்னார்வ பணியாட்கள் குழுவினால் முழுவதுமாக தயாரிக்கப்பட்டது. சக்கர நாற்கலிகளை கட்டியெழுப்பவும் சீராக்குவதற்கும் பயன்படுத்தப்பட்ட மூலப் பொருட்களும் விமான நிறுவனத்தின் கழிவுத் தொழுவம், சொத்துக்கள் மற்றும் சரிவுத்தள செயலமர்வுகளிலிருந்து உள்வாரியாகப் பெறப்பட்டவையாகும்.

#### *கரியமிலத் தடத்தினைக் குறைத்தல்*

ஒரு நாடாக, சர்வதேச வான் போக்குவரத்துக்கான கார்பன் ஈடுகட்டல் மற்றும் குறைத்தல் திட்டத்திற்கு (CORSIA) நாம் கடப்பாடுடையதாயுள்ளதுடன், இது 2020 இலிருந்து சர்வதேச விமானப் போக்குவரத்தில் கரியமிலமற்ற வளர்ச்சியினை உறுதிப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட பல்வேறு நடவடிக்கைகளின் ஓரங்கமாக 2016 ICAO பொது சபையுடன் உடன்பாடு காணப்பட்டது. CORSIA உடன் இணக்கப்பாடு காண்பதன் மூலம் ஸ்ரீலஎ CORSIA வில் உமிழ்வு அறிக்கையினை வெற்றிகரமாக இற்றைப்படுத்தக்கூடியதாகவும் கணக்காய்வு செயன்முறையினை பூர்த்தி செய்யக்கூடியதாகவும் இருந்ததுடன் இது அதன் சூழல் கடப்பாட்டினை எடுத்துக்காட்டுகின்றது.

#### *ஸ்ரீலங்கன் கெயார்ஸ்*

விமான நிறுவனத்தின் கூட்டாண்மை சமூகப் பொறுப்பு அங்கமான ஸ்ரீலங்கன் கெயார்ஸ் கோவிட்-19 தொற்றினை கட்டுப்படுத்துவதற்கான முயற்சிகளில் நாட்டின் சுகாதாரத்துறைக்கு பின்வருமாறு தொடர்ந்தும் உதவியளித்தது. இலங்கையின் தேசிய வைத்தியசாலைக்கு வென்டிலேட்டர்ஸ் போன்ற அவசியமான மருத்துவ உதவிகள் மற்றும் கொழும்பு கிழக்கு வைத்தியசாலைக்கு உயர்-பாய்ச்சல் ஒக்சிஜன் இயந்திரங்களை நன்கொடை செய்தது. விமான நிறுவனமானத லேடி ரிஜ்வே வைத்தியசாலையின் குழந்தைகள் இதயவியல் அலகிற்கு உட்செலுத்துதல் குழாய்கள் தொகையொன்றினையும் கொடையளித்தது. இந்த வைத்தியசாலையே இதயவியல் நோய்களுடைய குழந்தைகளுக்காக நாட்டில் காணப்படும் ஒரே ஒரு மூன்றாம் நிலை பரிந்துரைத்தல் மத்தியநிலையமாகும்.

பருவகாலத்தின் மகிழ்ச்சி மற்றும் கிறிஸ்மஸ் மனநிலையினை பரப்புவதற்காக ஸ்ரீலங்கன் கெயார்ஸ் மஹரகமவிலுள்ள CCC இல்லத்தில் வசிப்பவர்களிடையெ அவசியமான பொருட்களைக்கொண்ட 540 பொதிகளை கொடையளித்தது. CCC இல்லமானது சிகிச்சைக்காக வெளியில் தங்குவதற்கு வசதியற்ற மற்றும் அவர்களது கிராமிய இல்லங்களிலிருந்து நெடுதூரம் பயணிப்பதற்கு இயலாத கென்சர் வெளிவாரி நோயாளிகளுக்கும் அவர்களது கவனிப்பாளர்களுக்கும் ஒரு இடங்கடப்பு வதிவிடமாகும்.

ஸ்ரீலங்கன் கெயார்ஸ் சர்வதேச மகளிர் தினம் 2022 இனை சீதுவையிலுள்ள கண்பார்வையற்ற பெண்களுக்கான இலங்கை நலன்புரி சங்கத்தின் பயன்பெறுநர்களது குழந்தைகளிடையே காலணி வவுச்சர்களை தானம் செய்யும் நிகழ்வுடன் கொண்டாடியது.

அனைத்து நன்கொடைகளுக்கும் ஸ்ரீலஎ இன் பணியாட்களினால் மாத்திரமே நிதியளிக்கப்பட்டதுடன், அனைவராலும் சந்தித்த பொருளாதார சவால்கள் மற்றும் விமான நிறுவனத்தினால் முகங்கொடுத்த கொந்தளிப்பான நேரங்களுக்கு மத்தியில் இவர்கள் ஒரு தேசிய முயற்சிக்கு உதவுவதற்காக கரம் கோர்த்தார்கள்.



## நிதி அறிக்கைகள்


பணிப்பாளர்கள் சபையின் ஆண்டறிக்கை 44

சபை கணக்காய்வுக் குழுவின் அறிக்கை 48

பணிப்பாளர்களது பொறுப்புக்களின் கூற்று 49

சுயாதீன கணக்காய்வாளரின் அறிக்கை 50

நிதி நிலைமைக் கூற்று 54

இலாபம் அல்லது நட்டக் கூற்று 55

விரிவான வருமானக் கூற்று 56

உரித்துவத்திலான மாற்றங்களின் கூற்று 57

காசுப் பாய்ச்சல் கூற்று 58

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் 59



English
华语
日本語

# பணிப்பாளர்கள் சபையின் ஆண்டறிக்கை

வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் பணிப்பாளர்கள் சபையானது 31 மார்ச் 2022 இல் நிறைவடைந்த ஆண்டிற்கான ஆண்டறிக்கையினை முன்னிலைப்படுத்துவதில் மகிழ்ச்சியடைகின்றது.

## பிரதான நடவடிக்கைகள் மற்றும் வணிக மீளாய்வு

கம்பனியின் பிரதான வணிக நடவடிக்கைகள் பயணிகளை ஏற்றிச்செல்வதற்காக சர்வதேச, அட்டவணைப்படுத்தப்பட்ட /அட்டவணைப்படுத்தாத விமானச் சேவைகளை செயற்படுத்துதல் மற்றும் சரக்கு மற்றும் அஞ்சல் என்பவற்றை எடுத்துச்செல்வதற்கு இலங்கையின் குறிப்பிடப்பட்ட ஊர்தியாகும். பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையம் (ப.ச.வி.) மற்றும் மத்தல ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம் (ம.ரா.க.வி.) என்பவற்றில் வான் முனைச் சேவைகளையும், விமானத்தினுள் தீர்வையற்ற பொருட்களை விற்பனை செய்தல், உள்வருகை மற்றும் வெளிச்செல்லல் விடுமுறைத் தொகுப்புகளை சந்தைப்படுத்தல் என்பன கம்பனியின் ஏனைய பிரதான நடவடிக்கைகளாகும். மூன்றாத் தரப்பு விமானங்களுக்கு பராமரிப்புச் சேவைகளை வழங்குதல், விமான செயற்பாட்டுச் சேவைகளை வழங்குதல் மற்றும் வான்வழி தொடர்பான பயிற்சிகளை நடாத்துதல் என்பன கம்பனியின் துணை நடவடிக்கைகளாகும். நிதியாண்டில் கம்பனியின் நடவடிக்கைகளின் தன்மையில் எவ்விதமான குறிப்பிடத்தக்க மாற்றமும் காணப்படவில்லை. குழுமம் என்பது கம்பனியினையும் முழுவதும் உரித்துடைமையினைக் கொண்ட அதன் துணை நிறுவனமான வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் கேட்டரிங்கினையும் உள்ளடக்குகின்றது. கேட்டரிங்கின் பிரதான நடவடிக்கை என்னவெனில், ப.ச.வி. மற்றும் ம.ரா.ச.வி. ஊடாக செயற்படும் விமான நிறுவனங்களுக்கு விமானத்தினுள்ளான உணவக வசதிகளை வழங்குவதாகும். ஏனைய துணை நடவடிக்கைகள் பொது மற்றும் கடந்துசெல்லும் பயணிகளுக்கான உணவகங்களை செயற்படுத்துதல் மற்றும் சலவை செய்யும் சேவைகளை வழங்குதல் மற்றும் கடந்துசெல்லும் பயணிகளுக்கான ஹோட்டல் ஒன்றினை முகாமைப்படுத்தல் என்பனவாகும்.

## நிதிக் கூற்றுக்கள் மற்றும் கணக்காய்வாளரது அறிக்கை

பிரதம நிதியியல் உத்தியோகத்தர் மற்றும் இரண்டு பணிப்பாளர்களினால் உரியவாறு கையொப்பமிடப்பட்ட 31 மார்ச் 2022 இல் நிறைவடைந்த ஆண்டிற்கான நிறைவான நிதிக் கூற்றுக்கள் மற்றும் அதனிலான கணக்காய்வாளர்களது அறிக்கை என்பவை இந்த அறிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ளன

## கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதில் கடைப்பிடிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் பக்கங்கள் 59 முதல் 71 வரை வழங்கப்பட்டுள்ளன.

## குழுமத்தின் புரள்வு

குழுமத்தின் புரள்வானது ரூபா 134,301 மில்லியன் ஆக (2020/21 : ரூபா 50,929 மில்லியன்) காணப்பட்டது. குழுமத்தின் புரள்விலான விரிவான பகுப்பாய்வானது நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்பு 20 இல் வழங்கப்பட்டுள்ளது. கம்பனி மற்றும் அதன் முழு உரித்துவத்தையுடைய துணை நிறுவனமான வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் கேட்டரிங் இடையேயான கொடுக்கல் வாங்கல்கள் நியாயமான சந்தை விலைகளில் நடாத்தப்பட்டன.

## விளைவுகள்

குழுமத்தின் வருடத்திற்கான வரிக்குப் பிந்திய தேறிய நட்டமானது ரூபா 163,583 மில்லியன் ஆகும் (2020/21: ரூபா 49,705 மில்லியன்). குழுமத்தின் வரிச்செலவினமாக ரூபா 426 மில்லியன் காணப்பட்டது (2020/21: ரூபா 57 மில்லியன்). வருடத்திற்கான இலாபம் அல்லது நட்டக் கூற்றானது பக்கம் 55 இல் வழங்கப்பட்டுள்ளது.

## குழுமத்தின் முதலீடுகள்

இவ்வருடத்தில் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களிலான குழுமத்தின் மூலதனச் செலவினமாக ரூபா 474 மில்லியன் காணப்பட்டது (2020/21: ரூபா 362 மில்லியன்).

## ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

அறிக்கையிடும் திகதியிலான குழுமத்தின் ஆதனம், பொறி மற்றும் உபகரணம் என்பவற்றின் தேறிய புத்தகப் பெறுமதி ரூபா 6,251 மில்லியன் ஆகும் (2020/21: ரூபா 7,229 மில்லியன்).

ஆதனம், பொறி மற்றும் உபகரணம் மற்றும் அவற்றின் அசைவுகள் நிதிக் கூற்றுக்களின் குறிப்பு 4 இல் வழங்கப்பட்டுள்ளன.

## கூறப்பட்ட மூலதனம்

கம்பனியின் கூறப்பட்ட மூலதனம் ரூபா 96,361 மில்லியன் ஆகும். 16 ஜூலை 2021 இல் இடம்பெற்ற விசேட பொதுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் இலங்கை அரசாங்கத்திற்கு 447,432,300 சாதாரண பங்குகளை பங்கொன்று ரூபா 100 வீதம் ஒதுக்குவதன் மூலம் கம்பனியின் கூறப்பட்ட மூலதனம் ரூபா 51,617,435,500 இலிருந்து ரூபா 96,360,665,500 ஆக அதிகரிக்கப்பட்டது.

## ஒதுக்கங்கள்

31 மார்ச் 2022 இல் உள்ளவாறான குழுமத்தின் மொத்த ஒதுக்கங்கள் எதிர்மறையான ரூபா 522,785 மில்லியன் ஆகும் (2020/21: எதிர்மறை ரூபா 360,843 மில்லியன்). இவை திரண்ட நட்டங்களான ரூபா 529,213 மில்லியனை (2020/21: ரூபா 366,285 மில்லியன்) உள்ளடக்குகின்றது.

மூலதன ஒதுக்கங்களாக ரூபா 6,428 மில்லியன் (2020/21: ரூபா 5,441 மில்லியன்) காணப்பட்டன. இந்த ஒதுக்கங்களிலான அசைவுகள் நிதிக் கூற்றுக்களில் உரித்துவத்திலான மாற்றங்கள் கூற்றில் காண்பிக்கப்பட்டுள்ளன.

## கூட்டாண்மை நன்கொடைகள்

இவ்வாண்டில் குழுமமானது எவ்விதமான நன்கொடையினையும் மேற்கொள்ளவில்லை (2020/21: பூச்சியம்).

## விரிவிதிப்பு

2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம் மற்றும் 2011 இன் 22 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி (திருத்தம்) சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் கம்பனிக்கு அதன் அனைத்து வணிக நடவடிக்கைகளும் அனைத்து வரிகளிலும் இருந்து விலக்களிக்கப்பட்டுள்ளன.

எவ்வாறாயினும், 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் சட்டவாக்கத்துடன் 1 ஏப்ரல் 2018 முதல் கம்பனியானது அதன் அனைத்து வணிக நடவடிக்கைகளுக்கும் வருமான வரிக்கு பொறுப்பாளியாகும். தற்போது இரட்டை வரிவிதிப்பு உடன்படிக்கைகள் காணப்படாத நாடுகளில் அதன் வெளிநாட்டு செயற்பாடுகளில் கம்பனியானது வரிக்கு பொறுப்புடையதாயுள்ளது. துணை நிறுனமான, வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் கேட்டரிங் இலங்கை முதலீட்டு சபையுடனான உடன்படிக்கையின் பிரகாரம் 30 மே 2021 வரை ஓர் வரி விடுமுறையினை அனுபவிக்கின்றது. தற்போது, விமானச் சமையலறை, இடங்கடப்பு உணவகம், இடங்கடப்பு ஹோட்டல், விமான நிறுவனத்தின் சலவையகம் மற்றும் EK ஓய்விடம்கடந்து என்பவற்றின் செயற்பாடுகளிலிருந்து உழைக்கும் தேறிய இலாபத்தில் 30 மே 2021 வரை வருமான வரியிலிருந்து முற்றாக விலக்களிக்கப்பட்டுள்ளது.

அதன்பின்னர், தேறிய இலாபமானது மேலும் 8 வருடங்களுக்கு 30 மே 2029 வரைக்கும் சலுகை வீதமான 15□ இல் வரிக்கு பொறுப்புடையதாயிருக்கும். பொது உணவகம், வெனிலா பொட் உணவுக் கடைகள், செமொன்டு உணவகம் மற்றும் உள்ளுர் சலவையகம் ஆகியவற்றிலிருந்து உழைக்கும் தேறிய இலாபம் மற்றும் ஏனைய வருமானம் என்பன நடைமுறையிலுள்ள 24□ வரி வீதத்தில் வருமான வரிக்கு பொறுப்பாகும்.

### பங்குத் தகவல்கள்

31 மார்ச் 2022 இல் உள்ளவாறான பங்குத் தகவல்கள் பின்வருமாறு

| பங்கு உரித்தும் | பங்குகளின் எண்ணிக்கை | % உரித்துவம |
|---|---|---|
| இலங்கை அரசாங்கம் | 959,006,469 | 99.52% |
| ஊழியர் சேமலாப நிதியம் | 1,863,676 | 0.19% |
| ஏனையோர் | 2,736,510 | 0.28% |

### சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகளுடனான இணக்கப்பாடு

கம்பனி அனைத்து நேரங்களிலும் பொருத்தமான சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் இணங்கியொழுகுவதனை உறுதிசெய்கின்றது. இணக்கப்பாட்டிற்கு பொறுப்பான முகாமைத்துவ உத்தியோகத்தர்கள் கணக்காய்வு குழுவினது காலாண்டு கூட்டங்களில் இணக்கப்பாட்டு அறிக்கையினை சமர்ப்பிக்கின்றார்கள்.

### தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்கள்

தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்கள் நிதிக் கூற்றுக்களின் குறிப்பு 30 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

### எதிர்பாரா பொறுப்புக்கள் மற்றும் மூலதனக் கடப்பாடுகள்

31 மார்ச் 2022 இல் உள்ளவாறான எதிர்பாரா பொறுப்புக்கள் மற்றும் அதே திகதியிலான மூலதனச் செலவினங்களில் மேற்கொள்ளப்பட்ட கடப்பாடுகள் நிதிக் கூற்றுக்களின் குறிப்பு 25 இல் வழங்கப்பட்டுள்ளன.

### அறிக்கையிடப்படும் திகதியின் பின்னர் இடம்பெற்ற நிகழ்வுகள்

நிதிக் கூற்றுக்களின் குறிப்பு 27 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளவை தவிர செம்மையாக்கல் அல்லது வெளிப்படுத்துவதற்கு தேவையான எவ்விதமான சூழலும் அறிக்கையிடப்படும் திகதியிலிருந்து எழவில்லை.

### மனித வளம்/பணிக்கமர்த்தல் கொள்கைகள்

கம்பனியானது தொடர்ந்தும் மனித மூலதன அபிவிருத்தியில் முதலீடு செய்வதுடன் புதிய வணிக முன்னுரிமைகளுடன் சீரமையப்பட்ட பயனறுதிமிக்க சேனையினை அமுல்படுத்துகின்றது. இது கம்பனியின் எதிர்கால வெற்றிக்கு தேவையான திறன் மற்றும் அறிவினை அதன் பணியாட்கள் விருத்தி செய்கின்றார்கள் என்பதனை உறுதிப்படுத்தவும் செய்கின்றது. குழுமத்தின் பணிக்கமர்த்தல் கொள்கைகள் தனிநபருக்கு மதிப்பளிப்பதுடன் பால், இனம் அல்லது மதத்தினை பொருட்படுத்தாத சமமான தொழில் வாய்ப்புக்களை வழங்குகின்றது. தொழில்ரீதியான சுகாதார மற்றும் பாதுகாப்பு நியமங்கள் கணிசமானளவு அவதானத்தினை பெறுகின்றது. வருடத்தின் இறுதியில் கம்பனியினால் பணிக்கமர்த்தப்பட்ட நபர்களின் எண்ணிக்கை 5,833 ஆகும் (2020/21: 5,965) என்பதுடன் அதன் துணை நிறுவனத்தில் இது 819 ஆக (2020/21 - 853) காணப்பட்டது.

### நியதிச்சட்டக் கொடுப்பனவுகள்

பணிப்பாளர்கள், அவர்களது சிறந்த அறிவு மற்றும் நம்பிக்கைக்கமைய, பணியாட்கள் மற்றும் அரசாங்கம் தொடர்பான அனைத்து நியதிச்சட்ட கொடுப்பனவுகளும் இத்திகதி வரைக்கும் செலுத்தப்பட்டுள்ளன என திருப்தியடைகின்றார்கள்.

### சூழல் பாதுகாப்பு

குழுமத்தின் வணிக நடவடிக்கைகள் சூழலில் நேரடியாக மற்றும் மறைமுகமான விளைவுகளை ஏற்படுத்தலாம். சூழலிலான மோசமான விளைவுகளை ஆகக்குறைந்த மட்டத்தில் வைத்திருப்பதுடன் பொருத்தமான அதிகாரசபைகள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் ஒத்துழைப்பு மற்றும் இணக்கப்பாட்டினை ஊக்குவித்தல் என்பன குழுமத்தின் கொள்கையாகும்.

### நிறுவனச் செயல்நிலை தொடர்ச்சி

பணிப்பாளர்களது பொறுப்புக்கள் கூற்றில் குறிப்பிட்டுள்ளவாறு, கம்பனியின் 2021/22 வருடத்திற்கான நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதில், நிறுவனம் மீள்கட்டமைக்கப்படும் வரைக்கும், அவசியமாயின் இலங்கை அரசாங்கமானது நிதியியல் உறுதுணையினை வழங்கும் என்ற திறைசேரி/நிதி, பொருளாதார நிலைப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகளது அமைச்சின் செயலாளரினால் வழங்கப்பட்ட உறுதிமொழியின் அடிப்படையில் பணிப்பாளர்கள் நிறுவனச் செயல்நிலைத் தொடர்ச்சி அடிப்படையினை கடைப்பிடித்துள்ளார்கள்.

### பணிப்பாளர் சபை

கம்பனியின் அமைப்பு அகவிதிகளின் 79 ஆம் உறுப்புரைக்கமைய பணிப்பாளர்கள் இலங்கை அரசாங்கத்தினால் நியமிக்கப்படுகின்றார்கள். தற்போதைய பணிப்பாளர்களது தோற்றுருவத்தின் சுருக்கமானது ஆண்டறிக்கையின் பக்கங்கள் 14 இலிருந்து 15 வரை வழங்கப்பட்டுள்ளன.

நிதியாண்டின்போது பன்னிரண்டு சபைக் கூட்டங்கள் கூட்டப்பட்டதுடன் இவற்றில் பணிப்பாளர்களது சமூகமளிப்பு பின்வருமாறு;

| நிதியாண்டு 2021/22 இல் பணியாற்றிய பணிப்பாளரின் பெயர் | பணிப்பாளர் பதவிக்காலத்தில் சமூகமளித்த சபைக் கூட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|
| திரு. அசோகா பத்திரகே (தலைவர்) | 12/12 |
| திரு. மலிக் ஜே. பர்னாந்து | 12/12 |
| திரு. மனோஹர ரத்னவிபூஷன டி சில்வா ஜ.ச. (18 ஆகஸ்ட் 2022 இல் பதவி விலகினார்) | 11/12 |
| திரு. சமந்த ரத்வத்த ஜ.ச. (18 ஆகஸ்ட் 2022 இல் பதவி விலகினார்) | 12/12 |
| திரு. சஞ்சய மொஹொட்டால (29 ஏப்ரல் 2022 இல் பதவி விலகினார்) | 11/12 |
| கலாநிதி. ஸ்ரீதிர் சரிபுட்ட ஹன்சா விஜயசூரிய | 12/12 |
| திரு. ஜோசப் ஜயந்த் மைக்கல் பெரேரா | 12/12 |

# பணிப்பாளர்கள் சபையின் ஆண்டறிக்கை (தொடர்ச்சி.)

*திரு. வீரசிங்க ஆச்சிகே சரத் குமார - (திறைசேரி பிரதிநிதி 18 ஆகஸ்ட் 2022 இல் நியமிக்கப்பட்டு 3 பெப்ரவரி 2023 இல் பதவி விலகினார்)
*திரு. ஆனந்த விஜேதிலக்க அத்துகோரல - (3 பெப்ரவரி 2023 முதல் நியமிக்கப்பட்டார்)
*திரு. ஏ.கே.டி.டி.டி. அரந்தார - (16 மார்ச் 2023 முதல் நியமிக்கப்பட்டார்)
*திரு. ஏ.எம்.ஏ.ஏ. லக்மல் ரத்நாயக்க - (10 ஏப்ரல் 2023 முதல் நியமிக்கப்பட்டார்)

### கணக்காய்வுக் குழுவின் அங்கத்தவர்கள்

நிதியாண்டின்போது திரு. சஞ்சய மொஹொட்டால அவர்கள் கணக்காய்வுக் குழுவின் சார்புகால தலைவராவார். கணக்காய்வுக் குழுவானது பின்வரும் அங்கத்தவர்களை உள்ளடக்குகின்றது.

| குழு அங்கத்தவர்கள் நிதியாண்டு 2021/22 | சமூகமளித்த கூட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|
| திரு. சஞ்சய மொஹாட்டால (29 ஏப்ரல் 2022 முதல் பதவி விலகினார்) | 4/4 |
| திரு. மலிக் ஜே. பர்னாந்து | 1/4 |
| திரு. மனோஹர ரத்னவிபூஷன டி சில்வா (18 ஆகஸ்ட் 2022 முதல் பதவி விலகினார்) | 4/4 |
| கலாநிதி. ஸ்ரீதிர் சரிபுட்ட ஹன்ச விஜேசூரிய | 4/4 |
| திரு. ஜோசப் ஜயந்த் மைக்கல் பெரேரா 23 ஏப்ரல் 2021 முதல் குழுவிற்கு நியமிக்கப்பட்டார் (இடைக்காலத் தலைவர்) | 4/4 |

*திரு. சமந்த ரத்வத்த ஜ.ச. (23 ஏப்ரல் 2021 முதல் பதவி விலகினார்)
*திரு. வீரசிங்க ஆச்சிகே சரத் குமார.'.திறைசேரி பிரதிநிதி - தலைவர் (26 ஆகஸ்ட் 2022 முதல் நியமிக்கப்பட்டார்.'. 3 பெப்ரவரி 2023 முதல் பதவி விலகினார்)
*திரு. ஏ.கே.டி.டி.டி. அரந்தார - (31 மார்ச் 2023 முதல் நியமிக்கப்பட்டார்)

கணக்காய்வுக் குழுவின் அறிக்கையானது இந்த ஆண்டறிக்கையின் பக்கம் 48 இல் வழங்கப்பட்டுள்ளது.

### மனித வளங்கள் மற்றும் வேதனக் குழு

மனித வளங்கள் மற்றும் வேதனக் குழுவின் பிரதான குறிக்கோளாகக் காணப்படுவது என்னவெனில், ஓர் வேதனக் கொள்கையின் அபிவிருத்தி மற்றும் ஓர் வேதனக் கட்டமைப்பினது நிறுவுதல் என்பவற்றுக்கு ஓர் முறையான மற்றும் வெளிப்படைத்தன்மையான செயல்முறையினை நிறுவுவதற்கு தலைமை தாங்குவதாகும்.

ஓர் வேதனக் கொள்கையானது சந்தை மற்றும் துறைசார் காரணிகள் மற்றும் குழுமத்திற்கான தனிப்பட்ட செயற்திறன் என்பவற்றின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளது. மனித வளங்கள் மற்றும் வேதனக் குழுவானது தேவையானபோது கூடுகின்றது.

மனித வளங்கள் மற்றும் வேதனக் குழுவானது சபையின் பின்வரும் அங்கத்தவர்களை உள்ளடக்குகின்றது;

| குழுவின் அங்கத்தவர்கள் நிதியாண்டு 2021/22 | சமூகமளித்த கூட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|
| கலாநிதி. ஸ்ரீதிர் சரிபுட்ட ஹன்சா விஜயசூரிய -தலைவர் | 6/6 |
| திரு. மலிக் ஜே. பர்னாந்து | 5/6 |
| திரு. மனோஹர ரத்னவிபூஷன டி சில்வா ஜ.ச. (18 ஆகஸ்ட் 2022 இல் பதவி விலகினார்) | 4/6 |
| திரு. சமந்த ரத்வத்த ஜ.ச. (18 ஆகஸ்ட் 2022 இல் பதவி விலகினார்) | 6/6 |

*திரு. ஜயந்த் பெரேரா (31 மார்ச் 2023 முதல் நியமிக்கப்பட்டார்)

### சபை நிறுவன இடர் குழு (சநிஇகு)

சபை நிறுவன இடர் குழுவானது, நிறுவனத்தின் வணிகச் செயற்பாடுகளில் தாக்கத்தினை ஏற்படுத்தக்கூடிய இடர்களை இனங்கண்டு மதிப்பிடுதல், நிதி மற்றும் நிதியல்லாத அத்தகைய இடர்களின் தாக்கத்தினை அளவிடுதல் என்பவற்றை மேற்கொள்ளல் வேண்டும். சநிஇகு இன் ஆழ்ந்தாராய்வுகள் நிறுவனத்தின் செயற்பாடுகளை பாதிக்கும் இடர்களின் தாக்கத்தினை பணிப்பாளர்கள் சபையானது விளித்துரைப்பதற்கும் ஏதேனும் பாதகமான தாக்கத்தினை தணிப்பதற்கு பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கும் வசதியளித்தல் வேண்டும்.

| குழுவின் அங்கத்தவர்கள் |
|---|
| திரு. ஜோசப் ஜயந்த் மைக்கல் பெரேரா - தலைவர் |
| திரு. மலிக் ஜே. பர்னாந்து |
| கலாநிதி. ஸ்ரீதிர் சரிபுட்ட ஹன்சா விஜயசூரிய |
| திரு. சஞ்சய மொஹொட்டால (29 ஏப்ரல் 2022 இல் பதவி விலகினார்) |
| திரு. மனோஹர ரத்னவிபூஷன டி சில்வா ஜ.ச. (18 ஆகஸ்ட் 2022 இல் பதவி விலகினார்) |
| திரு. ஆனந்த அத்துகோரல (பார்வையாளர்) (31 மார்ச் 2023 முதல் நியமிக்கப்பட்டார்) |
| திரு. ஏ.கே.டி.டி.டி. அரந்தார - (31 மார்ச் 2023 முதல் நியமிக்கப்பட்டார்) |

தற்போது கணக்காய்வுக் குழுவானது சநிஇகு இன் செயற்பாடுகளை மேற்பார்வை செய்கின்றது.

### பணிப்பாளர்கள் - வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் கேட்டரிங்

வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் கேட்டரிங்கின் தற்போதைய பணிப்பாளர்கள் சபை:-

| |
|---|
| திரு. அசோகா பத்திரகே (தலைவர்) |
| திரு. மலிக் ஜே. பர்னாந்து |
| திரு. மனோஹர ரத்னவிபூஷன டி சில்வா ஜ.ச. (11 ஜூலை 2022 இல் பதவி விலகினார்) |
| திரு. சமந்த ரத்வத்த ஜ.ச. (11 ஜூலை 2022 இல் பதவி விலகினார்) |
| திரு. சஞ்சய மொஹொட்டால (29 ஏப்ரல் 2022 இல் பதவி விலகினார்) |
| திரு. ஜோசப் ஜயந்த மைக்கல் பெரேரா |
| திரு. வீரசிங்க ஆச்சிகே சரத் குமார (திறைசேரி பிரதிநிதி 30 செப்டம்பர் 2022 முதல் நியமிக்கப்பட்டார்)/3 பெப்ரவரி 2023 முதல் பதவி விலகினார் |
| திரு. ஆனந்த விஜேதிலக்க அத்துகோரல (13 மார்ச் 2023 முதல் நியமிக்கப்பட்டார்) |
| திரு. ஏ.கே.டி.டி.டி. அரந்தார (திறைசேரிப் பிரதிநிதி 31 மார்ச் 2023 முதல் நியமிக்கப்பட்டார்) |

### பணிப்பாளர்களது வேதனம்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 168 (1) (எவ்) இன் தேவைப்பாடுகளுக்கமைய இவ்வறிக்கையின் பக்கம் 100 இலுள்ள குறிப்பு 30 இன் கீழ் கம்பனியின் நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர்களுக்கு செலுத்தப்பட்ட மொத்த வேதனமானது வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

### பணிப்பாளர்களது பங்குரித்துவங்கள்

இலங்கை அரசாங்கத்தினால் பெயரிடப்பட்ட பணிப்பாளர்கள் என்ற காரணத்தினால் திரு. ஏ.கே. பத்திரகே/ தலைவர் அவர்கள் கம்பனியின் 03 சாதாரண பங்குகளை வைத்துள்ளார்.

### நலன்கள் இடாப்பு

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க கம்பனி நலன்கள் இடாப்பினை பராமரிக்கின்றது. கம்பனியின் அனைத்து பணிப்பாளர்களும் ஏனைய கம்பனிகளிலான தங்களது நலன்களை சபைக்கு வெளிப்படுத்தியுள்ளதுடன் அந்த நலன்கள் 2007 ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவுகள் 192 (1) மற்றும் 192 (2) க்கு அமைவாக பணிப்பாளர்களது நலன்கள் இடாப்பில் பதியப்பட்டுள்ளன.

### ஒப்பந்தங்களிலான பணிப்பாளர்களது நலன்கள்

நிதிக் கூற்றுக்களின் குறிப்பு 29 இல் வெளிப்படுத்தப்பட்டவை தவிர கம்பனியின் வணிகம் தொடர்பான வேறு ஏதேனும் ஒப்பந்தங்களில் அல்லது முன்மொழியப்பட்ட ஒப்பந்தங்களில் பணிப்பாளர்கள் எவ்வித நேரடி அல்லது மறைமுக நலனைக் கொண்டிருக்கவில்லை.

## வருடாந்த பொதுக் கூட்டம்

கம்பனியின் நாற்பத்து நான்காவது ஆண்டுப் பொதுக் கூட்டம் இலங்கை, கொழும்பு 7, பவுத்தாலோக்க மாவத்தை, ‘மிஹிலக்க மெதுர’ பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (BMICH) வெள்ளிக்கிழமை 2 ஜூன் 2023 இல் பிற்பகல் 3.00 மணிக்கு இடம்பெறும்.

ஆண்டுப் பொதுக் கூட்டத்திற்கான அறிவித்தல் ஆண்டறிக்கையின் பக்கம் 117 இல் காணப்படுகின்றது.

## கணக்காய்வாளர்கள்

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் உறுப்பு 154 (1) க்கு ஏற்றாற்போல் கணக்காய்வாளர் அதிபதி அவர்கள் கம்பனியின் கணக்காய்வாளர்களாக இத்தால் நியமிக்கப்படுகின்றார். கணக்காய்வுக் கட்டணம் பற்றிய விபரங்கள் நிதிக் கூற்றுக்களின் குறிப்பு 23 இல் விளக்கப்பட்டுள்ளது. கணக்காய்வாளர்களுக்கு கம்பனியுடனோ அல்லது அதன் துணை நிறுவனத்துடனோ (கணக்காய்வாளர் தவிர்த்த) எவ்விதமான தொடர்புகளும் இல்லை.

பணிப்பாளர்கள் சபையின் சார்பில் கையொப்பமிடப்பட்டது,

**அசோகா பத்திரகே**
*தலைவர்*

**ஜயந்த் பெரேரா**
*பணிப்பாளர்*

**திருமதி. டெல்ரீன் திருக்குமார்**
*கம்பனியின் செயலாளர்/கூட்டாண்மை செயலக சேவைகளின் தலைமை*

18 ஏப்ரல் 2023
கட்டுநாயக்கா

# ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் சபை கணக்காய்வுக் குழுவினது அறிக்கை

### பங்களிப்பு மற்றும் பொறுப்புக்கள்

ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் சபையின் கணக்காய்வுக் குழுவினது நோக்கம் மற்றும் பொறுப்புக்கள் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட சபை கணக்காய்வுக் குழுச் சாசனத்தினால் ஆளுமை செய்யப்படுகின்றது. சபை கணக்காய்வுக் குழுவின் நோக்கம் வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் பணிப்பாளர் சபையானது பின்வருவனவற்றில் அதன் மேற்பார்வை பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு உதவுவதாகும். உள்ளகக் கட்டுப்பாடுகள் முறைமை, நிதியியல் அறிக்கையிடல் செயல்முறை, இடர் முகாமைத்துவ செயல்முறை, ஆளுகை செயல்முறை, உள்ளக மற்றும் வெளிவாரி கணக்காய்வு செயற்பாடுகள் மற்றும் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்கியொழுகுவதற்கான கம்பனியின் செயல்முறையினை கண்காணித்தல் என்பனவாகும்.

### குழுவின் தொகுப்பு

31 மார்ச் 2022 இல் நிறைவடைந்த வருடத்தில் சபையின் கணக்காய்வுக் குழுவில் சேவையாற்றிய சபையின் அங்கத்தவர்கள் பின்வருமாறு: திரு. சஞ்சய மொஹாட்டால (தலைவர்), திரு. மலிக் ஜே. பர்னாந்து (அங்கத்தவர்), திரு. மனோஹர டி சில்வா (அங்கத்தவர்), திரு. சமந்தா ரத்வத்த (அங்கத்தவர், 23 ஏப்ரல் 2021 இல் பதவிவிலகினார்) மற்றும் திரு. ஜயந்த் பெரேரா (அங்கத்தவர், 23 ஏப்ரல் 2021 இல் நியமிக்கப்பட்டார்).

வருட இறுதியின் பின்னர், திரு. சஞ்சய மொஹொட்டால (தலைவர்) மற்றும் திரு. மனோஹர டி சில்வா (அங்கத்தவர்) ஆகியோர் முறையே 29 ஏப்ரல் 2022 மற்றும் 18 ஆகஸ்ட் 2022 இல் கணக்காய்வுக் குழுவிலிருந்து விலகினார்கள்.

திரு. சரத் குமார அவர்கள் 26 ஆகஸ்ட் 2022 முதல் கணக்காய்வுக் குழுவின் தலைவராவார்.

செல்வி. ஏ.டி. டில்ருக்ஷி அவர்கள் தேசிய கணக்காய்வு காரியாலத்தின் பிரதிநிதியாக கணக்காய்வுக் குழுவின் கூட்டங்களில் சமூகமளித்தார்.

### கூட்டங்கள்

31 மார்ச் 2022 இல நிறைவடைந்த ஆண்டில் சபையின் கணக்காய்வுக் குழுவானது நான்கு (4) கூட்டங்களை நடாத்தியது. விசேட விடயங்களில் சபை கணக்காய்வுக் குழுவிற்கு விளக்கமளிப்பதற்காக ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் முகாமைத்துவத்தின் அங்கத்தவர்கள் வரவேற்பின் பேரில் கூட்டங்களில் சமூகமளித்தார்கள்.

### குழும உறுதி மற்றும் ஆலோசனைச் சேவைகள் பிரிவு

ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் குழும உறுதி மற்றும் ஆலோசனைச் சேவைகள் (கு.உ.ஆ.சே.) பிரிவானது உள்ளக கணக்காய்வுகளை நடாத்தி சபை கணக்காய்வுக் குழுவிற்கு செயற்பாட்டு ரீதியாக அறிக்கையிடுகின்றது.

### நிதியாண்டில் ச.க.கு. இன் முக்கியமான நடவடிக்கைகள்

- வருட இறுதி கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மீளாய்வு செய்யப்பட்டு சபையின் அங்கீகாரத்திற்கு பரிந்துரைக்கப்பட்டது.
- வெளிவாரி கணக்காய்வாளரது முகாமைத்துவக் கடிதம் மற்றும் அதில் எடுத்துக்காட்டப்பட்டுள்ள சிக்கல்களுக்கான முகாமைத்துவத்தின் பதில்கள் மீளாய்வு செய்யப்பட்டன.
- உள்ளகக் கணக்காய்வு செயற்பாடானது அதன் சுயாதீனத்தன்மை மற்றும் அதன் அறிக்கையிடல் கடப்பாட்டின் அதிகாரத்தினை உறுதிப்படுத்துவதற்காக மீளாய்வு செய்யப்பட்டது.
- உள்ளகக் கணக்காய்வுத் திட்டமானது மீளாய்வு செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது.
- தகவல் அமைப்புமுறை/தகவல் தொழில்நுட்பக் கட்டுப்பாடுகள் உள்ளடங்கலான உள்ளகக் கட்டுப்பாடுகளது அமைப்புமுறையிலான உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் மீளாய்வு செய்யப்பட்டு உரிய நேரத்தில் பிரிவுகளின் தலைமையினால் பின்தொடர்வு நடவடிக்கை எடுக்கப்படுவது கண்காணிக்கப்பட்டது.
- முக்கிய வணிக இடர்களை தணிப்பதற்காக பொறுப்பேற்கப்பட்ட செயல்முறைகள் மற்றும் ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் கூட்டாண்மை இடர் இடாப்பு என்பன மீளாய்வு செய்யப்பட்டன.
- திருத்தியமைக்கப்பட்ட கூட்டாண்மைத் தகவல்கள் பாதுகாப்பு கையேடு மற்றும் வருவாய் உருவாக்கும் ஒப்பந்தங்களது கையேடு என்பன மீளாய்வு செய்யப்பட்டு சபையின் அங்கீகாரத்திற்காகப் பரிந்துரைக்கப்பட்டது.
- அனைத்து பொருத்தமான சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் இணங்கியொழுகப்பட்டுள்ளன என்பதில் நியாயமான உறுதியினை கம்பனியின் காலாண்டு இணக்கப்பாட்டு வரம்புறுகை வழங்குகின்றதா என்று நிர்ணயிப்பதற்காக அது மீளாய்வு செய்யப்பட்டது.
- காலாண்டு அடிப்படையில் சமர்ப்பிக்கப்படும் தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல் விபரங்கள் மீளாய்வு செய்யப்பட்டன.
- அதியுச்ச கடன்பட்டோர்கள் காலாண்டு அடிப்படையில் மீளாய்வு செய்யப்பட்டார்கள்.

**திரு. சரத் குமார**
*தலைவர்*

சபை கணக்காய்வுக் குழு

22 நவம்பர் 2022

# பணிப்பாளர்களது பொறுப்புக்களிலான கூற்று

கம்பனி மற்றும் குழுமத்தின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பான பணிப்பாளர்களின் பொறுப்புக்கள் கணக்காய்வாளர்களது பொறுப்புக்களிலிருந்து வேறுபடுவதுடன் இவை பக்கம் 51 இல் தோன்றும் அவர்களது அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டமானது பணிப்பாளர்கள் ஒவ்வொரு நிதியாண்டிற்கும் நிதிக்கூற்றுக்களை தயாரிக்க வேண்டுமென்பதுடன் இவை உண்மையான மற்றும் நியாயமான பார்வையினை வழங்கும் கம்பனியின் மற்றும் குழுமத்தின் நிதியாண்டின் இறுதியிலான விடயங்களின் நிலைமை மற்றும் நிதியாண்டிற்கான கம்பனியின் மற்றும் குழுமத்தின் இலாப நட்டக் கணக்கினையும் உள்ளடக்குதல் வேண்டும். நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும்போது பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் தெரிவுசெய்யப்பட்டு தொடர்ச்சியாக பிரயோகிக்கப்பட்டிருத்தல், நியாயமான மற்றும் விவேகமான அபிப்பிராயங்கள் மற்றும் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படல், மற்றும் பொருத்தமான கணக்கீட்டு நியமங்கள் பின்பற்றியிருத்தல் வேண்டும்.

கம்பனி மற்றும் அதன் துணை நிறுவனம் கம்பனி மற்றும் குழுமத்தின் நிதியியல் நிலைமையின் நியாயமான துல்லியத்தன்மையினை வெளிப்படுத்துவதற்கு போதுமான கணக்கீட்டு ஆவணங்கள் வைத்திருக்கப்படுவதனை உறுதிப்படுத்துவதற்கு பணிப்பாளர்கள் பொறுப்பாளியாவார்கள். நிதிக் கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன எனவும் 2007 ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தினால் வேண்டப்படும் தகவல்களை வழங்குகின்றது எனவும் உறுதிப்படுத்தல் வேண்டும். இவர்கள் குழுமத்தின் சொத்துக்களை பாதுகாப்பதற்கு நியாயமான வழிமுறைகளை மேற்கொள்வதற்கும், மற்றும் அதேபோன்று மோசடி மற்றும் ஏனைய முறைகேடுகளை தடுக்கும் மற்றும் கண்டுபிடிக்கும் நோக்குடன் பொருத்தமான உள்ளக கட்டுப்பாட்டு அமைப்புமுறைகளை நிறுவுவதற்கு முறையான கவனத்தையும் கொண்டிருத்தல் வேண்டும்.

கம்பனியின் செற்பாட்டு மற்றும் நிதியியல் நிலைமையினை பலப்படுத்தும் நோக்கில் மற்றும் கம்பனியிளை மறுசீரமைக்கும் இலங்கை அரசாங்கத்தின் முயற்சிகனை கருத்திற்கொண்டு மற்றும் வங்கி வசதிகளை பெற்றுக்கொள்வதற்காக ஆறுதல் கடிதங்களை வழங்குவதன் மூலம் கம்பனிக்கு தொடர்ச்சியாக இலங்கை அரசாங்கம் உறுதுணையளிப்பதனை கவனத்திலெடுத்ததன் பின்னர் நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும்போது பணிப்பாளர்கள் 'நிறுவனத் தொடர்ச்சி நிலையினை' தொடர்ந்தும் கடைப்பிடித்தார்கள். மேலும், இலங்கை அரசாங்கமானது 2022 ஒக்டோபர் 25 திகதியிடப்பட்ட அமைச்சரவை அங்கீகாரத்தின் மூலம் (மற்றும் திறைசேரி செயலாளரினால் 2022 நவம்பர் 08 இல் வழங்கப்பட்ட கடிதம்) நிதிக் கூற்றுக்களின் குறிப்பு 3 இன் கீழ் விவரிக்கப்பட்டுள்ளவாறு முன்மொழியப்பட்டுள்ள மறுசீரமைப்பு செயல்முறையானது நிறைவுசெய்யும் வரை கம்பனி அதன் செயற்பாட்டினை 'நிறுவனத் தொடர்ச்சி நிலையில்' தொடர்வதற்கு தேவையான நிதியியல் உறுதுணையினை வழங்கும் என்று உறுதியளித்துள்ளது.

நிதிக் கூற்றுக்களில் அபிப்பிராயத்தினை உருவாக்குவதினை இயலுமையாக்குவதற்கு உகந்தது என கருதும் ஏதேனும் பரிசீலனைகளை மேற்கொள்வதற்கு கணக்காய்வாளர்களுக்கு ஒவ்வொரு வாய்ப்பும் வழங்கப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்துவதற்காக பணிப்பாளர்கள் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்கள்.

பணிப்பாளர்கள் அவர்களது சிறந்த அறிவிற்கேற்ப, அறிக்கையிடப்படும் திகதியில் கம்பனி மற்றும் அதன் துணை நிறுவனத்தின் அனைத்து வரிகள், கட்டணங்கள் மற்றும் நிதியியல் கடப்பாடுகள் என்பன செலுத்தப்பட்டுள்ளன அல்லது நிதிக் கூற்றுக்களில் போதுமானளவு ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளன என்பதனை உறுதிசெய்கின்றார்கள்.

சபையின் கட்டளையின் பிரகாரம்

**திருமதி. டெல்ரீன் திருக்குமார்**
*கூட்டாண்மை செயலகச் சேவைகளின் குழுத் தலைமை/கம்பனி காரியதரிசி*

18 ஏப்ரல் 2023

# சுயாதீன கணக்காய்வாளரின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය / எனது இல. / My No. } AAV/B/SLAL/01/21/01 ඔබේ අංකය / உமது இல. / Your No. } දිනය / திகதி / Date } 18 April 2023

**தலைவர்**

**ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் லிமிட்டட்**

**2018 இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12 இன் பிரகாரம் 31 மார்ச் 2022 இல் நிறைவடைந்த வருடத்திற்கான ஸ்ரீலங்கன் எயார்லைன் லிமிட்டட் மற்றும் அதன் துணைநிறுவனத்தின் ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட மற்றும் முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகளிலான கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் அறிக்கை.**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் லிமிட்டட் (கம்பனி) மற்றும் கம்பனி மற்றும் அதன் துணை நிறுவனத்தினது (குழுமம் ) 2022 மார்ச் 31 இல் உள்ளபடியான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாபம் அல்லது நட்டக் கூற்று மற்றும் ஏனைய விரிவான வருமானக் கூற்று மற்றும் உரித்துவத்திலான மாற்றங்களிலான கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டு கொள்கைகளின் பொழிப்புக்கள் மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்களையும் உள்ளடக்கியதான 2022 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது அறிக்கையானது உரிய காலத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும். இக்கணக்காய்வினை மேற்கொள்வதற்காக பொது நடைமுறையிலுள்ள ஒரு பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தினால் எனக்கு துணையளிக்கப்பட்டது.

கம்பனியின் மற்றும் குழுமத்தின் 2022 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இதனுடன் இணைந்த நிதிக் கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான கருத்தினை தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.எனது அபிப்பிராயத்தின் பிரகாரம்,

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

நான் எனது கணக்காய்வினை இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொண்டேன் (SLAuSs). இந்த நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையின் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரது பொறுப்புக்கள் பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

### 1.3 விடயத்தின் அழுத்தம்

**(a) நிறுவனத் தொடர்ச்சி தொடர்பான பொருண்மையான நிச்சயமற்றதன்மை**

கோவிட்-19 தொற்றின் தொடர்ச்சியான தாக்கங்கள் மற்றும் நிறுவனத் தொடர்ச்சி தொடர்பான நிகழ்வுகள் / நிலைமைகள் குறித்து நிதிக் கூற்றுக்களின் முறையே குறிப்பு 2.1 மற்றும் குறிப்பு 3 இற்கு நான் கவனத்தை ஈர்க்கின்றேன்.

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்பு 2.1 ஆனது குழுமத்தின் / கம்பனியின் செயற்திறன் மற்றும் காசுப் பாய்ச்சலில் கோவிட்-19 தொற்றின் தொடர்ச்சியான தாக்கத்தினை விபரிக்கின்றது.

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்பு 3 ஆனது 2022 மார்ச் 31 இல் நிறைவடைந்த ஆண்டில் குழுமம் ஒரு தேறிய நட்டமாக ரூபா 163,583.08 மில்லியனையும் ஒரு திரண்ட நட்டமாக ரூபா 529,212.70 மில்லியனையும் கொண்டிருந்ததுடன் அத்திகதியில் குழுமத்தின் நடைமுறை பொறுப்புக்கள் நடைமுறை சொத்துக்களை ரூபா 292,420.17 மில்லியனால் விஞ்சியிருந்ததுடன் மொத்த பொறுப்புக்கள் அதன் மொத்த சொத்துக்களை ரூபா 426,423.85 மில்லியனால் விஞ்சியிருந்தது. மேலும், 2022 மார்ச் 31 இல் நிறைவடைந்த ஆண்டில் கம்பனி ஒரு தேறிய நட்டமாக ரூபா 166,369.68 மில்லியனையும் ஒரு திரண்ட நட்டமாக ரூபா 537,505.15 மில்லியனையும் கொண்டிருந்ததுடன் அத்திகதியில் கம்பனியின் நடைமுறை பொறுப்புக்கள் நடைமுறை சொத்துக்களை ரூபா 302,702.51 மில்லியனால் விஞ்சியிருந்ததுடன் அதன் மொத்த பொறுப்புக்கள் மொத்த சொத்துக்களை ரூபா 437,036.93 மில்லியனால் விஞ்சியிருந்தது.

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

குறிப்பு 3 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ள தணிக்கும் காரணிகளுடன் 2022 ஒக்டோபர் 25 இல் அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் 2022 நவம்பர் 08 இல் நிறுவனம் மீள்கட்டமைக்கப்படும்வரை கம்பனி அதன் செயற்பாடுகளை 'நிறுவனத் தொடர்ச்சியாக' தொடர்வதற்கு கம்பனிக்கு இலங்கை அரசாங்கத்தின் உறுதுணையினை உறுதிப்படுத்தி திறைசேரியின் செயலாளரினால் வழங்கப்பட்ட கடிதத்தினை கருத்திலெடுத்து இந்த நிதிக் கூற்றுக்கள் நிறுவனத் தொடர்ச்சி அனுமானத்தினைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்டுள்ளன. 2022 நவம்பர் 28 திகதியிடப்பட்ட அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் இலங்கை அரசாங்கமானது விமானத்தொகுதி மாற்றீட்டு செயற்பாட்டினை பத்து விமானங்களை விஞ்சாதவாறு மாற்றீட்டு விமானத்தினூடாக, நடைமுறையிலுள்ள விமானங்களின் குத்தகைக்கால நீடிப்பினூடாக அல்லது இரண்டும் சேர்ந்தவாறு மேற்கொள்வதனை அங்கீகரித்தது.
எவ்வாறாயினும், இந்த அறிக்கையின்போது கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்களின் அடிப்படையில், குறிப்பு 3 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய விடயங்களுடன் அத்தகைய நிகழ்வுகள் அல்லது நிலைமைகளின் இருப்பானது ஒரு கம்பனித் தொடர்ச்சி அனுமானத்தில் கம்பனி மற்றும் குழுமம் தொடர்வதில் குறிப்பிடத்தக்க சந்தேகத்தினை ஏற்படுத்தக்கூடிய ஒரு பொருண்மையான நிச்சயமற்றதன்மை காணப்படுவதனை குறிப்பிடுகின்றது.

**(b) விமான முன்விநியோக கொடுப்பனவுகள்**

2022 மார்ச் 31 இல் ரூபா 5,649.09 மில்லியன் தொகையான (USD 19.21 மில்லியன் ) விமான முன்விநியோகக் கொடுப்பனவுகள் தொடர்பாக நிதிக் கூற்றுக்களின் குறிப்பு 11 இற்கு நான் கவனத்தை ஈர்க்கின்றேன்.

இந்த நேரத்தில் முன்விநியோகக் கொடுப்பனவுகளை மீட்டெடுப்பதிலான விளைவு கம்பனிக்கு சாதகமற்றதாக இருக்கலாம் என நம்புவதற்கு கம்பனியின் முகாமைத்துவத்திற்கு எவ்விதமான தகவலும் கிடைக்கப்பெறவில்லை. எவ்வாறாயினும், ஒரு தீர்ப்பனவு காணப்படாதவிடத்து மீட்டெடுப்பானது நடந்துகொண்டிருக்கும் பிணக்கு தீர்வுப் பொறிமுறையின் விளைவில் தங்கியுள்ளது மற்றும் இந்த அறிக்கையின் திகதி வரைக்கும் குறித்த முன்விநியோக கொடுப்பனவுகளின் மீட்டெடுப்பிலான கம்பனியின் அனுமானத்துடன் முரண்படும் ஏதேனும் மேலதிகக் தகவல்கள் குறித்து எங்களுக்கு அறியத்தரவில்லை.

இந்த விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயமானது திருத்தியமைக்கப்படவில்லை.

**(c) அறிக்கையிடப்படும் திகதிக்குப் பின்னர் இடம்பெற்ற நிகழ்வுகள்**

சர்வதேச முறிகளது தவறுதல் தொடர்பாக நிதிக் கூற்றக்களுக்களது குறிப்பு 27.3 இற்கு நான் கவனத்தை ஈர்க்கின்றேன்.

இந்த விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயமானது மாற்றியமைக்கப்படவில்லை.

### *1.4 குழுமத்தின் 2021/22 ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏனைய தகவல்கள்*

ஏனைய தகவல்கள் குழுமத்தின் ஆண்டறிக்கையிலுள்ள தகவல்களை உள்ளடக்குகின்றது ஆனால் அவை நிதிக்கூற்றுக்கள் மற்றும் அதனிலான எனது கணக்காய்வாளரின் அறிக்கையினை உள்ளடக்கவில்லை ஏனெனில் இந்த கணக்காய்வாளரின் அறிக்கை திகதிக்கு முன்னர் நான் அவற்றை பெற்றுக்கொண்டதனாலாகும். ஏனைய தகவல்களுக்கு முகாமைத்துவம் பொறுப்பாளியாயுள்ளது.

நிதிக் கூற்றுக்களிலான எனது அபிப்பிராயம் ஏனைய தகவல்களை உள்ளடக்காததுடன் அதில் நான் எந்த விதமான உறுதிமொழி தீர்மானத்தையும் வெளிப்படுத்தவில்லை.

நிதிக் கூற்றுக்களின் எனது கணக்காய்வு தொடர்பில் எனது பொறுப்பானது, மேலே இனங்காணப்பட்ட ஏனைய தகவல்களை வாசித்தல் மற்றும் அவ்வாறு செய்வதில் ஏனைய தகவல்கள் நிதிக் கூற்றுக்களுடன் பொருண்மையாக வேறுபட்டுள்ளதா அல்லது கணக்காய்வில் நான் பெற்றுக்கொண்ட அறிவு அல்லது இல்லாவிடின் பொருண்மையாக பிறழ்கூற்றாகத் தோன்றுகின்றதா என்பதை கருத்திலெடுப்பதாகும்.

நான் செயலாற்றிய பணியின் அடிப்படையில், இந்த கணக்காய்வு அறிக்கைத் திகதிக்கு முன்னர் நான் பெற்றுக்கொண்ட ஏனைய தகவல்களில், இந்த ஏனைய தகவல்களில் ஒரு பொருண்மையான பிறழ்கூற்று காணப்படுகின்றது என்று நான் தீர்மானத்திற்கு வந்தால் அந்த உண்மையினை நான் அறிக்கையிடவேண்டிய தேவை காணப்படுகின்றது. இது தொடர்பில் அறிக்கையிடுவதற்கு என்னிடம் எதுவும் இல்லை.

### *1.5 நிதிக் கூற்றுக்களின் ஆளுமைப்பு பொறுப்பாயுள்ளோரின் மற்றும் முகாமைத்துவத்தின் பொறுப்புக்கள்*

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான கருத்தினை தருகின்ற நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளதுடன்,

# சுயாதீன கணக்காய்வாளரின் அறிக்கை (தொடர்ச்சி.)

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றுக்கும் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதில் முகாமைத்துவமானது, ஒரு நிறுவனத் தொடர்ச்சியாக செயலாற்றுவதற்கான கம்பனியின் மற்றும் குழுமத்தின் ஆற்றலை மதிப்பிடுவதற்கும், நிறுவனத் தொடர்ச்சி தொடர்பான பொருத்தமான விடயங்களை வெளிப்படுத்துவதற்கும், முகாமைத்துவம் கம்பனியினை அல்லது குழுமத்தினை கலைப்பதற்கு அல்லது அதன் செயற்பாடுகளை நிறுத்துவதற்கான நோக்கத்தை கொண்டிருந்தாலன்றி அல்லது ஓர் யதார்த்தமான மாற்று வழியின்றி அவ்வாறு செயற்படவேண்டியிருந்தாலன்றி, நிறுவனத் தொடர்ச்சி அடிப்படையிலான கணக்கீட்டினை பயன்படுத்துவதற்கும் பொறுப்பாயுள்ளது.

ஆளுமையினை பொறுப்பேற்றோர் கம்பனியின் மற்றும் குழுமத்தின் நிதியியல் அறிக்கையிடல் செயல்முறையினை மேற்பார்வை செய்வதற்கு பொறுப்பாளியாவர்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16 (1) பிரிவின் பிரகாரம், கம்பனி மற்றும் குழுமத்தின் வருடாந்த மற்றும் காலாகால நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதனை இயலுமையாக்குவதற்காக, அதன் அனைத்து வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றி ஒழுங்கான புத்தகங்கள் மற்றும் பதிவுகளை பராமரிக்குமாறு கம்பனி மற்றும் குழுமம் வேண்டப்படுகின்றது.

### 1.6 நிதிக் கூற்றுக்களது கணக்காய்விற்கான கணக்காய்வாளரது பொறுப்புக்கள்

நிதிக் கூற்றுக்கள் முழுமையாக ஏதேனும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏதேனும் பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதா என்பது பற்றி சாதாரண உறுதிமொழியினை பெற்றுக்கொள்வதும், எனது அபிப்பிராயத்தினை உள்ளடக்கிய ஒரு கணக்காய்வு அறிக்கையினை வழங்குவதும் எனது நோக்கமாகும். சாதாரண உறுதிமொழி என்பது ஒரு உயர் மட்டத்திலான உறுதிமொழி என்பதுடன், ஆனால் இது இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்ட ஒரு கணக்காய்வானது எந்நேரமும் ஒரு பொருண்மையான பிறழ் கூற்றினை, அவ்வாறு ஒன்று காணப்படுமாயின், இனங்காணும் என்ற உறுதிமொழியல்ல. பிறழ் கூற்றுக்கள் மோசடி அல்லது தவறிலிருந்து எழலாம் என்பதுடன், அவை தனியாக அல்லது கூட்டாக, இந்த நிதிக்கூற்றுக்களின் அடிப்படையில் பயனாளிகளின் பொருளாதார தீர்மானங்களில் செல்வாக்கு செலுத்தக்கூடும் என்று சாதாரணமாக எதிர்பார்ப்பு காணப்படுமாயின் அவை பொருண்மையானதாக கருதப்படும்.

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க கணக்காய்வின் ஒரு பகுதியாக, நான் கணக்காய்வு முழுவதும் தொழில்முறை தீர்ப்பினை உபயோகித்தும் தொழில்முறை ஐயவாதத்தினையும் பராமரித்தேன், அத்துடன் நான்:

- நிதிக் கூற்றுக்கள் மோசடி அல்லது தவறின் காரணமாக ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களது இடர்நேர்கைகளை இனங்கண்டு மதிப்பிடுதல் மற்றும் அந்த இடர்நேர்கைகளுக்கு மறுமொழியளிக்கும் கணக்காய்வு செயற்பாடுகளை வடிவமைத்து செயற்படுத்தல் மற்றும் எனது கணக்காய்வு அபிப்பிராயத்தினை வழங்குதற்கான அடிப்படைக்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல் என்பதாகும். ஒரு தவறின் விளைவாக எழக்கூடிய இடர்நேர்கையிலும் பார்க்க மோசடியின் விளைவாக ஒரு பொருண்மையான பிறழ் கூற்றினை இனங்காணாத இடர்நேர்கையானது அதிகமாகும். ஏனெனில், மோசடியானது கூட்டுச்சதி, போலி ஆவணம், வேண்டுமென்றே விடுபடல், பிறழ் கூற்றுக்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டினை மேலாணை செய்தல் போன்றவற்றை உள்ளடக்கும்.
- கம்பனியின் மற்றும் குழுமத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டின் பயனுறுதித்தன்மையில் ஒரு அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்கன்றி, சூழ்நிலைகளுக்கு பொருத்தமான கணக்காய்வு செயல்முறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்விற்கு பொருத்தமான உள்ளகக் கட்டுப்பாடுகளில் ஒரு புரிந்துணர்வினை பெற்றுக்கொள்ளல்.
- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளின் பொருந்துதன்மை மற்றும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயமானதன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொண்ட இது தொடர்பான வெளிப்படுத்தல்களை மதிப்பீடு செய்தல்.
- முகாமைத்துவத்தின் நிறுவன தொடர்நிலை அடிப்படையிலான கணக்கீட்டுப் பயன்பாட்டின் பொருந்துதன்மை மற்றும் பெற்றுக்கொண்ட கணக்காய்வு சான்றுகளின் அடிப்படையில் நிறுவனத் தொடர்நிலையினை தொடர்வதற்கான குழுமத்தின் ஆற்றலில் கருதத்தக்க சந்தேகத்தை ஏற்படுத்தக்கூடிய நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்பான பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என்பவற்றின் அடிப்படையில் நிறைவுசெய்தல். ஒரு பொருண்மையான நிச்சயமற்றதன்மை காணப்படுகின்றது என நான் நிறைவுசெய்தால், நிதிக் கூற்றுக்களில் அது தொடர்பான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் நான் கவனத்தை ஈர்க்க வேண்டியுள்ளது அல்லது அத்தகைய வெளிப்படுத்தல்கள் போதுமானதின்றிக் காணப்பட்டால் எனது அபிப்பிராயத்தினை திருத்தவேண்டியுள்ளது. எனது கணக்காய்வாளரது அறிக்கை திகதியிடப்பட்ட நாள் வரைக்குமான

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

பெற்றுக்கொண்ட கணக்காய்வு சான்றுகளின் அடிப்படையில் எனது நிறைவுறுதல்கள் காணப்படும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகள் குழுமம் நிறுவனத் தொடர்நிலையினை தொடர்வதனை நிறுத்த காரணமாயிருக்கலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடங்களாக, நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த முன்னிலைப்படுத்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்தினை மதிப்பீடு செய்வதுடன், நிதிக் கூற்றுக்கள், அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளது நியாயமான முன்னிலைப்படுத்தலை அடையும் விதத்தில் பிரதிநிதித்துவம் செய்கின்றதா என்பதையும் மதிப்பீடு செய்கின்றது.
- ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் ஒரு அபிப்பிராயத்தினை தெரிவிப்பதற்காக குழுமத்திலுள்ள நிறுவனங்களின் அல்லது வணிக நடவடிக்கைகளின் நிதியியல் தகவல்கள் தொடர்பாக போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். குழுமத்தினது கணக்காய்வின் வழிநடத்தல், மேற்பார்வை மற்றும் செயலாற்றலுக்கு நான் பொறுப்பாளியாய் உள்ளேன். எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு நான் மாத்திரமே பொறுப்பாயுள்ளேன்.

ஆளுமை தொடர்பான பொறுப்பாளிகளுடன் ஏனைய விடயங்களுக்கிடையில், எனது கணக்காய்வின்போது உள்ளகக் கட்டுப்பாடுகளில் நான் கண்டுபிடித்த கருதத்தக்க குறைகள் உள்ளடங்களாக கருதத்தக்க கணக்காய்வு கண்டுபிடிப்புகள் குறித்து தொடர்புகொண்டேன்.

## 2. ஏனைய சட்ட மற்றும் முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

### *2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 2007 இல் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் என்பன பின்வரும் தேவைப்பாடுகளுக்காக குறிப்பிட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றது.*

2.1.1 கணக்காய்விற்கு தேவையான அனைத்து தகவல்கள் மற்றும் விளக்கங்களை நான் பெற்றுள்ளேன் மற்றும் எனது பரிசீலனையிலிருந்து, 2018 இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 12 (ஏ) மற்றும் 2007 இன் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 163 (2) இன் தேவைக்கேற்ப குழுமத்தினது முறையான கணக்கீட்டு பதிவுகளை வைத்துள்ளதான தோற்றத்தை வழங்குகின்றது.

2.1.2 குழுமத்தின் நிதிக் கூற்றுக்கள் 2007 இன் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 151 இன் தேவைப்பாட்டுடன் இணக்கப்பாடு கண்டுள்ளது.

2.1.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) (டி) (iii) பிரிவின் தேவைக்கேற்ப முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றது.

2.1.4 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) (டி) (iv) பிரிவின் தேவைக்கேற்ப முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளை உள்ளடக்குகின்றன.

*2.2* பொருண்மையான விடயங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ள செயலாற்றப்பட்ட செயன்முறைகள் மற்றும் பெற்றுக்கொண்ட சான்றுகளின் அடிப்படையில் எனது கவனத்திற்கு பின்வருவன எதுவும் வரவில்லை;

2.2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (டி) பிரிவின் தேவைக்கேற்ப வழக்கமான வணிக நிகழ்வுகளுக்கு அப்பால் குழுமத்தினது ஆளுமை அங்கத்தின் யாரேனும் அங்கத்தவர் குழுமத்தினால் செய்து கொள்ளப்பட்ட எவ்வித ஒப்பந்தத்திலும் ஏதேனும் நேரடியான அல்லது மறைமுகமான நலன்களை கொண்டிருந்தார் என குறிப்பிடுவதற்கு

2.2.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (எவ்) பிரிவின் தேவைக்கேற்ப ஏதேனும் பிரயோகிக்கத்தக்க எழுத்துமூலச் சட்டம், குழுமத்தினது ஆளுமை அங்கத்தினால் வழங்கப்பட்ட பொதுவான மற்றும் விசேட பணிப்புரைகளுக்கு குழுமம் இணக்கப்பாடு காணவில்லை என குறிப்பிடுவதற்கு;

2.2.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஜி) பிரிவின் தேவைக்கேற்ப குழுமமானது அதன் அதிகாரங்கள், செயலாற்றுகைகள் மற்றும் கடமைகளை நிறைவேற்றவில்லை என குறிப்பிடுவதற்கு;

2.2.4 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (எச்) பிரிவின் தேவைக்கேற்ப கொடுக்கப்பட்ட கால எல்லைக்குள் மற்றும் பிரயோகிக்கத்தக்க சட்டங்களுக்கு ஏற்றாற்போல் குழுமத்தின் வளங்கள் சிக்கனமாக, திறன்பட மற்றும் பயனுறுதிமிக்க விதத்தில் பெறப்படவில்லை மற்றும் பயன்டுத்தப்படவில்லை என குறிப்பிடுவதற்கு.

**டபிள்யு பி. சி. விக்கிரமரத்ன**
*கணக்காய்வாளர் தலைமை அதிபதி*

# நிதி நிலைமைக் கூற்று

| 31 மார்ச் இல் உள்ளவாறானது | குறிப்பு | குழுமம் 2022 ரூபா மில்லி. | குழுமம் 2021 ரூபா மில்லி. | கம்பனி 2022 ரூபா மில்லி. | கம்பனி 2021 ரூபா மில்லி. |
|---|---|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | | | |
| **நடைமுறையல்லா சொத்துக்கள்** | | | | | |
| ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் | 4 | 6,250.74 | 7,228.51 | 4,206.28 | 4,903.20 |
| பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்கள் | 5 | 82,808.36 | 92,455.88 | 82,539.30 | 92,171.07 |
| விமானப் பராமரிப்பு ஒதுக்கம் | 6 | 30,391.33 | 21,246.37 | 30,391.33 | 21,246.37 |
| விமான மற்றும் உதிர் என்ஜின் வைப்புகள் | 7 | 5,439.55 | 4,038.79 | 5,439.55 | 4,038.79 |
| அருவச் சொத்துக்கள் | 8 | 78.78 | 92.14 | 66.63 | 69.55 |
| முதலீடுகள் | 9.1 | 0.40 | 0.40 | 42.44 | 42.44 |
| | | 124,969.16 | 125,062.09 | 122,685.53 | 122,471.42 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | | | |
| இருப்புக்கள் | 10. | 4,268.37 | 4,655.76 | 4,015.64 | 4,483.03 |
| வர்த்தக மற்றும் ஏனைய வருமதிகள் | 11. | 27,807.64 | 11,111.45 | 27,052.31 | 10,810.64 |
| விமானப் பராமரிப்பு ஒதுக்கம் விமானப் பராமரிப்பு ஒதுக்கம் | 6. | 16,966.56 | 13,635.10 | 16,966.56 | 13,635.10 |
| விமான மற்றும் உதிர் என்ஜின் வைப்புகள் | 7. | 937.40 | 602.76 | 937.40 | 602.76 |
| முதலீடுகள் | 9.2 | 1,937.38 | 1,367.82 | 1,681.78 | 1,114.66 |
| காசு மற்றும் வங்கி மீதிகள் | 12. | 5,376.82 | 1,447.82 | 4,804.95 | 1,263.81 |
| | | 57,294.17 | 32,820.71 | 55,458.64 | 31,910.00 |
| **மொத்த சொத்துக்கள்** | | 182,263.33 | 157,882.80 | 178,144.17 | 154,381.42 |
| **உரித்துவம் மற்றும் பொறுப்புக்கள்** | | | | | |
| உரித்துவம் | | | | | |
| கூறப்பட்ட மூலதனம் | 13. | 96,360.67 | 79,352.43 | 96,360.67 | 79,352.43 |
| ஒதுக்கங்கள் | 14. | 6,428.21 | 5,441.27 | 4,107.56 | 3,115.82 |
| திரண்ட நட்டங்கள் | | (529,212.71) | (366,284.57) | (537,505.15) | (371,733.52) |
| | | (426,423.83) | (281,490.87) | (437,036.92) | (289,265.27) |
| **நடைமுறையல்லா சொத்துக்கள்** | | | | | |
| வட்டி அறவிடப்படும் பொறுப்புக்கள் | 15. | 215,585.08 | 163,417.25 | 214,699.18 | 162,644.32 |
| ஏனைய பொறுப்புக்கள் | 16. | 43,387.76 | 28,499.76 | 42,320.77 | 27,783.38 |
| | | 258,972.84 | 191,917.01 | 257,019.95 | 190,427.70 |
| **நடைமுறை பொறுப்புக்கள்** | | | | | |
| ஊர்திகளுக்கான முன்விற்பனை | 17. | 28,704.31 | 11,196.76 | 28,704.31 | 11,196.76 |
| ஏனைய பொறுப்புக்கள் | 16. | 23,653.30 | 17,349.86 | 23,653.30 | 17,349.86 |
| வர்த்தக மற்றும் ஏனைய கொடுமதிகள் | 18. | 132,862.79 | 83,011.81 | 141,522.63 | 88,837.45 |
| செலுத்தவேண்டிய வருமானவரி | | 216.54 | 175.45 | 175.45 | 175.45 |
| வட்டி அறவிடப்படும் பொறுப்புக்கள் | 15. | 164,277.38 | 135,722.78 | 164,105.45 | 135,659.47 |
| | | 349,714.32 | 247,456.66 | 358,161.14 | 253,218.99 |
| **மொத்த பொறுப்புக்கள்** | | 608,687.16 | 439,373.67 | 615,181.09 | 443,646.69 |
| **மொத்த உரித்துவம் மற்றும் பொறுப்புக்கள்** | | 182,263.33 | 157,882.80 | 178,144.17 | 154,381.42 |

இந்த நிதிக் கூற்றுக்கள் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகும் வண்ணம் தயாரிக்கப்பட்டுள்ளன.

**யசந்த திசாநாயக்க**
*பிரதம நிதியியல் அதிகாரி*

பணிப்பாளர் சபையானது இந்த நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பிற்கும் சமர்ப்பிப்பிற்கும் கொறுப்பாளியாயுள்ளது.

சபைக்காகவும் சபையின் சார்பாகவும் கையொப்பமிடப்பட்டுள்ளது:

**அசோகா பத்திரகே**
*பணிப்பாளர்*

**ஜயந்த் பெரேரா**
*பணிப்பாளர்*

பக்கங்கள் 59 முதல் 107 வரை காணப்படும் கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் நிதிக்கூற்றுக்களின் ஒருங்கிணைந்த பாகமாயுள்ளன.

**31 மார்ச் 2023**
**கொழும்பு**

# இலாபம் அல்லது நட்டக் கூற்று

| 31 மார்ச் இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது | குறிப்பு | குழுமம் 2022 ரூபா மில்லி. | குழுமம் 2021 ரூபா மில்லி. | கம்பனி 2022 ரூபா மில்லி. | கம்பனி 2021 ரூபா மில்லி. |
|---|---|---|---|---|---|
| **வருவாய்** | 20. | 134,301.36 | 50,928.92 | 132,936.23 | 50,693.85 |
| **செலவினம்** | | | | | |
| விமான எரிபொருள் செலவு | | (42,759.12) | (10,569.38) | (42,759.12) | (10,569.38) |
| பணியாளர் செலவு | | (17,415.80) | (17,111.81) | (15,969.51) | (16,206.23) |
| விமானநிலையம், வழி மற்றும் பயணிகள் செலவு | | (17,752.91) | (7,308.38) | (19,272.39) | (7,440.31) |
| விமானப் பராமரிப்பு மற்றும் சீராக்கல் செலவு | | (23,088.11) | (13,695.34) | (23,088.11) | (13,695.34) |
| பெறுமானத்தேய்வு/பெறுமானக்குறைப்பு | | (14,655.59) | (16,745.32) | (14,188.27) | (16,295.62) |
| உதிரி என்ஜின்கள் மற்றும் குறுங்கால விமானக் குத்தகை வாடகைகள் | | (43.66) | (2,265.02) | (43.66) | (2,265.02) |
| விற்பனை, சந்தைப்படுத்தல் மற்றும் விளம்பரச் செலவுகள் | | (7,249.61) | (2,064.99) | (7,180.41) | (2,033.93) |
| விமான பணிக்குழுச் செலவினங்கள் | | (3,230.96) | (1,680.18) | (3,230.96) | (1,680.18) |
| ஏனைய செயற்பாட்டுச் செலவினங்கள் | | (7,026.34) | (4,670.86) | (6,665.43) | (4,325.38) |
| | | 1,079.26 | (25,182.36) | 538.37 | (23,817.54) |
| ஏனைய வருமானம் மற்றும் ஆதாயங்கள் | 21. | 613.40 | 17,062.15 | 698.96 | 20,628.65 |
| **பரிமாற்றல் நட்டத்திற்கு முன்னரான செயற்பாட்டு இலாபம் / (நட்டம்)** | | 1,692.66 | (8,120.21) | 1,237.33 | (3,188.89) |
| வட்டி அறிவிடப்படும் பொறுப்புக்களது பரிமாற்றல் நீங்கலான பரிமாற்றல் நட்டம் | | (34,729.60) | (6,339.22) | (37,812.00) | (6,894.60) |
| பரிமாற்றல் நட்டத்திற்கு பின்னரான செயற்பாட்டு நட்டம் | | (33,036.94) | (14,459.43) | (36,574.67) | (10,083.49) |
| **தேறிய நிதிச் செலவினம்** | | | | | |
| நிதியியல் வருமானம் | 23.1 | 664.17 | 561.51 | 639.25 | 524.86 |
| நிதியியல் கிரயம் | 23.2 | (22,903.90) | (22,529.43) | (22,813.07) | (22,338.61) |
| வட்டி அறிவிடப்படும் பொறுப்புக்களிலான பரிமாற்றல் நட்டம் | 23.3 | (107,880.72) | (13,334.22) | (107,621.19) | (13,334.22) |
| | | (130,120.45) | (35,302.14) | (129,795.01) | (35,147.97) |
| **வரி விதிப்பிற்ற முன்னரான நட்டம்** | | (163,157.39) | (49,761.57) | (166,369.68) | (45,231.46) |
| வருமான வரி (செலவினம்)/திருப்பம் | 24. | (425.69) | 57.06 | - | - |
| **வருடத்திற்கான நட்டம்** | | (163,583.08) | (49,704.51) | (166,369.68) | (45,231.46) |

பக்கங்கள் 59 முதல் 107 வரை காணப்படும் கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் நிதிக்கூற்றுக்களின் ஒருங்கிணைந்த பாகமாயுள்ளன.

# விரிவான வருமானக் கூற்று

| 31 மார்ச் இல் உள்ளவாறானது | குறிப்பு | குழுமம் 2022 ரூபா மில்லி. | குழுமம் 2021 ரூபா மில்லி. | கம்பனி 2022 ரூபா மில்லி. | கம்பனி 2021 ரூபா மில்லி. |
|---|---|---|---|---|---|
| **வருடத்திற்கான நட்டம்** | | (163,583.08) | (49,704.51) | (166,369.68) | (45,231.46) |
| | | | | | |
| **ஏனைய விரிவான வருமானம்/(நட்டம்)** | | | | | |
| **அடுத்துவரும் காலங்களில் இலாபம் அல்லது நட்டத்திற்கு மீள் வகைப்படுத்தப்படக் கூடாத ஏனைய விரிவான வருமானம்/(நட்டம்):** | | | | | |
| பணிக்கொடையிலான காப்பீட்டுக் கணிப்பு இலாபம்/(நட்டம்) | 16.3 | 636.51 | (92.13) | 598.05 | (160.58) |
| விடுமுறை பணமாக்குவதிலான காப்பீட்டுக் கணிப்பு இலாபம்/(நட்டம்) | 16.3 | 22.83 | (7.38) | - | - |
| ஏ.வி.வ. கூற்றில் அங்கீகரிக்கப்பட்ட உருப்படிகளிலான ஒத்திவைக்கப்பட்ட வரியின் தாக்கம் | 24.2 | (9.19) | (9.16) | - | - |
| | | 650.15 | (108.67) | 598.05 | (160.58) |
| **அடுத்துவரும் காலங்களில் இலாபம் அல்லது நட்டத்திற்கு மீள் வகைப்படுத்தப்படவேண்டிய ஏனைய விரிவான வருமானம்/(நட்டம்) (வரி நிகராக):** | | | | | |
| காசுப் பாய்ச்சல் இழப்புக் காப்பரணில் தேறிய அசைவு | | - | 1,760.86 | - | 1,760.86 |
| | | - | 1,760.86 | - | 1,760.86 |
| **ஆண்டிற்கான மொத்த ஏனைய விரிவான வருமானம்/(நட்டம்), வரி நிகராக** | | 650.15 | 1,652.19 | 598.05 | 1,600.28 |
| **ஆண்டிற்கான மொத்த ஏனைய விரிவான வருமானம்/(நட்டம்), வரி நிகராக** | | (162,932.93) | (48,052.32) | (165,771.63) | (43,631.18) |

பக்கங்கள் 59 முதல் 107 வரை காணப்படும் கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் நிதிக்கூற்றுக்களின் ஒருங்கிணைந்த.

# உரித்துவத்திலான மாற்றங்களின் கூற்று

| குழுமம்<br>31 மார்ச் இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது | கூறப்பட்ட மூலதனம்<br>ரூபா மில்லி. | மீள் மதிப்பீட்டு ஒதுக்கம்<br>ரூபா மில்லி. | காசுப்பாய்ச்சல் இழப்புக்காப்பரண் ஒதுக்கம்<br>ரூபா மில்லி. | மூலதன ஒதுக்கம்<br>ரூபா மில்லி. | திரண்ட நட்டங்கள்<br>ரூபா மில்லி. | மொத்தம்<br>ரூபா மில்லி. |
|---|---|---|---|---|---|---|
| **01 ஏப்ரல் 2020 இல் உள்ளவாறான மீதி** | 51,617.44 | 5,447.53 | (1,760.86) | - | (316,477.65) | (261,173.54) |
| கூறப்பட்ட மூலதனத்திற்கான முற்பணம் (குறிப்பு 13) | 27,734.99 | - | - | - | - | 27,734.99 |
| வருடத்திலான விற்பனையின் காரணமாக மீள் மதிப்பீட்டிலான மிகையின் மாற்றல் | - | (6.26) | - | - | 6.26 | - |
| ஆண்டிற்கான நட்டம் | - | - | - | - | (49,704.51) | (49,704.51) |
| ஏனைய விரிவான வருமானம் | - | - | 1,760.86 | - | (108.67) | 1,652.19 |
| மொத்த விரிவான வருமானம்/(நட்டம்) | - | - | 1,760.86 | - | (49,813.18) | (48,052.32) |
| **31 மார்ச் 2021 இல் உள்ளவாறான மீதி** | 79,352.43 | 5,441.27 | - | - | (366,284.57) | (281,490.87) |
| கூறப்பட்ட மூலதனத்திற்கான முற்பணம் (குறிப்பு 13) | (27,734.99) | - | - | - | - | (27,734.99) |
| பங்குகளது வழங்கல் (குறிப்பு 13) | 44,743.23 | - | - | 991.74 | - | 45,734.96 |
| வருடத்திலான விற்பனையின் காரணமாக மீள் மதிப்பீட்டிலான மிகையின் மாற்றல் | - | (4.80) | - | - | 4.80 | - |
| ஆண்டிற்கான நட்டம் | - | - | - | - | (163,583.08) | (163,583.08) |
| ஏனைய விரிவான வருமானம் | - | - | - | - | 650.15 | 650.15 |
| மொத்த விரிவான வருமானம்/(நட்டம்) | - | - | - | - | (162,932.93) | (162,932.93) |
| **31 மார்ச் 2022 இல் உள்ளவாறான மீதி** | 96,360.67 | 5,436.47 | - | 991.74 | (529,212.71) | (426,423.83) |

| கம்பனி<br>31 மார்ச் இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது | கூறப்பட்ட மூலதனம்<br>ரூபா மில்லி. | மீள் மதிப்பீட்டு ஒதுக்கம்<br>ரூபா மில்லி. | காசுப்பாய்ச்சல் இழப்புக்காப்பரண் ஒதுக்கம்<br>ரூபா மில்லி. | மூலதன ஒதுக்கம்<br>ரூபா மில்லி. | திரண்ட நட்டங்கள்<br>ரூபா மில்லி. | மொத்தம்<br>ரூபா மில்லி. |
|---|---|---|---|---|---|---|
| **01 ஏப்ரல் 2020 இல் உள்ளவாறான மீதி** | 51,617.44 | 3,115.82 | (1,760.86) | - | (326,341.48) | (273,369.08) |
| கூறப்பட்ட மூலதனத்திற்கான முற்பணம் (குறிப்பு 13) | 27,734.99 | - | - | - | - | 27,734.99 |
| ஆண்டிற்கான நட்டம் | - | - | - | - | (45,231.46) | (45,231.46) |
| ஏனைய விரிவான வருமானம் | - | - | 1,760.86 | | (160.58) | 1,600.28 |
| மொத்த விரிவான வருமானம்/(நட்டம்) | - | - | 1,760.86 | - | (45,392.04) | (43,631.18) |
| **31 மார்ச் 2021 இல் உள்ளவாறான மீதி** | 79,352.43 | 3,115.82 | - | - | (371,733.52) | (289,265.27) |
| கூறப்பட்ட மூலதனத்திற்கான முற்பணம் (குறிப்பு 13) | (27,734.99) | - | - | - | - | (27,734.99) |
| பங்குகளது வழங்கல் (குறிப்பு 13) | 44,743.23 | - | - | 991.74 | - | 45,734.96 |
| ஆண்டிற்கான நட்டம் | - | - | - | - | (166,369.68) | (166,369.68) |
| ஏனைய விரிவான வருமானம் | - | - | - | - | 598.05 | 598.05 |
| மொத்த விரிவான வருமானம்/(நட்டம்) | - | - | - | - | (165,771.63) | (165,771.63) |
| **31 மார்ச் 2022 இல் உள்ளவாறான மீதி** | 96,360.67 | 3,115.82 | - | 991.74 | (537,505.15) | (437,036.92) |

பக்கங்கள் 59 முதல் 107 வரை காணப்படும் கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் நிதிக்கூற்றுக்களின் ஒருங்கிணைந்த.

# காசுப் பாய்ச்சல் கூற்று

| 31 மார்ச் இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது | குறிப்பு | குழுமம் 2022 ரூபா மில்லி. | குழுமம் 2021 ரூபா மில்லி. | கம்பனி 2022 ரூபா மில்லி. | கம்பனி 2021 ரூபா மில்லி. |
|---|---|---|---|---|---|
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான/(பயன்படுத்தப்பட்ட) காசுப் பாய்ச்சல்** | | | | | |
| வருமானவரிச் செலவினத்திற்கு முன்னரான நட்டம் | | (163,157.39) | (49,761.57) | (166,369.68) | (45,231.46) |
| செம்மையாக்கல்கள்: | | | | | |
| பெறுமானத்தேய்வு/பெறுமானக்குறைப்பு/வலுக்குன்றல் | | 14,655.59 | 16,745.32 | 14,188.27 | 16,295.62 |
| நிதிச் செலவுகள் | 23.2 | 22,903.90 | 22,529.43 | 22,813.07 | 22,338.61 |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம், அருவச் சொத்துக்கள் மற்றும் பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்களின் விற்பனையிலான நட்டம்/(இலாபம்) | | 24.89 | (7.57) | 4.61 | (4.94) |
| நிதி வருமானம் | 23.1 | (664.17) | (561.51) | (639.25) | (524.86) |
| வருமதிகளின் வலுக்குன்றலுக்கான ஏற்பாடு | 11.4 | 125.63 | 62.29 | 88.38 | 44.22 |
| மெதுவாக நகரும் இருப்புக்களுக்கான தள்ளுபடி | 10.1 | 349.35 | 385.28 | 405.29 | 282.74 |
| பராமரிப்பு ஒதுக்கத்தின் வலுக்குன்றலுக்கான ஏற்பாடு | 6.2 | 3,836.65 | 1,181.44 | 3,836.65 | 1,181.44 |
| பிடித்துவைத்தல் வரியின் திருப்பம் | 21 | - | (16,433.45) | - | (16,433.45) |
| வாடகைச் சலுகை | 15.3 | (339.91) | (444.93) | (191.99) | (278.63) |
| எய்தப் பெற்றிராத பரிமாற்றல் நட்டத்திலான விளைவு | | 143,139.73 | 17,303.87 | 145,580.83 | 17,885.29 |
| முன்விற்பனையின் மீள் பதிவு | | (2,506.13) | (1,931.97) | (2,506.13) | (1,931.97) |
| ஓய்வுபெறல் நலன் கடப்பாடுகளுக்கான ஏற்பாடு | 16.3 | 1,241.51 | 997.45 | 1,159.11 | 903.81 |
| **தொழிற்பாட்டு மூலதன மாற்றங்களுக்கு முன்னரான தொழிற்பாட்டு இலாபம்/(நட்டம்)** | | 19,609.65 | (9,935.92) | 18,369.16 | (5,473.58) |
| இருப்புக்களில் குறைவு/(அதிகரிப்பு) | | 38.03 | 87.60 | 62.11 | 47.66 |
| ஊர்தியினது முன்விற்பனையிலான (குறைவு)/அதிகரிப்பு | | 20,013.68 | (4,706.44) | 20,013.68 | (4,706.44) |
| வர்த்தக மற்றும் ஏனைய வருமதிகளிலான (அதிகரிப்பு)/குறைவு | | (12,666.72) | 279.03 | (12,174.95) | (538.83) |
| வர்த்தக மற்றும் ஏனைய கொடுமதிகளிலான அதிகரிப்பு/(குறைவு) | | 8,052.86 | 1,153.78 | 8,186.48 | (3,346.54) |
| பராமரிப்பு ஒதுக்கங்களிலான (அதிகரிப்பு)/குறைவு | | (4,613.74) | 246.53 | (4,613.74) | 246.53 |
| விமானப் பாதுகாப்பு வைப்புக்களிலான குறைவு/(அதிகரிப்பு) | | 471.80 | 633.22 | 471.80 | 633.22 |
| **தொழிற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட/(பயன்படுத்தப்பட்ட) காசு** | | 30,905.59 | (12,242.20) | 30,314.53 | (13,137.98) |
| செலுத்தப்பட்ட நிதிச் செலவுகள் | | (15,859.69) | (17,531.09) | (15,768.86) | (17,340.28) |
| செலுத்தப்பட்ட ஓய்வுபெறல் நலன்கள் | 16.3 | (456.36) | (988.41) | (438.69) | (941.21) |
| செலுத்தப்பட்ட வருமான வரி | | (46.58) | (37.51) | - | - |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான (பயன்படுத்தப்பட்ட) தேறிய காசுப் பாய்ச்சல்** | | 14,542.96 | (30,799.21) | 14,106.98 | (31,419.47) |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான (பயன்படுத்தப்பட்ட) காசுப் பாய்ச்சல்** | | | | | |
| பெறப்பட்ட வட்டி | | 419.22 | 300.90 | 396.73 | 267.40 |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கொள்வனவு | | (490.55) | (319.95) | (365.11) | (282.82) |
| குறுங்கால முதலீடுகளிலான (முதலீடு)/மீளப்பெறல்கள் | | (329.13) | (271.21) | (329.13) | (446.81) |
| அருவச் சொத்துக்களின் கொள்வனவு | | (32.15) | (38.60) | (31.68) | (30.00) |
| பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்களின் கொள்வனவு | | (19.46) | - | (19.46) | - |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் மற்றும் அருவச் சொத்துக்களின் விற்பனையிலிருந்தான வருவாய் | | 12.62 | 10.52 | 10.86 | 4.94 |
| **முதலீட்டு நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட தேறிய காசு** | | (439.45) | (318.34) | (337.79) | (487.29) |
| **நிதியளித்தல் நடவடிக்கைகளிலிருந்தான/(பயன்படுத்தப்பட்ட) காசுப் பாய்ச்சல்கள்** | | | | | |
| திறைசேரி முறிகளின் விற்பனையிலிருந்தான வருவாய் | | 17,317.57 | 27,463.82 | 17,317.57 | 27,463.82 |
| வரி அறவிடப்படும் பொறுப்புக்களின் மீள்செலுத்துகை | | (7,475.82) | (3,189.70) | (7,474.82) | (3,078.78) |
| குத்தகை பொறுப்புக்களின் மீள்செலுத்துகை | 15.3 | (18,623.57) | (6,562.84) | (18,678.12) | (6,684.77) |
| முன்னுரிமைப் பங்குகளின் மீட்பு | | - | (1,000.00) | - | - |
| வட்டி அறவிடப்படும் கடன்கள் மற்றும் கடன் பெறுகைகளிலிருந்தான வருவாய் | | 200.75 | 2,821.40 | 200.75 | 2,801.40 |
| **நிதியளித்தல் நடவடிக்கைகளிலிருந்தான/(பயன்படுத்தப்பட்ட) தேறிய காசு** | | (8,581.07) | 19,532.67 | (8,634.62) | 20,501.67 |
| **காசு மற்றும் காசுக்குச் சமனானவைகளிலான தேறிய அதிகரிப்பு/(குறைவு)** | | 5,522.44 | (11,584.88) | 5,134.57 | (11,405.09) |
| ஆண்டின் ஆரம்பத்தில் உள்ளவாறான காசும் காசுக்குச் சமனானவைகளும் | 12 | (21,669.31) | (10,084.43) | (21,853.32) | (10,448.23) |
| **ஆண்டின் இறுதியில் உள்ளவாறான காசும் காசுக்குச் சமனானவைகளும்** | 12 | (16,146.88) | (21,669.31) | (16,718.75) | (21,853.32) |

பக்கங்கள் 59 முதல் 107 வரை காணப்படும் கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் நிதிக்கூற்றுக்களின் ஒருங்கிணைந்த.

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

## 1. கூட்டாண்மை தகவல்கள்

### *1.1 பொதுவானவை*

**கம்பனி**
வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் ("கம்பனி") இலங்கையில் ஒன்றிணைக்கப்பட்டு உறைவிடத்தைக் கொண்ட ஒரு பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனியாகும். கம்பனியின் பதிவு செய்யப்பட்ட முகவரி மற்றும் பிரதான வணிகம் மேற்கொள்ளும் இடமானது எயார்லைன் சென்டர், பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையம், கட்டுநாயக்கா, இலங்கையில் அமைந்துள்ளது.

வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் குழுமத்தின் இறுதியான தாய் நிறுவனமாகும்.

**துணை நிறுவனம் - வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் கேட்டரிங்**
வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் கேட்டரிங் (துணை நிறுவனம்) இலங்கையில் ஒன்றிணைக்கப்பட்டு உறைவிடத்தைக் கொண்ட ஒரு பொறுப்பு வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் ஒரு முழுவதும் உரித்துடைய துணை நிறுவனமாகும். கம்பனியின் பதிவு செய்யப்பட்ட முகவரி மற்றும் பிரதான வணிகம் மேற்கொள்ளும் இடமானது எயார்லைன் சென்டர், பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையம், கட்டுநாயக்கா, இலங்கையில் அமைந்துள்ளது.

### *1.2 பிரதான நடவடிக்கைகள் மற்றும் செயற்பாடுகளின் தன்மை*

**கம்பனி**
கம்பனியின் பிரதான நடவடிக்கைகள் பயணிகள், சரக்கு மற்றும் அஞ்சல்களை ஏந்திச் செல்வதற்காக அட்டவணைப்படுத்தப்பட்ட சர்வதேச, அட்டவணைப்படுத்தாத வான்வழிச் சேவைகளை உள்ளடக்கும் என்பதுடன் இது இலங்கையின் நியமிக்கப்பட்ட ஊர்தியாகும். பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையம் (ப.ச.வி.ந.) மற்றும் மத்தல ராஜபக்ஸ சர்வதேச விமான நிலையம் (ம.ரா.ச.வி.நி.) என்பவற்றில் வான் தரிப்பிட சேவைகளை வழங்குதல் மற்றும் விமானத்தினுள் தீர்வையற்ற பொருட்களின் விற்பனை, உள்வரும் மற்றும் வெளிச்செல்லும் விடுமுறை தொகுப்புகளை சந்தைப்படுத்தல் என்பன ஏனைய பிரதான நடவடிக்கைகளாகும். மூன்றாம் தரப்பினருக்கான விமானப் பராமரிப்பினை வழங்குதல், விமானச் செயற்பாட்டுச் சேவைகள் மற்றும் வான் பயணவியல் தொடர்பான பயிற்சிகளை நடாத்துதல் என்பன கம்பனியின் துணை நடவடிக்கைகளாகும்.

**துணை நிறுவனம் - வரையறுக்கப்பட் ஸ்ரீலங்கன் கேட்டரிங்**
வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் கேட்டரிங்கின் பிரதான நடவடிக்கை ப.ச.வி.நி. மற்றும் ம.ரா.ச.வி.நி. ஆகிவற்றினூடாக செயற்படும் விமான நிறுவனங்களுக்கு விமானத்தினுள் உணவு வழங்கல் சேவைகளை வழங்குவதாகும். ஏனைய துணை நடவடிக்கைகளாக பொது மற்றும் மாற்றுப்பயணியர் உணவு விடுதிகள், சலவை செய்தல் சேவைகளை வழங்கல் மற்றும் மாற்றுப்பயணியர் ஹோட்டலினை முகாமைப்படுத்தல் என்பன காணப்படுகின்றன.

### *1.3 வழங்குவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட திகதி*

31 மார்ச் 2022 இல் நிறைவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களை வழங்குவதற்கான பணிப்பாளர்கள் சபையின் அங்கீகாரம் 31 மார்ச் 2022 இல் வழங்கப்பட்டது.

## 2. பொதுவான கணக்கீட்டுக் கொள்கைகள்

### *2.1 தயாரிப்பின் அடிப்படை*

கம்பனி மற்றும் குழுமத்தின் நிதிக் கூற்றுக்கள் ஓர் அட்டுறு அடிப்படையில் மற்றும் வரலாற்று கிரய மரபொழுங்கின் கீழ் தயாரிக்கப்பட்டுள்ளன. இதற்கு விலக்காக, காணி மற்றும் கட்டிடங்கள் மற்றும் விமான சமையலறை உபகரணம் என்பன நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்டுள்ளன.

வேறுவிதமாக குறிப்பிடப்படும்போது தவிர, அனைத்து பெறுமதிகளும் இலங்கை ரூபா மில்லியனில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

2020 இன் கோவிட்-19 தொற்றானது நடைமுறை நிதியாண்டில் கம்பனி மற்றும் குழுமத்தின் செயற்பாடுகளை தொடர்ந்தும் பாதித்தது.

நிறுவனச் செயல்நிலை தொடர்ச்சி - குறிப்பு 3 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு குழுமமானது பின்வருவன உள்ளடங்கலாக தொடரும் இந்த நெருக்கடியினூடாக வணிகத்தை முகாமைப்படுத்துவதற்காக பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. புதிய வருவாய் உருவாக்கும் வாய்ப்புக்களை (அட்டவணைப்படுத்தப்பட்ட சரக்கு விமானசேவைகள் மற்றும் ஒரு பயணிகள் விமானத்தை ஒரு தனிப்பயனுடைய சரக்கு விமானமாக மாற்றியமைத்தல் ) தொடங்குதல், செலவுகள் சிக்கனப்படுத்தல் வழிமுறைகளை அமுல்படுத்துதல், தன்விருப்பமான மூலதனச் செலவுகளை குறைத்தல் மற்றும் மேலதிக தொழிற்படு மூலதன வசதிகளுக்காக பேச்சுவார்த்தை நடாத்துதல் என்பனவாகும். இந்த நடவடிக்கைகள் புதிய உரித்துவ மூலதன உட்செலுத்துதல் உள்ளடங்கலாக இலங்கை அரசாங்கத்திடமிருந்து உறுதுணைக்கான கடப்பாட்டினை பெற்றுக்கொள்ளுதலையும் உள்ளடக்குகின்றன.

நிறுவனச் செயல்நிலை தொடர்ச்சியாக நிதிக் கூற்றுக்களை தயாரித்தல் மற்றும் முன்னிலைப்படுத்துவதற்கான நியாயப்பாடானது குறிப்பு 3 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

#### 2.1.1 இணங்கியொழுகுதல் கூற்று

கம்பனி மற்றும் குழுமத்தின் நிதிக் கூற்றுக்கள் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தினால் வழங்கப்பட்ட இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு (இக.நி.) அமைய தயாரிக்கப்பட்டுள்ளன. இந்த நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பும் முன்னிலைப்படுத்தலும் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்திற்கு இணங்கியொழுகுகின்றன.

#### 2.1.2 ஒப்பிடப்படும் தகவல்கள்

முன்னைய வருடங்களின் நிதிக் கூற்றுக்களது முன்னிலைப்படுத்தலும் வகைப்படுத்தலும் பொருத்தமான இடங்களில் சிறந்த முன்னிலைப்படுத்தலுக்காகவும் நடைமுறை ஆண்டுடன் ஒப்பிடக்கூடியதாகவும் இருப்பதற்காக திருத்தியமைக்கப்பட்டன.

#### 2.1.3 செயற்பாட்டு மற்றும் முன்னிலைப்படுத்தல் நாணயம்

குழுமத்தின் செயற்பாட்டு மற்றும் முன்னிலைப்படுத்தல் நாணயமான இலங்கை ரூபாவில் நிதிக் கூற்றுக்கள் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளன. இலங்கை கணக்கீட்டு நியமம் - LKAS 01 "நிதிக் கூற்றுக்களின் முன்னிலைப்படுத்தல்" இனால் அனுமதிக்கப்பட்டுள்ளவாறு வேறுவிதத்தில் குறிப்பிட்டாலன்றி அனைத்து நிதியியல் தகவல்களும் இலங்கை ரூபா மில்லியனில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளன.

### *2.2 ஒருங்கிணைப்பதற்கான அடிப்படை*

நிதிக் கூற்றுக்கள் 31 மார்ச் 2022 இல் நிறைவடைந்த ஆண்டிற்கான கம்பனி மற்றும் அதன் துணை நிறுவனத்தின் நிதிக் கூற்றுக்களை உள்ளடக்குகின்றன. கம்பனியின் துணை நிறுவனத்தின் நிதிக் கூற்றுக்கள் நிலையான கணக்கீட்டுக் கொள்கைகளை பயன்படுத்தி அதே அறிக்கையிடப்படும் ஆண்டிற்கு தயாரிக்கப்பட்டுள்ளன.

#### 2.2.1 வணிகக் கூட்டு

கையகப்படுத்தப்பட்ட செயற்பாடுகள் மற்றும் சொத்துக்கள் ஒரு வணிகத்தின் வரைவிலக்கணத்தை பூர்த்தி செய்யும்போது கையகப்படுத்தல் முறையைப் பயன்படுத்தி வணிக சேர்க்கைகளுக்கான குழு கணக்குகள் மற்றும் கட்டுப்பாடு குழுவுக்கு மாற்றப்படும். குறிப்பிட்ட செயல்பாடுகள் மற்றும் சொத்துக்கள் ஒரு வணிகமா என்பதைத் தீர்மானிப்பதில், கையகப்படுத்தப்பட்ட சொத்துகள் மற்றும் செயல்பாடுகளின் தொகுப்பில், குறைந்தபட்சம், ஒரு உள்ளீடு மற்றும் கணிசமான செயல்முறை ஆகியவை அடங்கியுள்ளனவா என்பதையும், வாங்கிய தொகுப்பில் வெளியீடுகளை உருவாக்கும்

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் (தொடர்ச்சி.)

திறன் உள்ளதா என்பதையும் குழு மதிப்பிடுகிறது.

கையகப்படுத்தப்பட்ட செயற்பாடுகள் மற்றும் சொத்துக்கள் ஒரு வணிகமல்ல என்பதை எளிமைப்படுத்தப்பட்ட மதிப்பீட்டை அனுமதிக்கும் "செறிவு சோதனை" ஒன்றைப் பயன்படுத்துவதற்கான ஒரு தெரிவு குழுமத்திற்கு உள்ளது. பெறப்பட்ட மொத்த சொத்துக்களின் நியாயப் பெறுமதி அனைத்தும் ஒரு தனியாக அடையாளம் காணக்கூடிய சொத்து அல்லது ஒத்த அடையாளம் காணக்கூடிய சொத்துகளின் குழுவில் குவிந்திருந்தால் விருப்பத்தெரிவுச் செறிவுச் சோதனை பூர்த்தி செய்யப்படுகிறது.

மாற்றப்பட்ட மறுபயனானது முன் நடைமுறையிலுள்ள உறவுகள் தொடர்பான தொகைகளை உள்ளடக்கவில்லை. அத்தகைய தொகைகள் பொதுவாக இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகின்றன.

ஏதேனும் எதிர்பாரா நிகழ்வு மறுபயனானது கையகப்படுத்தல் திகதியில் நியாயப் பெறுமதியில் மதிப்பிடப்படுகின்றது. ஒரு நிதியியல் கருவியின் வரைவிலக்கணத்தை சந்திக்கும் எதிர்பாரா நிகழ்வு மறுபயனை செலுத்துவதற்கான ஒரு கடப்பாடானது உரித்துவமாக வகைப்படுத்தப்பட்டிருந்தால், அது மீள்அளவீடு செய்யப்படாது தீர்ப்பனவானது உரித்துவத்தினுள் கணக்கிடப்படுகின்றது. இல்லாவிடின், ஏனைய எதிர்பாரா மறுபயனானது ஒவ்வொரு அறிக்கையிடப்படும் திகதியிலும் மீள்அளவீடு செய்யப்பட்டு எதிபாரா மறுபயனின் நியாயப் பெறுமதியில் பின்னரான மாற்றங்கள் இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகின்து.

### 2.2.2 துணை நிறுவனங்கள்

துணை நிறுவனங்கள் குழுமத்தினால் கட்டுப்படுத்தப்படும் நிறுவனங்களாகும். குழுமமானது அதன் ஈடுபாட்டிலிருந்து மாற்றமடையும் வருவாய்க்கான வெளிப்பாட்டினை அல்லது உரிமைகளை கொண்டிருக்கும்போது மற்றும் நிறுவனத்தின் மீதான அதன் அதிகாரத்தினூடாக அந்த விளைவுகளில் செல்வாக்கு செலுத்தும் ஆற்றலினைக் கொண்டிருந்தால் அது அந்த நிறுவனத்தைக் கட்டுப்படுத்துகின்றது. துணை நிறுவனங்களின் நிதிக் கூற்றுக்கள் கட்டுப்பாடு ஆரம்பித்த திகதியிலிருந்து கட்டுப்பாடு நிறைவடையும் திகதி வரைக்கும் ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்படுகின்றன.

### 2.2.3 கட்டுப்பாடற்ற நலன்கள்

ஒவ்வொரு வணிக சேர்க்கைக்கும், கையகப்படுத்துவதில் எந்தவொரு கட்டுப்பாடற்ற நலன்களை அளவிடுவதற்கு குழுமமானது பின்வருவதை தேர்ந்தெடுக்கிறது: நியாயப் பெறுமதியில் அல்லது பொதுவாக நியாயமான மதிப்பில் இருக்கும் கையகப்படுத்துபவரின் அடையாளம் காணக்கூடிய தேறிய சொத்துக்களின் விகிதாசார பங்கில். கட்டுப்பாடற்ற நலன்களது கையகப்படுத்தலானது உரிமையாளர்கள் என்ற அவர்களது கொள்திறனில் உரிமையாளர்களுடனான கொடுக்கல் வாங்கல்களாக கருதப்படுகிறது, எனவே, அத்தகைய கொடுக்கல் வாங்கல்களின் விளைவாக எந்தவொரு நன்மதிப்பும் அங்கீகரிக்கப்படவில்லை. கட்டுப்பாடற்ற நலன்களுக்கான செம்மையாக்கல்கள் துணை நிறுவனத்தின் தேறிய சொத்துக்களின் விகிதாசார தொகையை அடிப்படையாகக் கொண்டவையாகும்.

கட்டுப்பாட்டினில் இழப்பை ஏற்படுத்தாத ஒரு துணை நிறுவனத்திலான குழுமத்தின் நலன்களில் ஏற்படும் மாற்றங்கள் உரித்துவ கொடுக்கல் வாங்கல்களாக கணக்கிலெடுக்கப்படுகின்றன.

### 2.2.4 கட்டுப்பாட்டின் இழப்பு

குழுமமானது ஒரு துணை நிறுவனத்தின் மீதான கட்டுப்பாட்டை இழக்கும்போது, அது துணை நிறுவனத்தின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை மற்றும் தொடர்புடைய எந்தவொரு கட்டுப்பாடற்ற நலன் மற்றும் உரித்துவத்தின் ஏனைய கூறுகளையும் அங்கீகாரத்திலிருந்து நீக்குகின்றது. இதன் விளைவாக ஏற்படும் இலாபம் அல்லது நட்டம் இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகிறது. கட்டுப்பாட்டினை இழக்கும்போது முன்னாள் துணை நிறுவனத்தில் ஏதேனும் தக்கவைக்கப்பட்ட நலனானது நியாயப் பெறுமதியில் அளவிடப்படுகின்றது.

### 2.2.5 ஒருங்கிணைப்பில் நீக்கப்படும் கொடுக்கல் வாங்கல்கள்

குழுமத்தினுள்ளான மீதிகள் மற்றும் கொடுக்கல் வாங்கல்கள், மற்றும் குழுமத்தினுள்ளான கொடுக்கல் வாங்கல்களிலிருந்து எழுகின்ற ஏதேனும் எய்தப்பெற்றிராத வருமானம் மற்றும் செலவினங்கள் அகற்றப்படுகின்றது. உரித்துவக் கணக்கீடு செய்யப்பட்ட முதலீடு செய்யப்பட்ட நிறுவனங்களுடனான கொடுக்கல் வாங்கல்களிலிருந்து எழுகின்ற எய்தப்பெற்றிராத இலாபங்கள் முதலீடு செய்யப்பட்ட நிறுவனத்தில் குழுமத்தின் அக்கறையின் அளவிற்கு முதலீட்டிற்கு எதிராக அகற்றப்படுகின்றன. எய்தப்பெற்றிராத நட்டங்கள் எய்தப்பெற்றிராத இலாபங்கள் போன்று அதே விதத்தில் அகற்றப்படுகின்றன, ஆனால் வலுக்குன்றலுக்கான சான்று காணப்படாத அளவிற்கு மாத்திரம் ஆகும்.

## *2.3 குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகள்*

கீழே குறிப்பிடப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் இந்த நிதிக் கூற்றுக்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அனைத்து காலங்களுக்கும் தொடர்ச்சியாகப் பிரயோகிக்கப்பட்டுள்ளன.

### 2.3.1 கணக்கீட்டுக் கொள்கைகளிலான மாற்றங்கள்

குழுமமானது முதற் தடவையாக சில நியமங்கள் மற்றும் திருத்தங்களை பிரயோகித்தது. இவை 1 ஜனவரி 2021 இல் அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பிக்கும் வருடாந்த காலங்களுக்கு செல்லுபடியாகின்றது.

SLFRS 16 க்கான திருத்தங்கள் - கோவிட்-19 தொடர்பான 30 ஜூன் 2021 இற்கு அப்பாலான வாடகைச் சலுகைகள்.

குழுமமானது ஜூன் 2022 வரை நீட்டப்பட்ட கோவிட்-19 தொடர்பான வாடகைச் சலுகைகளுக்கு நடைமுறை உபாயத்தினை பிரயோகித்துள்ளது. இத் திருத்தமானது குழுமம் ஒரு குத்தகையாளராக காணப்படும்போது குத்தகைகளுக்கு ஒரு விருப்பத்தெரிவு நடைமுறை உபாயத்தினை அறிமுகப்படுத்துகின்றது - அதாவது, குழுமம் நடைமுறை உபாயத்தினை பிரயோகிக்கும் குத்தகைகளுக்கு, குழுமமானது கோவிட்-19 கொரோனா வைரஸ் தொற்றின் ஒரு நேரடி விளைவான தகுதியுடைய வாடகைச் சலுகைகள் குத்தகைத் திருத்தங்களா என்று மதிப்பிடுவதற்கான தேவைப்பாடு அவசியமில்லை.

பின்வரும் திருத்தங்கள் மற்றும் மேம்பாடுகள் கம்பனியின் நிதிக் கூற்றுக்களில் ஒரு குறிப்பிடத்தக்க தாக்கத்தினைக் கொண்டிருக்கும் என எதிர்பார்க்கவில்லை.

-SLFRS 9, LKAS 39, SLFRS 7, SLFRS 4 மற்றும் SLFRS 16 ஆகியவற்றுக்கான திருத்தங்கள்: வட்டி வீத அளவை மட்டக்குறி மறுசீரமைப்பு கட்டம் 2.

### 2.3.2 குறிப்பிடத்தக்க கணக்கீட்டு மதிப்பீடுகள், அனுமானங்கள் மற்றும் பகுத்தறிவுகள்

குழுவின் நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பானது முகாமைத்துவம் பகுத்தறிவுகள், மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்களை மேற்கொள்ளும் தேவையைக் கொண்டுள்ளதுடன் அறிக்கையிடப்படும் திகதியில் அறிக்கையிடப்பட்ட தொகைகளான சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவுகள் மற்றும் வெளிப்படுத்தல்கள் என்பவற்றில் தாக்கத்தினை ஏற்படுத்தலாம். முக்கியமான பகுத்தறிவுகள், மதிப்பீடுகள் மற்றும் அதனுடனிணைந்த அனுமானங்கள் என்பன ஒரு தொடர்ச்சியான அடிப்படையில் மதிப்பிடப்படுவதுடன் அவை மரபு ரீதியான அனுபவம் மற்றும் சூழ்நிலைகளின் கீழ் நியாயமானதென நம்பப்படும் எதிர்கால நிகழ்வுகளது எதிர்பார்ப்புகள் உள்ளடங்கலாக ஏனைய காரணிகள் என்பவற்றின் அடிப்படையிலாகும்.

பின்வரும் முக்கிய பகுத்தறிவுகள், மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்கள் என்பன ஏனையவற்றுக்கிடையில் நிதிக் கூற்றுகளில் அங்கீகரிக்கப்பட்ட தொகைகளில் தற்சார்புடைய மற்றும் குறிப்பிடத்தக்க தாக்கத்தை உடையவற்றை விளித்துரைக்கின்றன.

(அ) பகுத்தறிவுகள்

**(i) நிறுவனச் செயல்நிலை தொடர்ச்சி**

குறிப்பு 3 இல் வெளிப்படுத்தியுள்ளவாறு இந்த நிதிக் கூற்றுக்கள் ஒரு நிறுவனச் செயல்நிலைத் தொடர்ச்சி அடிப்படையில் தயாரிக்கப்பட்டு முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளன.

**(ii) எதிர்பாரா பொறுப்புக்கள் - வழக்காடல்கள்**

குழுமமானது அறிக்கையிடல் காலப் பகுதியின் முடிவில் பல்வேறு தரப்பினருடன் பல நிலுவையான வழக்காடல்களை கொண்டிருந்தது. பணிப்பாளர்கள் சபையானது, குழுமத்தின் சட்ட ஆலோசகருடன் முறையான ஆலோசனையின் பின்னர், ஒவ்வொரு வழக்கின் தகுதியையும் மதிப்பிடுகிறது மற்றும் எதிர்காலத்தில் வளங்கள் வெளிப்பாய்ச்சல் இடம் பெறும் சாத்தியம் உள்ளது என்று தீர்மானிக்கப்படும்போது தேவையான ஏற்பாடுகளை செய்கிறது.

வாடிக்கையாளர்கள், வழங்குனர்கள் மற்றும் பணியாட்களினால் குழுமத்திற்கு எதிராக மேற்கொள்ளப்படும் சட்ட நடவடிக்கைகள், ஏனைய கோரல்கள் மற்றும் சாத்தியமான கோரல்கள் தொடர்பாக குழமத்தின் வணிகப் போக்கில் எழுகின்ற எந்தவொரு எதிர்பாரா பொறுப்பு தொடர்பான ஏதேனும் குறிப்பிடத்தக்க பொறுப்பினை பணிப்பாளர்கள் எதிர்பார்க்காதபோது, சம்பந்தப்பட்ட தொகைகள் குறிப்பு 5.2 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

**(iii) குத்தகைகள்**

ஒப்பந்தமானது ஓர் குத்தகையா அல்லது ஓர் குத்தகையினை உள்ளடக்கியுள்ளதா என்று மதிப்பீடு செய்யப்படுகின்றது. ஒப்பந்தமானது ஓர் இனங்காணப்பட்ட சொத்தினை ஒரு காலப்பகுதிக்கு ஓர் மறுபயனுக்கு பரிமாற்றல் செய்யப்பட்டு அதன் பயன்பாட்டினை கட்டுப்படுத்துவதற்கான உரிமையினை தெரிவிக்குமாயின் அவ் ஒப்பந்தம் ஓர் குத்தகை எனப்படும். அடையாளம் காணப்பட்ட சொத்தின் பயன்பாட்டைக் கட்டுப்படுத்தும் உரிமையை ஒப்பந்தம் தெரிவிக்கிறதா என்பதை மதிப்பிடுவதற்கு கருதப்படும் காரணிகளாக: ஒப்பந்தத்தில் அடையாளம் காணப்பட்ட சொத்தின் பயன்பாட்டை உள்ளடக்கியது, பயன்பாட்டின் காலம் முழுவதும் சொத்தின் பயன்பாட்டிலிருந்து பெறும் கணிசமான அனைத்து பொருளாதார நன்மைகளையும் பெற குழுவுக்கு உரிமை உண்டு மேலும் சொத்தின் பயன்பாட்டை இயக்குவதற்கு குழுவுக்கு உரிமை உண்டு.

(ஆ) மதிப்பீடுகள்

**(i) ஆதனம், பொறி மற்றும் உபகரணம் மற்றும் அருவச் சொத்துக்களின் பெறுமானத்தேய்வு/பெறுமதிகுறைப்பு**

முகாமைத்துவமானது இந்த சொத்துக்களின் பொருளாதார வாழ்நாள் மற்றும் சொத்துக்களின் உத்தேசித்த பயன்பாடு என்பவற்றின் அடிப்படையில் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் மற்றும் அருவச் சொத்துக்களுக்கு பயன்பாட்டு வாழ்நாள் மற்றும் எச்சப் பெறுமதிகளை ஒதுக்குகின்றது. ஒவ்வொரு அறிக்கையிடப்படும் திகதியிலும் முகாமைத்துவமானது எச்சப் பெறுமதிகள், பயன்பாட்டு வாழ்நாள் மற்றும் பெறுமானத்தேய்வு /பெறுமதி குறைப்பு முறைகள் என்பவற்றை மீளாய்வு செய்து இந்த சொத்துக்களில் பொதிந்துள்ள பொருளாதார நலன்களின் நுகர்விலான முன்னைய மதிப்பீடுகள் மற்றும் போக்குகளுடனான ஒத்திசைவினை உறுதிப்படுத்துகின்றது. இந்த சொத்துக்களது பயன்பாட்டு வாழ்நாள் மற்றும் எச்சப் பெறுமதிகளிலான மாற்றங்கள் எதிர்கால பெறுமானத்தேய்வு அல்லது பெறுமதிக்குறைப்புக் கிரயத்தில் திருத்தங்களை விளைவிக்கலாம் (கொள்கை 2.4.3 (பி) மற்றும் 2.4.4 இனை பார்க்கவும்).

**(ii) அடிக்கடி பறப்பவர் திட்டம்**

வருவாயின் பிரத்தியேகமாக இனங்காணக்கூடிய கூறாக வெகுமதி வரவுகள் கணக்கீடு செய்யப்படுகின்றன. வெகுமதி வரவுகளுக்கு அவற்றின் நியாயப் பெறுமதியின் அடிப்படையில் ஒதுக்கப்பட்டுள்ள மறுபயன்கள் ஒருங்கிணைக்கப்பட்ட நிதி நிலைமைக் கூற்றில் ஒரு பொறுப்பாக (ஒத்திவைக்கப்பட்ட வருவாய்) கணக்கீடு செய்யப்படுகின்றது.

மைல்/வரவுகளின் நியாயப் பெறுமதியினை தீர்மானிப்பதற்கு மதிப்பீட்டு நுட்பங்கள் பயன்படுத்தப்படுவதுடன் பின்வரும் காரணிகளின் நிறையிடப்பட்ட சராசரியினை பிரதிபலிக்கின்றது. அதாவது, துறைக்கான பயணக்கட்டணம், விமானப் பயண தரமுயர்த்தல்கள் மற்றும் பங்காளி வெகுமதிகள் என்பனவாகும். நியாயப் பெறுமதி கணிப்பீடுகளுக்கு வரலாற்று போக்குகள் அடிப்படையாகப் பயன்படுத்தப்படுகின்றன.

அங்கத்தவர்களினால் மீட்கப்படாது என எதிர்பார்க்கப்படும் மைல்கள் மற்றும் முதிர்வுற்ற மைல்கள் ஆகியவற்றுக்காக மைல்களின் நியாயப் பெறுமதிக்கு செம்மையாக்கல் மேற்கொள்ளப்படுகின்றன.

மைல்களின் நியாயப் பெறுமதியினை தீர்மானிப்பதற்கு உள்வாங்கப்படும் பன்முகமான உள்ளீடுகளின் நிமித்தம் முகாமைத்துவம் ஒரு மட்டத்திலான பகுத்தறிவினை பிரயோகிக்கின்றது.

**(iii) பராமரிப்பு ஒதுக்கம்**

கம்பனியானது குத்தகைகளின் கீழ் காணப்படும் பல விமானங்கள் மற்றும் என்ஜின்களுக்கு பராமரிப்பு நோக்கி உடன்பாடு கண்ட விதிமுறைகளில் குத்தகைக்கு விடுபவருக்கு மாதாந்த கொடுப்பனவுகளை மேற்கொள்கின்றது. இந்த மாதாந்த கொடுப்பனவுகள் மணித்தியாலங்களின் எண்ணிக்கை அல்லது பறந்த சுழற்சிகள் அல்லது பயணவழி காலம் ஆகியவற்றின் அடிப்படையிலானதாகும். காலாகாலம் முகாமைத்துவமானது மீளப்பெறத்தக்க தொகைகளின் சிறந்த மதிப்பீடுகளின் அடிப்படையில் அத்தகைய கொடுப்பனவுகளின் மீளப்பெறத்தக்க தன்மையினை மதிப்பீடுசெய்கின்றது. ஒரு சொத்தின் கொண்டு செல்லப்படும் தொகையானது மீளப்பெறத்தக்க தொகையினை விஞ்சியிருப்பின், சொத்தானது வலுக்குன்றியுள்ளது என கருதப்பட்டு மீளப்பெறத்தக்க தொகைக்கு குறைத்தெழுதப்படுகின்றது. (குறிப்பு 06இனை பார்க்கவும்)

**(iv) விமானப் பராமரிப்பு மற்றும் சீராக்கல் செலவினங்களுக்கான ஏற்பாடு**

பராமரிப்பு நோக்கிய உடன்பட்ட விதிமுறைகளின் அடிப்படையில் குத்தைககளின் கீழ், கம்பனியானது விமானச் சட்டகம், என்ஜின்கள் மற்றும் தரையிறக்கும் பொறி ஆகியவற்றில் கனத்த பராமரிப்பினை மேற்கொள்வதற்கு கடமைப்பட்டுள்ளது. கனமான பராமரிப்புச் செலவினத்திற்கான ஏற்பாடானது சீராக்கலின் தன்மையினைப் பொறுத்து பயன்பாடு அல்லது நேரம் என்பவற்றின் அடிப்படையில் நிதிக் கூற்றுக்களில் படிப்படியாக மேற்கொள்ளப்படுகின்றது. ஏற்பாட்டிற்கு வருவதில், பின்வருவன கவனிக்கப்படுகின்றன: பரீசீலனை மேற்கொள்ளும் நேரத்தில் சொத்தின் மதிப்பீட்டு நிலைமையில் அனுமானங்கள் மேற்கொள்ளப்படுகின்றன, ஆட்படவேண்டிய மூலப்பொருட்கள் மற்றும் நிறுவனச் செலவுகள் மற்றும் எப்போது பரிசீலனை மேற்கொள்ளப்பட வேண்டும் என்பனவாகும். இந்த அனுமானங்கள் கடந்தகால அனுபவங்களின் அடிப்படையில் உருவாக்கப்படுவதுடன் அவை மெய்யான பெறுமதிக்கு ஒத்ததாக காணப்படுவதனை உறுதிசெய்வதற்காக கிரமமாக மீளாய்வுசெய்யப்படுகின்றது. ஏற்பாட்டில் குறிப்பிடத்தக்க விளைவினை உருவாக்கும் அனுமானங்கள் மற்றும் மதிப்பீடுகளிலான ஏதேனும் திருத்தங்கள் வருங்காலத்தில் நிதிக் கூற்றுக்களில் செம்மையாக்கப்படுகின்றன.

**(v) விமானத்தினை திருப்பி வழங்கும் நிலைமைக்கான ஏற்பாடு**

குத்தகை உடன்படிக்கையில் குத்தகைக்கு விடுபவரினால் குறிப்பிடப்பட்ட சில நிலைமையில் குத்தகைக்கு எடுத்த விமானத்தினை மீள் விநியோகிப்பதற்கு கம்பனி கடமைப்பட்டுள்ளது. விமானத்தினை திருப்பி வழங்கும் நிலைமைகள் எதிர்பார்க்கப்படும் செலவினம் தொடர்பான அனுமானங்கள், அதிகரிப்பு வீதங்கள், எதிர்பார்க்கப்படும் கடப்பாடு முதிர்வுடன் சமமான கழிவிறக்க வீதங்கள் ஆகியவற்றை உள்ளடக்குகின்றன. ஏற்பாட்டிற்கு வருவதில், மீள் விநியோகிக்கும் நேரத்தில் சொத்தின் மதிப்பிடப்பட்ட நிலைமை, மீள்விநியோகம் மேற்கொள்ளப்படும் நேரத்தில் ஆட்படவேண்டிய மூலப்பொருள்

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் (தொடர்ச்சி.)

மற்றும் நிர்வாகச் செலவுகள் ஆகியவற்றில் அனுமானங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த அனுமானங்கள் கடந்தகால அனுபவங்களின் அடிப்படையில் உருவாக்கப்படுவதுடன் அவை மெய்யான பெறுமதிக்கு ஒத்ததாக காணப்படுவதனை உறுதிசெய்வதற்காக வருடாந்தம் மீளாய்வு செய்யப்படுகின்றது. ஏற்பாட்டில் குறிப்பிடத்தக்க விளைவினை ஏற்படுத்தும் அனுமானங்கள் மற்றும் மதிப்பீடுகளிலான ஏதேனும் திருத்தங்கள் வருங்காலத்தில் நிதிக் கூற்றுக்களில் செம்மையாக்கப்படுகின்றன.

**(vi) விமானப் போக்குவரத்து சேவைகள் தொடர்பான நேரடியான செயற்பாட்டு செலவினங்களுக்கான ஏற்பாடுகள்**
விமானப் போக்குவரத்து சேவைகளை செயற்படுத்தலானது எரிபொருள், தரை கையாளும் கட்டணங்கள், தரையிறக்கம் மற்றும் தரித்திருத்தல் கட்டணங்கள், விமானத்தினுள் வழங்கப்படும் உணவுகள், ஒதுக்கீட்டு முறைகள், நேரடிச் செலவுகள், முன்பதிவு கட்டணங்கள் மற்றும் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான செலவுகள் போன்ற நேரடிச் செலவுகளில் பல்வேறு ஏற்பாடுகளை மேற்கொள்ளுதல் என்பவற்றை உள்ளடக்குதல் தவிர்க்கமுடியாததாகும். மதிப்பீடுகள் மற்றும் அவற்றுடனிணைந்த அனுமானங்கள் என்பன அந்த சூழ்நிலைகளில் நியாயமானது என நம்பப்படும் பல்வேறுகாரணிகளின் அடிப்படையில் உள்ளதுடன், இவற்றின் விளைவுகள் அறிக்கையிடப்படும் காலத்தின் இறுதியில் கொண்டுசெல்லப்படும் பொறுப்புக்களின் பெறுமதிக்கு ஏற்பாடுகள் மேற்கொள்வதன் அடிப்படையினை உருவாக்குகின்றது.

**(vii) இருப்புக்கள்**
குழுமமானது நிரந்தர இருப்பு எண்ணிக்கை அடிப்படையில் இருப்புக்களின் உளதாம் தன்மை மற்றும் பயன்படுத்தக்கூடிய தன்மை ஆகியவற்றை மீளாய்வு செய்கின்றது. முகாமைத்துவம் பழமைபட்டுப்போன இருப்பினை தீர்மானிக்கும்போது மற்றும்/அல்லது மீளப்பெறத்தக்க பெறுமதியில் ஓர் குறைப்பினை மதிப்பீடு செய்யப்படும்போது ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(viii) நிதியல்லாத சொத்துக்களின் வலுக்குன்றல்**
குழுமமானது ஒவ்வொரு அறிக்கையிடப்படும் திகதியிலும் ஒரு சொத்து வலுக்குன்றுமா என்ற அறிகுறி காணப்படுகின்றதா என்று மதிப்பீடு செய்கின்றது. முகாமைத்துவமானது மீளப்பெறுவதிலான நிச்சயமற்றதன்மையினை குறிப்பிடும் ஏதேனும் ஏனைய காரணிகள் குறித்து அறிந்திருந்தால் மற்றும் அவை நிலுவையிலுள்ள காலம் ஆகியவற்றை கருத்திற்கொண்டு அத்தகைய வலுக்குன்றல்களை மதிப்பிடுவதில் பகுத்தறிவினை பயன்படுத்துகின்றது.

**(ix) நிதியியல் சொத்துக்களின் வலுக்குன்றல்**
ஒவ்வொரு அறிக்கையிடப்படும் திகதியிலும், ஒரு நிதியியல் சொத்து அல்லது நிதியியல் சொத்துக்களின் தொகுதி ஒன்று வலுக்குன்றியுள்ளது என ஏதேனும் மெய்யான சான்று காணப்படுகின்றதா என்று குழுமமானது மதிப்பிடுகின்றது. நிலுவையிலுள்ள காலம் மற்றும் மீளப்பெறுந்தன்மையில் நிச்சயமற்றதன்மையினை குறிக்கும் ஏதேனும் வேறு காரணிகளை முகாமைத்துவம் அறிந்திருந்தால் அத்தகைய வலுக்குன்றலினை மதிப்பிடுவதில் பகுத்தறிவினை பயன்படுத்துகின்றது.

(இ) அனுமானங்கள்

**(i) வரையறுக்கப்பட்ட நலன் திட்டம்**
இலங்கையினைத் தளமாகக் கொண்ட பணியாட்களது ஓய்வுபெறல் நலன் திட்டத்தின் செலவானது ஒரு காப்பீட்டுக் கணிப்பீட்டு பெறுமதியிடலை பயன்படுத்தி தீர்மானிக்கப்படுகின்றது. காப்பீட்டுக் கணிப்பு பெறுமதியானது வட்டி வீதம், சம்பள அதிகரிப்பு வீதங்கள், விசேட வட்டம், ஓய்வுபெறல் வயது மற்றும் கம்பனியின் நிறுவனச் செயல்நிலை தொடர்ச்சி தொடர்பான அனுமானங்களின் அடிப்படையிலானதாகும். திட்டத்தின் நீண்டகாலத் தன்மையின் காரணமாக அத்தகைய மதிப்பீடுகள் குறிப்பிடத்தக்க நிச்சயமற்றதன்மைக்கு ஆட்பட்டதாகும். (குறிப்பு 2.4.16 (ஏ) இனை பார்க்கவும்)

**(ii) ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களின் மீள்மதிப்பீடு**
ஓர் சுயாதீன தகமையுடைய மதிப்பீட்டாளரின் சேவைகளை பயன்படுத்தி காணி மற்றும் கட்டிடங்கள் மற்றும் விமானச் சமையலறை உபகரணங்கள் மீள்மதிப்பீட்டு தொகைகளில் அளவிடப்படுகின்றன. அத்தகைய மதிப்பீட்டாளர் நியாயப் பெறுமதியினை தீர்மானிப்பதற்கு அனுமானங்கள் மற்றும் பெறுமதியிடல் நுட்பங்களை பயன்படுத்துகின்றார். மதிப்பீட்டின் அடிப்படையானது குறிப்பு 4 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

***2.4 குறிப்பிடத்தக்க கணக்கீட்டு கொள்கைகளின் சுருக்கம்***

2.4.1 வெளிநாட்டு நாணயப் பெயர்வு
நிதிக் கூற்றுக்கள் இலங்கை ரூபாவில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளதுடன், இது குழுமத்தின் செயற்பாட்டு மற்றும் முன்னிலைப்படுத்தல் நாணயமாகும். வெளிநாட்டு நாணயங்களிலான கொடுக்கல் வாங்கல்கள் ஆரம்பத்தில் கொடுக்கல் வாங்கல் இடம்பெற்ற தினத்தில் உள்ள செயற்பாட்டு நாணயத்தின் மாற்றுவீதத்தில் பதிவுசெய்யப்படுகின்றது. வெளிநாட்டு நாணயங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் அறிக்கையிடப்படும் தினத்தில் உள்ள செயற்பாட்டு நாணயத்திற்கு பரிமாற்றல் வீதத்தை பயன்படுத்தி திருப்பப்படுகின்றன. இதன் விளைவாக ஏற்படும் வெளிநாட்டு பரிமாற்றல் இலாபங்கள் மற்றும் நட்டங்கள் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது. வெளிநாட்டு நாணயத்தில் வரலாற்று ரீதியான கிரயத்தில் அளவிடப்படும் நிதியல்லாத உருப்படிகள் ஆரம்ப கொடுக்கல் வாங்கல் தினங்களில் உள்ள நாணயப் பரிமாற்று வீதங்களை பயன்படுத்தி மாற்றப்படுகின்றன.

2.4.2 வரிவிதிப்பு
வருமான வரிச் செலவினம் நடைமுறை மற்றும் ஒத்திவைக்கப்பட்ட வரியினை உள்ளடக்குகின்றது. இது ஒரு வணிக கூட்டுடன் தொடர்புடைய அல்லது உரித்துவத்தில் அல்லது ஏனைய விரிவான வருமானத்தில் நேரடியாக அங்கீகரிக்கப்பட்டவை ஆகியவற்றின் அளவைத் தவிர, இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது அல்லது நிச்சயமற்ற வரி சிகிச்சைகள் உட்பட வருமான வரிகள் தொடர்பான வட்டி மற்றும் அபராதங்கள் வருமான வரிகளின் வரையறையை பூர்த்தி செய்யவில்லை என்று குழு தீர்மானித்துள்ளதுடன், எனவே LKAS 37 ஏற்பாடுகள், எதிர்பாரா பொறுப்புகள் மற்றும் எதிர்பாரா சொத்துகளின் கீழ் அவற்றைக் கணக்கிட்டுள்ளது.

**(i) நடைமுறை வருமான வரி**
நடைமுறை வரி என்பது ஆண்டுக்கு வரி செலுத்தக்கூடிய வருமானம் அல்லது நட்டம், செலுத்த வேண்டிய அல்லது பெறத்தக்க வரி மற்றும் முந்தைய ஆண்டுகள் தொடர்பாக செலுத்த வேண்டிய அல்லது பெறத்தக்க வரிக்கு ஏதேனும் செம்மையாக்கல் ஆகியவை அடங்கும். தற்போதைய வரி செலுத்த வேண்டிய அல்லது பெறத்தக்க தொகை ஏதேனும் இருந்தால், எதிர்பார்க்கப்படும் வரி தொகையின் சிறந்த மதிப்பீடாகும், வருமான வரி தொடர்பான நிச்சயமற்ற தன்மையை பிரதிபலிக்கும் வகையில் செலுத்தப்பட வேண்டும் அல்லது பெறப்படலாம். அறிக்கையிடல் திகதியில் இயற்றப்பட்ட அல்லது கணிசமாக இயற்றப்பட்ட வரி விகிதங்களைப் பயன்படுத்தி இது அளவிடப்படுகிறது. தற்போதைய வரியானது பங்கிலாபங்களிலிருந்து எழுகின்ற ஏதேனும் வரியினையும் உள்ளடக்குகின்றது.

சில வரன்முறைகளை சந்தித்தால் மாத்திரமே நடைமுறை வரிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் ஈடுகட்டப்படலாம்

**கம்பனி**

(அ) உள்ளூர் வரிவிதிப்பு
2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் அடிப்படையில் 1 ஏப்ரல் 2018 முதல் கம்பனியானது அதன் அனைத்து நடவடிக்கைகளிலும் வருமான வரிக்கு பொறுப்பாளியாகும்.

(ஆ) வெளிநாட்டு வரிவிதிப்பு
கம்பனியானது அதன் வெளிநாட்டு செயற்பாடுகளில் இரட்டை வரிவிதிப்பு உடன்படிக்கை காணப்படாத நாடுகளில் வரிக்கு பொறுப்பாயுள்ளது. எவ்வாறாயினும், நடைமுறையாண்டில் கம்பனிக்கு கிடைக்கக்கூடிய எடுத்துச் செல்லப்படும் வரி நட்டங்களின் நிமித்தம் எவ்வித பொறுப்புமில்லை.
துணை நிறுவனம் - வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் கேட்டரிங்

வருமான வரிச் செலவினமானது நடைமுறை மற்றும் ஒத்திவைக்கப்பட்ட வரியினை உள்ளடக்குகின்றது. வருமான வரிச் செலவினமானது உரித்துவத்தில் நேரடியாக அங்கீகரிக்கப்படும் உருப்படிகள் தொடர்பான அளவினைத் தவிர்த்து இலாபம் அல்லது நட்டக் கணக்கில் அங்கீகரிக்கப்படுகின்றது. உரித்துவம் தொடர்பானவை உரித்துவத்தில் அங்கீகரிக்கப்படுகின்றது.

முதலீட்டு சபையுடனான ஒப்பந்தத்தின் பிரகாரம் விமானச் சமையலறை மற்றும் மாற்றுப்பயண உணவகத்திலிருந்து வரும் வருமானமானது 31 மே 2021 வரை வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளதுடன் அதன் பின்னர் 31 மே 2029 இல் நிறைவடையும் எட்டு வருடங்களுக்கு 15% சலுகை வீதத்தில் வரி விதிக்கப்படும். ஏனைய மூலங்களிலிருந்து வரும் வருமானமானது சாதாரண வரி வீதத்தில் வரி விதிக்கப்படும்.

**(ii) ஒத்திவைக்கப்பட்ட வரி**
ஒத்திவைக்கப்பட்ட வருமான வரியானது, பொறுப்புக்கள் முறையினை பயன்படுத்தி அறிக்கையிடப்படும் திகதியில் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் வரித் தளங்கள் மற்றும் நிதியியல் அறிக்கையிடல் நோக்கங்களுக்காக அவற்றை கொண்டு செல்லும் தொகைகளுக்கும் இடையேயான தற்காலிக வித்தியாசங்களில் ஏற்பாடு செய்யப்படுகின்றது.

ஒத்திவைக்கப்பட்ட வரியானது அறிக்கையிடப்படும் திகதியில் இயற்றப்பட்ட அல்லது கணிசமாக இயற்றப்பட்ட சட்டங்களின அடிப்படையில், தற்காலிக வித்தியாசங்கள் திருப்பப்படும்போது பிரயோகிப்பதற்கு எதிர்பார்க்கப்படும் வரி வீதங்களில் அளவிடப்படுகின்றது.
ஒரு ஒத்திவைக்கப்பட் வரிச் சொத்தானது பயன்படுத்தப்படாத வரி நட்டங்கள் மற்றும் கழிக்கத்தக்க தற்காலிக வித்தியாசங்களுக்கு, எதிர்கால வரிவிதிக்கத்தக்க இலாபங்கள் கிடைக்கத்தக்கதாய் உள்ளதுடன் அதற்கெதிராக அவை பயன்படுத்தப்படுவதற்கான சாத்தியத்தின் அளவிற்கு அங்கீகரிக்கப்படுகின்றது.
ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்துக்கள் ஒவ்வொரு அறிக்கையிடப்படும் திகதியிலும் மீளாய்வு செய்யப்படுவதுடன் தொடர்புடைய வரி நலனின் எய்தப்பெறுதல் சாத்தியப்படாது இருக்குமாயின் அந்த அளவுக்கு குறைக்கப்படும்.

2.4.3 ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

(அ) கிரயம் மற்றும் பெறுமதியிடல்
ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களது அனைத்து உருப்படிகளும் ஆரம்பத்தில் கிரயத்தில் பதிவிடப்படுகின்றன. கிரயமானது கையகப்படுத்தல் மற்றும் கட்டுமானம் ஆகியவற்றுடன் நேரடியாக உடைமையாக்கத்தக்க செலவினங்களை உள்ளடக்குகின்றது. காணி மற்றும் கட்டிடங்கள் மற்றும் விமானச் சமையலறை உபகரணங்கள் பின்னர் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருப்பின், அத்தகைய மீள்மதிப்பீடு செய்யப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட தொகைகளிலிருந்து ஏதேனும் பின்னரான அவற்றிலான பெறுமானத்தேய்வு மற்றும் வலுக்குன்றல் என்பவை கழிக்கப்பட்டு கொண்டு செல்லப்படுகின்றது. ஏனைய அனைத்து ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் வரலாற்றுக் கிரயத்திலிருந்து பெறுமானத்தேய்வு மற்றும்/அல்லது ஏதேனும் திரண்ட வலுக்குன்றல் நட்டங்கள் என்பன கழிக்கப்பட்டு குறிப்பிடப்படுகின்றன.

மீள்மதிப்பீட்டு தொகைகளில் அளவிடப்பட்ட காணி மற்றும் கட்டிடங்கள் மற்றும் விமான சமையலறை உபகரணங்களிலான ஏதேனும் மீள்மதிப்பீட்டு மிகைகள் ஏனைய விரிவான வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்டு உரித்துவத்தில் மீள்மதிப்பீட்டு ஒதுக்கமாக திரட்டிக்கொள்ளப்படுகின்றது. இதற்கு விதிவிலக்காக, இலாபம் அல்லது நட்டக் கூற்றில் முன்னர் அங்கீகரிக்கப்பட்ட அதே சொத்திலான ஒரு மீள்மதிப்பீட்டு வீழ்ச்சியினை திருப்பும் அளவிற்கு அவ்வதிகரிப்பானது இலாபம் மற்றும் நட்டக் கூற்றில் அங்கீகரிக்கப்படும். ஓர் மீள்மதிப்பீட்டு பற்றாக்குறையானது இலாபம் அல்லது நட்டக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது. இதற்கு விதிவிலக்காக, சொத்து மீள்மதிப்பீட்டு ஒதுக்கத்தில் அங்கீகரிக்கப்பட்ட அதே சொத்திலான ஓர் நடைமுறையிலுள்ள மிகையினை ஈடுசெய்கின்றது.

மீள்மதிப்பீடு செய்யப்பட்ட சொத்தின் நியாயப் பெறுமதியானது அதன் கொண்டு செல்லப்படும் தொகையிலிருந்து வித்தியாசப்படாததை உறுதிப்படுத்துவதற்காக ஒரு போதுமை நிகழ்மையுடன் பெறுமதியிடல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. அதன்பின்னரான கிரயங்கள் சொத்தின் கொண்டுசெல்லப்படும் தொகையினுள் உள்ளடக்கப்படுகின்றது அல்லது ஓர் தனிப்பட்ட சொத்தாக, உகந்தவாறு அங்கீகரிக்கப்படுகின்றது. இது அந்த உருப்படியுடன் இணைந்த எதிர்கால பொருளாதார நலன்கள் கம்பனிக்கு உள்வரும் மற்றும் கிரயமானது நியாயமானவாறு அளவிடக்கூடியதாயிருக்கலாம் எனும் சாத்தியப்பாடு காணப்பட்டால் மாத்திரமே மேற்கொள்ளப்படுகின்றது.

பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்புச் செலவினங்கள் அவை ஏற்பட்ட காலப்பகுதியில் இலாபம் மற்றும் நட்டக் கூற்றில் கட்டணமிடப்படும்.

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் ஏனையவற்றுக்கிடையில் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது:

**(i) விமானத்தின் சுழற்சி உதிரிப்பாகங்கள்**
விமானத்தினது சுழற்சி உதிரிப்பாகங்கள், இவை உருவச் சொத்துக்களாக கருதப்படுகின்றன, ஆரம்பத்தில் கிரயத்தில் பதிவிடப்பட்டு அதன் மதிப்பிடப்பட்ட பயனுள்ள வாழ்நாள் காலத்தில் பெறுமானத்தேய்வு செய்யப்படுகின்றன. இந்த உருப்படியானது "விமானம் தொடர்பான உபகரணம்" இன் கீழ் ஒன்றுசேர்க்கப்பட்டுள்ளன.

**(ii) மூலதன நடப்பு வேலைகள்**
மூலதன நடப்பு வேலைகள் அதன் கிரயத்தில் குறிப்பிடப்படுவதுடன் அவை கையகப்படுத்தப்பட்ட தினத்திலிருந்து செயல்நிலைப்படுத்தப்பட்ட திகதி வரையான கட்டணப்படுத்தப்படும் அனைத்து செலவினங்களையும் உள்ளடக்கும். செயல்நிலைப்படுத்தப்பட்டதன் பின்னர், மூலதன நடப்பு வேலைகள் ஆதனம், பொறி மற்றும் உபகரணம் என்பவற்றின் கீழ்வரும் பொருத்தமான வகுப்பிற்கு மாற்றல் செய்யப்படுவதுடன் அதன் மதிப்பிடப்பட்ட பயன்பாட்டு வாழ்நாள் வரை பெறுமானத்தேய்வு செய்யப்படுகின்றன.

(ஆ) பெறுமானத்தேய்வு
பெறுமானத்தேய்விற்கான ஏற்பாடானது நேர்கோட்டு முறையினை பயன்படுத்தி அதன் கிரயத்தில் அல்லது அவற்றின் பெறுமதியிடல்களில் கணிப்பிடப்படுகின்றது. இறையிலி நிலம் தவிர்ந்த அனைத்து ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களில் இது கணிப்பிடப்படுகின்றது. அத்தகைய தொகைகளை பதிவழிப்பதற்காக சமனான தவணைகளில் பின்வரும் மதிப்பிடப்பட்ட பயன்பாட்டு வாழ்நாட்கள் பயன்படுத்தப்படுகின்றன.

| | |
|---|---|
| விமானம் தொடர்பான உபகரணங்கள் | 8 வருடங்கள் அல்லது குத்தகைக் காலம் இவற்றில் குறைந்தது |
| பொறி மற்றும் உபகரணங்கள் | உபகரணத்தின் அடிப்படையில் 3 இலிருந்து 10 வருடங்கள் வரையான காலப்பகுதி |
| கட்டிடங்கள் | எதிர்பார்க்கப்படும் பயன்பாட்டு வாழ்நாட்கள் 15 முதல் 50 வருடங்கள் வரை |

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் (தொடர்ச்சி.)

| | |
|---|---|
| குத்தகையிலுள்ள விமானங்களிலான மேம்படுத்தல்கள் | குத்தகைக் காலம் அல்லது 10 வருடங்கள் எது குறைவானதோ |

எஞ்சிய பெறுமதிகள், பயன்பாட்டு வாழ்நாட்கள் மற்றும் பெறுமானத்தேய்வு முறை என்பன ஒவ்வொரு அறிக்கையிடப்படும் திகதியிலும் மீளாய்வு செய்யப்பட்டு பொருத்தமானவாறு பெரும்பாலும் செம்மையாக்கப்படுகின்றன.

மேற்குறிப்பிடப்பட்ட பெறுமானத்தேய்வு வீதங்கள் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள அனைத்து காலப்பகுதிக்கும் பிரயோகிக்கப்பட்டுள்ளன.

(இ) அங்கீகரிப்பு நீக்கம்
ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் ஒரு உருப்படியானது அது விற்பனை செய்யப்பட்டால் அல்லது அதன் பயன்பாட்டிலிருந்து அல்லது விற்பனையிலிருந்து எவ்வித எதிர்கால பொருளாதார நலன்களும் எதிர்பார்க்கப்படாவிட்டால் அது அங்கீகரிப்பு நீக்கம் செய்யப்படுகின்றது. சொத்தினது அங்கீகரிப்பு நீக்கத்தில் எழும் ஏதேனும் இலாபம் அல்லது நட்டம் (சொத்தின் கொண்டு செல்லல் தொகைக்கும் மற்றும் அதன் தேறிய விற்பனைத் தொகைக்கும் இடையேயான வித்தியாசமாக கணிப்பிடப்படுகின்றது) சொத்து அங்கீகரிப்பு நீக்கம் செய்யப்பட்ட அறிக்கையிடப்படும் காலப்பகுதியில் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் உள்ளடக்கப்படுகின்றது.

2.4.4 அருவச் சொத்துக்கள்
அருவச் சொத்துக்கள், சொத்துக்களின் உடமையாக்கலுக்கு சாத்தியப்படக்கூடிய எதிர்கால பொருளாதார நலன்கள் நிறுவனத்திற்கு உட்பாய்ச்சப்படுதல் மற்றும் சொத்துக்களின் கிரயமானது நம்பிக்கையுடன் அளவிடப்படமுடியுமாயின் அங்கீகரிக்கப்படுகின்றன. இதற்கமைய இந்தச் சொத்துக்கள் நிதி நிலைமைக் கூற்றில் கிரயத்திலிருந்து திரண்ட பெறுமதிகுறைப்புகள் மற்றும் ஏதேனும் திரண்ட வலுக்குன்றல் நட்டங்களைக் கழித்ததன் பின்னர் குறிப்பிடப்படுகின்றது.

கையகப்படுத்தும் அல்லது விருத்திசெய்யப்படும் கணினி மென்பொருளானது அதனுடன் தொடர்புடைய வன்பொருளிலிருந்து பிரித்தெடுக்க இயலுமாயின் அதன் கிரயமானது தனியாக மூலதனமயமாக்கப்பட்டு 5 வருடங்களுக்கு விஞ்சாத காலப்பகுதியில் ஓர் நேர்கோட்டு அடிப்படையில் பெறுமதி குறைப்பு செய்யப்படுகின்றது. ஒவ்வொரு அறிக்கையிடப்படும் திகதியிலும் பெறுமதிக் குறைப்பு காலம் மற்றும் பெறுமதிக் குறைப்பு முறையானது மீளாய்வு செய்யப்படுகின்றன. ஒவ்வொரு அறிக்கையிடப்படும் திகதியிலும் இந்த சொத்தின் கொண்டுசெல்லப்படும் பெறுமதியானது, சூழ்நிலைகளிலான நிகழ்வுகள் அல்லது மாற்றங்கள் கொண்டுசெல்லப்படும் பெறுமதியினை மீளப்பெற இயலாது எனக் குறிப்பிடின் வலுக்குன்றலுக்காக மீளாய்வு செய்யப்படுகின்றது.

2.4.5 குத்தகைகள்
ஓர் ஒப்பந்தத்தின் ஆரம்பத்தில், குழுமமானது அவ் ஒப்பந்தம் ஒரு குத்தகையா அல்லது ஓர் குத்தகையினை உள்ளடக்கியுள்ளதா என்று மதிப்பீடு செய்கின்றது. ஒப்பந்தமானது ஒரு இனங்காணப்பட்ட சொத்தினை ஒரு காலப்பகுதிக்கு ஒரு மறுபயனுக்கு பரிமாற்றல் செய்யப்பட்டு அதன் பயன்பாட்டினை கட்டுப்படுத்துவதற்கான உரிமையினை தெரிவிக்குமாயின் அவ் ஒப்பந்தம் ஒரு குத்தகை எனப்படும் அல்லது இவற்றைக் கொண்டிருந்தால் குத்தகை எனப்படும். ஒரு இனங்காணப்பட்ட சொத்தின் பயன்பாட்டினை கட்டுப்படுத்துவதற்கான உரிமையினை ஒரு ஒப்பந்தம் தெரிவிக்கின்றதா என்பதை மதிப்பிடுவதற்காக குழுமமானது பின்வருவனவற்றை மதிப்பீடு செய்கின்றது :-

- ஒப்பந்தம் ஒரு இனங்காணப்பட்ட சொத்தின் பயன்பாட்டினை உள்ளடக்கியுள்ளது - இது வெளிப்படையாக அல்லது மறைமுகமாக குறிப்பிடப்படலாம் மற்றும் பௌதீகரீதியாக வேறுபட்டிருத்தல் வேண்டும் அல்லது ஒரு பௌதீகரீதியான வேறுபட்ட சொத்தின் கொள்திறன் அனைத்தையும் கணிசமானளவு பிரதிநிதித்துவம் செய்திருத்தல் வேண்டும். வழங்குநர் வலிமையுடைய பதிலீட்டு உரிமையினை கொண்டிருந்தால், சொத்தானது அங்கீகரிக்கப்படாது
- குழுமமானது சொத்தின் பயன்பாட்டிலிருந்து பயன்பாட்டுக்காலம் முழுவதும் அனைத்து பொருளாதார நலன்களையும் கணிசமானளவுக்கு பெற்றுக்கொள்வதற்கான உரிமை மற்றும்
- குழுமமானது சொத்தின் பயன்பாட்டினை வழிநடத்துவதற்கான உரிமையினை கொண்டுள்ளது. குழுமமானது சொத்தை எவ்வாறு பயன்படுத்துவது மற்றும் என்ன நோக்கத்திற்காக பயன்படுத்துவது என்று மாற்றுவதற்கு மிகவும் பொருத்தமான தீர்மானம் மேற்கொள்ளும் உரிமைகளைக் கொண்டிருந்தால் இந்த உரிமையினை கொண்டிருக்கும். அரிதான சந்தர்ப்பங்களில், சொத்தானது எவ்வாறு மற்றும் எந்த நோக்கத்திற்காக பயன்படுத்தப்படல் வேண்டும் என்ற தீர்மானம் முன்னரே தீர்மானிக்கப்பட்டிருந்தால், பின்வரும் சந்தர்ப்பங்களில் குழுமத்திற்கு சொத்தின் பயன்பாட்டினை வழிநடத்துவதற்கான உரிமையினைக் கொண்டிருக்கும் :-
  - சொத்தினை செயற்படுத்துவதற்கான உரிமையினை குழுமம் கொண்டுள்ளது அல்லது
  - குழுமமானது சொத்தானது எவ்வாறு மற்றும் என்ன நோக்கத்திற்காக பயன்படுத்தப்படும் என்று முன்தீர்மானிக்கும் விதத்தில் சொத்தினை வடிவமைத்திருந்தால்.

ஒரு குத்தகை கூறினை உள்ளடக்கியுள்ள ஒரு ஒப்பந்தத்தின் ஆரம்பத்தில் அல்லது அதன் மீள்மதிப்பீட்டில், குழுமமானது ஒப்பந்தத்திலுள்ள மறுபயனை ஒவ்வொரு குத்தகை கூறுக்கும் அவற்றின் பொருத்தமான தனியான விலைகளின் அடிப்படையில் ஒதுக்குகின்றது.

எவ்வாறாயினும், காணி மற்றும் கட்டிடங்களின் குத்தகையில் அது குத்தகையாளராக இருந்தால், குழுமமானது குத்தகையல்லாத கூறுகளை பிரிக்காது குத்தகை மற்றும் குத்தகையல்லாத கூறுகளை ஒரு தனியான குத்தகை கூறாக காண்பிப்பதற்கு தெரிவு செய்துள்ளது.

2.4.5.1 பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்கள் (ப.உ.சொ.)
குழுமமானது ஒரு பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்தினையும் மற்றும் ஒரு குத்தகை பொறுப்பினையும் குத்தகை ஆரம்பிக்கப்பட்ட திகதியில் அங்கீகரிக்கின்றது. பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்தானது ஆரம்பத்தில் கிரயத்தில் அளவிடப்படுவதுடன் இது பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது. ஆரம்பத் தொகையான குத்தகை பொறுப்பினை, ஆரம்பிக்கப்பட்ட திகதியில் அல்லது அதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட ஏதேனும் குத்தகை கொடுப்பனவுகளுக்கு செம்மையாக்கப்பட்டு, ஏதேனும் ஆட்பட்ட ஆரம்ப நேரடிச் செலவுகள் மற்றும் உள்ளார்ந்த சொத்தினை கழற்றுவதற்கான மற்றும் அகற்றுவதற்கான ஒரு மதிப்பிடப்பட்ட செலவுகள் அல்லது உள்ளார்ந்த சொத்தினை புனருத்தாரணம் செய்வதற்கு அல்லது அது நிறுவப்பட்டுள்ள தளத்தினை புனருத்தாரணம் செய்வதற்கு, அதிலிருந்து ஏதேனும் பெறப்பட்ட குத்தகை சலுகைகளை கழித்தல் என்பனவாகும்.

(அ) விமானங்கள் மற்றும் உதிரி என்ஜின்களின் குத்தகை
கம்பனியானது விமானங்களையும் என்ஜின்களையும் அதன் வானூர்தி தொகுதியில் குத்தகைக்கு எடுக்கின்றது. விமானங்கள் மற்றும் உதிரி என்ஜின்களின் குத்தகையானது பொதுவாக 4 முதல் 12 வருடங்களுக்கு செல்லுபடியாகும்.

விமானக் குத்தகைகள் விமானத்தினை திருப்பிக் கொடுக்கும் நிலைமைக்கான ஏற்பாட்டினை உள்ளடக்குகின்றது குத்தகையாளரினால் உள்ளார்ந்த சொத்தினை நியதிகள் மற்றும் நிபந்தனைகளினால் (குறிப்பு 16.2) தேவைப்படும் நிலைமைக்கு

புனருத்தாரணம் செய்வதற்கு ஆட்படும் செலவினங்களிலான ஒரு மதிப்பீடானது கடப்பாடு உருவாக்கப்பட்டவுடன் பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துடன் கூட்டப்படுகின்றது. ஏனைய விமான பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் செலவினங்கள் (விமானத்தின் கனமான பராமரிப்பு, என்ஜின் பழுதுபார்ப்பு மற்றும் தரையிறக்கல் பொறி பழுதுபார்த்தல் செலவினங்கள் தவிர்த்தவை) ஒரு ஆட்பட்ட அடிப்படையில், பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கையானது குறிப்பு 2.4.15 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

குத்தகையின் ஆரம்பத்தில் கொடுப்பனவு செய்யப்பட்ட வைப்பானது மற்றும் ஏனைய குத்தகைக் கொடுப்பனவுகள் அனைத்தும் அதே கொடுக்கல் வாங்கலிலிருந்து உருவாகின்றது. எனவே, ஆரம்பத்தில் செலுத்தப்பட்ட வைப்பின் முதல் தொகைக்கும் மற்றும் நிகழ்காலப் பெறுமதிக்கும் இடையேயான வித்தியாசமானது குத்தகையாளரால் செலுத்தப்படவேண்டிய ஒரு மேலதிகத் தொகையாக கருதப்படுகின்றது.

வைப்பானது SLFRS 9 இன் நோக்கெல்லையினுள் காணப்படுவதுடன் இது ஆரம்பத்தில் நியாயப் பெறுமதியில் கணக்கீடு செய்யப்படல் வேண்டுமென்பதுடன் முதல் தொகைக்கும் வைப்பினது நியாயப் பெறுமதிக்கும் இடையேயான மிகையானது SLFRS 16 குத்தகைகள் நோக்கெல்லையினுள் காணப்படுதல் வேண்டும். வைப்புக்களுக்கான கணக்கீட்டுக் கொள்கைகள் குறிப்பு 2.4.9 இன் கீழ் வழங்கப்பட்டுள்ளது.

12 மாதங்களுக்குள் குத்தகைக் காலம் நிறைவடையும் விமானக் குத்தகைகள் கருத்திலெடுக்கப்படாது குறுங்கால குத்தகைகள் போன்று கணக்கீடு செய்யப்பட்டு இலாபம் அல்லது நட்டக் கூற்றில் விமானக் குத்தகை வாடகைகளின் கீழ் உள்ளடக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

(ஆ) காணி மற்றும் கட்டிடங்களின் குத்தகை

குழுமமானது இலங்கையிலும் மற்றும் வெளிநாடுகளிலும் அதன் காணி மற்றும் கட்டிடங்களை குத்தகைக்கு எடுக்கின்றது. காணி மற்றும் கட்டிடங்களின் குத்தகையானது பொதுவாக 2 முதல் 8 வருடங்களுக்கு செல்லுபடியாகும். சில காணி மற்றும் கட்டிடங்களின் குத்தகையானது, ரத்து செய்யப்படமுடியாத ஒப்பந்தக் காலப்பகுதிக்கு முன்னர் குழுமத்தினால் நிறைவேற்றக்கூடிய விரிவாக்கல் தெரிவுரிமைகளைக் கொண்டிருக்கும். செயல்படுத்தத்தக்கவாறு, குழுமமானது புதிய குத்தகைகளில் செயற்பாட்டு நெகிழ்வுத்தன்மையினை வழங்குவதற்காக விரிவாக்கல் தெரிவுரிமைகளை உள்ளடக்குவதற்கு முனைகின்றது. வைத்திருக்கப்படும் விரிவாக்கல் தெரிவுரிமைகள் குழுமத்தினால் மாத்திரமே கையாளப்படலாம், குத்தகைக்கு விடுபவரினால் இயலாது.

குத்தகையின் ஆரம்பத்தில் குழுமமானது விரிவாக்கல் தெரிவுரிமைகளை கையாளுவதற்கு நியாயமான நிச்சயம் உள்ளதா என்று மதிப்பீடு செய்கின்றது. குழுமமானது அதன் கட்டுப்பாட்டினுள் உள்ள சூழ்நிலைமைகளில் குறிப்பிடத்தக்க மாற்றம் அல்லது குறிப்பிடத்தக்க நிகழ்வு காணப்படுமாயின் தெரிவுரிமைகளை கையாளுவதற்கு நியாயமான நிச்சயம் உள்ளதா என்று மீள்மதிப்பீடு செய்கின்றது.

(இ) வாகனங்களது குத்தகை

குழுமத்தின் வாகனக் குத்தகைகள் 2 முதல் 5 வருடக் காலப்பகுதியினைக் கொண்டதாகும்.

(ஈ) த.தொ. மற்றும் ஏனைய உபகரணங்களின் குத்தகை

குழுமமானது தகவல் தொழில்நுட்ப உபகரணங்கள் மற்றும் ஏனைய இயந்திரங்களை ஒரு வருடம் முதல் மூன்று வருடங்கள் வரையான ஒப்பந்தக் காலப்பகுதிக்கு குத்தகைக்கு எடுக்கின்றது. இந்த குத்தகைகள் குறுங்காலம் மற்றும்/அல்லது குறைவான பெறுமதியிலான உருப்படிகளின் குத்தகைகளாகும். இந்த குத்தகைகளுக்கு பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்கள் மற்றும் குத்தகை பொறுப்புக்களை அங்கீகரிக்காது இருப்பதற்கு தெரிவுசெய்துள்ளது. உரிய குத்தகைக் கொடுப்பனவுகள் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்களிலான பெறுமானத்தேய்வு**

ஆரம்ப திகதியிலிருந்து, பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்தினது பயன்பாட்டு வாழ்நாளின் இறுதி அல்லது குத்தகை காலப்பகுதியின் இறுதி இவற்றில் எது முன்னர் வருகிறதோ அதற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் நேர்கோட்டு முறையினை பயன்படுத்தி பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்தானது பின்னர் பெறுமானத்தேய்வு செய்யப்படுகின்றது. ஆதனம் மற்றும் உபகரணம் போன்ற அதே அடிப்படையிலேயே பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்களின் மதிப்பீடுசெய்யப்பட்ட பயன்பாட்டு வாழ்நாட்கள் தீர்மானிக்கப்படுகின்றன. இதற்கும் மேலாக, பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்தானது வலுக்குன்றல் நட்டங்களினால், ஏதேனும் இருப்பின், காலாகாலம் குறைக்கப்படுவதுடன் மற்றும் குத்தகை பொறுப்பின் சில மீள்அளவீடுகளுக்காக செம்மையாக்கப்படுகின்றன.

2.4.5.2 குத்தகைப் பொறுப்பு

ஆரம்பிக்கப்பட்ட திகதியில் கொடுப்பனவு செய்யப்படாத குத்தகைக் கொடுப்பனவுகளின் நிகழ்காலப் பெறுமதியில் குத்தகைப் பொறுப்பானது ஆரம்பத்தில் அளவீடு செய்யப்படுகின்றது. இது குத்தகையின் உள்ளார்ந்த வட்டி வீதத்தினை பயன்படுத்தி கழிவிறக்கம் செய்யப்படுகின்றது அல்லது, அந்த வட்டி வீதமானது உடனடியாக தீர்மானிக்கப்படமுடியாவிடின், குழுமத்தின் அதிகரிக்கும் முறை கடன்பெறல் வட்டி வீதத்தினாலாகும். பொதுவாக, குழுமமானது அதன் அதிகரிக்கும் முறை கடன்பெறல் வட்டிவீதத்தினை கழிவு வீதமாக பயன்படுத்துகின்றது.

குத்தகை பொறுப்பு அளவீட்டில் உள்ளடக்கப்பட்டுள்ள குத்தகை கொடுப்பனவுகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:

- நிலையான கொடுப்பனவுகள், பொருளிலான நிலையான கொடுப்பனவுகள் உள்ளடங்களாக்
- ஒரு சுட்டி அல்லது ஒரு வட்டி வீதத்தில் தங்கியுள்ள மாற்றமடையும் குத்தகைக் கொடுப்பனவுகள், ஆரம்பித்த திகதியில் சுட்டி அல்லது வட்டிவீதத்தினை பயன்படுத்தி ஆரம்பநிலையில் அளவிடப்படுகின்றது
- ஓர் எஞ்சிய பெறுமதி உத்தரவாதத்தின் கீழ் செலுத்துவதற்கு எதிர்பார்க்கப்படும் தொகைகள் மற்றும்
- ஓர் கொள்வனவு தெரிவுரிமையின் கீழ் உள்ள கையாளுதல் விலையினை குழுமமானது நிச்சயமாக கையாளும் என நியாயமாக காணப்பட்டால், குழுமமானது ஒரு நீடிப்பு தெரிவுரிமையினை கையாளும் என நியாயமான நிச்சயம் காணப்பட்டால் ஒரு தெரிவுரிமையுள்ள புதுப்பித்தல் காலத்தில் குத்தகை கொடுப்பனவுகள், மற்றும் குழுமமானது முன்னரே முடிவுறுத்தும் என நியாயமான நிச்சயம் காணப்பட்டாலொழிய ஓர் குத்தகையினை முன்னர் முடிவுறுத்துவதற்கான தண்டப்பணங்கள்.

குத்தகை பொறுப்பானது பயனுறுதிமிக்க வட்டி முறையினை பயன்படுத்தி பெறுமதிக் குறைப்பு கிரயத்தில் அளவிடப்படுகின்றது. இது பின்வரும் சந்தர்ப்பங்களில் மீள்அளவீடு செய்யப்படுகின்றது. ஓர் சுட்டியில் அல்லது வட்டிவீதத்திலிருந்தான ஓர் மாற்றத்திலிருந்து எழக்கூடிய எதிர்கால குத்தகை கொடுப்பனவுகளிலான மாற்றம் காணப்பட்டால், ஓர் எஞ்சிய பெறுமதி உத்தரவாதத்தின் கீழ் செலுத்தவேண்டிய எதிர்பார்க்கும் தொகையினது குழுமத்தின் மதிப்பீட்டில் ஒரு மாற்றம் காணப்பட்டால், அல்லது குழுமமானது ஓர் கொள்வனவினை, ஓர் நீடிப்பினை அல்லது முடிவுறுத்தல் தெரிவுரிமையினை கையாளுமா என்ற அதன் மதிப்பீட்டினை குழுமம் மாற்றியிருந்தால்.

குத்தகை பொறுப்பானது இவ்வாறு மீளஅளவிடப்படும்போது, ஓர் ஏற்புடைய செம்மையாக்கல் பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்தின் கொண்டு செல்லல் தொகையில் மேற்கொள்ளப்படும் அல்லது பயன்படுத்துவதற்கு

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் (தொடர்ச்சி.)

உரிமையுள்ள சொத்தின் கொண்டுசெல்லல் தொகையானது பூச்சியத்திற்கு குறைக்கப்பட்டிருந்தால் அது இலாபம் அல்லது நட்டத்தில் பதியப்படுகின்றது

### 2.4.5.3 குறுங்கால குத்தகைகள் மற்றும் குறைந்த பெறுமதியிலான சொத்துக்களின் குத்தகைகள்

தகவல் தொழில்நுட்ப உபகரணங்கள் உள்ளடங்கலான குறைவான பெறுமதியுடைய சொத்துக்களது குத்தகைகளுக்கு அல்லது 12 மாதங்கள் அல்லது அதற்கு குறைவான குத்தகை காலத்தினைக் கொண்ட குறுங்கால குத்தகைகளுக்கு பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்கள் மற்றும் குத்தகை பொறுப்புக்களை அங்கீகரிக்காது இருப்பதற்கு குழுமமானது தெரிவுசெய்துள்ளது. குழுமமானது இந்த குத்தகைகளுடன் இணைந்த குத்தகை கொடுப்பனவுகளை குத்தகைக் காலப்பகுதியில் ஓர் நேர்கோட்டு அடிப்படையில் ஓர் செலவினமாக அங்கீகரிக்கின்றது.

### 2.4.5.4 கோவிட் 19 - தொடர்பான வாடகைச் சலுகைகள்

குழுமமானது கோவிட்-19 தொடர்பான வாடகைச் சலுகைகள் - IFRS 16 க்கான திருத்தங்களைப் பிரயோகித்துள்ளது. குழுமமானது நடைமுறை உபாயங்களைப் பிரயோகித்துள்ளதுடன் இது கோவிட்-19 தொற்றின் நேரடி விளைவான தகமையுடைய வாடகைச் சலுகைகள் குத்தகைத் திருத்தங்களா என மதிப்பிடாதிருப்பதற்கு அனுமதிக்கின்றது. ஒத்த பண்புகள் மற்றும் ஒத்த சூழ்நிலைகளுடனான ஒப்பந்தங்களுக்கு குழுமமானது தொடர்ச்சியாக நடைமுறை உபாயங்களை பிரயோகிக்கின்றது. குத்தகைகளிலான வாடகைச் சலுகைகளுக்கு நடைமுறை உபாயங்களை பிரயோகிக்காமலிருப்பதற்கு குழுமம் தெரிவுசெய்யும்போது, அல்லது நடைமுறை உபாயங்களுக்கு தகமையற்று காணப்படும்போது, குழுமமானது ஒரு குத்தகை திருத்தம் உள்ளதா என மதிப்பீடு செய்கின்றது.

### 2.4.6 இருப்புக்கள்

இருப்புக்கள் விமானம் மற்றும் தரைச் சேவைகள் தொடர்பான கையிருப்புகள், மூலப் பொருட்கள் மற்றும் நுகர்வுப்பொருட்களை உள்ளடக்குகின்றது.

இருப்புக்கள், கிரயம் மற்றும் தேறிய கைகூடத்தக்க பெறுமதியில் எது குறைவானதோ அதில் குறிப்பிடப்படுகின்றது. இருப்புக்களின் கிரயமானது, கொள்வனவுகள் கிரயம், மாற்றுதல் கிரயம், மற்றும் இருப்புக்களை தற்போதைய இடம் மற்றும் நிலைமைக்கு கொண்டுவருவதற்கு ஆட்பட்ட ஏனைய கிரயங்கள் போன்றவற்றின் கூட்டுத்தொகையாகும்.

இருப்புக்களின் கிரயத்தினை கணிப்பிடுவதற்கு நிறையிடப்பட்ட சராசரி கிரய முறையானது பிரயோகிக்கப்படுகின்றது. தேறிய கைகூடக்கூடிய பெறுமதியானது பின்வருவனவற்றை பிரதிபலிக்கின்றது. விற்பனை விலையிலிருந்து அனைத்து மதிப்பிடப்பட்ட நிறைவடைதல் கிரயங்கள் மற்றும் விற்பனையொன்றை மேற்கொள்வதற்கு தேவைப்படும் கிரயங்கள் என்பவற்றை கழித்து பெறப்படும்.

### 2.4.7 நிதியல்லாத சொத்துக்களின் வலுக்குன்றல்

ஒவ்வொரு அறிக்கையிடப்படும் திகதியிலும் குழுமமானது ஏதேனும் ஒரு சொத்து வலுக்குன்றக்கூடிய அறிகுறி தென்படுகின்றதா என்று மதிப்பிடுகின்றது. அத்தகைய அறிகுறிகள் காணப்பட்டால், அல்லது ஒரு சொத்திற்கு வருடாந்த வலுக்குன்றல் பரிசோதனை தேவைப்படின், குழுமமானது சொத்துக்களின் மீளப்பெறத்தக்க தொகையில் ஓர் மதிப்பீட்டினை மேற்கொள்கின்றது. சொத்தொன்றின் கொண்டு செல்லல் தொகையானது அதன் மீளப்பெறத்தக்க தொகையினை விஞ்சியிருப்பின், சொத்தானது வலுக்குன்றியுள்ளதாக கருதப்பட்டு அதன் மீளப்பெறத்தக்க பெறுமதிக்கு குறைத்தெழுதப்படும்.

கோவிட் - 19 தொற்றினைத் தொடர்ந்து, குழுமமானது அறிக்கையிடப்படும் திகதியில் நிதியல்லாத சொத்துக்களில் (பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்கள் உள்ளடங்கலாக) ஏதேனும் குறிப்பிடத்தக்க வலுக்குன்றல் காணப்படுகின்றதா என்று கருதுவதற்காக ஒரு பகுப்பாய்வினை செய்கின்றது. இந்த பகுப்பாய்வின் அடிப்படையில், 31 மார்ச் 2022 இல் எவ்விதமான வலுக்குன்றல்களும் இனங்காணப்படவில்லை.

### 2.4.8 நியாயப் பெறுமதி அளவீடு

குழுமமானது அதன் காணி மற்றும் கட்டிடங்கள் மற்றும் விமான சமையலறை உபகரணங்களை நியாயப் பெறுமதியில் அளவீடு செய்கின்றது. நியாயப் பெறுமதி தொடர்பான வெளிப்படுத்தல்கள் குறிப்பு 04 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

நியாயப் பெறுமதி என்பது அளவிடப்படும் திகதியில் சந்தைப் பங்குபற்றுநர்களிடையேயான ஒழுங்கான கொடுக்கல் வாங்கலில் ஒரு சொத்தினை விற்பனை செய்வதற்கு பெறப்படும் விலை அல்லது ஒரு பொறுப்பினை மாற்றல் செய்வதற்கு செலுத்தப்படும் விலை எனப் பொருள்படும். நியாயப் பெறுமதி அளவீடானது சொத்தை விற்பனை செய்யும் கொடுக்கல் வாங்கல் அல்லது பொறுப்பினை மாற்றல் செய்யும் கொடுக்கல் வாங்கல் பின்வரும் இரு விதங்களில் இடம்பெறும் உத்தேசத்தின் அடிப்படையிலாகும்.

- சொத்து அல்லது பொறுப்புக்கான முதன்மை சந்தையில், அல்லது
- முதன்மை சந்தையொன்று காணப்படாவிடின், சொத்து அல்லது பொறுப்பிற்கான மிகவும் சாதகமான சந்தை.

முதன்மை சந்தை அல்லது மிகவும் சாதகமான சந்தை குழுமத்தினால் அணுகக்கூடியதாயிருத்தல் வேண்டும்.

அத்தகைய சொத்துக்களின் நியாயப் பெறுமதியானது சந்தைப் பங்குபற்றுநர்கள் சொத்தினை அல்லது பொறுப்பினை விலையிடும்போது பயன்படுத்துவார்கள் என்ற அனுமானத்தினை பயன்படுத்தியும், சந்தை பங்குபற்றுனர்கள் அவர்களது சிறந்த பொருளாதார நலனுக்காக செயற்படுகின்றார்கள் என்ற அனுமானம் என்பவற்றில் அளவீடு செய்யப்படுகின்றது.

நிதியல்லாத சொத்துக்களின் நியாயப் பெறுமதி அளவீடானது, சொத்தினை அதன் உயர்ந்த மற்றும் சிறந்த பயன்பாட்டினை பயன்படுத்துவதன் மூலம் அல்லது அதனை இன்னுமோர் சந்தை பங்குபற்றுநருக்கு விற்பனை செய்வதன் மூலம், அச்சந்தை பங்குபற்றுநர் சொத்தினை அதன் உயர்ந்த மற்றும் சிறந்த பயன்பாட்டினை பயன்படுத்துவார், பொருளாதார நலன்களை உருவாக்கும் சந்தைப் பங்குபற்றுநரின் ஆற்றலை கணக்கிலெடுக்கின்றது.

குழுமமானது சூழ்நிலைகளுக்கு பொருத்தமான பெறுமதியிடல்கள் நுட்பங்களை பயன்படுத்துவதுடன், நியாயப் பெறுமதியினை அளவீடு செய்வதற்காக இவற்றுக்கு போதுமான தரவுகள் கிடைக்கப்பெறுதல், பொருத்தமான அவதானிக்கக்கூடிய உள்ளீடுகளின் பயன்பாட்டினை அதிகரிக்கவும் அவதானிக்கமுடியாத உள்ளீடுகளின் பயன்பாட்டினை குறைத்தல் என்பவையாகும்.

நியாயப் பெறுமதி அளவிடப்பட்ட அனைத்து சொத்துக்களும் நியாயப் பெறுமதி படிநிலையினுள் வகைப்படுத்தப்பட்டு, நியாயப் பெறுமதி அளவீட்டிற்கு முழுவதுமாக குறிப்பிடத்தக்க ஆகக்குறைந்த மட்டத்திலான உள்ளீட்டின் அடிப்படையில் பின்வருமாறு விவரிக்கப்பட்டுள்ளன:

- மட்டம் 1 - ஒரேமாதிரியான சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களுக்கான உயிர்ப்புள்ள சந்தைகளில் உள்ள விலை கூறப்பட்ட (செம்மையாக்கப்படாத) சந்தை விலைகளில்
- மட்டம் 2 - நியாயப் பெறுமதி அளவீட்டிற்கு நேரடியாக அல்லது மறைமுகமாக அவதானிக்கக்கூடிய ஆகக்குறைந்த மட்டத்திலான குறிப்பிடத்தக்க உள்ளீடுகளைக் கொண்ட பெறுமதியிடல் நுட்பங்கள்

- மட்டம் 3 - நியாயப் பெறுமதி அளவீட்டிற்கு அவதானிக்கப்பட இயலாத ஆகக்குறைந்த மட்டத்திலான குறிப்பிடத்தக்க உள்ளீடுகளைக் கொண்ட பெறுமதியிடல் நுட்பங்கள்

மீளத்தோன்றும் அடிப்படையில் நிதிக் கூற்றுக்களில் அங்கீகரிக்கப்பட்ட சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களுக்கு, ஒவ்வொரு அறிக்கையிடப்படும் காலப்பகுதியிலும் வகைப்படுத்தலினை மீள்மதிப்பீடு செய்வதன்மூலம் படிநிலைகளின் மட்டங்களுக்கிடையில் ஏதேனும் மாற்றல்கள் இடம்பெற்றுள்ளதா என்று குழுமமானது தீர்மானிக்கின்றது. (நியாயப் பெறுமதி அளவீட்டிற்கு முழுவதுமாக குறிப்பிடத்தக்க குறைந்த மட்டத்திலான உள்ளீட்டின் அடிப்படையில்).

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் போன்ற குறிப்பிடத்தக்க சொத்துக்களின் பெறுமதியிடல்களில் வெளிவாரி மதிப்பீடு செய்பவர்கள் ஈடுபடுவார்கள். வெளிவாரி மதிப்பீடு செய்பவர்களை தேர்வு செய்வதற்கான கோட்பாடுகள் சந்தை அறிவு, நற்பெயர், சுயாதீனத்தன்மை மற்றும் தொழில்சார் நியமங்கள் பராமரிக்கப்படுதல் என்பவற்றை உள்ளடக்கும். குழுமமானது வெளிவாரி மதிப்பீடு செய்பவர்களுடனான கலந்துரையாடலின் பின்னர், ஒவ்வொரு விடயத்திலும் எந்த பெறுமதியிடல் நுட்பங்கள் மற்றும் உள்ளீடுகள் பயன்படுத்தப்படல் வேண்டும் என தீர்மானிக்கின்றது.

நியாயப் பெறுமதி வெளிப்படுத்தல்கள் நோக்கத்திற்காக, குழுமமானது சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களது வகுப்புகளை பின்வருவனவற்றின் அடிப்படையில் தீர்மானித்துள்ளது. தன்மை, சொத்து அல்லது பொறுப்பின் தனிச்சிறப்புகள் மற்றும் இடர்நேர்வுகள் மற்றும் மேலே குறிப்பிட்டுள்ளவாறு நியாயப் பெறுமதி படிநிலையிலான மட்டம்.

### 2.4.9 நிதியியல் கருவிகள்

#### 2.4.9.1 நிதிச் சொத்துக்கள்

**ஆரம்ப அங்கீகாரம் மற்றும் அளவீடு**
நிதியியல் சொத்துக்கள் பெறுமதி குறைப்புக் கிரயத்தில், ஏனைய விரிவான வருமானத்தினூடான நியாயப் பெறுமதி மற்றும் இலாபம் அல்லது நட்டத்தினூடான நியாயப் பெறுமதி என வகைப்படுத்தப்படுகின்றன.

நிதியியல் சொத்துக்கள் (இலாபம் அல்லது நட்டத்தினூடான நியாயப் பெறுமதியில் குறிப்பிடப்பட்ட சொத்துக்கள் உள்ளடங்கலாக) கருவியின் ஒப்பந்த ஏற்பாடுகளுக்கு குழுமமானது ஒரு தரப்பினராக வந்த வர்த்தகத் திகதியின் ஆரம்பத்தில் அங்கீகரிக்கப்படுகின்றது.

நிதியியல் சொத்தானது ஆரம்பத்தில் நியாயப் பெறுமதியில் அளவிடப்படுகின்றது. இலாபம் அல்லது நட்டத்தினூடான நியாயப் பெறுமதியில் காணப்படாத ஒரு உருப்படிக்கு, அதன் கொள்வனவு அல்லது வழங்கலுடன் நேரடியாக உடமையாக்கத்தக்க கொடுக்கல் வாங்கல் கிரயங்களை கருத்திலெடுக்கின்றது.

**பிற்பட்ட அளவீடு**
நிதியியல் சொத்துக்களின் வகுப்பிடலானது பொதுவாக ஒரு நிதியியல் சொத்தானது முகாமைப்படுத்தப்பட்டு அதன் ஒப்பந்தக் காசுப் பாய்ச்சல் பண்புகளையுடைய வணிக மாதிரிகளின் அடிப்படையிலானதாகும்.

ஒரு நிதியியல் சொத்தானது அது இலாபம் அல்லது நட்டத்தினூடான நியாயப் பெறுமதியில் குறிப்பிடப்படாத மற்றும் பின்வரும் நிபந்தனைகள் இரண்டையும் சந்திப்பின் அது பெறுமதிக்குறைப்புக் கிரயத்தில் அளவீடு செய்யப்படுகின்றது.

- ஒப்பந்தக் காசுப்பாய்ச்சல்களை திரட்டுவதற்காக வைத்திருக்கப்படும் சொத்துக்களை வைத்திருக்கும் நோக்கையுடைய ஒரு வணிக மாதிரியினுள் சொத்து வைத்திருக்கப்பட்டிருப்பின் மற்றும்
- நிலுவையிலுள்ள முதல் தொகையிலான முதல் மற்றும் வட்டிக் கொடுப்பனவுகளை மாத்திரம் கொண்ட குறிப்பிட்ட திகதிகளிலான காசுப்பாய்ச்சல்களுக்கு வழிசமைக்கும் நிதியியல் சொத்தின் ஒப்பந்த ஏற்பாடுகள்.

வர்த்தகத்திற்காக வைத்திருக்கப்படாத ஒரு உரித்துவ முதலீட்டின் ஆரம்ப அங்கீகாரத்தின்போது, குழுமமானது நியாயப் பெறுமதியில் பிற்பட்ட மாற்றங்களை ஏனைய விரிவான வருமானக் கூற்றினூடாக மாற்றவியலாதவாறு முன்னிலைப்படுத்துவதற்கு தெரிவு செய்துள்ளது. இத்தெரிவானது ஒவ்வொரு கருவி மூலம் கருவி அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றது.

குழுமமானது வர்த்தகம் மற்றும் ஏனைய வருமதிகள், விமான பராமரிப்பு ஒதுக்கம், விமானம் மற்றும் உதிரி என்ஜின் வைப்புகள், குறுங்கால முதலீடுகள் மற்றும் காசு மற்றும் வங்கி மீதிகளை நிதியியல் சொத்துக்களாக வகைப்படுத்தி பின்னர் அவை பெறுமதிக்குறைப்பு கிரயத்தில் அளவிடப்படுகின்றது.

**அங்கீகரிப்பு நீக்கம்**
நிதியியல் சொத்திலிருந்தான காசுப் பாய்ச்சல்களுக்கான ஒப்பந்த உரிமைகள் முதிர்வடையும்போது குழுமமானது ஒரு நிதியியல் சொத்தினை அங்கீகரிப்பு நீக்கம் செய்கின்றது, அல்லது நிதியியல் சொத்தினது உடைமையின் அனைத்து இடர்நேர்வுகள் மற்றும் வெகுமதிகளை குறிப்பிடத்தக்களவு மாற்றல் செய்யப்படும் ஓர் கொடுக்கல் வாங்கலின் ஒப்பந்த காசுப்பாய்ச்சல்களை பெறுவதற்கான உரிமைகளை மாற்றல் செய்தால், அல்லது குழுமமானது உடைமையின் அனைத்து இடர்நேர்வுகள் மற்றும் வெகுமதிகளை குறிப்பிடத்தக்களவு வைத்திருக்காமலும் மாற்றல் செய்யாமலும் மற்றும் அது நிதியியல் சொத்தின் கட்டுப்பாட்டினை வைத்திருக்காமல் இருக்கும் போது நீக்கம் செய்கின்றது.

ஒரு நிதியியல் சொத்தின் அங்கீகரிப்பு நீக்கத்தின்போது, சொத்தின் கொண்டுசெல்லும் பெறுமதிக்கும் (அல்லது அங்கீகாரம் நீக்கப்பட்ட சொத்தின் பகுதிக்கு ஒதுக்கப்படும் கொண்டு செல்லல் தொகை) பின்வருவனவற்றின் கூட்டுத்தொகைக்கும் இடையேயான வித்தியாசமானது இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகின்றது.

(i) பெறப்பட்ட மறுபயன் (ஏதேனும் பெறப்பட்ட புதிய சொத்திலிருந்து பொறுப்பேற்ற ஏதேனும் பொறுப்பினை கழித்தல் உள்ளடங்களாக) மற்றும்
(ii) ஏனைய விரிவான வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்டிருந்த ஏதேனும் திரண்ட இலாபம் அல்லது நட்டம்

**நிதிச் சொத்துக்களின் வலுக்குன்றல்**
ஏனைய விரிவான வருமானத்தினூடாக நியாயப் பெறுமதியில் அல்லது பெறுமதிக்குறைப்பு கிரயத்தில் அளவிடப்பட்ட நிதியியல் சொத்துக்களிலான எதிர்பார்க்கப்படும் கடன் தீர்த்தல் நட்டங்களுக்கு குழுமமானது ஓர் நட்ட படியினை அங்கீகரிக்கின்றது.

எதிர்பார்க்கப்படும் கடன் தீர்த்தல் நட்டங்களை அளவிடுவதற்கு எளிமையாக்கப்பட்ட அணுகுமுறையினை குழுமமானது பயன்படுத்துவதுடன் அனைத்து வர்த்தக வருமதிகளுக்கு ஒரு வாழ்நாள் எதிர்பார்க்கப்படும் நட்ட படியினையும் பயன்படுத்துகின்றது.

பெறுமதிக் குறைப்பு கிரயத்தில் அளவிடப்பட்ட நிதியியல் சொத்துக்களுக்கான நட்டப் படிகள் சொத்துக்களின் மொத்த கொண்டுசெல்லல் தொகையிலிருந்து கழிக்கப்படுகின்றன.

உலகளாவிய பொருளாதாரத்திலான கோவிட்-19 இன் தாக்கம் மற்றும் எவ்வாறு அரசாங்கங்கள், வணிகங்கள் மற்றும் நுகர்வோர்கள் பதிலளிப்பார்கள் என்பது நிச்சயமற்றதாகும். இந்த நிச்சயமற்றதன்மையானது குழுமத்தின் கடன் தொகுதிகளிலிருந்து எதிர்பார்க்கப்படும் கடன் தீர்த்தல் நட்டங்களிலான மதிப்பீடுகளில் பிரதிபலிக்கப்படுவதுடன் இவை பல முகாமைத்துவ பகுத்தறிவுகள் மற்றும் மதிப்பீடுகளுக்கு கட்டுப்பட்டதாகும்.

கோவிட் -19 இன் தாக்கத்தின் சூழலினுள் பகுத்தறிவுகளும் இணைந்த அனுமானங்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் உகந்தது எனக் கருதப்படும் வரலாற்று அனுபவங்கள் மற்றும் ஏனைய காரணிகளை பிரதிபலிப்பதுடன், இந்த சூழ்நிலைகளின்

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் (தொடர்ச்சி.)

கீழ் நியாயமானது என நம்பப்படும் எதிர்கால நிகழ்வுகளது எதிர்பார்ப்புக்கள் உள்ளடங்கலாகும்.

### 2.4.9.2 நிதிப் பொறுப்புக்கள்

**ஆரம்ப அங்கீகாரம் மற்றும் அளவீடு**
அனைத்து நிதியியல் பொறுப்புக்களும் (இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயப் பெறுமதியில் குறிப்பிடப்பட்ட பொறுப்புக்கள் உள்ளடங்கலாக) குழுமமானது கருவியின் ஒப்பந்த ஏற்பாடுகளின் ஒரு தரத்தவராக வரும் வர்த்தக தினத்தின் ஆரம்பத்தில் அங்கீகரிக்கின்றது.

குழுமமானது அதன் நிதியியல் பொறுப்புக்களை இரண்டு வகைகளில் ஒன்றாக வகைப்படுத்துகின்றது. இது பொறுப்பு கையேற்கப்பட்ட நோக்கத்தில் தங்கியுள்ளது இலாபம் அல்லது நட்டத்தினூடான நியாயப் பெறுமதியில் அல்லது ஏனைய நிதியியல் பொறுப்புக்கள்.

ஒரு நிதியியல் பொறுப்பானது ஆரம்பத்தில் நியாயப் பெறுமதியில் அளவீடு செய்யப்படுகின்றது. இலாபம் அல்லது நட்டத்தினூடான நியாயப் பெறுமதியில் காணப்படாத ஒரு உருப்படிக்கு, அதன் கையகப்படுத்தலுக்கு அல்லது வழங்கலுக்கு நேரடியாக உடமையாக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல் கிரயங்கள் கருதப்படுகின்றது.

**பிற்பட்ட அளவீடு**
குழுமமானது வட்டி செலுத்தப்படும் கடன்கள், விமான பராமரிப்பிற்கான ஒதுக்கம் மற்றும் சீராக்கல் கிரயம், வர்த்தக மற்றும் ஏனைய கொடுகுமதிகள் என்பவற்றை நிதியியல் பொறுப்புக்களாக வகைப்படுத்தியுள்ளது.

ஆரம்ப அங்கீகாரத்தின் பின்னர், நிதியியல் பொறுப்புக்கள் பெறுமதி குறைக்கப்பட்ட கிரயத்தில் அளவீடு செய்யப்படுகின்றன.

ஒரு நிதியியல் பொறுப்பின் பெறுமதி குறைப்புக் கிரயமானது ஆரம்ப அங்கீகாரத்தின்போது நிதியியல் பொறுப்பானது அளவீடு செய்யப்பட்ட தொகையிலிருந்து, முதலின் திருப்பிசெலுத்தல்கள் கழிக்கப்பட்டு, திரண்ட பெறுமதிக்குறைப்பு கூட்டப்பட்டு அல்லது கழிக்கப்படுகின்றது. இது பின்வருவனவற்றை பயன்படுத்தி கணிக்கப்படுகின்றது. அங்கீகரிக்கப்பட்ட ஆரம்ப தொகைக்கும், முதிர்வுத் தொகையிலிருந்து வலுக்குன்றலுக்காக ஏதேனும் தொகையினை கழித்ததன் பின்னர் வரும் தொகைக்கும் இடையிலான ஏதேனும் வித்தியாசத்தில் செயல்திறனான வட்டி முறையினை பயன்படுத்தி கணிக்கப்படுகின்றது.

**அங்கீகரிப்பு நீக்கம்**
பொறுப்பின் கீழான கடப்பாடானது வெளியேற்றப்பட்டால் அல்லது ரத்து செய்யப்பட்டால் அல்லது முதிர்வடைந்தால் ஒரு நிதியியல் பொறுப்பானது அங்கீகரிப்பு நீக்கம் செய்யப்படுகின்றது.

நடைமுறையிலுள்ள ஒரு நிதியியல் பொறுப்பானது, குறிப்பிடத்தக்க வித்தியாசமான விதிமுறைகளில் அதே கடன் வழங்குநரிடமிருந்தான மற்றுமோர் பொறுப்பினால் மாற்றீடு செய்யப்பட்டால், அல்லது நடைமுறையிலுள்ள பொறுப்பொன்றின் விதிமுறைகள் கணிசமானளவு மாற்றியமைக்கப்பட்டால், அத்தகைய பரிமாற்றல் அல்லது மாற்றியமைத்தலானது ஆரம்ப பொறுப்பின் அங்கீகார நீக்கமாக கருதப்படுவதுடன் மற்றும் ஓர் புதிய பொறுப்பானது அங்கீகரிக்கப்படுகின்றது. அவற்றின் கொண்டு செல்லல் தொகைகளிலான வித்தியாசம் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது

### 2.4.9.3 நிதியியல் கருவிகளின் ஈடுசெய்கை

கீழ்காணும் நிபந்தனைகளை பூர்த்தி செய்தால் மாத்திரமே நிதியியல் சொத்துக்கள் மற்றும் நிதியியல் பொறுப்புக்கள் ஈடுசெய்யப்பட்டு, தேறிய தொகையானது நிதி நிலைமைக் கூற்றில் அறிக்கையிடப்படும்

- அங்கீகரிக்கப்பட்ட தொகைகளை ஈடுசெய்வதற்கான வலியுறுத்தத்தக்க சட்ட உரிமை நடைமுறையில் காணப்படல் வேண்டும் மற்றும்
- ஒரு தேறிய அடிப்படையில் தீர்ப்பனவுக்கான நோக்கம் காணப்படுகின்றது, அல்லது ஒரே நேரத்தில் சொத்துக்களை விற்று பொறுப்புக்களை தீர்ப்பனவு செய்தல்.

### 2.4.9.4 காசுப் பாய்ச்சல் இழப்புக் காப்பரண் ஒதுக்கம்

கம்பனியானது அதன் இனங்காணத்தக்க வெளிநாட்டு நாணயத்திலான கடன்களை ஓர் இழப்புக் காப்பரணாக உயர்ந்த நேரிடக்கூடிய, விசேடமாக வெளிநாட்டு நாணயத்தில் இனங்காணப்பட்ட எதிர்கால வருவாய்க்கு எதிராக குறிப்பிடுகின்றது. இதனூடாக கம்பனியானது வெளிநாட்டு நாணயமாற்று வீதங்களினால் ஏற்பட்ட தளம்பல்களின் மூலம் எழும் இனங்காணப்பட்ட வெளிநாட்டு நாணயக் கடன்களின் பெறுமதியில் மாற்றங்கள் ஏற்படக்கூடிய இடர்நேர்கையினை காப்பரண் செய்தது.

இழப்புக் காப்பரண் கருவியிலான இலாபம் அல்லது நட்டத்தின் செயல்திறனான பகுதியானது ஏனைய விரிவான வருமானத்தில் காசுப் பாய்ச்சல் இழப்புக் காப்பரண் ஒதுக்கமாக நேரடியாக அங்கீகரிக்கப்படுவதுடன் ஏதேனும் செயல்திறனான பகுதியானது உடனடியாக இலாபம் அல்லது நட்டக் கூற்றில் ஏனைய செயற்பாட்டு செலவினமாக அங்கீகரிக்கப்படுகின்றது. ஏனைய விரிவான வருமானமாக அங்கீகரிக்கப்பட்ட தொகையானது இழப்புக் காப்பரண் கொடுக்கல் வாங்கல் இடம்பெறும்போது இலாபம் அல்லது நட்டக் கூற்றிற்கு மாற்றல் செய்யப்படுகின்றது (எதிர்வுகூறப்பட்ட வருவாய் கைகூடும்போது).

எதிர்வுகூறப்பட்ட கொடுக்கல் வாங்கலானது இடம்பெறுவதற்கு எதிர்பாக்கப்படாதபோது ஏனைய விரிவான வருமானத்தில் முன்னர் அங்கீகரிக்கப்பட்ட திரண்ட இலாபம் அல்லது நட்டம், இலாபம் அல்லது நட்டக் கூற்றிற்கு மாற்றல் செய்யப்படுகின்றது. இழப்புக் காப்பரண் கருவியானது முதிர்வடைந்தால் அல்லது விற்பனை செய்யப்பட்டால், மாற்றீடு செய்யப்படாமல் அல்லது தொடர் உருள்வு செய்யப்படாமல் நீக்கப்பட்டால் அல்லது செயல்முறைப்படுத்தப்பட்டால், அல்லது ஒரு இழப்புக் காப்பரண் என்ற அதன் குறிப்பீடு ரத்துசெய்யப்பட்டால், ஏனைய விரிவான வருமானத்தில் ஏதேனும் திரண்ட இலாபம் அல்லது நட்டமாக முன்னர் அங்கீகரிக்கப்பட்டவை, இழப்புக் காப்பரண் உடன்படிக்கையின் படி எதிர்வுகூறப்பட்ட கொடுக்கல் வாங்கல் இடம்பெறும்வரைக்கும் உரித்துவத்தில் நிலைத்திருக்கும்.

கோவிட்-19 இன் தாக்கமானது மட்டுப்படுத்தப்பட்ட செயற்பாடுகளின் காரணமாக வெளிநாட்டு நாணயத்திலான எதிர்கால வருவாயினையும் பாதித்துள்ளது. வெளிநாட்டு நாணயத்திலான கடன்கள் இதற்கமைய மீள்அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளதுடன் இழப்புக் காப்பரணின் செயற்திறனற்ற பகுதியானது இலாபம் அல்லது நட்டக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது.

### 2.4.10 விமானப் பராமரிப்பு ஒதுக்கம்

விமானப் பராமரிப்பு ஒதுக்கமானது மாதாந்த அடிப்படையில் எதிர்கால என்ஜின்கள் பழுதுபார்த்தல்கள், விமானச் சட்டகம் மற்றும் விமானத்தின் பகுதிகள் என்பவற்றுக்கு செயற்பாட்டு குத்தகை உடன்படிக்கைகளின் ஏற்பாடுகளுக்கமைய குத்தகைக்கு விடுபவர்களுக்கு மேற்கொள்ளப்படும் கொடுப்பனவுகளை உள்ளடக்குகின்றது. கம்பனியானது குத்தகைக்கு விடுபவரிடமிருந்து என்ஜின்கள் பழுதுபார்த்தல்கள், விமானச் சட்டகங்கள் மற்றும் விமானத்தின் பகுதிகளில் ஆட்பட்ட கிரயத்தினை பராமரிப்பு நிகழ்வு நிறைவடைந்ததன் பின்னர் அத்தகைய ஒதுக்கத்திற்கு எதிராக மீளப்பெறுகின்றது. (ஒதுக்கத்திற்கு ஏற்கனவே செலுத்தப்பட்ட தொகை வரைக்கும்)

தன்மையினைப் பொறுத்து விமானப் பராமரிப்பு ஒதுக்கமானது கடன்கள் மற்றும் வருமதிகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளதுடன் இந்த வகையான நிதியியல் சொத்துக்களுக்கான உரிய கணக்கீட்டுக் கொள்கையானது மேலே குறிப்பு 2.4.9.1 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

### 2.4.11 வர்த்தக மற்றும் ஏனைய வருமதிகள்

வர்த்தக கடன்பட்டோர்கள், வைப்புகள் மற்றும் ஏனைய கடன்பட்டோர்கள் உள்ளடங்கலாக (கிரயத்தில் அளவிடப்பட்டுள்ள வைப்புகள் மற்றும் ஏனைய வருமதிகளின் கீழான நிதியல்லாத சொத்துக்கள் தவிர்ந்தவை) கடன்கள் மற்றும் வருமதிகளாக வகைப்படுத்தப்பட்டு

கணக்கீடு செய்யப்பட்டுள்ளன. இவ்வகை நிதியியல் சொத்துக்களுக்கான தன்மையினைப் பொறுத்து உரிய கணக்கீட்டுக் கொள்கைகள் மேலே குறிப்பு 2.4.9.1. (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ளன.

### 2.4.12 முதலீடுகள்

**துணை நிறுவனத்திலான முதலீடு**

கம்பனியின் நிதிக் கூற்றுக்களில், துணை நிறுவனத்திலான முதலீடு கிரயத்தில், தற்காலிக பெறுமதிக்குறைவு தவிர்த்த ஏதேனும் தேறிய வலுக்குன்றலுக்கு, கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 2.4.13 குறுங்கால முதலீடுகள்

மூன்று மாதங்களுக்கு குறைவான முதிர்வினையுடைய வங்கிகளிலுள்ள நிலையான வைப்புகள் குறுங்கால வைப்புகளாகும். குறுங்கால முதலீடுகள் அவற்றின் பெறுமதிக் குறைப்பு கிரயத்தில் அளவீடு செய்யப்பட்டுள்ளன.

### 2.4.14 காசு மற்றும் காசுக்குச் சமனானவைகளும்

காசும் காசுக்குச் சமனானவைகள் என்பது பின்வருமாறு பொருள்படும். கையில் மற்றும் வங்கியிலுள்ள காசு, அழைப்பு வைப்புகள் மற்றும் பெறுமதியில் மாற்றமேற்படும் அற்பமான இடர்நேர்கைக்கு உட்பட்ட தெரிந்துகொண்டுள்ள காசுத் தொகைக்கு உடனடியாக மாற்றக்கூடிய உயர்ந்த திரவத்தன்மையுடைய குறுங்கால முதலீடுகள் ஆகும்.

காசுப்பாய்ச்சல் கூற்றில், காசும் காசுக்குச் சமனானவைகளும், வங்கியிலுள்ள காசு, கையிலுள்ள காசு, வங்கியிலுள்ள அழைப்பு வைப்புக்கள் நிலுவையிலுள்ள வங்கி மேலதிகப்பற்றுக்களுக்கு நிகர்செய்யப்பட்டு உள்ளடக்கப்படுகின்றது. குறைந்த முதிர்வுகளைக்கொண்ட முதலீடுகளும் (கையகப்படுத்தப்பட்ட திகதியிலிருந்து மூன்று மாதங்கள் அல்லது அதற்குக் குறைவானவை) காசுக்குச் சமனானவைகளாக கருதப்படுகின்றன. நிதி நிலைமைக் கூற்றில் வங்கி மேலதிகப்பற்றுக்கள் வட்டி செலுத்தப்படும் பொறுப்புக்களின் கீழ் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

### 2.4.15 ஏற்பாடுகள்

**(i) பொதுவானவை**

ஒரு கடந்தகால நிகழ்வின் விளைவாக குழுமமானது ஒரு நடைமுறை கடப்பாட்டினைக் (சட்ட அல்லது ஆக்கபூர்வமான) கொண்டிருந்தால் ஏற்பாடுகள் அங்கீகரிக்கப்படுகின்றன. இது கடப்பாட்டின் தொகை குறித்து ஓர் நம்பகமான மதிப்பீட்டினை மேற்கொள்ளலாம் மற்றும் கடப்பாட்டினை தீர்ப்பனவு செய்வதற்கு பொருளாதார நலன்களை உள்ளடக்கிய வளங்களது வெளிப்பாய்ச்சல் என்பவற்றுக்கான நிகழக்கூடிய சாத்தியம் காணப்படல் வேண்டும். குழுமமானது ஏற்பாட்டின் சிலவற்றை அல்லது அனைத்தையும் செலவீடு செய்தல்வேண்டும் என எதிர்பார்த்தால், அந்த செலவீடானது ஒரு தனிப்பட்ட சொத்தாக அங்கீகரிக்கப்படுவதுடன், ஆனால் அந்த செலவீடானது கிட்டத்தட்ட நிச்சயமாக இருந்தால் மாத்திரமே. ஏதேனும் ஏற்பாடு தொடர்பான செலவினங்கள் ஏதேனும் செலவீடுகள் கழிக்கப்பட்டு இலாபம் அல்லது நட்டக் கூற்றில் முன்னிலைப்படுத்தப்படுகின்றன.

**(ii) விமானப் பராமரிப்பு மற்றும் சீராக்கல் செலவினங்கள்**

குழுமமானது விமானப் பராமரிப்பு மற்றும் சீராக்கல் செலவினங்களை (விமான கனரக பராமரிப்பு, என்ஜின் பழுதுபார்த்தல் மற்றும் தரையிறக்கல் சாதனத்திலான பழுதுபார்த்தல் செலவுகள் தவிர்ந்த) ஏற்பட்ட அடிப்படையில் அங்கீகரிக்கின்றது. விமான கனரக பராமரிப்பு, என்ஜின் பழுதுபார்த்தல் மற்றும் தரையிறக்கல் சாதனத்திலான பழுதுபார்த்தல் செலவினங்கள் குறிப்பு 2.3.2 (பி) (iv) இல் குறிப்பிட்டுள்ளவாறு கணக்கீடு செய்யப்படுகின்றது. மூன்றாந்தரப்பு பராமரிப்பு உடன்படிக்கைகளின் “மணித்தியாலத்திற்கான சக்தி” இன் மூலம் கிரயமானது உடன்படிக்கையின் காலப்பகுதியில் உடன்பட்ட மணித்தியாலத்திற்கான நிலையான வீதத்தில் செலவு வைக்கப்படுகின்றது.

**(iii) விமானத்தினை திருப்பிக்கொடுக்கும் நிலைமையிலான ஏற்பாடுகள்**

விமானத்தினை திருப்பிக்கொடுக்கும் நிலைமைகளுக்கான (சீராக்கல் கடப்பாடுகள் ) ஏற்பாடானது மீள் விநியோகிக்கும் நேரத்தில் சில விமானம் மற்றும் என்ஜின்களின் ஒப்பந்தக் குத்தகை இறுதி கடப்பாடுகளை சந்திப்பதற்கான மதிப்பிடப்பட்ட கிரயத்தினை பிரதிநிதித்துவம் செய்கின்றது. குத்தகையின் ஆரம்பத்தில், நடைமுறையிலுள்ள ஊர்திகளது திட்டம் மற்றும் நீண்டகால அட்டவணைகள் கருத்திற்கொண்டு, ஒவ்வொரு சீராக்கல் கடப்பாட்டிற்குமான எதிர்பார்க்கப்படும் கிரயத்தின் நிகழ்காலப் பெறுமதியானது ஒரு ஏற்பாடாக அங்கீகரிக்கப்பட்டு பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்தின் ஒரு பகுதியாக மூலதனமயமாக்கப்பட்டு குத்தகைக் காலப்பகுதியில் பெறுமானத் தேய்வு செய்யப்படுகின்றன. இணைந்த கழிவின் பிரித்தெடுப்பானது குத்தகைக் காலத்தின் மீது ஒரு நிதிச் செலவினமாக அங்கீகரிக்கப்படுகின்றது. ஒவ்வொரு சீராக்கல் கடப்பாட்டிற்குமான மதிப்பிடப்பட்ட கிரயத்திலான பிற்பட்ட மாற்றங்கள் விமான திருப்பிக்கொடுத்தல் நிலைமைகளுக்கான ஏற்பாட்டிற்கான மீள்அளவீடாக கணக்கிடப்படுவதுடன், கிடைக்கப்பெறுமாயின், தொடர்புடைய பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்திற்கான ஒரு தொடர்புடைய தாக்கத்துடன், எஞ்சியுள்ள குத்தகைக் காலத்தில் பெறுமானத்தேய்வு செய்யப்படுகின்றது. இல்லையெனில், மீள்அளவீடானது இலாபம் அல்லது நட்டக் கூற்றில் கணக்கீடு செய்யப்படுகின்து. மதிப்பீட்டின் அடிப்படையானது குறிப்பு 2.3.2. (பி) (V) இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

### 2.4.16 ஓய்வுபெறல் நலன் கடப்பாடு

**(அ) நிர்ணயிக்கப்பட்ட நலன் திட்டம் - பணிக்கொடை**

பணிக்கொடையானது ஓர் நிர்ணயிக்கப்பட்ட நலன் திட்டமாகும். கம்பனி மற்றும் அதன் துணை நிறவனமானது 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடைச் சட்டம் மற்றும் 2021 இன் 28 ஆம் இலக்க ஊழியர்களது ஆகக்குறைந்த ஓய்வுபெறல் வயதுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய செலுத்துவதற்கு பொறுப்பாளியாயுள்ளது. குழுமமானது நிர்ணயிக்கப்பட்ட நலன் திட்டத்தின் நிகழ்காலப் பெறுமதியினை ஒரு காப்பீட்டுக் கணிப்பாளரின் ஆலோசனையுடன் ஒவ்வொரு வருடமும் உத்தேச அலகு வரவு முறையினை பயன்படுத்தி அளவீடு செய்கின்றது.

வெளிநாட்டு நிலையங்களின் பணியாட்களுக்கான ஓய்வுபெறல் நலனானது பிரயோகிக்கப்படவேண்டிய சட்டவாக்கத்தின் அடிப்படையில் மதிப்பிடப்படுகின்றது.

நிர்ணயிக்கப்பட்ட நலன் திட்டங்களிலிருந்து எழும் காப்பீட்டுக் கணிப்பு இலாபம் /நட்டம் ஏனைய விரிவான வருமானத்தில் அங்கீகரிக்கப்படுவதுடன் நிர்ணயிக்கப்பட்ட நலன் திட்டங்கள் தொடர்பான செலவினங்கள் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றன.

பணிக்கொடை பொறுப்பிற்கு வெளிவாரியாக நிதியளிக்கப்படவில்லை. இந்த உருப்படியானது நிதி நிலைமைக் கூற்றில், “ஏனைய நீண்டகால பொறுப்புக்கள்” இன் கீழ் தொகுக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டை தளமாகக் கொண்ட பணியாட்களுக்கு அவர்களது விருந்தோம்பும் நாடுகளது சமூகப் பாதுகாப்பு திட்டங்களின் கீழ் காப்பிடப்படுகின்றது.

**(ய) நிர்ணயிக்கப்பட்ட நலன் திட்டம் - விடுப்பினைப் பணமாக்குதல்**

ஓய்வுபெறும்போது உள்ளூர் பணிக்கொள்ளல் ஒப்பந்தங்களின் அடிப்படையில் அறிக்கையிடப்படும் திகதியின் இறுதியிலிருந்து பயன்படுத்தப்படாத திரண்ட விடுப்பிற்கு குழுமம் பொறுப்பாளியாகும். பயன்படுத்தப்படாத திரண்ட விடுப்பு நோக்கிய குழுமத்தின் தேறிய கடப்பாடானது உள்ளூர் பணியாட்களின் நிர்ணயிக்கப்பட்ட நலன் திட்டத்தின் நிகழ்கால பெறுமதியில் அளவிடப்படுவதுடன், இது ஒரு காப்பீட்டுக் கணிப்பாளரின் ஆலோசனையுடன் ஒவ்வொரு வருடமும் உத்தேச அலகு வரவு முறையினை பயன்படுத்தி அளவீடு செய்யப்படுகின்றது.

விடுப்பினைப் பணமாக்குவதிலிருந்து எழுகின்ற காப்பீட்டுக் கணிப்பு இலாபங்கள்/நட்டங்களை குழுமமானது ஏனைய விரிவான வருமானத்தில் அங்கீகரித்து விடுப்பினை பணமாக்குதல் தொடர்பான செலவினங்கள் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது.

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் (தொடர்ச்சி.)

விடுப்பினைப் பணமாக்கும் பொறுப்பிற்கு வெளிவாரியாக நிதியளிக்கப்படவில்லை. இந்த உருப்படியானது நிதி நிலைமைக் கூற்றில் “ஏனைய பொறுப்புக்கள்” இன் கீழ் தொகுக்கப்பட்டுள்ளது.

**(டி) நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்கள் - ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்**

இலங்கையினைத் தளமாகக் கொண்ட பணியாட்கள் பொருத்தமான நியதிச்சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கமைய ஊழியர் சேமலாப நிதியப் பங்களிப்புகள் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிய பங்களிப்புகளுக்கு உரிமையுள்ளவர்களாவர். கம்பனியானது மொத்த ஊதியத்தில் 15% இனை ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் 3% இனை ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் பங்களிப்பு செய்கின்றது. அவ்வாறே துணை நிறுவனமும் இவற்றுக்கு முறையே 12% இனையும் 3% இனையும் பங்களிப்பு செய்கின்றது.

## 2.4.17 அடிக்கடி பறப்பவர் திட்டம்

திரட்டிய மைல்கள் அடிப்படையில் இத்திட்டத்தின் அங்கத்தவர்களுக்கு பிரயாண வெகுமதிகளை வழங்கும் “FlySmiLes” அடிக்கடி பறப்பவர் திட்டத்தினை செயற்படுத்துகின்றது. அடிக்கடி பறப்பவர் நலன்கள் வெகுமதிக்கு உடைமையாக்கத்தக்க பயணிகள் வருவாயின் ஒரு பகுதியானது அவை பயன்படுத்தப்படும்வரை ஒத்திவைக்கப்படுகின்றது. வருவாயின் ஒத்திவைப்பானது வரலாற்று ரீதியான மீட்டல் போக்கின் அடிப்படையில் மதிப்பிடப்படுவதுடன், இது பின்னர் இந்த நலன்களின் எதிர்பார்க்கப்படும் பயன்பாடுகளை திட்டமிடுவதற்கு பயன்படுத்தப்படுகின்றது. வெகுமதியாக வழங்கப்பட்ட வரவுகளின் நியாயப் பெறுமதியானது, வெகுமதி வரவுகள் மீட்கப்படக்கூடிய சேவைகளின் நிறையிடப்பட்ட சராசரி பெறுமதிக்கு மேற்கோள் காட்டி மதிப்பிடப்படுகின்றது. இந்த மதிப்பீடுகள் ஒவ்வொரு அறிக்கையிடப்படும் திகதியிலும் மீளாய்வு செய்யப்பட்டு பொறுப்பானது ஏற்றவாறு செம்மையாக்கப்படுகின்றது. திட்டத்தின் பங்காளிகளின் சேவைகளை பயன்படுத்துவதனூடாக அட்டூறு செய்யப்பட்ட மைல்கள் பங்குபற்றும் பங்காளிகளினால் செலுத்தப்படுவதுடன் அவை பயன்படுத்தப்படும்வரை ஒத்திவைக்கப்பட்ட வருவாயாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. முதிர்வடையும் என எதிர்பார்க்கும் மைல்களுக்கு ஒரு பொறுப்பானது அங்கீகரிக்கப்படுவதில்லை.

## 2.4.18 வருவாய் அங்கீகாரம்

வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களிலிருந்து எழும் வருவாயினை ஐந்து-படி மாதிரியின் அடிப்படையில் குழுமமானது அங்கீகரிக்கின்றது.

ஒரு வாடிக்கையாளருக்கு பொருட்கள் மற்றும் சேவைகள் மாற்றல் செய்வதற்கு பிரதியாக ஓர் நிறுவனம் உரிமையுள்ளது என எதிர்பார்க்கும் மறுபயனை பிரதிபலிக்கும் ஓர் தொகைக்கு வருவாய் அங்கீகரிக்கப்படுகின்றது.

### (அ) விமான வருவாய்

பயணிகள், சரக்கு, மிகையான பொதி மற்றும் அஞ்சல் என்பவற்றை ஏற்றிச்செல்தல், விமானநிலைய முனையச் சேவைகள், பொறியியல் சேவைகள், வான் பட்டயங்கள் மற்றும் தொடர்புடைய நடவடிக்கைகளிலிருந்து பிரதானமாக வருவாயானது உருவாக்கப்படுகின்றது.

(i) பயணிகள், சரக்கு, மிகையான பொதி விற்பனைகள் மற்றும் ஏனைய தொடர்புடைய கட்டணங்கள் என்பன போக்குவரத்து /சேவை வழங்கப்பட்டவுடன் செயற்பாட்டு வருவாயாக அங்கீகரிக்கப்படுகின்றது.

(ii) பாவிக்கப்படாத டிக்கட்டுகள் மற்றும் வான்வழி பட்டியல்கள் என்பன ஏற்றிச்செல்வதற்கான முன்விற்பனையாக நடைமுறை பொறுப்புக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன. பாவிக்கப்படாத டிக்கட்டுகள் மற்றும் வான்வழி பட்டியல்கள் என்பன அவை பயன்படுத்தப்படாமலிருந்து ஒரு வருடத்தின் பின்னர் முதிர்வடைந்தால் வருவாயாக அங்கீகரிக்கப்படுகின்றது.

(iii) விமான நிலைய முனையச் சேவைகள் வழங்குவதிலிருந்தான வருவாயானது சேவைகள் வழங்கப்பட்டதும் அங்கீகரிக்கப்படுகின்றது.

(iv) மூன்றாம் தரப்பு பராமரிப்பு சேவைகள் வழங்குவதிலிருந்தான வருவாயானது அத்தகைய நிகழ்வுகள் நிறைவடைந்தவுடன் அங்கீகரிக்கப்படுகின்றது.

(v) விமானச் செயற்பாடு சேவைகள் வழங்குவதிலிருந்தான வருவாயானது சேவைகள் வழங்கப்பட்டதும் அங்கீகரிக்கப்படுகின்றது.

### (ஆ) விமான உணவளித்தல் சேவைகளிலிருந்தான வருவாய்

**பொருட்களின் விற்பனை**

ஒரு வாடிக்கையாளருக்கு ஒரு வாக்குறுதியளிக்கப்பட்ட பொருள் அல்லது சேவையினை மாற்றல் செய்யும் செயற்பாட்டு கடப்பாட்டினை நிறுவனம் எப்போது திருப்திபடுத்துகின்றதோ அப்போது குழுமமானது வருவாயினை அங்கீகரிக்கின்றது. வருவாயானது பெறுமதி சேர்க்கப்பட்ட விற்பனை வரியினை விலக்கி மற்றும் வர்த்தக கழிவுகளைக் கழித்ததன் பின்னர் வரும் தொகையாகும். வரவேண்டிய மறுபயன், தொடர்புடைய கிரயங்கள் அல்லது பொருட்களின் சாத்தியமான திரும்பல் மற்றும் பொருட்களுடன் முகாமைத்துவத்தின் தொடர்ச்சியான ஈடுபாடு என்பவை தொடர்பாக குறிப்பிடத்தக்க நிச்சயமற்றதன்மை காணப்படின் எவ்வித வருவாயும் அங்கீகரிக்கப்படுவதில்லை.

### (இ) பங்கிலாப வருமானம்

கொடுப்பனவினை பெற்றுக்கொள்வதற்கான பங்குதாரரின் உரிமை நிலைநாட்டப்படும்போது பங்கிலாப வருமானம் கணக்கீடு செய்யப்படுகின்றது.

### (ஈ) வாடகை வருமானம்

வாடகை வருமானமானது ஒரு அட்டூறு அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றது.

### (உ) வட்டி வருமானம்

பெறுமதிக் குறைப்பு கிரயத்தில் அளவீடு செய்யப்பட்ட அனைத்து நிதியியல் கருவிகளுக்கும் வட்டி வருமானம் அல்லது செலவினம் செயல்திறனான வட்டி முறையினைப் பயன்படுத்தி பதியப்படுகின்றது.

### (ஊ) ஏனைய வருமானம்

ஏனைய வருமானமானது ஒரு அட்டூறு அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றது.

## 2.4.19 செலவின அங்கீகரிப்பு

செலவினங்கள், குறிப்பிட்ட உருப்படிகளான வருமான உழைப்பிற்கும் அது தொடர்பாக ஏற்பட்ட கிரயத்திற்கும் இடையேயான நேரடி தொடர்பின் அடிப்படையில் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது. வணிகத்தினை நடாத்துவதில் ஏற்பட்ட அனைத்து செலவினங்கள் மற்றும் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களை ஒரு செயற்திறனான நிலையில் பராமரிப்பதிலான செலவினங்கள் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் கட்டணப்படுத்தப்படுகின்றன. இலாபம் அல்லது நட்டக் கூற்றினை முன்னிலைப்படுத்தும் நோக்கத்திற்காக “செலவினங்களின் தன்மை” முறையானது இவை குழுமத்தின் செயற்திறனது பிரிவுகளை நியாயமாக முன்னிலைப்படுத்துகின்றன என்ற அடிப்படையில் கடைப்பிடிக்கப்பட்டது.

## 2.4.20 கடன்பெறல் கிரயங்கள்

பின்வருவன தவிர்ந்த கடன் பெறல் கிரயங்கள் அது ஏற்பட்ட காலப்பகுதியில் ஒரு செலவினமாக அங்கீகரிக்கப்படுகின்றன. ஒரு சொத்தின் பயன்பாட்டு நோக்கம் அல்லது விற்பனைக்கு தயாராவதற்கு கணிசமானளவு காலம் எடுக்கப்படுமாதலால் அதன் கையகப்படுத்தல், கட்டுமானம் அல்லது உற்பத்தி போன்றவற்றிற்காக நேரடியாக உடமையாக்கப்படக்கூடிய கடன்பெறல் செலவினங்கள் சொத்தின் ஒரு பகுதியாக மூலதனமயமாக்கப்படுகின்றன.

## 2.4.21 பிரிவுவாரியான அறிக்கையிடல்

ஒரு பிரிவு என்பது, ஏனைய பிரிவுகளிலிருந்து வேறுபட்ட இடர்கள் மற்றும் வெகுமதிகளுக்குட்பட்ட ஒரு குறிப்பிட்ட பொருளாதார சூழலினுள் சேவைகளை வழங்குவதில் ஈடுபட்டுள்ள குழுமத்தின் ஒரு வேறுபடுத்தக்கூடிய கூறாகும்.

குழுமமானது பல்வேறு நாடுகளில் செயற்படுவதன் நிமித்தம் குழுமத்தின் இடர்நேர்கைகள் மற்றும் விளைவு வீதம் என்பன முக்கியமாக பாதிக்கப்படக்கூடிய பூகோள விரிவாக்க செயல்முறைகளின் அடிப்படையில் அதன் பிரதான பிரிவுகள் தீர்மானிக்கப்படுகின்றன. விற்பனையின் உருவாக்கத்தின் மூலம் புரள்வின் பகுப்பாய்வானது எந்த பிரதேசத்தில் விற்பனை நடைபெற்றதோ அந்த

பிரிவிற்கு வருவாயினை ஒதுக்குவதன் மூலம் பெறப்பட்டது. ஒரு குறிப்பிட்ட பிரிவிற்கு நேரடியாக இனங்காணமுடியாத செலவினங்கள் வேறுபடுத்தப்படாது வெளிப்படுத்தப்படுகின்றன.

பூகோள ரீதியான பிரிவுகளுக்கு சொத்துக்கள் மற்றும் தொடர்புடைய பொறுப்புக்களை ஒதுக்குவதில் ஓர் பொருத்தமான அடிப்படை காணப்படவில்லை என முகாமைத்துவம் கருதுகின்றது. இதற்கமைய, பூகோள ரீதியான பிரிவுகள் மூலம் பிரிவு பிரிவான சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் ஏனைய பிரிவு பிரிவான தகவல்கள் வெளிப்படுத்தப்படவில்லை.

வணிகப் பிரிவுகளிலான இரண்டாந்தர அறிக்கையிடலானது குழுமத்தினால் வழங்கப்படும் சேவைகளின் தன்மையினை அடிப்படையாகக் கொண்டதாகும். குழுமமானது இரண்டு பிரதான வணிகப் பிரிவுகளில் ஈடுபட்டுள்ளது - விமானப் போக்குவரத்து மற்றும் அதன் துணை நிறுவனமூடாக விமானத்திலுள்ளான உணவக சேவைகள்.

### *2.5 வழங்கப்பட்டுள்ள புதிய கணக்கீட்டு நியமங்கள் ஆனால் அறிக்கையிடப்படும் திகதியில் செயற்பாட்டிற்கு வரவில்லை*

பின்வரும் திருத்தங்கள் மற்றும் மேம்படுத்தல்கள் கம்பனியின் நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடத்தக்க தாக்கம் எதனையும் ஏற்படுத்தாது என எதிர்பார்க்கப்படுகின்றது.

- SLFRS 17 – காப்புறுதி ஒப்பந்தங்கள்
- LKAS 37 ஏற்பாடுகள், எதிர்பாரா பொறுப்புக்கள் மற்றும் எதிர்பாரா சொத்துக்கள் ஆகியவற்றுக்கான திருத்தங்கள் : ஒரு ஒப்பந்தத்தினை நிறைவேற்றுவதன் கடுமையான ஒப்பந்தச் செலவுகள்
- LKAS 16 ஆதனம், பொறி மற்றும் உபகரணம் இற்கான திருத்தங்கள் : உத்தேசித்த பயன்பாட்டிற்கு முன்னரான வருவாய்கள்
- SLFRS 3 வணிகச் சேர்க்கைகள் இற்கான திருத்தங்கள் : கருத்துருவான வரன்முறைக்கு ஒரு மேற்கோளினை இற்றைப்படுத்தல்

## 3. நிறுவனச் செயல்நிலை தொடர்ச்சி

மீளாய்வாண்டின்போது குழுமமானது 31 மார்ச் 2022 இல் ரூபா 163,583.08 மில்லியனையும் (2021 - ரூபா 49,704.51 மில்லியன் ) திரண்ட நட்டமாக ரூபா 529,212.71 மில்லியனையும் (2021 - ரூபா 366,284.57 மில்லியன் ) பதிவுசெய்தது. மேலும் குழுமத்தின் நடைமுறை பொறுப்புக்கள் அதன் நடைமுறை சொத்துக்களை ரூபா 292,420.15 மில்லியனினால் (2021 - ரூபா 214,635.95 மில்லியன் ) விஞ்சியதுடன் அறிக்கையிடப்படும் திகதியில் குழுமத்தின் மொத்த உரித்துவம் ஒரு எதிர்மறையான ரூபா 426,423.83 மில்லியனுக்கு (2021 – எதிர்மறை ரூபா 281,490.87 மில்லியன் ) வீழ்ச்சியடைந்தது.

கம்பனியானது 31 மார்ச் 2022 இல் ரூபா 166,369.68 மில்லியனையும் (2021 - ரூபா 45,231.46 மில்லியன் ) திரண்ட நட்டமாக ரூபா 537,505.15 மில்லியனையும் (2021 - ரூபா 371,733.52 மில்லியன் ) பதிவுசெய்தது. மேலும் கம்பனியின் நடைமுறை பொறுப்புக்கள் அதன் நடைமுறை சொத்துக்களை ரூபா 302,702.50 மில்லியனினால் (2021 - ரூபா 221,309.99 மில்லியன் ) விஞ்சியதுடன் அறிக்கையிடப்படும் திகதியில் கம்பனியின் மொத்த உரித்துவம் ஒரு எதிர்மறையான ரூபா 437,036.92 மில்லியனுக்கு (2021 – எதிர்மறை ரூபா 289,265.27 மில்லியன் ) வீழ்ச்சியடைந்தது.

2020 இன் ஆரம்பத்தில் கோவிட்-19 தொற்றின் பரவலுடன் விமான நிறுவனத் துறைக்கான செயற்பாட்டு சூழலானது கடுமையாக பாதிக்கப்பட்டது. விமான நிறுவனத்தின் பிரதான வணிகமான, பயணிகளை ஏற்றிச்செல்லல், முன்னைய நிதியாண்டில் உலகளாவிய ரீதியில் எல்லைகளுக்கிடையேயான பயணக் கட்டுப்பாடுகளின் நிமித்தம் கடுமையாகத் தடைப்பட்டது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் இறுதி நான்கு மாதங்களில் பயணிகள் போக்குவரத்து திரும்பியது. இது தொற்றின் உச்சத்தின்போது விதிக்கப்பட்ட கடுமையான எல்லைக் கட்டுப்பாடுகளை நாடுகள் தளர்த்த ஆரம்பித்ததனாலாகும். முன்னைய நிதியாண்டின்போது ஆரம்பித்த போக்கின் தொடர்ச்சியாக சரக்குச் செயற்பாடுகள் வருவாய்க்கு ஒரு முக்கிய பங்களிக்கும் பிரிவாகக் காணப்பட்டது

கம்பனியானது காசு வளங்களைப் பாதுகாப்பதற்காக பின்வரும் வழிமுறைகளை மேற்கொண்டுள்ளது. அதன் செலவுக் கட்டமைப்பினை மேம்படுத்துதல், விமான குத்தகை விடுபவர்கள் உள்ளடங்கலாக முக்கிய வழங்குனர்களுடன் ஒத்திவைக்கப்பட்ட கொடுப்பனவு திட்டங்கள் மற்றும் சலுகைகளை பேரம்பேசுதல் என்பனவாகும். இதன் மூலம் எதிர்கால காசுப் பாய்ச்சல்களில் சாதகமான தாக்கத்தினை உண்டுபண்ணும் என எதர்பார்க்கப்படுகின்றது.

மீளாய்வாண்டின்போது இலங்கை அரசாங்கமானது புதிய உரித்துவ உட்செலுத்தலுடன் கம்பனிக்கு தொடர்ந்தும் துணைபுரிகின்றது. இதன்பிரகாரம், தொற்றிலிருந்தான மூலதன உட்செலுத்தலின் இரண்டாம் பாகமான ரூபா 18 பில்லியன் ஏப்ரல் 2021 இல் பெறப்பட்டது (முதலாவது பகுதியான ரூபா 27.7 பில்லியன் நவம்பர் 2020 இல் பெறப்பட்டது). மேலும், பொதுத் திறைசேரியூடாக இலங்கை அரசாங்கமானது இக்காலப் பகுதியில் முதிர்வடைந்த அனைத்து ஆறுதல் பத்திரங்கள் மற்றும் திறைசேரி உத்தரவாதங்களது மீள் வழங்கலை அங்கீகரித்தது. இது ருளுனு 240.5 மில்லியன் மற்றும் ரூபா 35.8 பில்லியன் தொகைகளுக்கு, குறுங்காலக் கடன் வசதிகள் வழங்கப்படுவதனை தொடர்வதற்காக இரண்டு அரச வங்கிகளுக்கும் வழங்கப்பட்டது.

31 ஒக்டோபர் 2022 திகதியிடப்பட்ட அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் இலங்கை அரசாங்கமானது, பல நடவடிக்கைகளை உள்ளடக்கிய வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் எயார்லைன்சினை மீள்கட்டமைப்பதன் அவசியத்திற்காக கொள்கையளவில் அங்கீகாரம் வழங்கியுள்ளது. அமைச்சரவையானது இதனை நிதி அமைச்சின் அரச உடைமை நிறுவனங்களது மீள்கட்டமைப்பு அலகிற்கு அவர்களது அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகளுக்காக அனுப்பிவைத்துள்ளது.

இலங்கை அரசாங்கமானது 28 நவம்பர் 2022 திகதியிடப்பட்ட அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் மாற்றீட்டு விமானம், நடைமுறையிலுள்ள விமானங்களின் குத்தகை நீடிப்பு அல்லது இவ்விரண்டும் சேர்ந்த ஒரு சேர்க்கையினூடாக 10 விமானங்களுக்கு விஞ்சாத விமானத்தொகுதி மாற்றீட்டு நடவடிக்கைக்கு அங்கீகாரமளித்துள்ளது.

மேலும், 25 ஒக்டோபர் 2022 திகதியிடப்பட்ட அமைச்சரவை அங்கீகாரம் மற்றும் திறைசேரியின் செயலாளர் அவர்களினால் 08 நவம்பர் 2022 இல் வழங்கப்பட்ட கடிதம் என்பனவற்றின் மூலம் இலங்கை அரசாங்கமானது, பிரேரிக்கப்பட்டுள்ள மீள்கட்டமைப்பு செயன்முறையின் அமுலாக்கலானது நிறைவடையும்வரை கம்பனிக்கு அதன் செயற்பாடுகளை ' நிறுவனச் செயல்நிலை தொடர்ச்சி' அடிப்படையில் தொடருவதற்கு தேவையான நிதியியல் உறுதுணையினை தொடர்ந்தும் வழங்கும்.

மேலும் அரசுடைமை நிறுவனங்களின் மீள்கட்டமைப்பு அலகின் கற்கையின் அடிப்படையில், ஸ்ரீலங்கன் கேட்டரிங் உள்ளடங்கலான ஸ்ரீலங்கன் எயார்லைன்சினை விற்றுவிடுவதற்காக கொள்கையளவிலான அங்கீகாரத்தினை 13 மார்ச் 2023 இல் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இலங்கை அரசாங்கம் வழங்கியுள்ளது. மந்திரிகள் சபையானது ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் கடன் மற்றும் ஐந்தொகையினை மீள்கட்டமைப்பதற்காக ஒரு நிதியியல் ஆலோசகரது நியமனத்திற்கும் அங்கீகாரம் வழங்கியுள்ளது.

உத்தேசித்த மீள்கட்டமைப்பு நடவடிக்கைகள் உள்ளடங்கலாக மேலே விபரிக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது எதிர்காலத்தில் கம்பனியின் திரவத்தன்மை நிலைமையானது மேம்படும் என முகாமைத்துவம் நம்பிக்கை கொண்டுள்ளது.

மேற்குறிப்பிட்டவற்றின் அடிப்படையில், பணிப்பாளர்கள் சபையானது நிறுவனச் செயல்நிலை தொடர்ச்சியான இந்த நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பு மற்றும் முன்னிலைப்படுத்தலானது பொருத்தமானது என்ற கருத்தினைக் கொண்டுள்ளது.

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் (தொடர்ச்சி.)

## 4. ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

### 4.1 குழுமம்

| | காணியும் கட்டிடங்களும் | பொறியும் உபகரணமும் | குத்தகையிலுள்ள விமானங்களிலான மேம்படுத்தல்கள் | விமானம் தொடர்பான உபகரணம் | முற்பணங்கள் /மூலதன நடப்பு வேலை | மொத்தம் 2022 | மொத்தம் 2021 |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா மில்லி. | ரூபா மில்லி. | ரூபா மில்லி. | ரூபா மில்லி. | ரூபா மில்லி. | ரூபா மில்லி. | ரூபா மில்லி. |
| **கிரயம்/மீள்மதிப்பீடு** | | | | | | | |
| ஏப்ரல் 01 இல் உள்ளவாறான மீதி | 4,568.60 | 9,852.43 | 1,911.92 | 9,719.47 | 23.24 | 26,075.66 | 26,017.05 |
| கொள்வனவுகள்/திருத்தங்கள்/மேம்பாடுகள் | 27.21 | 221.20 | 39.86 | 156.15 | 29.80 | 474.22 | 361.79 |
| மூலதன நடப்பு வேலைகளிலிருந்தான மாற்றல்கள் | 19.35 | 29.12 | - | - | (48.47) | - | - |
| விற்பனைகள்/ஓய்வுபெறல்கள் | - | (26.37) | - | (35.38) | - | (61.75) | (303.18) |
| **மார்ச் 31 இல் உள்ளவாறான மீதி** | 4,615.16 | 10,076.38 | 1,951.78 | 9,840.24 | 4.57 | 26,488.13 | 26,075.66 |
| **திரண்ட பெறுமானத்தேய்வு** | | | | | | | |
| ஏப்ரல் 01 இல் உள்ளவாறான மீதி | 913.45 | 7,807.45 | 1,795.19 | 8,331.06 | - | 18,847.15 | 17,567.54 |
| ஆண்டிற்கான செலவு | 311.08 | 672.14 | 55.46 | 410.16 | - | 1,448.84 | 1,579.95 |
| விற்பனைகள்/ஓய்வுபெறல்கள் | - | (23.22) | - | (35.38) | - | (58.60) | (300.34) |
| **மார்ச் 31 இல் உள்ளவாறான மீதி** | 1,224.53 | 8,456.37 | 1,850.65 | 8,705.84 | - | 20,237.39 | 18,847.15 |
| **மார்ச் 31 இல் உள்ளவாறான தேறிய புத்தகப் பெறுமதி** | 3,390.63 | 1,620.01 | 101.13 | 1,134.40 | 4.57 | 6,250.74 | 7,228.51 |

**4. ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் (தொடர்ச்சி...)**

**4.2** *(அ)* 31 மார்ச் 2018 இல் நிறைவடைந்த நிதியாண்டில் கம்பனியின் காணி மற்றும் கட்டிடங்களின் நியாயப் பெறுமதியானது ரஞ்சன் ஜே சமரக்கோன் (ஏ.ஐ.வி. ஸ்ரீலங்கா - கூட்டாண்மை மதிப்பீட்டாளர்) அவர்களால் மேற்கொள்ளப்பட்ட ஒரு மீள்மதிப்பீட்டின் மூலம் தீர்மானிக்கப்பட்டதுடன் துணைநிறுவனத்தின் காணி மற்றும் கட்டிடங்கள் மற்றும் விமான சமையலறை உபகரணங்களது நியாயப் பெறுமதியானது 31 மார்ச் 2019 இல் திரு. ஜி.எச்.ஏ.பி.கே.பர்னாந்து, மதிப்பீட்டாளர் நிருவகத்தின் (இலங்கை) ஒருங்கிணைக்கப்பட்ட மதிப்பீட்டாளர், அவர்களினால் தீர்மானிக்கப்பட்டது.

மதிப்பீட்டில் கூறப்பட்டுள்ள குழுமத்தின் காணி, கட்டிடம் மற்றும் ஏனைய பொறி மற்றும் உபகரணங்களின் விபரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன்

| சொத்து | மதிப்பீட்டின் முறை | மதிப்பீட்டினை நடைமுறைப்படுத்திய திகதி | அவதானிக்கப்படமுடியாத குறிப்பிடத்தக்க உள்ளீடுகள் | மீள்மதிப்பீட்டுத் தொகை ரூபா மில்லி. | அவதானிக்கப்பட முடியாத உள்ளீடுகளது நியாயப் பெறுமதியின் உணர்திறன் | நியாயப் பெறுமதி படிநிலையின் மட்டம் |
|---|---|---|---|---|---|---|
| காணி - கொழும்பு | **திறந்த சந்தை பெறுமதி** இந்த முறையானது மீள்மதிப்பீடு செய்யப்படும் சொத்தின் நியாயப் பெறுமதியினை தீர்மானிப்பதில் ஒரு நியாயமான சமீபத்தைய காலத்தினுள் ஒரு ஒத்த சொத்தின் விற்பனை விலையினை கருத்திலெடுக்கின்றது. இது ஒத்த சொத்துக்களுக்கான சமீபத்தைய செயலிலுள்ள சந்தை விலையினை மதிப்பிடுதல், சொத்தின் அளவு, தன்மை, மற்றும் அமைவிடம் ஆகியவற்றில் காணப்படும் வித்தியாசத்திற்காக பொருத்தமான செம்மையாக்கல்கள் மேற்கொள்ளுதல் என்பவற்றை உள்ளடக்குகின்றது. | 31 மார்ச் 2018 | பேர்ச் ஒன்றிற்கான மதிப்பிடப்பட்ட விலை ரூபா 18 மில்லியன் | 643.50 | நேரியல் உறுதியான தொடர்புடைய உணர்திறன் | மட்டம் 3 |
| கட்டிடங்கள் - கொழும்பு/ கட்டுநாயக்க | **பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட பிரதியீட்டுக் கிரயம்** இந்த முறையானது ஒரு சொத்தினை அதன் நவீன சொத்தொன்றிற்கு சமனாக மாற்றீடு செய்வதற்கான நடைமுறை கிரயத்திலிருந்து பௌதிக சீர்குலைவு மற்றும் அனைத்து பொருத்தமான காலாவதி மற்றும் மேம்படுத்தல் ஆகியவற்றுக்கான தள்ளுபடிகள் கழிக்கப்பட்டு கருத்திலெடுக்கின்றது. | 31 மார்ச் 2018 | சதுர அடி ஒன்றிற்கான மதிப்பிடப்பட்ட விலை ரூபா 643.47 - ரூபா 8,092.50 | 2,083.98 | | |
| துணை நிறுவனம் | | | | | | |
| கட்டிடங்கள் - கட்டுநாயக்க | வருமான அணுகுமுறை அதன் நியாயப் பெறுமதியினை கணிப்பிடுவதற்காக, சொத்தினால் உருவாக்கப்பட்ட தேறிய வருமானத்துடன் இணைத்து குறிப்பிட்ட காரணிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. | 31 மார்ச் 2019 | சதுர அடி ஒன்றிற்கான மதிப்பிடப்பட்ட விலை ரூபா 4,000 - ரூபா 16,000 | 1,565.49 | | |
| பொறி மற்றும் உபகரணங்களின் கீழ் உள்ளடக்கப்பட்ட விமான சமையலறை உபகரணங்கள் - கட்டுநாயக்க | **பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட பிரதியீட்டுக் கிரயம்** இந்த முறையானது ஒரு சொத்தினை அதன் நவீன சொத்திற்கு சமனாக மாற்றீடு செய்வதற்கான நடைமுறை கிரயத்திலிருந்து பௌதீக சீர்குலைவு மற்றும் அனைத்து பொருத்தமான காலாவதி மற்றும் மேம்படுத்தல் ஆகிவற்றுக்கான தள்ளுபடிகள் கழிக்கப்பட்டு கருத்திலெடுக்கின்றது. | 31 மார்ச் 2019 | ஒவ்வொரு உபகரணத்திற்கான நியாயப் பெறுமதியானது தேறிய மாற்றீட்டுக் கிரய அணுகுமுறையினை பயன்படுத்தி பெறப்பட்டுள்ளது. | 1,099.82 | | |

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் (தொடர்ச்சி.)

## 4. ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் (தொடர்ச்சி...)

சொத்துக்களின் கிரயத்திலிருந்து பெறுமானத்தேய்வு கழிக்கப்பட்டு கொண்டுசெல்லப்பட்டிருக்குமாயின், நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கக்கூடிய மீள்மதிப்பிடப்பட்ட சொத்துக்களின் கொண்டுசெல்லல் தொகையானது பின்வருமாறு:

| சொத்தின் வகுப்பு | கிரயம் ரூபா மில்லி. | திரண்ட பெறுமானத்தேய்வு சொத்துக்கள் கிரயத்தில் கொண்டு செல்லப்பட்டிருக்குமாயின் ரூபா மில்லி. | தேறிய கொண்டு செல்லல் தொகை 2022 ரூபா மில்லி. | தேறிய கொண்டு செல்லல் தொகை 2021 ரூபா மில்லி. |
|---|---|---|---|---|
| காணி மற்றும் கட்டிடங்கள் | 3,064.75 | 2,260.97 | 803.78 | 942.04 |
| பொறி மற்றும் உபகரணம் | 2,492.74 | 2,206.55 | 286.19 | 359.34 |

(ஆ) இவ்வாண்டில், குழுமமானது ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களை ரூபா 474.22 மில்லியன் (2021 - ரூபா 361.79 மில்லியன்) மொத்தப் பெறுமதிக்கு கொள்வனவு செய்தது. ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக ரூபா 490.55 மில்லியன் (2021 - ரூபா 319.95 மில்லியன்) காசுக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டன.

(இ) குழுமம் மற்றும் கம்பனியினது ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் முற்றாகப் பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட சொத்துக்களது ஒரு கொண்டுசெல்லல் தொகையான ரூபா 13,230.51 மில்லியனை (2021 - ரூபா 12,434.05 மில்லியன்) உள்ளடக்குகின்றன.

(ஈ) வங்கி வசதிக்காக எந்தவிதமான ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களும் அடமானம் வைக்கப்படவில்லை.

### 4.3 கம்பனி

| | காணி மற்றும் கட்டிடங்கள் ரூபா மில்லி. | பொறி மற்றும் உபகரணங்கள் ரூபா மில்லி. | குத்தகையிலுள்ள விமானத்திற்கான மேம்படுத்தல்கள் ரூபா மில்லி. | விமானம் தொடர்பான உபகரணங்கள் ரூபா மில்லி. | முற்பணங்கள்/ மூலதன நடப்பு வேலை ரூபா மில்லி. | மொத்தம் 2022 ரூபா மில்லி. | மொத்தம் 2021 ரூபா மில்லி. |
|---|---|---|---|---|---|---|---|
| **கிரயம்/மீள்மதிப்பீடு** | | | | | | | |
| ஏப்ரல் 01 இல் உள்ளவாறான மீதி | 2,970.34 | 8,400.73 | 1,911.92 | 9,719.47 | 7.55 | 23,010.01 | 22,981.87 |
| கொள்வனவுகள்/ திருத்தங்கள் /மேம்பாடுகள் | 12.55 | 110.42 | 39.86 | 156.15 | 29.80 | 348.78 | 324.77 |
| மூலதன நடப்பு வேலைகளிலிருந்தான மாற்றல்கள் | 3.66 | 29.12 | - | - | (32.78) | - | - |
| விற்பனைகள்/ ஓய்வுபெறல்கள் | - | (19.26) | - | (35.38) | - | (54.64) | (296.63) |
| **மார்ச் 31 இல் உள்ளவாறான மீதி** | 2,986.55 | 8,521.01 | 1,951.78 | 9,840.24 | 4.57 | 23,304.15 | 23,010.01 |
| **திரண்ட பெறுமானத்தேய்வு** | | | | | | | |
| ஏப்ரல் 01 இல் உள்ளவாறான மீதி | 745.90 | 7,234.66 | 1,795.19 | 8,331.06 | - | 18,106.81 | 17,214.59 |
| ஆண்டிற்கான செலவு | 223.61 | 356.47 | 55.46 | 410.16 | - | 1,045.70 | 1,188.85 |
| விற்பனைகள் /ஓய்வுபெறல்கள் | - | (19.26) | - | (35.38) | - | (54.64) | (296.63) |
| **மார்ச் 31 இல் உள்ளவாறான மீதி** | 969.51 | 7,571.87 | 1,850.65 | 8,705.84 | - | 19,097.87 | 18,106.81 |
| **மார்ச் 31 இல் உள்ளவாறான தேறிய புத்தகப் பெறுமதி** | 2,017.04 | 949.14 | 101.13 | 1,134.40 | 4.57 | 4,206.28 | 4,903.20 |

## 4. ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் (தொடர்ச்சி...)

**4.4 அ)** 31 மார்ச் 2018 இல் நிறைவடைந்த நிதியாண்டில் கம்பனியின் காணி மற்றும் கட்டிடங்களின் நியாயப் பெறுமதியானது திரு. ரஞ்சன் ஜே. சமரக்கோன் (ஏ.ஐ.வி.ஸ்ரீலங்கா - கூட்டாண்மை மதிப்பீட்டாளர்), ஒரு சுயாதீன மதிப்பீட்டாளர், அவர்களின் மூலம் தீர்மானிக்கப்பட்டது. அத்தகைய மீள்மதிப்பீட்டின் விளைவுகள் 31 மார்ச் 2018 தொடக்கம் அமுலுக்குவரும் வகையில் நிதிக் கூற்றுக்களில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.

மதிப்பீட்டில் கூறப்பட்டுள்ள கம்பனியின் காணி மற்றும் கட்டிடங்களின் விபரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

| சொத்து | மதிப்பீட்டின் முறை | மதிப்பீட்டினை நடைமுறைப்படுத்திய திகதி | அவதானிக்கப்பட முடியாத குறிப்பிடத்தக்க உள்ளீடுகள் | மீள்மதிப்பிடப்பட்ட தொகை ரூபா மில்லி. | அவதானிக்கப்பட முடியாத உள்ளீடுகளது நியாயப் பெறுமதியின் உணர்திறன் | நியாயப் பெறுமதி படிநிலையின் மட்டம் |
|---|---|---|---|---|---|---|
| காணி - கொழும்பு | **திறந்த சந்தைப் பெறுமதி**<br>இந்த முறையானது மீள்மதிப்பீடு செய்யப்படும் சொத்தின் நியாயப் பெறுமதியினை தீர்மானிப்பதில் ஒரு நியாயமான சமீபத்தைய காலத்தினுள் ஒரு ஒத்த சொத்தின் விற்பனை விலையினை கருத்திலெடுக்கின்றது. இது ஒத்த சொத்துக்களுக்கான சமீபத்தைய செயலிலுள்ள சந்தை விலையினை மதிப்பிடுதல், சொத்தின் அளவு, தன்மை, மற்றும் அமைவிடம் ஆகியவற்றில் காணப்படும் வித்தியாசத்திற்காக பொருத்தமான செம்மையாக்கல்கள் மேற்கொள்ளுதல் என்பவற்றை உள்ளடக்குகின்றது. | 31 மார்ச் 2018 | பேர்ச் ஒன்றிற்கான மதிப்பிடப்பட்ட விலை ரூபா 18 மில்லியன் | 643.50 | நேரியல் உறுதியான தொடர்புடைய உணர்திறன | மட்டம் 3 |
| கட்டிடங்கள் - கொழும்பு/ கட்டுநாயக்க | **பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட பிரதியீட்டுக் கிரயம்**<br>இந்த முறையானது ஒரு சொத்தினை அதன் நவீன சொத்தொன்றிற்கு சமனாக மாற்றீடு செய்வதற்கான நடைமுறை கிரயத்திலிருந்து பௌதிக சீர்குலைவு மற்றும் அனைத்து பொருத்தமான காலாவதி மற்றும் மேம்படுத்தல் ஆகியவற்றுக்கான தள்ளுபடிகள் கழிக்கப்பட்டு கருத்திலெடுக்கின்றது. | 31 மார்ச் 2018 | சதுர அடி ஒன்றிற்கான மதிப்பிடப்பட்ட விலை ரூபா 643.47 - ரூபா 8,092.50 | 2,083.98 | | |

சொத்துக்களின் கிரயத்திலிருந்து பெறுமானத்தேய்வு கழிக்கப்பட்டு கொண்டுசெல்லப்பட்டிருக்குமாயின், நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கக்கூடிய மீள்மதிப்பிடப்பட்ட சொத்துக்களின் கொண்டுசெல்லல் தொகையானது பின்வருமாறு:

| சொத்தின் வகுப்பு | கிரயம் ரூபா மில்லி. | திரண்ட பெறுமானத் தேய்வு சொத்துக்கள் கிரயத்தில் கொண்டுசெல்லப் பட்டிருக்குமாயின் ரூபா மில்லி. | தேறிய கொண்டு செல்லல் தொகை 2022 ரூபா மில்லி. | தேறிய கொண்டு செல்லல் தொகை 2021 ரூபா மில்லி. |
|---|---|---|---|---|
| காணி மற்றும் கட்டிடங்கள் | 1,239.49 | 958.38 | 281.11 | 306.63 |

**ஆ)** இவ்வாண்டில், குழுமமானது ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களை ரூபா 348.78 மில்லியன் (2021 - ரூபா 324.77 மில்லியன்) மொத்தப் பெறுமதிக்கு கொள்வனவு செய்தது. ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக ரூபா 365.11 மில்லியன் (2021 - ரூபா 282.82 மில்லியன்) காசுக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டன.

**இ)** கம்பனியினது ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் முற்றாகப் பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட சொத்துக்களது ஒரு கொண்டுசெல்லல் தொகையான ரூபா 13,230.51 மில்லியனை (2021 - ரூபா 12,434.05 மில்லியன்) உள்ளடக்குகின்றன.

**ஈ)** வங்கி வசதிக்காக எந்தவிதமான ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களும் அடமானம் வைக்கப்படவில்லை.

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் (தொடர்ச்சி.)

## 5. பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்கள்

### 5.1 பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்களின் அசைவுகள்

| குழுமம் | விமானம் மற்றும் உதிரி என்ஜின்கள் ரூபா மில்லி. | காணி மற்றும் கட்டிடம் ரூபா மில்லி. | வாகனங்கள் ரூபா மில்லி. | விமானப் பாவனையாக்கி ரூபா மில்லி. | மொத்தம் 2022 ரூபா மில்லி. | மொத்தம் 2021 ரூபா மில்லி. |
|---|---|---|---|---|---|---|
| **கிரயம்** | | | | | | |
| ஏப்ரல் 01 இல் உள்ளவாறான மீதி | 122,880.85 | 1,804.08 | 69.16 | 2,500.45 | 127,254.54 | 138,754.60 |
| சேர்க்கைகள் | 1,375.09 | 265.73 | 9.14 | 1,010.50 | 2,660.46 | 33.27 |
| விற்பனைகள் | - | (103.84) | (1.80) | - | (105.64) | (18.20) |
| செம்மையாக்கல்கள் | 898.83 | 44.82 | - | - | 943.65 | (11,515.11) |
| **மார்ச் 31 இல் உள்ளவாறான மீதி** | 125,154.77 | 2,010.79 | 76.50 | 3,510.95 | 130,753.01 | 127,254.56 |
| **பெறுமானத்தேய்வு** | | | | | | |
| **ஏப்ரல் 01 இல் உள்ளவாறான மீதி** | 31,915.25 | 710.12 | 59.67 | 2,113.62 | 34,798.66 | 19,670.87 |
| பெறுமானத்தேய்வு | 12,645.69 | 277.78 | 8.95 | 236.95 | 13,169.37 | 15,129.23 |
| விற்பனைகள் | - | (42.21) | (1.70) | - | (43.91) | (1.42) |
| செம்மையாக்கல்கள் | - | 20.53 | - | - | 20.53 | - |
| மார்ச் 31 இல் உள்ளவாறான மீதி | 44,560.94 | 966.22 | 66.92 | 2,350.57 | 47,944.65 | 34,798.68 |
| **மார்ச் 31 இல் உள்ளவாறான தேறிய புத்தகப் பெறுமதி** | 80,593.83 | 1,044.57 | 9.58 | 1,160.38 | 82,808.36 | 92,455.88 |

| கம்பனி | விமானம் மற்றும் உதிரி என்ஜின்கள் ரூபா மில்லி. | காணி மற்றும் கட்டிடம் ரூபா மில்லி. | வாகனங்கள் ரூபா மில்லி. | விமானப் பாவனையாக்கி ரூபா மில்லி. | மொத்தம் 2022 ரூபா மில்லி. | மொத்தம் 2021 ரூபா மில்லி. |
|---|---|---|---|---|---|---|
| **கிரயம்** | | | | | | |
| **ஏப்ரல் 01 இல் உள்ளவாறான மீதி** | 122,880.85 | 1,186.33 | 69.16 | 2,500.45 | 126,636.79 | 138,136.84 |
| சேர்க்கைகள் | 1,375.09 | 252.49 | 9.14 | 1,010.50 | 2,647.22 | 33.27 |
| விற்பனைகள் | - | (103.84) | (1.80) | - | (105.64) | (18.20) |
| செம்மையாக்கல்கள் | 898.83 | - | - | - | 898.83 | (11,515.11) |
| **மார்ச் 31 இல் உள்ளவாறான மீதி** | 125,154.77 | 1,334.98 | 76.50 | 3,510.95 | 130,077.20 | 126,636.80 |
| **பெறுமானத்தேய்வு** | | | | | | |
| **ஏப்ரல் 01 இல் உள்ளவாறான மீதி** | 31,915.25 | 377.18 | 59.67 | 2,113.62 | 34,465.72 | 19,385.10 |
| பெறுமானத்தேய்வு | 12,645.69 | 224.50 | 8.95 | 236.95 | 13,116.09 | 15,082.05 |
| விற்பனைகள் | - | (42.21) | (1.70) | - | (43.91) | (1.42) |
| **மார்ச் 31 இல் உள்ளவாறான மீதி** | 44,560.94 | 559.47 | 66.92 | 2,350.57 | 47,537.90 | 34,465.73 |
| **மார்ச் 31 இல் உள்ளவாறான தேறிய புத்தகப் பெறுமதி** | 80,593.83 | 775.51 | 9.58 | 1,160.38 | 82,539.30 | 92,171.07 |

## 5.1 பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்களின் அசைவுகள் (தொடர்ச்சி...)

**குறுங்காலக் குத்தகைகள்**

12 மாதங்கள் அல்லது அதற்குக் குறைவான குத்தகை காலத்தினைக்கொண்ட விமானங்கள், காணி மற்றும் கட்டிடங்கள் மற்றும் வாகனங்களது குறுங்கால குத்தகைகளை பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்கள் மற்றும் குத்தகை பொறுப்புக்களாக அங்கீகரிக்காமலிருப்பதனை குழுமமானது தெரிவுசெய்துள்ளது. குழுமமானது இந்த குத்தகைகளுடன் சம்பந்தப்பட்ட குத்தகைக் கொடுப்பனவுகளை குத்தகைக் காலப்பகுதியில் ஓர் நேர்கோட்டு அடிப்படையில் செலவினமாக அங்கீகரிக்கின்றது.

| | குழுமம் | | கம்பனி | |
|---|---|---|---|---|
| | 2022<br>ரூபா மில்லி. | 2021<br>ரூபா மில்லி. | 2022<br>ரூபா மில்லி. | 2021<br>ரூபா மில்லி. |
| குத்தகை விமானங்கள்/ உதிரி என்ஜின்களிலான வாடகை | 43.66 | 2,265.02 | 43.66 | 2,265.02 |
| காணி மற்றும் கட்டிடங்களிலான வாடகை | 206.48 | 243.86 | 206.48 | 242.28 |
| **வாகனங்களிலான வாடகை** | 60.67 | 15.68 | 60.67 | 13.68 |

**குறைவான பெறுமதியிலான சொத்துக்கள்**

குழுமமானது தகவல் தொழில்நுட்ப உபகரணங்கள் மற்றும் நகல் எடுப்பான் இயந்திரங்கள் உள்ளடங்கலான குறைவான பெறுமதியான சொத்துக்களது பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்கள் மற்றும் குத்தகை பொறுப்புக்களை அங்கீகரிக்காமிலிருப்பதற்கு தெரிவுசெய்துள்ளது. குழுமமானது இந்த குத்தகைகளுடன் சம்பந்தப்பட்ட குத்தகைக் கொடுப்பனவுகளை குத்தகைக் காலப்பகுதியில் ஓர் நேர்கோட்டு அடிப்படையில் ஓர் செலவினமாக அங்கீகரிக்கின்றது.

## 6. விமானப் பராமரிப்பு ஒதுக்கம்

| | குழுமம;/கம்பனி | |
|---|---|---|
| | 2022<br>ரூபா மில்லி. | 2021<br>ரூபா மில்லி. |
| ஏப்ரல் 01 இல் உள்ளவாறான மீதி | 50,517.71 | 48,461.22 |
| சேர்க்கைகள் | 9,056.00 | 4,089.09 |
| மீள்விநியோகத்தின்போது ஈடுகட்டப்பட்ட தொகைகள் | (5,181.18) | (504.39) |
| மீட்டல்கள் | (4,442.26) | (4,335.62) |
| பரிமாற்றல் இலாபங்கள் | 25,214.29 | 2,807.41 |
| | 75,164.56 | 50,517.71 |
| வலுக்கன்றலுக்கான ஏற்பாடு (குறிப்பு 6.2) | (27,806.67) | (15,636.24) |
| **மார்ச் 31 இல் உள்ளவாறான தேறிய மீட்கத்தக்க தொகை (குறிப்பு 6.1)** | 47,357.89 | 34,881.47 |

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் (தொடர்ச்சி.)

### 6.1 நடைமுறை/நடைமுறையல்லா வகைப்பாடு

| | மொத்தம் | வலுக்குன்றலுக்கான ஏற்பாடு | தேறியது | ஒரு வருடத்தினுள் மீட்கத்தக்க தொகை | ஒரு வருடத்தின் பின்னர் மீட்கத்தக்க தொகை |
|---|---|---|---|---|---|
| | ரூபா மில்லி. | ரூபா மில்லி. | ரூபா மில்லி. | ரூபா மில்லி. | ரூபா மில்லி. |
| **31 மார்ச் 2022 இல் உள்ளவாறான மீதி** | 75,164.56 | (27,806.67) | 47,357.89 | 16,966.56 | 30,391.33 |
| **31 மார்ச் 2021 இல் உள்ளவாறான மீதி** | 50,517.71 | (15,636.24) | 34,881.47 | 13,635.10 | 21,246.37 |

### 6.2 வலுக்குன்றலுக்கான ஏற்பாட்டின் அசைவு

| | 2022 ரூபா மில்லி. | 2021 ரூபா மில்லி. |
|---|---|---|
| ஏப்ரல் 01 இல் உள்ளவாறான மீதி | 15,636.24 | 13,567.56 |
| இவ்வருடத்திலான கட்டணம் | 3,836.65 | 1,181.44 |
| மீள்விநியோகத்தின்போது ஈடுகட்டப்பட்ட தொகைகள் | (5,181.18) | (504.39) |
| செம்மையாக்கல்கள்* | 3,376.84 | 541.96 |
| பரிமாற்றல் நட்டம் | 10,138.12 | 849.67 |
| **மார்ச் 31 இல் உள்ளவாறான மீதி** | 27,806.67 | 15,636.24 |

*செம்மையாக்கலானது, பல சீராக்கல் நிகழ்வுகளிலான அட்டவணை அல்லது நோக்கெல்லை மாற்றங்களின் விளைவாக பராமரிப்பு ஒதுக்கம் மற்றும் எதிர்கால விமானப் பராமரிப்பு மற்றும் சீராக்கல் கிரயம் ஆகியவற்றுக்கிடையேயான ஏற்பாடுகளின் மாற்றல்களை பிரதிபலிக்கின்றது. இதற்கு இணையான செம்மையாக்கலானது எதிர்கால விமானப் பராமரிப்பு மற்றும் சீராக்கல் கிரயத்திற்கான ஏற்பாடாக குறிப்பு 16 இன் கீழ் பிரதிபலிக்கின்றது.

## 7. விமானப் பாதுகாப்பு வைப்புகள்

| | குழுமம்/கம்பனி 2022 ரூபா மில்லி. | 2021 ரூபா மில்லி. |
|---|---|---|
| ***7.1 (அ).அசைவு*** | | |
| ஏப்ரல் 01 இல் உள்ளவாறான மீதி | 4,641.55 | 4,784.03 |
| சேர்க்கைகள் | 29.65 | - |
| செம்மையாக்கல்கள் | (101.97) | - |
| பிரித்தெடுத்தலின் விளைவு | 258.01 | 237.54 |
| மீட்டல்கள் | (501.45) | (651.39) |
| பரிமாற்றல் இலாபம் | 2,051.16 | 271.37 |
| | 6,376.95 | 4,641.55 |

### (ஆ) .நடைமுறை/நடைமுறையல்லா வகைப்பாடு

| | 2022 ரூபா மில்லி. | 2021 ரூபா மில்லி. |
|---|---|---|
| ஒரு வருடத்தினுள் வருமதியானவை | 937.40 | 602.76 |
| ஒரு வருடத்தின் பின்னர் வருமதியானவை | 5,439.55 | 4,038.79 |
| | 6,376.95 | 4,641.55 |

## 8. அருவச் சொத்துக்கள்

| | குழுமம் | | | | கம்பனி | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மென்பொருள் ரூபா மில்லி. | மூலதன நடப்புவேலை* ரூபா மில்லி. | மொத்தம் 2022 ரூபா மில்லி. | மொத்தம் 2021 ரூபா மில்லி. | மென்பொருள் ரூபா மில்லி. | மூலதன நடப்புவேலைழு ரூபா மில்லி. | மொத்தம் 2022 ரூபா மில்லி. | மொத்தம் 2021 ரூபா மில்லி. |
| **கிரயம்** | | | | | | | | |
| ஏப்ரல் 01 இல் உள்ளவாறான மீதி | 1,437.94 | 14.36 | 1,452.30 | 1,427.95 | 1,340.34 | 14.36 | 1,354.70 | 1,338.95 |
| கொள்வனவுகள்/ திருத்தங்கள்/மேம்பாடுகள் | 12.78 | 11.24 | 24.02 | 27.57 | 12.32 | 11.24 | 23.56 | 18.97 |
| மூ.ந.வே. இருந்தான மாற்றல்கள் | 12.97 | (12.97) | - | - | 12.97 | (12.97) | - | - |
| செம்மையாக்கல்கள் | - | - | - | (3.22) | - | - | - | (3.22) |
| **மார்ச் 31 இல் உள்ளவாறான மீதி** | 1,463.69 | 12.63 | 1,476.32 | 1,452.30 | 1,365.63 | 12.63 | 1,378.26 | 1,354.70 |
| **திரண்ட பெறுமானக்குறைப்பு** | | | | | | | | |
| ஏப்ரல் 01 இல் உள்ளவாறான மீதி | 1,360.16 | - | 1,360.16 | 1,324.03 | 1,285.15 | - | 1,285.15 | 1,260.45 |
| ஆண்டிற்கான கட்டணம் | 37.38 | - | 37.38 | 36.13 | 26.48 | - | 26.48 | 24.70 |
| **மார்ச் 31 இல் உள்ளவாறான மீதி** | 1,397.54 | - | 1,397.54 | 1,360.16 | 1,311.63 | - | 1,311.63 | 1,285.15 |
| **மார்ச் 31 இல் உள்ளவாறான தேறிய புத்தகப் பெறுமதி** | 66.15 | 12.63 | 78.78 | 92.14 | 54.00 | 12.63 | 66.63 | 69.55 |

அறிக்கையிடப்படும் திகதியன்று குழுமம் மற்றும் கம்பனியின் அருவச் சொத்துக்கள் முற்றாக பெறுமதி குறைக்கப்பட்ட கொண்டு செல்லப்படும் சொத்துக்களின் பெறுமதியான ரூபா 1,290.74 மில்லியன் மற்றும் ரூபா 1,228.68 மில்லியனை முறையே உள்ளடக்குகின்றன (2019 - ரூபா 1,260.85 மில்லியன் மற்றும் ரூபா 1,224.05 மில்லியன்).

*மூலதன நடப்பு வேலையானது பன்படுத்துவதற்கு உள்ள மென்பொருளை உள்ளடக்குகின்றது.

## 9. முதலீடுகள்

### *9.1 நடைமுறையல்லா முதலீடுகள்*

| | குழுமம் | | கம்பனி | |
|---|---|---|---|---|
| | 2022 ரூபா மில்லி. | 2021 ரூபா மில்லி. | 2022 ரூபா மில்லி. | 2021 ரூபா மில்லி. |
| இலங்கையிலுள்ள துணை நிறுவனத்திலான முதலீடுகள் | | | | |
| - ஸ்ரீலங்கா கேட்டரிங் லிமிட்டட் (940,268,456 பங்குகள்இ 100% உரித்துவம்) | - | - | 42.24 | 42.24 |
| - எயர் லங்கா (பிரைவேட்) லிமிட்டட் (40,000 பங்ககள்)* | 0.40 | 0.40 | 0.20 | 0.20 |
| | 0.40 | 0.40 | 42.44 | 42.44 |

*எயர் லங்கா (பிரைவேட்) லிமிட்டட்டின் 50% பங்கு மூலதனம் கம்பனியினால் வைத்திருக்கப்படுவதுடன் எஞ்சிய 50% ஆனது துணைக் கம்பனியினால் வைத்திருக்கப்படுகின்றது.

எயர் லங்கா (பிரைவேட்) லிமிட்டட் என்பது ஆரம்பம் முதலே ஒரு செயலற்ற கம்பனியாகும் என்பதுடன் பொருள்தன்மையற்றதன் நிமித்தம் ஒருங்கிணைக்கப்படவில்லை.

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் (தொடர்ச்சி.)

### 9.2 நடைமுறை முதலீடுகள்

| | குழுமம் | | கம்பனி | |
|---|---|---|---|---|
| | 2022<br>ரூபா மில்லி. | 2021<br>ரூபா மில்லி. | 2022<br>ரூபா மில்லி. | 2021<br>ரூபா மில்லி. |
| **வங்கியிலுள்ள நிலையான வைப்புகள்** | 1,937.38 | 1,367.82 | 1,681.78 | 1,114.66 |

### 10. இருப்புக்கள்

| | குழுமம் | | கம்பனி | |
|---|---|---|---|---|
| | 2022<br>ரூபா மில்லி. | 2021<br>ரூபா மில்லி. | 2022<br>ரூபா மில்லி. | 2021<br>ரூபா மில்லி. |
| என்ஜினியரிங் தொடர்பான இருப்பு | 5,975.86 | 5,943.97 | 5,975.86 | 5,943.97 |
| தரைச்சேவை தொடர்பான இருப்பு | 521.48 | 498.68 | 521.48 | 498.68 |
| மூலப் பொருட்கள் மற்றும் நுகர்வுப் பொருட்கள் | 823.70 | 946.10 | 493.15 | 639.61 |
| | 7,321.04 | 7,388.75 | 6,990.49 | 7,082.26 |
| மெதுவாக அசையும் இருப்புக்கான ஏற்பாடு ( குறிப்பு 10.1) | (3,052.67) | (2,732.99) | (2,974.85) | (2,599.23) |
| | 4,268.37 | 4,655.76 | 4,015.64 | 4,483.03 |

குழுமம் மற்றும் கம்பனிக்கு இலாபம் அல்லது நட்டத்தில் ஒரு செலவினமாக அங்கீகரிக்கப்பட்ட இருப்புக்களின் கிரயம் முறையே ரூபா 2,297.01 மில்லியன் மற்றும் ரூபா 1,282.67 மில்லியன் ஆகும்.

### 10.1 மெதுவாக அசையும் இருப்புக்கான ஏற்பாடு

| | குழுமம் | | கம்பனி | |
|---|---|---|---|---|
| | 2022<br>ரூபா மில்லி. | 2021<br>ரூபா மில்லி. | 2022<br>ரூபா மில்லி. | 2021<br>ரூபா மில்லி. |
| ஏப்ரல் 01 இல் உள்ளவாறான மீதி | 2,732.99 | 2,436.39 | 2,599.23 | 2,405.17 |
| இவ்வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகள் | 349.35 | 385.28 | 405.29 | 282.74 |
| இவ்வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட பதிவழிப்புகள் | (29.67) | (88.68) | (29.67) | (88.68) |
| **மார்ச் 31 இல் உள்ளவாறன மீதி** | 3,052.67 | 2,732.99 | 2,974.85 | 2,599.23 |

### 11. வர்த்தக மற்றும் ஏனைய வருமதிகள்

| | குழுமம் | | கம்பனி | |
|---|---|---|---|---|
| | 2022<br>ரூபா மில்லி. | 2021<br>ரூபா மில்லி. | 2022<br>ரூபா மில்லி. | 2021<br>ரூபா மில்லி. |
| ***11.1 வர்த்தக மற்றும் ஏனைய வருமதிகள்*** | | | | |
| வர்த்தக வருமதிகள் | 22,731.70 | 8,385.30 | 21,945.01 | 8,164.76 |
| வருமதிகளின் வலுக்குன்றலுக்கான ஏற்பாடு (குறிப்பு 11.4) | (2,244.18) | (1,617.51) | (2,091.61) | (1,534.14) |
| | 20,487.52 | 6,767.79 | 19,853.40 | 6,630.62 |
| விமான முன்விநியோக கொடுப்பனவுகள் (குறிப்பு 11.2) | 5,649.09 | 2,528.12 | 5,649.09 | 2,528.12 |
| வைப்புகள், முற்பணங்கள், முற்கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய வருமதிகள் | 1,624.03 | 1,763.65 | 1,512.64 | 1,612.21 |
| | 27,760.64 | 11,059.56 | 27,015.13 | 10,770.95 |
| கம்பனி உத்தியோகத்தர்களுக்கான கடன்களும் முற்பணங்களும் | 47.00 | 51.89 | 37.18 | 39.69 |
| | 27,807.64 | 11,111.45 | 27,052.31 | 10,810.64 |

வர்த்தக வருமதிகள் வட்டி அறவிடப்படாதவை என்பதுடன் அவை பொதுவாக 30 நாட்கள் கடன் காலத்தினைக் கொண்டவையாகும்.

### *11.2 விமான முன்விநியோகக் கொடுப்பனவுகள்*

31 மார்ச் 2022 இல் உள்ளவாறான முன்விநியோகக் கொடுப்பனவுகள் பின்வருவனவற்றிற்காக மேற்கொண்ட முன்விநியோகக் கொடுப்பனவுகளை உள்ளடக்குகின்றது. நான் எயார்பஸ் A 350 900 விமானங்கள், இவை 2020 மற்றும் 2021 இல் விநியோகிக்கப்படவுள்ளன என்பதுடன் இதன் தொகை ரூபா 5,649.09 மில்லியன் (USD 19.21 மில்லியன்) ஆகும்.

வழங்குநருடனான உடன்படிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு பிணக்கு தீர்த்தல் பொறிமுறையினூடாக கம்பனியானது மேற்குறிப்பிட்ட தொகையினை இழப்பீட்டுடன் சேர்த்து மீட்பதற்கான ஒரு கோரலை மேற்கொண்டுள்ளது. மீட்டலுக்கான செயன்முறையானது மதிப்பிற்குரிய சட்டமா அதிபர் மற்றும் கம்பனியினால் நியமிக்கப்பட்ட வழக்கறிஞர்களினால் மேற்கொள்ளப்படுகின்றது. முன்விநியோகக் கொடுப்பனவுகளது மீட்பின் விளைவானது கம்பனிக்கு பாதகமாகக் காணப்படும் என நம்புவதற்கு இந்த நேரத்தில் முகாமைத்துவத்திற்கு எவ்விதமான தகவல்களும் கிடைக்கக்கூடியதாயில்லை.

LKAS 37 இன் பந்தி 92 இன் பிரகாரம், இது தொடர்பில் விளைவினை வலுக்குன்றல் செய்யாமலிருப்பதற்காக மற்றும் / அல்லது இது தொடர்பின் கம்பனியின் நிலையில் தப்பெண்ணத்தினை ஏற்படுத்தாதிருப்பதற்காக நாம் மேலதிக தகவல்களை வழங்க இயலாதுள்ளது.

### *11.3* மார்ச் 31 இல் உள்ளவாறான வர்த்தக வருமதிகளின் வயதுப் பகுப்பாய்வு பின்வருமாறு:

31 மார்ச் 2022 இல் உள்ளவாறான குழுமம் தொடர்பான வர்த்தக வருமதியான ரூபா 2,244.18 மில்லியன் மற்றும் கம்பனி தொடர்பான ரூபா 2,091.61 மில்லியனும் வலுக்குன்றியுள்ளதுடன் அவற்றுக்கு முழுமையான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளன. வர்த்தக வருமதிகளிலான வலுக்குன்றலுக்கான ஏற்பாடுகளின் அசைவிற்கு கீழுள்ள குறிப்பு 11.4 இனை பார்க்கவும்.

| 31 மார்ச் 2022 இல் உள்ளவாறான மீதி | மொத்தம் ரூபா மில்லி. | கெடு முடியாதவை அல்லது வலுக்குன்றாதவை ரூபா மில்லி. | கெடு முடிந்தவை மற்றும் வலுக்குன்றியவை 30-60 ரூபா மில்லி. | 61-90 ரூபா மில்லி. | 91-180 ரூபா மில்லி. | 181-365 ரூபா மில்லி. | >365 ரூபா மில்லி. |
|---|---|---|---|---|---|---|---|
| **குழுமம்** | | | | | | | |
| வர்த்தக வருமதிகள் | 22,731.70 | 17,083.44 | 2,522.43 | 1,107.62 | 4.34 | 17.77 | 1,996.10 |
| வருமதிகளின் வலுக்குன்றலுக்கான ஏற்பாடு (குறிப்பு 11.4) | (2,244.18) | - | (6.71) | (219.26) | (4.34) | (17.77) | (1,996.10) |
| | 20,487.52 | 17,083.44 | 2,515.72 | 888.36 | - | - | - |
| **கம்பனி** | | | | | | | |
| வர்த்தக வருமதிகள் | 21,945.01 | 16,472.84 | 2,492.20 | 1,103.92 | - | - | 1,876.05 |
| வருமதிகளின் வலுக்குன்றலுக்கான ஏற்பாடு (குறிப்பு 11.4) | (2,091.61) | - | - | (215.56) | - | - | (1,876.05) |
| | 19,853.40 | 16,472.84 | 2,492.20 | 888.36 | - | - | - |

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் (தொடர்ச்சி.)

**11.3** மார்ச் 31 இல் உள்ளவாறான வர்த்தக வருமதிகளின் வயதுப் பகுப்பாய்வு பின்வருமாறு:

| | | கெடு முடியாதவை அல்லது | கெடு முடிந்தவை மற்றும் வலுக்குன்றியவை | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 31 மார்ச் 2021 இல் உள்ளவாறான மீதி | மொத்தம் ரூபா மில்லி. | வலுக்குன்றாதவை ரூபா மில்லி. | 30-60 ரூபா மில்லி. | 61-90 ரூபா மில்லி. | 91-180 ரூபா மில்லி. | 181-365 ரூபா மில்லி. | >365 ரூபா மில்லி. |
| **குழுமம்** | | | | | | | |
| வர்த்தக வருமதிகள் | 8,385.30 | 4,900.32 | 1,660.37 | 149.15 | 111.94 | 44.88 | 1,518.64 |
| வருமதிகளின் வலுக்குன்றலுக்கான ஏற்பாடு (குறிப்பு 11.4) | (1,617.51) | - | - | - | (53.99) | (44.88) | (1,518.64) |
| | 6,767.79 | 4,900.32 | 1,660.37 | 149.15 | 57.95 | - | - |
| **கம்பனி** | | | | | | | |
| வர்த்தக வருமதிகள் | 8,164.76 | 4,793.95 | 1,653.50 | 148.46 | 87.00 | 44.88 | 1,436.97 |
| வருமதிகளின் வலுக்குன்றலுக்கான ஏற்பாடு (குறிப்பு 11.4) | (1,534.14) | - | - | - | (52.29) | (44.88) | (1,436.97) |
| | 6,630.62 | 4,793.95 | 1,653.50 | 148.46 | 34.71 | - | - |

***11.4 வருமதிகளது வலுக்குன்றலுக்கான ஏற்பாட்டின் அசைவுகள்***

| | குழுமம் | | கம்பனி | |
|---|---|---|---|---|
| | ரூபா மில்லி. 2022 | ரூபா மில்லி. 2021 | ரூபா மில்லி. 2022 | ரூபா மில்லி. 2021 |
| ஏப்ரல் 01 இல் உள்ளவாறான மீதி | 1,617.51 | 1,623.40 | 1,534.14 | 1,558.10 |
| வருடத்திற்கான ஏற்பாடு | 125.63 | 62.29 | 88.38 | 44.22 |
| பரிமாற்றல் நட்டம் | 501.04 | 66.93 | 469.09 | 66.93 |
| பதிவழிப்பு | - | (135.11) | - | (135.11) |
| **மார்ச் 31 இல் உள்ளவாறான மீதி** | 2,244.18 | 1,617.51 | 2,091.61 | 1,534.14 |

அறிக்கையிடப்படும் திகதியில் தொடர்புடைய தரப்பினர்கள் தொடர்பாக குழுமம் மற்றும் கம்பனியினது வலுக்குன்றலுக்கான ஏற்பாடானது முறையே ரூபா 1,230.35 மில்லியன் மற்றும் ரூபா 1,129.89 மில்லியன் ஆகும் (2021- ரூபா 1,062.82 மில்லியன் குழுமத்திற்கு மற்றும் ரூபா 994.31 மில்லியன் கம்பனிக்கு).

## 12. காசுப் பாய்ச்சல் கூற்றில் காசும் காசுக்குச் சமனானவைகள்

***காசு மற்றும் காசுக்குச் சமனானவற்றின் கூறுகள்***

| | குழுமம் | | கம்பனி | |
|---|---|---|---|---|
| | 2022 ரூபா மில்லி. | 2021 ரூபா மில்லி. | 2022 ரூபா மில்லி. | 2021 ரூபா மில்லி. |
| ***12.1 சாதகமான காசும் காசுக்குச் சமனான மீதிகள்*** | | | | |
| காசு மற்றும் வங்கி மீதிகள் | 5,376.82 | 1,447.82 | 4,804.95 | 1,263.81 |
| ***12.2 சாதகமற்ற காசும் காசுக்குச் சமனான மீதிகள்*** | | | | |
| வங்கி மேலதிகப்பற்றுக்கள் (குறிப்பு 15) | (21,523.70) | (23,117.13) | (21,523.70) | (23,117.13) |
| காசுப் பாய்ச்சல் கூற்றின் தேவைக்காக மொத்த காசு மற்றும் காசுக்குச் சமனானவைகள் | (16,146.88) | (21,669.31) | (16,718.75) | (21,853.32) |

## 13. கூறப்பட்ட மூலதனம்

| | குழுமம் | | கம்பனி | |
|---|---|---|---|---|
| | 2022<br>ரூபா மில்லி. | 2021<br>ரூபா மில்லி. | 2022<br>ரூபா மில்லி. | 2021<br>ரூபா மில்லி. |
| *13.1 வழங்கப்பட்ட மற்றும் முற்றாகச் செலுத்தப்பட்ட சாதாரண பங்குகள் (குறிப்பு 13.2)* | 96,360.67 | 51,617.44 | 96,360.67 | 51,617.44 |
| கூறப்பட்ட மூலதனத்திற்கான முற்பணம் (குறிப்பு 13.3) | - | 27,734.99 | - | 27,734.99 |
| மார்ச் 31 இல் உள்ளவாறானது | 96,360.67 | 79,352.43 | 96,360.67 | 79,352.43 |

### 13.2 வழங்கப்பட்ட மற்றும் முற்றாகச் செலுத்தப்பட்ட சாதாரண பங்குகள்

| | குழுமம் | | கம்பனி | |
|---|---|---|---|---|
| | 2022<br>ரூபா மில்லி. | 2021<br>ரூபா மில்லி. | 2022<br>ரூபா மில்லி. | 2021<br>ரூபா மில்லி. |
| ஏப்ரல் 01 இல் உள்ளவாறானது | 51,617.44 | 51,617.44 | 51,617.44 | 51,617.44 |
| வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட வழங்கல் | 44,743.23 | - | 44,743.23 | - |
| மார்ச் 31 இல் உள்ளவாறானது | 96,360.67 | 51,617.44 | 96,360.67 | 51,617.44 |

**பங்குகளது எண்ணிக்கையிலான அசைவு**

| | எண்ணிக்கை | எண்ணிக்கை | எண்ணிக்கை | எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| ஏப்ரல் 01 இல் உள்ளவாறானது | 516,174,355 | 516,174,355 | 516,174,355 | 516,174,355 |
| வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட வழங்கல் | 447,432,300 | - | 447,432,300 | - |
| மார்ச் 31 இல் உள்ளவாறானது | 963,606,655 | 516,174,355 | 963,606,655 | 516,174,355 |

### 13.3 பங்கு மூலதனத்திற்கான முற்பணம்

| | குழுமம் | | கம்பனி | |
|---|---|---|---|---|
| | 2022<br>ரூபா மில்லி. | 2021<br>ரூபா மில்லி. | 2022<br>ரூபா மில்லி. | 2021<br>ரூபா மில்லி. |
| ஏப்ரல் 01 இல் உள்ளவாறானது | 27,734.99 | - | 27,734.99 | - |
| பெறப்பட்ட முற்பணம் | 17,999.98 | 27,734.99 | 17,999.98 | 27,734.99 |
| பங்குகளின் வழங்கல் | (44,743.23) | - | (44,743.23) | - |
| ஒதுக்கத்திற்கான மாற்றல்* | (991.74) | - | (991.74) | - |
| மார்ச் 31 இல் உள்ளவாறானது | - | 27,734.99 | - | 27,734.99 |

இவ்வாண்டின்போது, இலங்கை அரசாங்கமானது ரூபா 18 பில்லியன் முகப்பெறுமதியினையுடைய திறைசேரி முறிகள் வடிவத்தில் முதலீடு செய்ததுடன் (2021 - ரூபா 26.8 பில்லியன்) இலங்கை அரசாங்கத்திற்கு 447,432.300 சாதாரண பங்குகள் வழங்கப்பட்டன.

*பங்கு மூலதனத்திற்கான முற்பணத்திலிருந்து மூலதன ஒதுக்கத்திற்கான மாற்றலானது உரித்துவத்திற்காக மறுபயனாக பெறப்பட்ட திறைசேரி முறிகளின் நியாயப் பெறுமதிக்கும் முகப் பெறுமதிக்கும் இடையேயான வித்தியாசத்தினை பிரதிநிதித்துவம் செய்கின்றது.

# *நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் (தொடர்ச்சி.)*

## 14. ஒதுக்கங்கள்

| | குழுமம் | | கம்பனி | |
|---|---|---|---|---|
| | 2022<br>ரூபா மில்லி. | 2021<br>ரூபா மில்லி. | 2022<br>ரூபா மில்லி. | 2021<br>ரூபா மில்லி. |
| மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | 5,436.47 | 5,441.27 | 3,115.82 | 3,115.82 |
| மூலதன ஒதுக்கம் (குறிப்பு 13.3) | 991.74 | - | 991.74 | - |
| **மார்ச் 31 இல் உள்ளவாறான மீதி** | 6,428.21 | 5,441.27 | 4,107.56 | 3,115.82 |

## 15. வட்டி அறவிடப்படும் பொறுப்புக்கள்

| | குழுமம் | | கம்பனி | |
|---|---|---|---|---|
| | 2022<br>ரூபா மில்லி. | 2021<br>ரூபா மில்லி. | 2022<br>ரூபா மில்லி. | 2021<br>ரூபா மில்லி. |
| **நடைமுறை பொறுப்புக்கள்** | | | | |
| நீண்டகால கடன்கள்/முறிகள் (குறிப்பு 15.1) | - | 4,454.53 | - | 4,454.53 |
| குத்தகைப் பொறுப்பு (குறிப்பு 15.3) | 47,469.44 | 33,000.77 | 47,297.51 | 32,938.46 |
| குறுங்காலக் கடன் | 95,284.24 | 75,150.35 | 95,284.24 | 75,149.35 |
| வங்கி மேலதிகப்பற்று (குறிப்பு 12) | 21,523.70 | 23,117.13 | 21,523.70 | 23,117.13 |
| | 164,277.38 | 135,722.78 | 164,105.45 | 135,659.47 |
| நடைமுறையல்லா பொறுப்புக்கள் | | | | |
| நீண்டகாலக் கடன்கள்/முறிகள் (குறிப்பு 15.1) | 51,327.01 | 34,909.56 | 51,327.01 | 34,909.56 |
| குத்தகைப் பொறுப்பு (குறிப்பு 15.3) | 164,258.07 | 128,507.69 | 163,372.17 | 127,734.76 |
| | 215,585.08 | 163,417.25 | 214,699.18 | 162,644.32 |

### *15.1 நீண்டகாலக் கடன்கள்/முறிகள்*

| | குழுமம் | | கம்பனி | |
|---|---|---|---|---|
| | 2022<br>ரூபா மில்லி. | 2021<br>ரூபா மில்லி. | 2022<br>ரூபா மில்லி. | 2021<br>ரூபா மில்லி. |
| **(அ) நடைமுறை/நடைமுறையல்லா வகைப்பாடு** | | | | |
| நடைமுறை பொறுப்புக்களின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ள ஒரு வருடத்தினுள் செலுத்தப்படவேண்டியவை | - | 4,454.53 | - | 4,454.53 |
| ஒரு வருடத்திற்கு பின்னர் செலுத்தப்படவேண்டியவை ஆனால் ஐந்து வருடங்களுக்கு மேற்படாதவை | 51,327.01 | 34,909.56 | 51,327.01 | 34,909.56 |
| | 51,327.01 | 39,364.09 | 51,327.01 | 39,364.09 |
| **(ஆ) வெளிநாட்டு நாணயத்தில் குறிப்பிடப்பட்ட நீண்டகால கடன்கள்/முறிகள்** | | | | |
| அமெரிக்க டொலரில் பெயரிடப்பட்ட நீண்டகால கடன்கள்/முறிகள் | 175.00 | 197.22 | 175.00 | 197.22 |

**(இ) நீண்டகால கடன்கள்/முறிகளிலான அசைவுகள்**

| | குழுமம் | | கம்பனி | |
|---|---|---|---|---|
| | 2022<br>ரூபா மில்லி. | 2021<br>ரூபா மில்லி. | 2022<br>ரூபா மில்லி. | 2021<br>ரூபா மில்லி. |
| ஏப்ரல் 01 இல் உள்ளவாறான மீதி | 39,364.09 | 43,584.90 | 39,364.09 | 43,491.50 |
| இவ்வாண்டிலான கொடுப்பனவுகள்/மாற்றல்கள் | (4,419.49) | (6,431.10) | (4,418.49) | (6,320.18) |
| எய்தப்பெற்றிராத பரிமாற்றல் நட்டம் | 16,382.41 | 2,210.29 | 16,381.41 | 2,192.77 |
| **மார்ச் 31 இல் உள்ளவாறான மீதி** | 51,327.01 | 39,364.09 | 51,327.01 | 39,364.09 |

### *15.2 வட்டி அறவிடப்படும் கடன்பெறுகைகள் - நியதிகள் மற்றும் மீள்செலுத்தல் அட்டவணை*

கம்பனி

| கடன் வழங்குனர் | 31 மார்ச் 2022 இல் உள்ளவாறான மீதி ரூபா மில்லி. | 31 மார்ச் 2021 இல் உள்ளவாறான மீதி ரூபா மில்லி. | மீள்செலுத்தல் நியதி | பிணைச் சொத்து |
|---|---|---|---|---|
| **(அ) வங்கிக் கடன்கள்** | | | | |
| **LIBOR உடன் இணைக்கப்பட்ட வட்டி** | | | | |
| கிரடிட் சுயிஸ் பேங் ஏ.ஜி. | - | 4,454.53 | ஒக்டோபர் 2021 இல் நிறைவடையும் மாதாந்த தவணைப்பணங்கள் | ஐ.அ.அ., குவைத் மற்றும் சவூதி அரேபியா இலிருந்து IATA இனால் திரட்டப்படும் டிக்கட் விற்பனை |
| இலங்கை வங்கி | 9,555.00 | 6,516.25 | கொடுப்பனவு முதிர்வில், டிசம்பர் 2022. | நிதி அமைச்சிலிருந்து ஆறுதல் பத்திரம் |
| இலங்கை வங்கி | 12,495.00 | 8,521.25 | கொடுப்பனவு முதிர்வில், ஒக்டோபர் 2022. | நிதி அமைச்சிலிருந்து ஆறுதல் பத்திரம் |
| இலங்கை வங்கி | 7,350.00 | 5,012.50 | கொடுப்பனவு முதிர்வில், பெப்ரவரி 2023. | நிதி அமைச்சிலிருந்து ஆறுதல் பத்திரம் |
| இலங்கை வங்கி | 1,470.00 | 1,002.50 | கொடுப்பனவு முதிர்வில், மே 2022. | திறைசேரி உத்தரவாதம் |
| இலங்கை வங்கி | 294.00 | - | கொடுப்பனவு முதிர்வில், ஜூன் 2022. | USD 1.0 மில்லியனின் 125% இற்கு சமமான இலங்கை ரூபா வைப்பு |
| இலங்கை வங்கி | 407.19 | - | கொடுப்பனவு முதிர்வில், செப்டம்பர் 2022. | நிதி அமைச்சிலிருந்து ஆறுதல் பத்திரம் |
| மக்கள் வங்கி | 9,555.00 | 6,516.25 | கொடுப்பனவு முதிர்வில், டிசம்பர் 2022. | நிதி அமைச்சிலிருந்து ஆறுதல் பத்திரம் |
| மக்கள் வங்கி | 12,495.00 | 8,521.25 | கொடுப்பனவு முதிர்வில், ஒக்டோபர் 2022. | நிதி அமைச்சிலிருந்து ஆறுதல் பத்திரம் |
| மக்கள் வங்கி | 7,350.00 | 5,012.50 | கொடுப்பனவு முதிர்வில், பெப்ரவரி 2023. | நிதி அமைச்சிலிருந்து ஆறுதல் பத்திரம் |
| மக்கள் வங்கி | 1,582.47 | 1,079.20 | கொடுப்பனவு முதிர்வில், நவம்பர் 2022. | திறைசேரி உத்தரவாதம் |
| மக்கள் வங்கி | 229.64 | - | கொடுப்பனவு முதிர்வில், செப்டம்பர் 2022. | நிதி அமைச்சிலிருந்து ஆறுதல் பத்திரம் |
| **AWPLR உடன் இணைக்கப்பட்ட வட்டி** | | | | |
| இலங்கை வங்கி | 12,900.00 | 12,900.00 | கொடுப்பனவு முதிர்வில், ஜூன் 2022. | நிதி அமைச்சிலிருந்து ஆறுதல் பத்திரம் |
| இலங்கை வங்கி | 450.00 | 450.00 | கொடுப்பனவு முதிர்வில், மே 2022. | திறைசேரி உத்தரவாதம் |
| இலங்கை வங்கி | 156.32 | - | கொடுப்பனவு முதிர்வில், ஆகஸ்ட் 2022. | நிதி அமைச்சிலிருந்து ஆறுதல் பத்திரம் |
| மக்கள் வங்கி | 13,350.00 | 13,350.00 | கொடுப்பனவு முதிர்வில், ஜூன் 2022. | நிதி அமைச்சிலிருந்து ஆறுதல் பத்திரம் |
| மக்கள் வங்கி | 1,351.90 | 1,351.90 | கொடுப்பனவு முதிர்வில், நவம்பர் 2022. | திறைசேரி உத்தரவாதம் |
| மக்கள் வங்கி | 1,387.50 | 1,387.50 | கொடுப்பனவு முதிர்வில், மே 2022. | திறைசேரி உத்தரவாதம் |
| மக்கள் வங்கி | 177.77 | - | கொடுப்பனவு முதிர்வில், செப்டம்பர் 2022. | நிதி அமைச்சிலிருந்து ஆறுதல் பத்திரம் |

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் (தொடர்ச்சி.)

### 15.2 வட்டி அறவிடப்படும் கடன்பெறுகைகள் - நியதிகள் மற்றும் மீள்செலுத்தல் அட்டவணை (தொடர்ச்சி...)

**(ஆ) சர்வதேச முறி**

**நிலையான வட்டி வீதம்**

| சர்வதேச முறி | 31 மார்ச் 2022 இல் உள்ளவாறான மீதி ரூபா மில்லி. | 31 மார்ச் 2021 இல் உள்ளவாறான மீதி ரூபா மில்லி. | மீள்செலுத்தல் நியதி | பிணைச் சொத்து |
|---|---|---|---|---|
| சர்வதேச முறி | 51,327.01 | 34,909.56 | கொடுப்பனவு முதிர்வில், ஜூன் 2024 | USD 175 மில்லியனுக்கான அரசாங்க உத்தரவாதம் |
| (c) Overdraft Facility | | | | |
| **LIBOR உடன் இணைக்கப்பட்ட வட்டி** | | | | |
| இலங்கை வங்கி | 17,129.68 | 18,810.02 | USD 70 மில்லி -சுழற்சியானது, USD 30 மில்லி. கொடுப்பனவு முதிர்வில் ஜூலை 2022. | (USD 70 மில்லி.) இற்கு ஸ்ரீலங்கன் கேட்டரிங் லிமிட்டட் - துணை நிறுவனத்தின் பங்குகள் மீதான பிணையீடு, திறைசேரி உத்தரவாதம் (USD 30 மில்லி. |
| **AWPLR உடன் இணைக்கப்பட்ட வட்டி** | | | | |
| மக்கள் வங்கி | 4,394.01 | 4,307.11 | கொடுப்பனவு முதிர்வில், ஜூலை 2022 | திறைசேரி உத்தரவாதம் |
| **(ஈ) ஏனைய நிறுவனங்களிடமிருந்தான கடன்கள்** | | | | |
| **நிலையான வட்டி வீதம்** | | | | |
| ஒரு வழங்குனரிடமிருந்து ஒத்திவைக்கப்பட்ட கொடுப்பனவு ஏற்பாடு | 2,727.45 | 3,528.25 | செப்டம்பர் 2022 இல் நிறைவடையும் மாதாந்த தவணைப்பணங்கள் | ஒன்றுமில்லை |
| **துணை நிறுவனம்** | | | | |
| **(உ) வங்கிக் கடன்கள்** | | | | |
| LIBOR உடன் இணைக்கப்பட்ட வட்டி | | | | |
| கொமர்ஷல் வங்கி | - | 1.00 | கொடுப்பனவு முதிர்வில், ஜூலை 2021. | ஒன்றுமில்லை |

*அமெரிக்க டொலரில் குறிப்பிடப்பட்டுள்ள வட்டி அறவிடப்படும் பொறுப்புக்கள் 31 மார்ச் 2022 இல் உள்ளவாறான பரிமாற்றல் வீதமான ரூபா 294 இல் (2021 - ரூபா 200.5) இலங்கை ரூபாவுக்கு மாற்றப்பட்டன.

*அறிக்கையிடப்படும் திகதிக்கு பின்னர் இடம்பெறும் நிகழ்வுகளுக்கு - குறிப்பு 27 இனை பார்க்கவும்.

## 15. வட்டி அறவிடப்படும் பொறுப்புக்கள் (தொடர்ச்சி...)

### *15.3 குத்தகைப் பொறுப்பு*

**(அ) நடைமுறை/நடைமுறையல்லா வகைப்பாடு**

| | குழுமம் | | கம்பனி | |
|---|---|---|---|---|
| | 2022<br>ரூபா மில்லி. | 2021<br>ரூபா மில்லி. | 2022<br>ரூபா மில்லி. | 2021<br>ரூபா மில்லி. |
| நடைமுறை பொறுப்புக்களின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ள ஒரு வருடத்தினுள் செலுத்தவேண்டியவை | 47,469.44 | 33,000.77 | 47,297.51 | 32,938.46 |
| நடைமுறையல்லா பொறுப்புக்களின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ள ஒரு வருடத்திற்கு பிந்திய ஆனால் ஐந்து வருடங்களுக்கு மேற்படாதவை | 126,509.45 | 72,408.54 | 125,623.55 | 71,950.28 |
| நடைமுறையல்லா பொறுப்புக்களின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ள ஐந்து வருடங்களுக்கு மேற்பட்டவை | 37,748.62 | 56,099.15 | 37,748.62 | 55,784.48 |
| **மார்ச் 31 இல் உள்ளவாறான மொத்த குத்தகைப் பொறுப்புக்கள்** | 211,727.51 | 161,508.46 | 210,669.68 | 160,673.22 |

**(ஆ) வெளிநாட்டு நாணயங்களில் குறிப்பிடப்பட்ட குத்தகைப் பொறுப்பு**

| | குழுமம் | | கம்பனி | |
|---|---|---|---|---|
| | 2022<br>மில்லி. | 2021<br>மில்லி. | 2022<br>மில்லி. | 2021<br>மில்லி. |
| EUR இல் குறிப்பிடப்பட்ட நிதிக் குத்தகைகள் | 5.36 | 2.71 | 5.36 | 2.71 |
| USD இல் குறிப்பிடப்பட்ட நிதிக் குத்தகைகள் | 656.55 | 813.44 | 653.80 | 813.44 |

**(இ) குத்தகைப் பொறுப்பிலான அசைவு**

| குழுமம் | மொத்த செலுத்தவேண்டியவை<br>2022<br>ரூபா மில்லி. | எதிர்காலப் பகுதிக்கான நிதிக் கட்டணங்கள்<br>2022<br>ரூபா மில்லி. | தேறிய செலுத்த வேண்டியவை<br>2022<br>ரூபா மில்லி. | தேறிய செலுத்த வேண்டியவை<br>2021<br>ரூபா மில்லி. |
|---|---|---|---|---|
| ஏப்ரல் 01 இல் உள்ளவாறான மீதி | 201,096.59 | (39,588.13) | 161,508.46 | 171,866.33 |
| இவ்வருடத்திலான சேர்க்கைகள் | 3,579.25 | (963.04) | 2,616.21 | 72.50 |
| இவ்வாண்டிலான் கொடுப்பனவுகள் | (27,300.06) | 8,676.48 | (18,623.57) | (6,581.00) |
| வாடகையில் பெறப்பட்ட சலுகைகள் | (339.91) | - | (339.91) | (444.93) |
| செம்மையாக்கல்கள் | (267.63) | 127.72 | (139.91) | (11,950.85) |
| விற்பனைகள் | (84.32) | 7.33 | (76.99) | - |
| பரிமாற்றல் நட்டம்/(இலாபம்) | 80,342.87 | (13,559.65) | 66,783.22 | 8,546.41 |
| **மார்ச் 31 இல் உள்ளவாறான மீதி** | 257,026.79 | (45,299.28) | 211,727.51 | 161,508.46 |

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் (தொடர்ச்சி.)

## 15. வட்டி அறவிடப்படும் பொறுப்புக்கள் (தொடர்ச்சி...)

### 15.3 குத்தகைப் பொறுப்பு (தொடர்ச்சி...)

| கம்பனி | மொத்த செலுத்தவேண்டியவை 2022 ரூபா மில்லி. | எதிர்காலப் பகுதிக்கான நிதிக் கட்டணங்கள் 2022 ரூபா மில்லி. | தேறிய செலுத்த வேண்டியவை 2022 ரூபா மில்லி. | தேறிய செலுத்த வேண்டியவை 2021 ரூபா மில்லி. |
|---|---|---|---|---|
| ஏப்ரல் 01 இல் உள்ளவாறான மீதி | 197,495.12 | (36,821.91) | 160,673.21 | 170,986.72 |
| இவ்வருடத்திலான சேர்க்கைகள் | 3,577.21 | (962.82) | 2,614.39 | 72.50 |
| இவ்வாண்டிலான கொடுப்பனவுகள் | (27,263.80) | 8,585.68 | (18,678.12) | (6,702.93) |
| வாடகையில் பெறப்பட்ட சலுகைகள் | (191.99) | - | (191.99) | (278.63) |
| செம்மையாக்கல்கள் | (233.53) | 39.01 | (194.52) | (11,950.85) |
| விற்பனைகள் | (84.32) | 7.33 | (76.99) | - |
| பரிமாற்றல் நட்டம்/(இலாபம்) | 80,083.35 | (13,559.65) | 66,523.70 | 8,546.41 |
| **மார்ச் 31 இல் உள்ளவாறான மீதி** | 253,382.04 | (42,712.35) | 210,669.68 | 160,673.22 |

**(ஈ) வாடகைச் சலுகைகள்**

இவ்வருடத்தில் நிலவிய கோவிட்-19 தொற்றின் கடுமையான தாக்கத்தின் விளைவாக சில கட்டிடங்களின் குத்தகைகளுக்கு வாடகைச் சலுகைகளை குழுமமானது ஒப்பந்தம் பேசியது. குழுமமானது அதன் கட்டிட குத்தகைகள் தொடர்பான தகுதியுடைய வாடகை சலுகைகளுக்கு தொடர்ந்து கோவிட்-19 தொடர்பான வாடகைச் சலுகைகளுக்கு நடைமுறை உபாயங்களை பிரயோகித்தது. அறிக்கையிடப்படும் காலத்திற்கு இலாபம் அல்லது நட்டத்தில் குழுமம் மற்றும் கம்பனியினால் அங்கீகரிக்கப்பட்ட, கோவிட்-19 தொடர்பான வாடகை சலுகைகளுக்கான நடைமுறை உபாயங்கள் பிரயோகிக்கப்பட்ட தொகைகள் முறையே ரூபா 339.91 மில்லியன் மற்றும் ரூபா 191.99 மில்லியன் ஆகும் ( 2021: குழுமம் மற்றும் கம்பனியினால் பிரயோகிக்கப்பட்ட கோவிட்-19 தொடர்பான வாடகைச் சலுகைகளின் நடைமுறை உபாயம் முறையே ரூபா 444.93 மில்லியன் மற்றும் ரூபா 278.63 மில்லியன் ஆகும்).

## 16. ஏனைய பொறுப்புக்கள்

| | குழுமம் | | கம்பனி | |
|---|---|---|---|---|
| | 2022 ரூபா மில்லி. | 2021 ரூபா மில்லி. | 2022 ரூபா மில்லி. | 2021 ரூபா மில்லி. |
| **(அ) அசைவு** | | | | |
| **ஒரு வருடத்திற்கு பின்னர் செலுத்தவேண்டியவை** | | | | |
| விமானப் பராமரிப்பு சீராக்கல் கிரயத்திற்கான ஏற்பாடு (குறிப்பு 16.1 (பி)) | 29,541.41 | 17,191.16 | 29,541.41 | 17,191.16 |
| விமானத் திரும்பல் கிரயப் பொறுப்பு (குறிப்பு 16.2 (பி)) | 6,718.04 | 4,653.27 | 6,718.04 | 4,653.27 |
| ஓய்வுபெறல் நலன் கடப்பாடு (குறிப்பு 16.3) | 6,696.33 | 6,570.52 | 6,061.32 | 5,938.95 |
| ஒத்திவைக்கப்பட்ட வரிப் பொறுப்பு (குறிப்பு 16.2) | 431.98 | 84.81 | - | - |
| | 43,387.76 | 28,499.76 | 42,320.77 | 27,783.38 |
| **ஒரு வருடத்தினுள் செலுத்தவேண்டியவை** | | | | |
| எதிர்கால விமானப் பராமரிப்பு சீராக்கல் கிரயத்திற்கான ஏற்பாடு (குறிப்பு 16.1 (பி)) | 21,511.04 | 17,105.62 | 21,511.04 | 17,105.62 |
| விமானத் திரும்பல் கிரயம் (குறிப்பு 16.2 (பி)) | 2,142.26 | 244.24 | 2,142.26 | 244.24 |
| | 23,653.30 | 17,349.86 | 23,653.30 | 17,349.86 |

### 16.1 எதிர்கால விமானப் பராமரிப்பு மற்றும் சீராக்கல் கிரயத்திற்கான ஏற்பாடு

| | குழுமம் | | கம்பனி | |
|---|---|---|---|---|
| | 2022<br>ரூபா மில்லி. | 2021<br>ரூபா மில்லி. | 2022<br>ரூபா மில்லி. | 2021<br>ரூபா மில்லி. |
| ஏப்ரல் 01 இல் உள்ளவாறானது | 34,296.78 | 33,909.03 | 34,296.78 | 33,909.03 |
| இவ்வாண்டிலான ஏற்பாடுகள் | 7,424.68 | 3,317.93 | 7,424.68 | 3,317.93 |
| செம்மையாக்கல்கள் (குறிப்பு 6) | (3,376.84) | (541.96) | (3,376.84) | (541.96) |
| பயன்பாடு | (3,245.92) | (4,175.07) | (3,245.92) | (4,175.07) |
| பரிமாற்றல் நட்டம் | 15,953.75 | 1,786.85 | 15,953.75 | 1,786.85 |
| **மார்ச் 31 இல் உள்ளவாறானது** | 51,052.45 | 34,296.78 | 51,052.45 | 34,296.78 |
| **(ஆ) நடைமுறை/நடைமுறையல்லா வகைப்பாடு** | | | | |
| ஏனைய பொறுப்புக்களின் கீழ் உள்ளடக்கப்பட்ட ஒரு வருடத்தினுள் செலுத்தவேண்டியவை | 21,511.04 | 17,105.62 | 21,511.04 | 17,105.62 |
| ஏனைய நீண்டகால பொறுப்புக்களின் கீழ் உள்ளடக்கப்பட்ட ஒரு வருடத்தின் பின்னர் செலுத்தவேண்டியவை | 29,541.41 | 17,191.16 | 29,541.41 | 17,191.16 |
| | 51,052.45 | 34,296.78 | 51,052.45 | 34,296.78 |

### 16.2 விமானத் திரும்பல் கிரயம்

| | குழுமம் | | கம்பனி | |
|---|---|---|---|---|
| | 2022<br>ரூபா மில்லி. | 2021<br>ரூபா மில்லி. | 2022<br>ரூபா மில்லி. | 2021<br>ரூபா மில்லி. |
| **(அ) அசைவு** | | | | |
| ஏப்ரல் 01 இல் உள்ளவாறானது | 4,897.51 | 4,578.22 | 4,897.51 | 4,578.22 |
| திரும்பல் கிரயத்தின் சுழற்சி விளைவு | 265.56 | 342.28 | 265.56 | 342.28 |
| தீர்ப்பனவுகள் | (1.46) | (193.52) | (1.46) | (193.52) |
| செம்மையாக்கல்கள் | 1,035.47 | (108.02) | 1,035.47 | (108.02) |
| பரிமாற்றல் நட்டம் | 2,663.22 | 278.55 | 2,663.22 | 278.55 |
| **மார்ச் 31 இல் உள்ளவாறானது** | 8,860.30 | 4,897.51 | 8,860.30 | 4,897.51 |
| **(ஆ) நடைமுறை/நடைமுறையல்லா வகைப்பாடு** | | | | |
| ஏனைய பொறுப்புக்களின் கீழ் உள்ளடக்கப்பட்ட ஒரு வருடத்தினுள் செலுத்தவேண்டியவை | 2,142.26 | 244.24 | 2,142.26 | 244.24 |
| ஏனைய நீண்டகால பொறுப்புக்களின் கீழ் உள்ளடக்கப்பட்ட ஒரு வருடத்தின் பின்னர் செலுத்தவேண்டியவை | 6,718.04 | 4,653.27 | 6,718.04 | 4,653.27 |
| | 8,860.30 | 4,897.51 | 8,860.30 | 4,897.51 |

### 16.3 ஓய்வுபெறல் நலன் கடப்பாடு

**(அ). பணிக்கொடை**

| | குழுமம் | | கம்பனி | |
|---|---|---|---|---|
| | 2022<br>ரூபா மில்லி. | 2021<br>ரூபா மில்லி. | 2022<br>ரூபா மில்லி. | 2021<br>ரூபா மில்லி. |
| ஏப்ரல் 01 இல் உள்ளவாறான மீதி | 6,517.46 | 6,416.29 | 5,938.95 | 5,815.77 |
| நடைமுறை சேவைக் கட்டணம் | 370.18 | 997.45 | 325.85 | 520.60 |
| வட்டிச் செலவு | 554.10 | - | 520.01 | 383.21 |
| காப்பீட்டுக் கணிப்பு நட்டம்/(இலாபம்) | (636.51) | 92.13 | (598.05) | 160.58 |
| இவ்வாண்டிலான கொடுப்பனவுகள் | (455.29) | (988.41) | (438.69) | (941.21) |
| **மார்ச் 31 இல் உள்ளவாறான மீதி** | 6,349.94 | 6,517.46 | 5,748.07 | 5,938.95 |

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் (தொடர்ச்சி.)

## 16. ஏனைய நீண்டகால பொறுப்புக்கள் (தொடர்ச்சி...)

### 16.3 ஓய்வுபெறல் நலன் கடப்பாடு (தொடர்ச்சி...)

### 16.3 (ஆ) விடுமுறையினை பணமாக்குவதற்கான ஏற்பாடு

| | குழுமம் | | கம்பனி | |
|---|---|---|---|---|
| | 2022<br>ரூபா மில்லி. | 2021<br>ரூபா மில்லி. | 2022<br>ரூபா மில்லி. | 2021<br>ரூபா மில்லி. |
| ஏப்ரல் 01 இல் உள்ளவாறான மீதி | 53.06 | 42.46 | - | - |
| நடைமுறை சேவைக் கட்டணம் | 313.25 | - | 313.25 | - |
| வட்டிச் செலவு | 3.98 | 4.25 | - | - |
| இவ்வாண்டிலான காப்பீட்டுக் கணிப்பு நட்டம் ∴(இலாபம்) | (22.83) | 7.38 | - | - |
| இவ்வாண்டில் செலுத்தப்பட்ட நலன்கள் | (1.07) | (1.03) | - | - |
| **மாச் 31 இல் உள்ளவாறான மீதி** | 346.39 | 53.06 | 313.25 | - |
| | | | | |
| **மொத்த ஓய்வுபெறல் நலன் கடப்பாடு** | 6,696.33 | 6,570.52 | 6,061.32 | 5,938.95 |

பின்வரும் முக்கிய அனுமானங்களின் அடிப்படையில் எக்சூயேரியல் அன்ட் மெனேஜ்மன்ட் கன்சல்ட்டன்ட்ஸ் (பிரைவேட்) லிமிட்டட்டின் திரு. எம். பூபாலநாதன், தொழில்முறையாக தகமை வாய்ந்த காப்பிட்டுக் கணிப்பாளர், அவர்களினால் காப்பீட்டுக் கணிப்பு பெறுமதியிடல் மேற்கொள்ளப்பட்டது.

| | கம்பனி | | துணை நிறுவனம் | |
|---|---|---|---|---|
| | 2022 | 2021 | 2022 | 2021 |
| (i) வட்டி வீதம் | | | | |
| -LKR | 15.8% | 8.4% | 15.0% | 7.5% |
| -USD | 7.5% | - | - | - |
| (ii) சம்பள அதிகரிப்பு வீதம் | | | | |
| -LKR | 10.0% | 4.5% | 15.0% | 7.5% |
| -USD | 3.0% | 3.0% | - | - |
| (iii) USD க்கு எதிரான ரூபாவின் பெறுமதியிறக்கம் வருடத்திற்கு | - | 5.0% | - | - |
| (iv) ஓய்வுபெறல் வயனது - வருடங்கள் | 60 | 60 | 60 | 55 |
| (v) நிறுவனம் ஒரு தொடர்ந்து செயலாற்றுவதனை தொடரும் | | | | |
| (vi) சராசரி எதிர்பார்க்கப்படும் எஞ்சிய சேவை வாழ்க்கை | 14.02 Years | 14.62 Years | 12.15 Years | 6.33 Years |

**துணைநிறுவனம்**

2021 இன் 28 ஆம் இலக்க தொழிலாளர்களது ஆகக்குறைந்த ஓய்வுபெறல் வயதுச் சட்டத்தினால் சட்டமாக்கப்பட்டவாறு ஓய்வுபெறல் வயது அதிகரிக்கப்பட்டதன் காரணமாக துணைநிறுவனத்தின் ஓய்வுபெறல் நலன் திட்டமானது திருத்தியமைக்கப்பட்டது.

**காப்பீட்டுக் கணிப்பில் பயன்படுத்தப்பட்ட அனுமானங்களின் உணர்திறன்**

பின்வரும் அட்டவணையானது பணியாட்கள் நலன் பொறுப்பு அளவீட்டில் அனைத்து ஏனைய மாறிகளும் நிலையாக இருக்கும்போது முக்கிய அனுமானங்களில் ஒரு நியாயமான சாத்தியமான மாற்றத்திற்கான உணர்திறனைக் காண்பிக்கின்றது.

விரிவான வருமானக் கூற்று மற்றும் நிதி நிலைமைக் கூற்றினது உண்ர்திறனானது இவ்வருடத்தில் இலாபம் அல்லது நட்டத்தில் மற்றும் பணியாட்கள் நலன் கடப்பாட்டில் கழிவிறக்க வீதம் மற்றும் சம்பள அதிகரிப்பு வீதம் ஆகியவற்றிலான அனுமானிக்கப்பட்ட மாற்றங்களின் விளைவாகும்.

## 16. ஏனைய நீண்டகால பொறுப்புக்கள் (தொடர்ச்சி...)

| கழிவிறக்க வீதத்திலான அதிகரிப்பு/ (குறைப்பு) | சம்பள அதிகரிப்பு வீதத்திலான அதிகரிப்பு/ (குறைப்பு) | பரிமாற்றல் வீதத்திலான அதிகரிப்பு/ (குறைப்பு) | ஓய்வுபெறல் நலன் கடப்பாட்டிலான விளைவு | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | 2022 | | 2021 | |
| | | | கம்பனி ரூபா மில்லி. | துணைநிறுவனம் ரூபா மில்லி. | கம்பனி ரூபா மில்லி. | துணைநிறுவனம் ரூபா மில்லி. |
| 1% | - | - | (357.37) | (46.12) | (447.49) | (34.51) |
| -1% | - | - | 404.64 | 52.12 | 517.20 | 38.40 |
| - | 1% | - | 419.87 | 54.44 | 531.81 | 40.82 |
| - | -1% | - | (374.51) | (48.90) | (464.51) | (37.29) |
| - | - | 1% | 24.73 | - | 24.51 | - |
| - | - | -1% | (24.73) | - | (24.51) | - |

**முதிர்வுப் பகுப்பாய்வு**

| | மூன்று மாதங்களுக்கு குறைந்தவை | 3 முதல் 12 மாதங்கள் | 1 முதல் 5 வருடங்கள் | 5 வருடங்களுக்கு மேற்பட்டவை | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| குழுமம் | 2.66 | 654.67 | 2,610.57 | 3,428.42 | 6,696.32 |
| கம்பனி | 2.65 | 627.54 | 2,474.10 | 2,957.02 | 6,061.31 |

## 17. ஊர்தியின் முன் விற்பனை

ஊர்தியின் முன் விற்பனை பொதுவாக 12 மாதங்கள் வரைக்கும் பயன்படுத்தப்படாத டிக்கட்டுகளின் பெறுமதியினை பிரதிநிதித்துவம் செய்கின்றது. எவ்வாறாயினும், தொற்றுச் சூழ்நிலைமையின் கீழ் பயணிகள் பிரயாணம் மேற்கொள்வதற்கான ஒரு வாய்ப்பு இல்லாதன் காரணமாக அறிக்கையிடும் திகதியில் டிக்கட்டுகளின் செல்லுபடியாகும் காலம் 12 மாதங்களுக்கு அப்பால் தொடர்ந்தது. எனவே இந்த மீதியானது 12 முதல் 24 மாதங்கள் வரைக்கும் பயன்படுத்தப்படாத டிக்கட்டுகளை பிரதிபலிக்கின்றது.

## 18. வர்த்தக மற்றும் ஏனைய கொடுமதிகள்

| | குழுமம் | | கம்பனி | |
|---|---|---|---|---|
| | 2022 ரூபா மில்லி. | 2021 ரூபா மில்லி. | 2022 ரூபா மில்லி. | 2021 ரூபா மில்லி. |
| வர்த்தக மற்றும் ஏனைய கொடுமதிகள் | 132,862.79 | 83,011.81 | 141,522.63 | 88,837.45 |
| | 132,862.79 | 83,011.81 | 141,522.63 | 88,837.45 |

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் (தொடர்ச்சி.)

## 19. நிதியியல் கருவிகள்

### *19.1 நிதியியல் கருவிகளின் வகைப்பாடு*

கீழ்காணும் அட்டவணையிலுள்ள நிதிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் SLFRS 9 - நிதிக் கருவிகளின் பிரகாரம் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

| | 2022<br>ரூபா மில்லி. | 2021<br>ரூபா மில்லி. |
|---|---|---|
| **குழுமம்** | | |
| **பெறுமதி குறைப்புக் கிரயத்தில் அளவிடப்பட்ட நிதிக் கருவிகள்** | | |
| **நிதிச் சொத்துக்கள்** | | |
| முற்பணங்கள் மற்றும் முன்கொடுப்பனவுகள் நீங்கலான வர்த்தக மற்றும் ஏனைய வருமதிகள் | 20,994.33 | 7,109.42 |
| விமானப் பராமரிப்பு ஒதுக்கம் | 47,357.89 | 34,881.47 |
| விமான மற்றும் உதிரி என்ஜின் வைப்புகள் | 6,376.95 | 4,641.55 |
| முதலீடுகள் | 1,937.38 | 1,367.82 |
| காசு மற்றும் வங்கி மீதிகள் | 5,376.82 | 1,447.82 |
| | 82,043.37 | 49,448.08 |
| **நிதிப் பொறுப்புக்கள்** | | |
| வட்டி அறவிடப்படும் கடன்கள் மற்றும் கடன் பெறுகைகள் | 168,134.95 | 137,631.57 |
| குத்தகைப் பொறுப்பு | 211,727.51 | 161,508.46 |
| விமானப் பராமரிப்பு மற்றும் பிரித்து சீராக்கல் கிரயத்திற்கான ஏற்பாடு | 51,052.45 | 34,296.78 |
| திரும்புகை கிரயத்திற்கான ஏற்பாடு | 8,860.30 | 4,897.51 |
| வர்த்தக மற்றும் ஏனைய கொடுமதிகள் | 127,379.17 | 80,855.81 |
| | 567,154.38 | 419,190.13 |
| **கம்பனி** | | |
| **பெறுமதி குறைப்புக் கிரயத்தில் அளவிடப்பட்ட நிதிக் கருவிகள்** | | |
| **நிதிச் சொத்துக்கள்** | | |
| முற்பணங்கள் மற்றும் முன்கொடுப்பனவுகள் நீங்கலான வர்த்தக மற்றும் ஏனைய வருமதிகள் | 20,350.42 | 6,960.77 |
| விமானப் பராமரிப்பு ஒதுக்கம் | 47,357.89 | 34,881.47 |
| விமான மற்றும் உதிரி என்ஜின் வைப்புகள் | 6,376.95 | 4,641.55 |
| முதலீடுகள் | 1,681.78 | 1,114.66 |
| காசு மற்றும் வங்கி மீதிகள் | 4,804.95 | 1,263.81 |
| | 80,571.99 | 48,862.26 |
| **நிதிப் பொறுப்புக்கள்** | | |
| வட்டி அறவிடப்படும் கடன்கள் மற்றும் கடன் பெறுகைகள் | 168,134.95 | 137,630.57 |
| குத்தகைப் பொறுப்பு | 210,669.68 | 160,673.22 |
| விமானப் பராமரிப்பு மற்றும் பிரித்து சீராக்கல் கிரயத்திற்கான ஏற்பாடு | 51,052.45 | 34,296.78 |
| திரும்புகை கிரயத்திற்கான ஏற்பாடு | 8,860.30 | 4,897.51 |
| வர்த்தக மற்றும் ஏனைய கொடுமதிகள் | 136,407.84 | 86,682.07 |
| | 575,125.22 | 424,180.15 |

**நியாயப் பெறுமதிகளை மதிப்பிடுவதற்கு பின்வரும் முறைகள் மற்றும் அனுமானங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.**

முகாமைத்துவமானது காசு மற்றும் வங்கி மீதிகள், வர்த்தக மற்றும் ஏனைய வருமதிகள், வர்த்தக மற்றும் ஏனைய கொடுமதிகளது நியாயப் பெறுமதியானது இந்த கருவிகளின் குறுங்கால முதிர்வுகளின் காரணமாக பெரும்பாலும் அவற்றின் கொண்டசெல்லல் தொகைகளுக்கு அண்ணளவாக உள்ளன.

முகாமைத்துவமானது நீண்டகால மாற்றமடையும் கடன்பெறுகைகளின் நியாயப் பெறுமதியானது சந்தை அடிப்படையிலான வட்டி வீதங்களின் காரணமாக பெரும்பாலும் அவற்றின் கொண்டுசெல்லல் தொகைகளுக்கு அண்ணளவாக உள்ளன. எனவே, குழுமம்/ கம்பனியின் நிதிக் கருவிகளின் கொண்டுசெல்லல் தொகைகள் அவற்றின் நியாயப் பெறுமதிகளுக்கு நியாயமாக அண்ணளவாக உள்ளன.

## 20. வருவாய் மற்றும் பிரிவு வாரியான தகவல்கள்

| | குழுமம் | | கம்பனி | |
|---|---|---|---|---|
| | 2022<br>ரூபா மில்லி. | 2021<br>ரூபா மில்லி. | 2022<br>ரூபா மில்லி. | 2021<br>ரூபா மில்லி. |
| ***20.1 வருவாய்*** | | | | |
| அட்டவணைப்படுத்தப்பட்ட சேவைகள் - பயணிகள் | 77,999.36 | 16,327.93 | 77,999.36 | 16,327.93 |
| - சரக்கு | 43,975.08 | 27,328.39 | 43,975.08 | 27,328.39 |
| - மிகையான பொதி | 1,156.78 | 196.72 | 1,156.78 | 196.72 |
| - தபால் | 244.43 | 126.08 | 244.43 | 126.08 |
| | 123,375.65 | 43,979.12 | 123,375.65 | 43,979.12 |
| விமான நிலையம் மற்றும் ஏனைய சேவைகள் | 9,038.33 | 4,719.65 | 9,132.42 | 4,816.68 |
| தீர்வை அற்றவை | 245.55 | 18.36 | 245.55 | 18.36 |
| அட்டவணைப்படுத்தப்படாத சேவைகள் | 182.61 | 1,879.69 | 182.61 | 1,879.69 |
| வானூர்தி உணவு வழங்கல் | 1,459.22 | 332.10 | - | - |
| **மொத்தம்** | 134,301.36 | 50,928.92 | 132,936.23 | 50,693.85 |

### *20.2 பிரிவுவாரியான தகவல்கள்*

**(அ) பூகோள வாரியான பிரதான அறிக்கையிடல் - விற்பனை தோற்றம் வாரியான வருவாய் - (குழுமம் )**

| வருவாய் 2022 | இலங்கை<br>ரூபா மில்லி. | ஆசியா (இலங்கை நீங்கலாக)<br>ரூபா மில்லி. | ஐரோப்பா மற்றும் ஆபிரிக்கா<br>ரூபா மில்லி. | மத்திய கிழக்கு<br>ரூபா மில்லி. | வட மற்றும் தென் அமெரிக்கா<br>ரூபா மில்லி. | அவுஸ்திரேலியா பசிபிக்<br>ரூபா மில்லி. | மொத்தம் 2022<br>ரூபா மில்லி. |
|---|---|---|---|---|---|---|---|
| அட்டவணைப்படுத்தப்பட்ட சேவைகள் - பயணிகள் | 15,002.46 | 24,249.36 | 10,616.35 | 18,117.11 | 1,627.78 | 8,386.30 | 77,999.36 |
| - சரக்கு | 15,009.90 | 21,741.97 | 4,016.24 | 1,569.92 | 0.61 | 1,636.44 | 43,975.08 |
| - மிகையான பொதி | 150.04 | 364.58 | 70.10 | 461.11 | 50.60 | 60.35 | 1,156.78 |
| - தபால | 107.84 | 43.48 | 93.11 | - | - | - | 244.43 |
| | 30,270.24 | 46,399.39 | 14,795.80 | 20,148.14 | 1,678.99 | 10,083.09 | 123,375.65 |
| விமான நிலையம் மற்றும் ஏனைய சேவைகள் | 9,038.33 | - | - | - | - | - | 9,038.33 |
| தீர்வை அற்றவை | - | 111.26 | 33.35 | 90.58 | - | 10.36 | 245.55 |
| அட்டவணைப்படுத்தப்படாத சேவைகள் | 182.61 | - | - | - | - | - | 182.61 |
| வானூர்தி உணவு வழங்கல் | 1,459.22 | - | - | - | - | - | 1,459.22 |
| **பிரிவுவாரியான வருவாய்** | 40,950.40 | 46,510.65 | 14,829.15 | 20,238.72 | 1,678.99 | 10,093.45 | 134,301.36 |

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் (தொடர்ச்சி.)

## 20.2 பிரிவுவாரியான தகவல்கள் (தொடர்ச்சி.)

**(அ) பூகோள வாரியான பிரதான அறிக்கையிடல் - விற்பனை தோற்றம் வாரியான வருவாய் - (குழுமம்)**

| வருவாய் 2021 | இலங்கை ரூபா மில்லி. | ஆசியா (இலங்கை நீங்கலாக) ரூபா மில்லி. | ஐரோப்பா மற்றும் ஆபிரிக்கா ரூபா மில்லி. | மத்திய கிழக்கு ரூபா மில்லி. | வட மற்றும் தென் அமெரிக்கா ரூபா மில்லி. | அவுஸ்திரேலியா பசிபிக் ரூபா மில்லி. | மொத்தம் 2021 ரூபா மில்லி. |
|---|---|---|---|---|---|---|---|
| அட்டவணைப்படுத்தப்பட்ட சேவைகள் - பயணிகள் | 5,216.19 | 4,138.41 | 865.40 | 2,834.37 | 280.76 | 2,992.80 | 16,327.93 |
| - சரக்கு | 10,556.25 | 13,232.92 | 1,892.83 | 1,155.36 | 0.56 | 490.47 | 27,328.39 |
| - மிகையான பொதி | 40.49 | 66.68 | 15.98 | 62.25 | 1.16 | 10.16 | 196.72 |
| - தபால | 55.95 | 28.51 | 41.62 | - | - | - | 126.08 |
| | 15,868.88 | 17,466.52 | 2,815.83 | 4,051.98 | 282.48 | 3,493.43 | 43,979.12 |
| விமான நிலையம் மற்றும் ஏனைய சேவைகள் | 4,719.65 | - | - | - | - | - | 4,719.65 |
| தீர்வை அற்றவை | - | 7.17 | 6.03 | 3.05 | - | 2.11 | 18.36 |
| அட்டவணைப்படுத்தப்படாத சேவைகள் | 1,879.69 | - | - | - | - | - | 1,879.69 |
| வானூர்தி உணவு வழங்கல் | 332.10 | - | - | - | - | - | 332.10 |
| **பிரிவுவாரியான வருவாய்** | 22,800.31 | 17,473.69 | 2,821.86 | 4,055.03 | 282.48 | 3,495.54 | 50,928.92 |

## 20. வருவாய் மற்றும் பிரிவுவாரியான தகவல்கள் (தொடர்ச்சி.)

**(ஆ) வணிக பிரிவுவாரியான இரண்டாம்நிலை அறிக்கையிடல்**

| | வணிகப் பிரிவு | | | | வணிகப் பிரிவு | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | வானூர்தி 2022 ரூபா மில்லி. | வானூர்தி உணவளித்தல் 2022 ரூபா மில்லி. | பிரிவுகளிடையேயான நீக்கல்கள் 2022 ரூபா மில்லி. | குழுமம் 2022 ரூபா மில்லி. | வானூர்தி 2021 ரூபா மில்லி. | வானூர்தி உணவளித்தல் 2021 ரூபா மில்லி. | பிரிவுகளிடையேயான நீக்கல்கள் 2021 ரூபா மில்லி. | குழுமம் 2021 ரூபா மில்லி. |
| **வருவாய்** | | | | | | | | |
| வெளிவாரி வாடிக்கையாளர்களுக்கான விற்பனை | 132,936.23 | 3,898.95 | (2,533.82) | 134,301.36 | 50,693.85 | 690.88 | (455.81) | 50,928.92 |
| **விளைவுகள்** | | | | | | | | |
| வரிக்கு பிந்திய இலாபம்/ (நட்டம்) | (166,369.68) | 2,802.68 | (16.08) | (163,583.08) | (45,231.46) | (903.40) | (3,569.65) | (49,704.51) |
| **ஏனைய பிரிவுவாரியான தகவல்கள்** | | | | | | | | |
| சொத்துக்கள் | 178,144.17 | 13,495.56 | (9,376.43) | 182,263.33 | 154,381.42 | 9,675.09 | (6,173.71) | 157,882.80 |
| பொறுப்புக்கள் | 615,181.10 | 2,840.49 | (9,334.39) | 608,687.18 | 443,646.69 | 1,858.67 | (6,131.69) | 439,373.67 |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களது கொள்வனவு | 348.78 | 125.44 | - | 474.22 | 324.77 | 37.02 | - | 361.79 |
| அருவச் சொத்துக்களின் கொள்வனவு | 23.56 | 0.46 | - | 24.02 | 18.97 | 8.60 | - | 27.57 |
| பெறுமானத்தேய்வு மற்றும் பெறுமதிக்குறைப்பு | 14,188.27 | 467.32 | - | 14,655.59 | 16,295.62 | 449.70 | - | 16,745.32 |
| நிதிச் செலவு | 22,813.07 | 90.83 | - | 22,903.90 | 22,338.61 | 190.82 | - | 22,529.43 |
| வட்டி அறவிடப்படும் பொறுப்புக்களிலான பரிமாற்றல் நட்டம் | 107,621.19 | 259.53 | - | 107,880.72 | 13,334.22 | - | - | 13,334.22 |
| நிதியியல் வருமானம் | 639.25 | 24.92 | - | 664.17 | 524.86 | 36.65 | - | 561.51 |
| வரிச் செலவுகள் /(திரும்பல்) | - | 425.69 | - | 425.69 | - | (57.06) | - | (57.06) |
| பரிமாற்றல் நட்டம் நீங்கலான செயற்பாட்டுச் செலவுகள் | 132,397.86 | 3,426.44 | (2,602.20) | 133,222.10 | 74,511.39 | 2,055.70 | (455.81) | 76,111.28 |
| பதிவழிக்கப்பட்ட இருப்புக்கள் | 29.67 | - | - | 29.67 | 88.68 | - | - | 88.68 |

## 21. ஏனைய வருமானம் மற்றும் இலாபங்கள்

| | குழுமம் | | கம்பனி | |
|---|---|---|---|---|
| | 2022 ரூபா மில்லி. | 2021 ரூபா மில்லி. | 2022 ரூபா மில்லி. | 2021 ரூபா மில்லி. |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களது விற்பனையிலான இலாபம் | 9.47 | 7.57 | 10.86 | 4.94 |
| நானாவித வருமானம் | 603.93 | 621.13 | 688.10 | 620.63 |
| பிடித்துவைத்தல் வரிக்கான ஏற்பாட்டின் திரும்பல் (குறிப்பு 21.1) | - | 16,433.45 | - | 16,433.45 |
| ஸ்ரீலங்கன் கேட்டரிங் லிமிட்டட் இடமிருந்தான பங்கிலாபங்கள் | - | - | - | 3,569.63 |
| | 613.40 | 17,062.15 | 698.96 | 20,628.65 |

***21.1*** 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க இறைவரிச் சட்டத்தின் சட்டவாக்கத்துடன், கம்பனியானது பொறுப்புடைய வெளிநாட்டு வழங்குநர் கொடுப்பனவுகளில் செலுத்தக்கூடிய பிடித்து வைத்தல் வரித்தொகையினை (பி.வை.வ.) பிடித்துவைக்குமாறு வேண்டப்படுகின்றது. இவை பொருந்தக்கூடிய சதவீதத்தில் கழிக்கப்பட்டு அதனை இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்துதல் வேண்டும். 13 மே 2021 இல் இயற்றப்பட்ட 2021 ஆம் ஆண்டின் இறைவரிச் சட்டத்தின் (திருத்தம்) 10ம் இலக்கத்தின் படி, 1 ஏப்ரல் 2018 முதல் வெளிநாட்டு வழங்குநர் கொடுப்பனவுகளுக்கான பிடித்து வைத்தல் வரி தொடர்பாக நிறுவனத்திற்கு பின்னோக்கிய விலக்களிப்பு அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொண்டது.அதற்கிணங்க 2021 மார்ச் 31 ஆண்டு முடிவில், கம்பனியானது 1 ஏப்ரல் 2018 முதல் 31 மார்ச் 2020 வரை பி.வை.வ. பொறுப்பாக ரூபா 16,433.45 மில்லியனை இலாப நட்டக் கூற்றில் ஏற்பாடு செய்துள்ளது.

## 22. செயற்பாட்டு நட்டம்

| பின்வருவன கழிக்கப்பட்டதன் பின்னர்: | குழுமம் | | கம்பனி | |
|---|---|---|---|---|
| | 2022 ரூபா மில்லி. | 2021 ரூபா மில்லி. | 2022 ரூபா மில்லி. | 2021 ரூபா மில்லி. |
| விமானக் காப்புறுதி | 619.04 | 640.75 | 619.04 | 640.75 |
| உரிமைக் கட்டணங்கள் | 355.44 | 135.81 | 355.44 | 135.81 |
| மெதுவாக நகரும் இருப்பக்காள ஏற்பாடு | 349.35 | 385.28 | 405.29 | 282.74 |
| | | | | |
| கணக்காய்வாளரது வேதனம் | | | | |
| - ஏனைய சேவைகள் | 0.39 | 0.59 | - | 0.20 |
| - கணக்காய்வு | 8.58 | 9.78 | 7.43 | 8.63 |
| வருமதிகளின் வலுக்குன்றலுக்கான ஏற்பாடு | 125.63 | 62.29 | 88.38 | 44.22 |

## 23. தேறிய நிதிச் செலவு

| | குழுமம் | | கம்பனி | |
|---|---|---|---|---|
| | 2022 ரூபா மில்லி. | 2021 ரூபா மில்லி. | 2022 ரூபா மில்லி. | 2021 ரூபா மில்லி. |
| ***23.1 நிதி வருமானம்*** | | | | |
| திறைசேரி முறிகளிலிருந்தான வட்டி வருமானம் | 298.72 | 230.54 | 298.72 | 230.54 |
| ஏனைய வட்டி வருமானம் | 365.45 | 330.97 | 340.53 | 294.32 |
| | 664.17 | 561.51 | 639.25 | 524.86 |
| ***23.2 நிதிச் செலவு*** | | | | |
| கடன்கள் மற்றும் சர்வதேச முறிகளிலான வட்டி | 11,227.12 | 10,702.95 | 11,227.08 | 10,651.89 |
| திறைசேரி முறிகளின் விற்பனையிலிருந்தான நட்டம் | 682.41 | 271.16 | 682.41 | 271.16 |
| வங்கி மேலதிகப்பற்று மற்றும் காலங்கடந்த வழங்குனர் மீதிகளிலான வட்டிச் செலவு | 2,052.33 | 1,933.61 | 2,052.33 | 1,933.61 |
| குத்தகைப் பொறுப்புக்களிலான நிதிச் செலவுகள் | 8,676.48 | 9,263.03 | 8,585.69 | 9,139.67 |
| விமான திரும்பல் கிரயத்தின் அவிழ்த்தல் விளைவு | 265.56 | 342.28 | 265.56 | 342.28 |
| முன்னுரிமைப் பங்கு பங்கிலாபம் | - | 16.40 | - | - |
| | 22,903.90 | 22,529.43 | 22,813.07 | 22,338.61 |

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் (தொடர்ச்சி.)

### 23.3 வட்டி அறவிடப்படும் பொறுப்புக்களிலான பரிமாற்றல் நட்டம்

| | குழுமம் | | கம்பனி | |
|---|---|---|---|---|
| | 2022 ரூபா மில்லி. | 2021 ரூபா மில்லி. | 2022 ரூபா மில்லி. | 2021 ரூபா மில்லி. |
| கடன்கள்/சர்வதேச முறிகளிலான பரிமாற்றல் நட்டம் | 41,097.49 | 4,518.71 | 41,097.49 | 4,518.71 |
| குத்தகைப் பொறுப்புக்களிலான பரிமாற்றல் நட்டம் | 66,783.23 | 8,815.51 | 66,523.70 | 8,815.51 |
| | 107,880.72 | 13,334.22 | 107,621.19 | 13,334.22 |
| மொத்த நிதிச் செலவினம் | 130,120.45 | 35,302.14 | 129,795.01 | 35,147.97 |

### 24. வரிவிதிப்பு

| | குழுமம் | |
|---|---|---|
| | 2022 ரூபா மில்லி. | 2021 ரூபா மில்லி. |
| **வரிச் செலவினம்** | | |
| வருமான வரிச் செலவினத்தின் பாரிய கூறுகள் பின்வருமாறு | | |
| | | |
| **நடைமுறை வருமான வரி** | | |
| வருடத்திற்கான சாதாரண நடவடிக்கைகளில் நடைமுறை வரிச் செலவு (குறிப்பு 24.1) | 87.71 | - |
| ஒத்திவைக்கப்பட்ட வரிச் செலவினம் | 337.98 | (57.44) |
| முன்னைய வருடங்கள் தொடர்பாக நடைமுறை வரியிலான குறை/(மிகை) ஏற்பாடு | - | 0.38 |
| | 425.69 | (57.06) |

### 24.1 நடைமுறை வரிச் செலவினம் மற்றும் கணக்கீட்டு நட்டத்தின் விளைவுக்கும் இடையேயான கணக்கிணக்கம்

| | குழுமம் | | கம்பனி | |
|---|---|---|---|---|
| | 2022 ரூபா மில்லி. | 2021 ரூபா மில்லி. | 2022 ரூபா மில்லி. | 2021 ரூபா மில்லி. |
| வரிக்கு முந்திய கணக்கீட்டு நட்டம் | (163,157.39) | (49,761.57) | (166,369.68) | (45,231.46) |
| கழி: வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்ட (இலாபம்)/நட்டம் | 591.94 | (955.89) | - | (3,569.63) |
| வருமான வரிக்குட்பட்ட இலாபம்/(நட்டம்) | (162,565.45) | (50,717.46) | (166,369.68) | (48,801.09) |
| கழிக்கவியலாத செலவினங்கள் | 70,061.80 | 4,917.03 | 72,528.11 | 4,858.11 |
| ஆட்பட்ட வரி நட்டங்கள் | (92,503.66) | (45,800.43) | (93,841.57) | (43,942.98) |
| துணைநிறுவனத்திலிருந்து எழுகின்ற வரிவிதிக்கத்தக்க இலாபம் | 641.57 | - | - | - |
| கழி: ஈடுகட்டப்பட்ட நட்டங்கள் | (56.93) | - | - | - |
| | 584.64 | | | |
| 15% வரி வீதத்தில் சட்டரீதியான வரிக் கட்டணம் | 87.71 | - | - | - |
| நடைமுறை வருமான வரிச் செலவினங்கள் | 87.71 | - | - | - |

### 24.2 ஒத்திவைக்கப்பட்ட வரிப் பொறுப்பு

| | துணைநிறுவனம் | |
|---|---|---|
| | 2022<br>ரூபா மில்லி. | 2021<br>ரூபா மில்லி. |
| ஏப்ரல் 01 இல் உள்ளவாறான மீதி | 84.81 | 133.09 |
| இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட ஒத்திவைக்கப்பட்ட வரி (திரும்பல்) கட்டணம் | 337.98 | (57.44) |
| ஏனைய விரிவான வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்ட ஒத்திவைக்கப்பட்ட வரிக் கட்டணம்/(திரும்பல்) | 9.19 | 9.16 |
| மார்ச் 31 இல் உள்ளவாறான மீதி | 431.98 | 84.81 |

**கம்பனி**

பின்வரும் உறுப்படிகளுக்கு உடைமையாக்கத்தக்க ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்துக்கள் கீழே விபரிக்கப்பட்டவாறு அங்கீகரிக்கப்படவில்லை.

| | சொத்துக்கள் | | பொறுப்பு | | தேறிய சொத்து /(பொறுப்பு) | |
|---|---|---|---|---|---|---|
| | 2022<br>ரூபா மில்லி. | 2021<br>ரூபா மில்லி. | 2022<br>ரூபா மில்லி. | 2021<br>ரூபா மில்லி. | 2022<br>ரூபா மில்லி. | 2021<br>ரூபா மில்லி. |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் | - | - | (325.88) | (416.52) | (325.88) | (416.52) |
| காணியின் மீள்மதிப்பிடல் - கொழும்பு | - | - | (147.15) | (147.15) | (147.15) | (147.15) |
| கட்டிடங்களின் மீள்மதிப்பிடல் | - | - | (600.65) | (600.65) | (600.65) | (600.65) |
| பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள தேறிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் | 50,560.72 | 16,384.48 | - | - | 50,560.72 | 16,384.48 |
| ஓய்வுபெறல் நலன் கடப்பாடுகள் | 1,454.72 | 1,425.35 | - | - | 1,454.72 | 1,425.35 |
| மெதுவாக நகரும் இருப்புக்களுக்கான ஏற்பாடு | 713.96 | 623.82 | - | - | 713.96 | 623.82 |
| வருமதிகளின் வலுக்குன்றலுக்கான ஏற்பாடு | 212.13 | 368.19 | - | - | 212.13 | 368.19 |
| விமானப் பராமரிப்பு மற்றும் சீராக்கல் கிரயத்திற்கான ஏற்பாடு | 12,252.59 | 8,287.26 | - | - | 12,252.59 | 8,287.26 |
| விமான திரும்பல் கிரயம் | 2,126.47 | 1,175.40 | - | - | 2,126.47 | 1,175.40 |
| | 67,320.59 | 28,264.50 | (1,073.67) | (1,164.32) | 66,246.91 | 27,100.18 |

**இவ்வருடத்தில் ஒத்திவைக்கப்பட்ட வரியிலான அசைவு**

| | 31 மார்ச் 2020 இல் உள்ளவாறான மீதி<br>ரூபா மில்லி. | இவ்வருடத்திலான அசைவுகள்<br>ரூபா மில்லி. | 31 மார்ச் 2021 இல் உள்ளவாறான மீதி<br>ரூபா மில்லி. | இவ்வருடத்திலான அசைவுகள்<br>ரூபா மில்லி. | 31 மார்ச் 2022 இல் உள்ளவாறான மீதி<br>ரூபா மில்லி. |
|---|---|---|---|---|---|
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் | (697.98) | 281.45 | (416.52) | 90.64 | (325.88) |
| காணியின் மீள்மதிப்பிடல் - கொழும்பு | (171.67) | 24.52 | (147.15) | - | (147.15) |
| கட்டிடங்களின் மீள்மதிப்பிடல் | (700.76) | 100.11 | (600.65) | - | (600.65) |
| பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள தேறிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் | 14,592.93 | 1,791.54 | 16,384.48 | 34,176.24 | 50,560.72 |
| ஓய்வுபெறல் நலன் கடப்பாடுகள் | 1,628.42 | (203.07) | 1,425.35 | 29.37 | 1,454.72 |
| மெதுவாக நகரும் இருப்புக்களுக்கான ஏற்பாடு | 673.45 | (49.63) | 623.82 | 90.14 | 713.96 |
| வருமதிகளின் வலுக்குன்றலுக்கான ஏற்பாடு | 436.27 | (68.08) | 368.19 | (156.06) | 212.13 |
| விமானப் பராமரிப்பு மற்றும் சீராக்கல் கிரயத்திற்கான ஏற்பாடு | 9,527.39 | (1,240.12) | 8,287.26 | 3,965.33 | 12,252.59 |
| விமான திரும்பல் கிரயம் | 1,281.90 | (106.50) | 1,175.40 | 951.07 | 2,126.47 |
| | 26,569.95 | 530.23 | 27,100.18 | 39,146.73 | 66,246.91 |

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் (தொடர்ச்சி.)

## 24. வரிவிதிப்பு (தொடர்ச்சி.)

### 24.2 ஒத்திவைக்கப்பட்ட வரி (தொடர்ச்சி.)

**கம்பனி**

பயன்படுத்தப்பட்ட வரி வீதம் 24% (2021-24%) ஆகும் என்பதுடன் வரி வீதமானது, அறிக்கையிடப்படும் திகதியில் உள்ளவாறான இயற்றப்பட்ட வரிச் சட்டங்களின் அடிப்படையில் அவை திரும்பல் செய்யப்படும்போது எழுகின்ற தற்காலிக வித்தியாசத்திற்கு பிரயோகிக்கப்படுகின்றது. எனவே, 31 மார்ச் 2022 இல் உள்ளவாறான தேசிய ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்துத் தொகையான ரூபா 66,246.91 மில்லியன் நிதிக் கூற்றுக்களில் அங்கீகரிக்கப்படவில்லை. ஏனெனில் முன்னோக்கிய எதிர்காலத்தில் கிடைக்கப்பெறும் ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்துக்களை பயன்படுத்துவதற்கு எதிர்கால வரிவிதிக்கத்தக்க இலாபங்கள் போதுமானதாக இருக்கும் என் சாத்தியம் காணப்படாததனாலாகும்.

அறிக்கையிடப்படும் திகதியில் கொண்டுசெல்லப்படும் வரி நட்டமான ரூபா 196,637.62 மில்லியன் இல் ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்து கணிப்பிடப்படவில்லை.

**துணைநிறுவனம்**

ஒவ்வொரு பிரிவிற்கும் பிரயோகிக்கத்தக்க எதிர்கால் வரி வீதங்களின் அடிப்படையில் ஒத்திவைக்கப்பட்ட வரிப் பொறுப்பு கணிப்பிடப்படுகின்றது. இது 15% முதல் 24% ஆகும் (2021 - 15% மற்றும் 24%).

## 25. கடப்பாடுகள் மற்றும் எதிர்பாரா நிகழ்வுகள்

### 25.1 மூலதனச் செலவினக் கடப்பாடுகள்

வழக்கமான வணிகப் போக்கில் குழுமம் மற்றும் கம்பனியின் ஆதனம், பொறி மற்றும் உபகரணம் ஆகியவற்றின் கொள்வனவிற்கான தன்னியல்பான கடப்பாடு பின்வருமாறு:

| | குழுமம் | | கம்பனி | |
|---|---|---|---|---|
| | 2022<br>ரூபா மில்லி. | 2021<br>ரூபா மில்லி. | 2022<br>ரூபா மில்லி. | 2021<br>ரூபா மில்லி. |
| அங்கீகரிக்கப்பட்டு ஒப்பந்தமிடப்பட்டவை ஆனால் ஏற்பாடு செய்யப்படாதவை | | | | |
| புலப்படுபவை | 273.35 | 133.24 | 273.35 | 133.24 |
| புலப்படாதவை | 1.71 | - | 1.71 | - |
| | 275.06 | 133.24 | 275.06 | 133.24 |
| அங்கீகரிக்கப்பட்டவை ஆனால் ஒப்பந்தமிடப்படாதவை | | | | |
| புலப்படுபவை | 1,335.42 | 778.42 | 1,335.42 | 767.52 |
| புலப்படாதவை | 922.36 | 609.37 | 922.36 | 609.37 |
| | 2,257.78 | 1,387.79 | 2,257.78 | 1,376.89 |
| | 2,532.84 | 1,521.03 | 2,532.84 | 1,510.14 |

## 25. கடப்பாடுகள் மற்றும் எதிர்பாரா நிகழ்வுகள் (தொடர்ச்சி.)

### *25.2 எதிர்பாரா நிகழ்வுகள்*

**கம்பனி**

எதிர்பாரா நிகழ்வுகளுக்கான பொறுப்பானது 31 மார்ச் 2022 இல் உள்ளவாறான ரூபா 6,259.66 மில்லியனுக்கு மேற்கொள்ளப்பட்ட கோரலின் அடிப்படையிலாகும் (2021: ரூபா 5,575.97 மில்லியன்.) எதிர்பாரா நிகழ்வுப் பொறுப்பானது ரூபா 2,277.76 மில்லியன் (USD 6.71 மில்லியன் மற்றும் நுருசு 0.91 மில்லியன்) தொகையுடைய விமான குத்தகை ஒப்பந்தங்களை இரத்து செய்ததன் விளைவாக விமான உதிரிப்பாகங்களின் பல வழங்குனர்களினால் மேற்கொள்ளப்பட்ட கோரல்கள், ரூபா 641.17 மில்லியன் தொகையுடைய வீமானநிலைய வரிகள் கொடுப்பனவு தொடர்பாக ஒரு வெளிநாட்டு வரி அதிகாரசபையினை அறவிடப்பட்ட ஒரு தண்டப்பணம், ஒரு வெளிநாட்டு வரி அதிகாரசபையுடனான ரூபா 2,740.82 மில்லியன் தொகைக்கான சேவை வரிப் பிணக்கு மற்றம் பணியாட்கள் தொடர்பான கோரல்கள் ரூபா 59.86 மில்லியன் ஆகியவற்றை உள்ளடக்குகின்றன.

சட்ட நடவடிக்கைகள், வாடிக்கையாளர்கள், வழங்குனர்கள் மற்றும் பணியாட்களினால் கம்பனிக்கு எதிராக ஏனைய கோரல்கள் மற்றும் சாத்தியமான கோரல்கள் தொடர்பாக வழக்கமான வணிகப் போக்கில் ஏதேனும் எதிர்பாரா பொறுப்புக்கள் தொடர்பாக ஏதேனும் குறிப்பிடத்தக்க பொறுப்பு நிகழும் என பணிப்பாளர்கள் எதிர்பார்க்காததனால் இந்த நிதிக் கூற்றுக்களில் எவ்விதமான ஏற்பாடும் செய்யப்படவில்லை.

**துணை நிறுவனம்**

கம்பனியின் வழக்கறிஞர்களின் அப்பிராயத்தின் பிரகாரம், அறிக்கையிடப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மற்றும் கம்பனியின் எதிர்கால செயற்பாடுகளில் ஒரு தாக்கத்தினை ஏற்படுத்தக்கூடிய நிலுவையிலுள்ள பல தொழில் தீர்ப்பாய வழக்குகளைத் தவிர கம்பனிக்கு எதிராக வேறு ஏதேனும் வழக்காடல்கள் நிலுவையில் இல்லை. இந்த வழக்குகளுக்கான ரூபா 5.28 மில்லியன் வைப்பிலிடப்பட்டுள்ளன.

மேலும், வரி மேன்முறையிடு தொடர்பாக ரூபா .81 மில்லியனுக்கு ஒரு வைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 26. பிணையீடு செய்யப்பட்ட சொத்துக்கள்

*குழுமம்/கம்பனி*

பெறப்பட்ட கடன் வசதிகளுக்கு எதிராக பிணையீடு செய்யப்பட்ட சொத்துக்களின் விபரங்களுக்கு குறிப்பு 15.2 இனை பார்க்கவும்.

## 27. அறிக்கையிடப்படும் திகதிக்கு பின்னர் இடம்பெற்ற நிகழ்வுகள்

*குழுமம்/கம்பனி*

அறிக்கையிடப்படும் திகதிக்கு பின்னர், பின்வருவன தவிர, நிதிக் கூற்றுக்களில் செம்மையாக்கல்கள் அல்லது வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளத் தேவையான எவ்விதமான பொருண்மையான நிகழ்வுகளும் இடம்பெறவில்லை:

### 27.1 *குறுங்காலக் கடன்களது மீள் ஒப்பந்தப் பேச்சுகள்*

குறிப்பு 15.2 இல் வெளிப்படுத்தியுள்ளவாறு, இந்த நிதிக் கூற்றுக்களை வெளியிடுவதற்கான அங்கீகாரத்திற்கு முன்னர் தீர்க்கப்பட வேண்டிய மொத்த குறுங்கால கடன் வசதிகளான ரூபா 92,556.79 மில்லியன் அறிக்கையிடப்படும் திகதிக்கு பின்னர் உரிய திறைசேரி உத்தரவாதங்கள் மற்றும் இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட ஆறுதல் கடிதங்களுடன் நீடிக்கப்பட்டன.

### 27.2 *விமானத் தொகுதியின் மாற்றீடு*

இலங்கை அரசாங்கமானது 28 நவம்பர் 2022 திகதியிடப்பட்ட அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் விமான மாற்றீடு, நடைமுறையிலுள்ள விமானங்களின் குத்தகை நீடிப்பு அல்லது இவ்விரண்டையும் இணைத்து பத்து விமானங்களை விஞ்சாத அளவிற்கு விமானத்தொகுதி மாற்றீடு செயல்முறைக்கு அங்கீகாரம் வழங்கியது.

### 27.3 *சர்வதேச முறிகளது தவறுதல்*

25 டிசம்பர் 2022 இல் செலுத்தவேண்டிய கூப்பன் வட்டி கொடுப்பனவினை கம்பனி செலுத்தவில்லை. இந்த முறியானது சர்வதேச கடன் மீள்கொடுப்பனவில் அரசாங்கத்தினால் பிரகடனம் செய்யப்பட்ட தற்காலிக செயல்நிறுத்தத்தின் கீழ் வருகின்றது.

இதன் பிரகாரம், டிசம்பர் 2022 மற்றும் ஜுன் 2023 இல் செலுத்தவேண்டிய வட்டிக் கொடுப்பனவினை டிசம்பர் 2023 வரைக்கும் காலம் தாழ்த்துவதற்காக 22 டிசம்பர் 2022 இல் முறிகளது உரிமையாளர்களுடன் ஒரு இணக்க வேண்டுகோள் செயல்முறையினை கம்பனி முன்னெடுத்தது. அத்துடன் 17 ஜனவரி 2023 இல் நிறுத்திய தவறுதல் நிகழ்வுகளது தற்காலிக 12 மாத தளர்த்தீட்டினையும் உள்ளடக்குகின்றது.

25 ஜனவரி 2023 இல் முதிர்வடைந்த உரிய கருணைக் காலத்தினைத் தொடர்ந்து ஒரு தவறுதல் நிகழ்வு இடம்பெற்றுள்ளதுடன் அது தொடர்கின்றது. கடந்த காலங்களில் முறி வைத்திருப்பவர்களுக்கு செலுத்தவேண்டிய வட்டியானது முற்றாகச் செலுத்தப்பட்டது. முன்னோக்கிச் செல்லும்போது ஒரு சமநிலையான மற்றும் நியாயமான தீர்வினை கண்டுபிடிப்பதற்காக கம்பனியானது முறி வைத்திருப்பவர்களுடன் கலந்துரையாட திட்டமிட்டுள்ளது.

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் (தொடர்ச்சி.)

## 28. தொடர்புடைய தரப்பினர் வெளிப்படுத்தல்கள்

### *28.1 குழுமம் மற்றும் கம்பனி*

#### 28.1.1 முக்கிய முகாமைத்துவ ஆளணியினருடனான கொடுக்கல் வாங்கல்கள் (KMP)

கம்பனி மற்றும் அதன் துணை நிறுவனத்தின் நடவடிக்கைகளை திட்டமிடுவதற்கு, வழிநடத்துவதற்கு மற்றும் கட்டுப்படுத்துவதற்கு பொறுப்பான மற்றும் அதிகாரமுடைய நபர்கள் முமுஆ ஆக வரையறை செய்யப்பட்டுள்ளதுடன் இவர்கள் தொடர்புடைய தரப்பினராக உள்ளடக்கப்படுகின்றது. அத்தகைய முமுஆ, மேற்குறிப்பிட்ட வரன்முறையினை சந்திக்கும் குழுமத்தின் பணிப்பாளர் சபை, பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் ஏனைய சிரேஷ்டம முகாமைத்துவ அதிகாரிகளை உள்ளடக்குகின்றது.

குழுமம்/கம்பனியின் கொள்கைகளுக்கமைய குழுமம் மற்றும் தொடர்புடைய தரப்பினரிடையேயான (கம்பனியின் இணைந்த நிறுவனங்கள், பணிப்பாளர்கள், பணியாட்கள் அல்லது ஒரு அக்கறையினைக் கொண்ட அவர்களது நெருங்கிய குடும்ப அங்கத்தவர்கள்) ஏதேனும் கொடுக்கல் வாங்கல்கள் வெளிப்படுத்தப்படல் வேண்டும் என்று குறிப்பிடுவதுடன், முமுஆ இனரால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய பிரகடங்கள் கருத்திலெடுக்கப்பட்டுள்ளன.

(அ) அறிக்கையிடப்படும் காலத்தில் வழமையான வணிகப் போக்கில் முமுஆ இனரால் மேற்கொள்ளப்பட்ட குறிப்பிடத்தக்க கொடுக்கல் வாங்கல்கள் பின்வருமாறு

| | 2022<br>ரூபா மில்லி. | 2021<br>ரூபா மில்லி. |
|---|---|---|
| குறுங்கால நலன்கள் | 208.62 | 215.73 |
| பணி நிலையின் பின்னரான நலன்கள் | 35.66 | 32.36 |
| தொழில் நிறுத்தல் நலன்கள் | 4.96 | 22.46 |

இவ்வாண்டில் பணிப்பாளர்களினால் எவ்விதமான சிறப்புரிமை மற்றும் ஏனைய நிறுவன விமான டிக்கட்கள் வழங்கப்படவில்லை. முக்கிய முகாமைத்துவ ஆளணியினர் மற்றும் அவர்களது துணைவியர் மற்றும் சார்ந்திருக்கும் பிள்ளைகள் இருக்கை கிடைப்பதன் அடிப்படையில் இலவச விமான டிக்கட்களுக்கு உரிமையுடையவர்கள்.

(ஆ) குழுமத்தின் முமுஆ ஏனைய கம்பனிகளில் பதவிகளை வகிக்கின்றார்கள், இவ்வருடத்தில் இக்கம்பனிகளுடனான குழுமத்தின் வர்த்தக நடவடிக்கைகள் கீழே இனங்காணப்பட்டுள்ளன்

